சுதேச

# மித்திரன்

ஏப்ரல் 15, 1956 விலை 4 அணா

ராஜ சுலோசனா தரும்
அழகுமுறைக் குறிப்புக்கள்!
"உங்கள் சருமத்தை மிருதுவாக எழிலோடு வைத்திருக்கும் பொருட்டு, நீங்கள் நன்றாகத் தேய்த்திட . . ."
"லக்ஸ் டாய்லெட் சோப்பின் செழிப்பான நுரை—அதற்கு மிகுந்த நறுமணம் உண்டு".
"பிறகு நீராட்டித் துடைத்திடுங்கள்—மிகுந்த புதுமையின்பத்தை உணர்வீர்கள்!
"பூரண உடல் வனப்புக்கு, ஸ்நானத்துக்கான பெரிய சைஸ் உபயோகியுங்கள் — நான் செய்வதுபோல".
ராஜ சுலோசனா
லக்ஸ்
டாய்லெட் சோப்
தேர்ந்தெடுக்கிறாள்
ஏனென்றால்
அது தூய்மையானது
வெண்மையானது
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் தூய, வெண்மையான அழகுதரும் சோப்
இந்தியாவில் தயாரித்தது
LTS. 476-X52 TM

# பொருளடக்கம்

Vol: XXVII] துன்முகி௵ சித்திரை௴ 3௳ ஏப்ரல் 15, 1956 [No. 11


நேர்மையும், நாட்டு நலமும் 3
காற்று வாக்கிலே —வம்பன் 4
முத்தமிழ் வேந்தர் —வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் 5
வருஷப் பிறப்பு (கவிதை) —ச. து. சு. யோகியார் 7
ஆவி உலக விருந்தாளி —சியாமா 8
பெருமன்னன் சூலவான் —பி. கோதண்டராமன் 14
துப்பறியும் சுப்புடு —சந்தனு 17
திரிவேணி —ஹேமா ஆனந்ததீர்த்தன் 18
வேலை நிறுத்தம் —மகரம் 23
எழுத்துலகம் —எஸ். ராஜா 24
மாட்னி ஷோ —ஆர்வி. 25
நவ நாகரிகக் குறிப்புகள் —காசினி 32
வெள்ளையத்தேவன் பாறை —நா. பார்த்தசாரதி 33
அதிசய வீணை —வாண்டு மாமா 46
உங்கள் கால பலன் —பி. வி. ராவ் 48
வாழிய நீ! —பி. அனுமந்த ராவ் 54
மோக முள் —தி. ஜானகிராமன் 55
நடந்த விஷயம் —என். பி, ஹரிஹரன் 60
வைத்திய வினா—விடை —குச்சாமாமா 61
உரிமை —வித்தியா 63
கலா மண்டபம் 69
வாசுதேவாச்சார் கீர்த்தனை 71


"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே; அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

பிரபல அமெரிக்க இசைவாணி மிஸ் லியான்டின் பிரைஸ் சென்னைக்கு விஜயம் செய்தபோது, அமெரிக்க தகவலறிவிப்பு ஸ்தாபன அதிகாரி மிஸ்டர் ஷர்பர்ட் விமான நிலையத்தில் வரவேற்றார். அன்னாருக்கு கலாசார சுதந்திர கமிட்டியின் சென்னைக் கிளையினர் 9-ந் தேதி மாலை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் தேநீர் விருந்து ஒன்றளித்தனர்.

# காலச் சக்கரம்

அசட்டுக் கழுதையே!
போய்ச்சேரு
காஷ்மீர் பற்றி பாக் மிரட்டல்
இந்தியராஜதந்திரம்
பாக். பயமுறுத்தலுக்குப் பணியோம்.
—நேரு
மேல் பாக். முஸ்லிம் லீகில் பிளவு!
லீக் மேலிடம்
டாக்டர் கான்சாகேப்
மேல் பாக். முஸ்லிம் லீக்
சென்னை கார்ப்பொரேஷன்
ஐயோ! என்னால் உன்னை ஏற்றிக் கொண்டு போகமுடியாது
௨ லட்சருபாய் இழக்க நேரிடுமென்பதால் சைகிள் வரியை ஒழிக்க கார்ப்பொரேஷனுக்குச் சென்னை சர்க்கார் அனுமதி மறுத்து விட்டது

வாழிய செந்தமிழ்
சுதேசமித்திரன்
வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

★

# நேர்மையும், நாட்டு நலமும்

சீர்திருத்தம் எதிலும் ஒரு நேர்மை இருக்க வேண்டும்; அதோடு நாட்டின் நிலையான நலத்துக்கு அது ஏற்றவாறும் அமையவேண்டும். இந்த இரு முக்கியமான சோதனைகளிலும் தற்போதைய நியாய வார மசோதா தேறக்கூடியதல்ல என்பதை சென்னை ராஜ்ய விவசாயிகள் மகாநாடு தெளிவுபடுத்தியிருக்கிறது. சொந்தத்தில் நிலமுள்ளவர்கள் எல்லோரும் தனவந்தர்கள் என்ற அடிப்படை மீது இம்மசோதா அமைந்திருக்கிறது. அதற்கு மாறாக, நிலச் சொந்தக்காரர்களில் மிக்கப் பெரும்பாலானவர்கள் பத்து ஏகராவுக்குக் குறைந்த நிலமுள்ளவர்களே. அவர்களில் வேறு சம்பாத்தியமுள்ளவர்கள் மிகவும் சொற்பம். அவர்களது பங்கு விளைவில் இம்மசோதாவின்படி திடீரென்று 40-சதவிகிதமாகக் குறைந்துவிடும். அதில் நிலவரி கட்டியது போக எஞ்சியதைக் கொண்டு காலட்சேபம் செய்வது சாத்தியமா என்பதை அதிகாரிகள் சிந்தித்திருக்கவேண்டும். மேலும் இம்மசோதாவில் குறித்தபடி விளைவைப் பங்கு பிரித்துக்கொள்வதில் தகராறுகள் ஏற்பட மிக்க இடமிருக்கிறது. இது தவிர, நிலத்தில் பயிராகும் எல்லாப் பண்டங்களிலும் நிலச் சொந்தக்காரருக்கு மேற்குறித்தவாறு பங்களிக்கப்படவுமில்லை. முறைப்படி சாகுபடி நடக்காவிட்டாலும் சொந்தக்காரர் வாரம்தாரின்பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாது. சாகுபடிக்கும், சொந்தக்காரருக்கும் உள்ள சம்பந்தம் முழுவதையும் இந்த மசோதா அடியோடு அறுத்துவிடுவதாகும். சோஷலிஸ்ட் பாணியில் சமுதாயம் உருவாவதை நாம் சிறிதும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சமுதாயத்தில் ஒரு தரப்பைத் தூக்கிவிடுவதற்காக ஏற்கெனவே தத்தளித்துக்கொண்டிருக்கும் இன்னொரு தரப்பைப் பாதாளத்தில் அழுத்துவது நேர்மையா? மேலும் இதனால் விளைவு பாதிக்கப்படுவது திண்ணமாதலின், இது சிறிதும் தேச நலத்துக்கு ஒத்ததுமன்று.

தற்போது நில உடைமைக்கு வரம்பு கட்டத் திட்டம் போடுவதும் உசிதமல்லவென்பதை விவசாயிகள் மகாநாடு சுட்டிக்காட்டியிருக்கிறது. மற்ற துறைகளில் இதுவரை வருவாய்க்கு வரம்பு விதிக்கப்படவில்லை. வரம்பு கட்டும் யோசனை எதுவும் ஏககாலத்தில் எல்லாத் துறைகளிலும் அமுலுக்கு வருவதுதான் நீதியல்லவா? இதற்காக அதிக நிலமுள்ளவர்கள் மேன்மேலும் பணக்காரர்களாக விடவேண்டுமென்பது நமது வாதமல்ல. உண்மையில் ஏற்கெனவே வேறு வழிகளில் அவர்களது சொத்து சிதறிக்கொண்டு வருகிறது. வார்சுகளுக்கு பாகம், எஸ்டேட் வரிச் சட்டம் முதலிய நிர்ப்பந்தங்களை யொட்டி பெரிய சொத்துகள் கரைந்து வருகின்றன. மேலும் நில உடைமைக்கு வரம்பு ஏற்படலாமென்பதை எதிர்பார்த்து பெரிய நில சொத்துள்ளவர்கள் எவ்வளவோ விதங்களில் அதைப் பிரிக்க ஏற்கெனவே தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருவது அனைவரும் அறிந்த விஷயம். இப்போது உயர்ந்தபட்ச வரம்பை மீறக்கூடிய சொத்துக்கள் மிக சொற்பம். விளைவைப் பெருக்க துண்டு நிலங்களைவிட பெரிய நிலங்கள் அனுகூலமானவையென்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில், வரம்பு கட்டும் யோசனையை வலியுறுத்துவதால், உள்ள ஒருசில பெரிய சொத்துகளும் சீக்கிரம் சிதறிவிடும்.

வரம்பு விதி அமுலுக்கு வந்தாலும், உபரி நிலத்தை சாகுபடியாளர், அல்லது விவசாயத் தொழிலாளரிடை பங்கிடுவதென்பது ஒரு கேலிக்கூத்தாகவே முடியும். இவர்கள் சுமார் ஒரு கோடி பேர் இருக்கின்றனர். இவ்வளவு பேருக்கும் உபரி நிலத்தைப் பங்கிட்டால் தலைக்கு என்ன கிடைக்கும் என்பதை அதிகாரத்திலுள்ளவர்கள் சிறிது முன்னதாகவே சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயிகள் மகாநாடு வலியுறுத்தியுள்ள உண்மைகள் பலவும் அவர்களுக்குத் தெரிந்தேயிருக்கவேண்டும். ஆயினும், இத்தகைய சீர்திருத்த யோசனைகளுக்கு அவர்கள் ஆதரவு காட்டுவதேன்? எப்படியாவது தேர்தலில் வெற்றி பெறுவதை அவர்கள் குறியாகக் கொண்டிருப்பதுதான் காரணமோ என்று யாரும் சந்தேகிப்பது இயற்கை. இத்தகைய விஷயங்களில் கம்யூனிஸ்டுகளைவிட ஒரு படி முன் சென்றால் தேர்தலில் தங்கள் வெற்றி நிச்சயம் என்று அவர்கள் நினைப்பதாயிருக்கலாம். ஆனால், அதன் மூலம் நியாயம், தேச நலம் இரண்டையும் அவர்கள் காவு கொடுக்கின்றனர் என்பது அவர்களுக்கு நினைவிருக்கவேண்டும்.

# காற்றுவாக்கிலே..

## வளம் பெறுமா ?

புத்தாண்டு பிறந்துவிட்டது. துன்முகி ஆண்டு; தாய தமிழகம் தனிச் சிறப்புடன் திகழப்போகும் ஆண்டு. 'துன்முகியில் வேளாண்மை யேறுமே' என்பது முன்னோர் வாக்கு. ஆனால், முன்னோர் வாக்குகளை நம்பிக்கொண்டு முயற்சி செய்யாமல் இருக்கலாமா? நில வளமும், தொழில் வளமும் பெருக பாரத அரசாங்கம் திட்டங்களைத் தீட்டி வருகின்றது. நாட்டின் பொருளாதாரம் நிலைபெற எல்லாப் பகுதிகளும் வளம் பெற வேண்டுமல்லவா? தமிழகம் வளமுறுதல் வேண்டும். நீலத்திரைக் கடல் ஓரத்தில் தவம் செய்யும் குமரி அன்னை தமிழகத்தைத் தழுவுகிறாள். வடமாலவன் குன்றம் கிடைக்காவிடினும் வேலவன் குன்றமாவது கிடைக்காமற் போகுமா? பொறுத்துப் பார்ப்போம். தமிழகத்தில் ஆற்றலுக்குக் குறைவா? அறிவுக்குப் பஞ்சமா? இயற்கைச் செல்வங்கள் இல்லையா? பின் ஏன் தொழில் வளத்தில் பின்தங்கியிருக்க வேண்டும்? வடக்கத்தியாரின் ஆதிக்க வெறியே காரணம் என்று கூறுவர் ஒரு சாரார்.

இரண்டாவது ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தில் நாடெங்கும் கன ரகத் தொழில்கள் அமைய ஏற்பாடாகிறது. இவற்றில் ஒன்றுகூடத் தமிழகத்தில் ஏற்படாதது ஏமாற்றமே. ஏக்கமடைவது தவறா? மக்களின் ஏமாற்றத்தை அரசாங்கமும் பகிர்ந்து கொண்டுள்ளது. சட்ட சபையில் அமைச்சர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். சென்னை ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதாது என்று வற்புறுத்தி, சட்ட சபைகளில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. வற்புறுத்திக்கொண்டேயிருக்கிறோமென்கிறது ராஜ்ய அரசாங்கம். வேறு என்ன செய்ய முடியும்? ஐக்ய இந்தியா ஆயிற்றே! இந்நிலையில் சென்னை தொழிற் துறையில் விருத்தியடைந்துவிட்டதாகக் கூறுகிறார் நிதிக் குழுத் தலைவர். 'நண்பர்'களிடமிருந்து காப்பாற்றப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது தமிழகம். இந்தியா முழுவதும் பதினைந்து பொறி இயற் கல்லூரிகளைத் துவக்குவது பாரத அரசாங்கத்தின் திட்டம். இதில் சென்னைக்கு ஏதாவது உண்டா? இல்லையாம். இருக்கின்ற ஒரு கல்லூரியையும் மத்திய அரசாங்கத்திடம் அடகு வைக்க உத்தேசமாம். தமிழர் அரசாங்கத்தின் தாராளம் தான் என்னே! பதிலுக்கு மற்றொரு பொறி இயற் கல்லூரி ஏற்படுத்தப் பண உதவி கோரியிருக்கிறார்களாம்.

## கல்வித் திட்டம்

கல்விக் கொள்கை பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது சென்னை அரசாங்கம். கல்வித்துறையின் பல்வேறு அம்சங்களை அலசி ஆராய்ந்து, பல கமிட்டிகள் வெளியிட்டுள்ள அறிக்கைகளும், சிபார்சுகளும், அவை போல் சர்க்காரின் கருத்துக்களையும் கொண்டதே அவ் "வெள்ளை அறிக்கை." பிரச்னைக்குப் பரிகாரம் எதுவும் கூறவில்லை. பரிகாரம் கோருகிறது மக்கள் பிரதிநிதிகளிடம். தேர்தல் நெருங்குகிற நேரமல்லவா? கல்வித் திட்டத்தைக் காரணமாகக் கொண்டு மந்திரி சபைகள் கவிழ்க்கப்படும் நாளில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியம்தானே! பொதுத் தேர்தல்கள் முடியும்வரை கல்விச் சீர்திருத்தங்களையே ஒத்திப் போட்டுவிடலாமே என்றுகூட யோசனை தெரிவித்தார் ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் சட்ட சபையில். கல்வித்துறையில் அரசியல் புகுவது கூடாது என்று கல்வியமைச்சர் உபதேசம் செய்வதில் பயனென்ன?

எனினும், வெள்ளை அறிக்கையை வெகுவாகச் சிலாகித்துப் பேசினர் மக்கள் பிரதிநிதிகள். இவ்வளவு பெரிய பிரச்னை இது என்பது இப்பொழுது தான் தெரிந்தது என்றும், ஞானோதயம் பெற்றதாகவும் அறிவித்தனர் சிலர். திட்டத்தைத் திணிக்காமல் ஜனநாயக முறையில் அரசாங்கம் நடந்துகொள்வதைப் பாராட்டினர் பலர். ஆச்சாரியாரின் திட்டத்தை மறைமுகமாகப் புகுத்த கல்வி அமைச்சர் முற்பட்டிருப்பதாகச் சந்தேகித்த அறிஞர்களும் ஒரு சிலருண்டு. சபையில் நடைபெற்ற விவாதத்தின் தன்மை என்ன? ஷிப்ட் முறையை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தினர் பலர். ஹிந்தி கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்றுகூட கூறினர் சில தைரியசாலிகள். ராஜாஜியின் திட்டமே வேறு உருவத்தில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்பொழுது மக்கள் மன்றத்தின் வாயிலாக வருகிறதல்லவா?

## இலட்சிய மோதல்

பதினான்கு வயது பூர்த்தியாகும் வரை நாட்டிலுள்ள எல்லாச் சிறுவர், சிறுமியர்களுக்கும் கட்டாய இலவசக் கல்வியளிக்க வேண்டுமென்பது குடியரசுச் சட்டத்தின் குறிக்கோள். இதை நிறைவேற்றுவதற்குப் பண வசதி உண்டா? பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் உண்டா? பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது தனிப்பட்டவர்களிடம் விட்டுவிட வேண்டுமா என்பதிலும் கருத்து வேற்றுமை. தனிப்பட்டவர்களை நம்பி, அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக்கழிக்கலாகாது என்கிறார் கல்வியமைச்சர். ஆரம்பப் பள்ளியில் சேருவதற்கான வயது வரம்புபற்றியும் சர்ச்சை. ஆறு வயதில் சேர்ந்தால்தான் விஷயங்களைக் கிரகித்துக்கொள்வதற்கான மனோ பக்குவம் பெற முடியும் என ஒரு சாரார் கருத்து. ஆறு வயதுவரை பையன்களை வீட்டில் கழுதை மேய்க்க விடுவதா என்று ஒரு சில பெற்றோர்களின் வாதம். மாடுகள் ஆடுகள் கணக்கெடுப்பு வேலையை ஆசிரியர்களிடம் ஒப்படைப்பதில் தவறில்லை எனக் கருதப்படும் போது! பையன்கள் கழுதை மேய்ப்பதைப் பற்றிக் கவலைப்படுவோர் யார்?

கல்லூரிப் படிப்புக் காலத்தை மூன்று வருஷமாகக் குறைத்துவிட்டனர் பல்கலைக்கழகத்தினர். இவ்வருஷமே அதை அமுல் நடத்தவும் முஸ்தீபு. தமக்குத் தெரியாமலேயே இம்மாதிரி முடிவு செய்துவிட்டதாக பல்கலைக் கழகத்தின் மீது குற்றம் சாட்டுகிறார் கல்வி மந்திரி. குற்றச்சாட்டை மறுக்கிறார் கழகத்தின் துணை வேந்தர். இன்னும் பல விஷயங்களில் கொள்கை மோதல். கல்லூரிகளில் போதனை மொழிபற்றியும் உடன்பாடில்லை. தமிழ் மொழியே கல்லூரிகளிலும் போதனை மொழியாக வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வருகிறார் அமைச்சர். ஆனால், பல்கலைக் கழகமோ ஆங்கிலத்தைவிட்டுக் கொடுக்கத் தயங்குகிறது. தமிழர்கள் என்று தனிப் பெருமை கொள்பவர்களுக்கு ஆங்கில மொழியின்மீதுள்ள மோகம் அதிகரித்து வருகிறது. கல்வித் துறையில் கண்டபடித் திட்டங்களை மாற்றிக்கொண்டேயிருப்பதனால் ஏற்படும் கேட்டை உணராதார் இல்லை. நிலையான திட்டம் வேண்டுமென்று கல்வி அமைச்சர் விழைகிறார். புத்தாண்டில் புதிய திட்டம் உருவாகுமா?

—வம்பன்.

### அட்டைப் படம்

பு..பு..பூ..பூச்சாண்டி! அம்மாடியோவ், பயமாயிருக்கே!

பயல் படுசுட்டி. அழகு சொட்டுங்களை பொருந்திய முகம் படைத்தவன். அப்படிப்பட்ட அந்தப் பையனின் முகத்துக்கு அந்தப் பூச்சாண்டிப் பட்டயம்தான் எவ்வளவு கோரத்தையும், பயங்கரத்தையும் கொடுக்கிறது! இதைக் கண்டு, சுற்றியுள்ள அவனது நண்பர் குழாத்தின் முகமண்டலங்கள்தாம் எவ்வளவு வக்கிரமாகக் காட்சி அளிக்கின்றன!

ஆம்; இதே போலத்தான் புதிதாக மலர்ந்திருக்கும் இந்தத் துன்முகி வருஷமும்! பெயரைப் பாருங்கள் பெயரை! துன்முகியாம்; அதாவது கோர ஸ்வரூபியாம்! கேட்கும் போதே நமக்கு 'இந்த வருஷம் எப்படி இருக்குமோ?' என்று பயம் உண்டாகத்தான் செய்கிறது. ஆனால் உண்மையோ. . .

"மிக்கான துன்முகியில்
வேளாண்மையேறுமே
தொக்கமழை பின்னே
சொரியுமே —மிக்கான
குச்சர தேசத்திற் குறைதீரவே
விளையும்
அச்சமில்லை..,....."

பஞ்சாங்கம்தான் இப்படிச் சொல்கிறது. அதுதானே நமக்கு அத்தாட்சி!

அட்டைப் படம் தீட்டிய ஓவியர் 'ஸாகர்'.

# முத்தமிழ் வேந்தர்

-வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்.

சேர சோழ பாண்டியரே முத்தமிழ் வேந்தராவர். இவர் ஆண்ட நிலம், தமிழகம் ஆகும். பண்டைக் காலந் தொடங்கி வெகுகாலம் தமிழகத்தை ஆண்டு வந்தவர் இம் மூவேந்தரே. வேளிர், பல்லவர் முதலியவர் பிற்காலத்து அரசராயிருந்தாரெனினும், சேர சோழ பாண்டியர் போலப் பெருமை பெற்றவர் அல்லரென்பது பண்டைத் தமிழ் நூல்களை ஊன்றி நோக்குவார்க்குத் தெளிவுற விளங்கும்.

இனிச் செந்தமிழ் நிலத்துக்குப் பொது எல்லை, தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் "வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்றதனாலும், "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும், தமிழ் வரம்பறுத்த தண்புனனாடு" என வரும் சிலப்பதிகாரப் பகுதி முதலியவற்றாலும் பெறப்படும். மற்றும், செந்தமிழ் நிலம் இப்போது எல்லையுள் நின்றும் வரைந்துகொள்ளப்படும். தொல்காப்பிய உரையாசிரியர்கள் வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாகு மென்பர்: இதன்படிப் பார்த்தால், செந்தமிழ் நிலமென்பது சோணாடு ஆகும். "சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும், சௌந்தர பாண்டியனெனும் தமிழ்நாடனும், சங்கப் புலவரும் தழைத்தினி தோங்கும் மங்கலப் பாண்டி வளநாடென்ப" என்று நன்னூல் விருத்தியுரைகாரர் உரைப்பர். இதன்படி பார்த்தால், பாண்டிய நாடே செந்தமிழ் நாடு என அன்னார் கொண்டுள்ளமை புலனாம். இனி, சீத்தலைச் சாத்தனார் திருவள்ளுவ மாலையில் "மும்மலையும் முந்நாடும்" என்ற வெண்பாவால் முத்தமிழையும் மூவேந்தர்க்கும் ஒத்த உரிமையன ஆக்கி, அம்மூவரசர் ஆளும் நாட்டையும் ஒத்தனவாகவே கூறியுள்ளார். அந்தச் சங்க காலத்திய புலவர்கள் பாடிய செய்யுள்களைக்கொண்ட அகநானூறு, புறநானூறுபோன்ற தொகை நூல்களைக் கவனிக்குமிடத்து, இந்தத் தமிழ் மூவேந்தரையும் மற்றும் சிற்றரசர் முதலியோரையும் ஒரு நிகராகவே பாராட்டிப் பாடியமை பெறப்படும். இது நிற்க,

எட்டுத் தொகையுள் பதிற்றுப் பத்து என்று ஒன்றுளது. அத்தொகை நூல் ஒவ்வொரு சேர அரசர்க்குப் பத்துப் பாடல் வீதம் பத்துச் சேரவரசரின் வெற்றிச் சிறப்பு, கொடைச் சிறப்பு முதலியன கூறும். அந்தப் பதிற்றுப் பத்

தில் முதற் பத்தும் இறுதிப் பத்தும் தவிர, மற்ற எண்பது பாடல்களே இப்போது கிடைக்கின்றன.

அந்தப் பதிற்றுப் பத்தில் ஒவ்வொரு பத்திற்கும் அந்தப் பத்தினைப்பற்றி இன்னாரைப்பற்றி இன்னார் இன்னின்ன பாடலைப் பாடி இன்ன பரிசு பெற்றார் என்று தெரிவிக்கும் பதிகம் ஒன்றுளது. வாசகர் அறியுமாறு அந்தப் பதிகத்தைத் தருகின்றோம்.

"மன்னிய பெரும்புகழ்
 மறுவில் வாய்மொழி
இன்னிய முரசி
 னுதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள்
 நல்லினி யீன்றமகன்
அமைவா லருவி
 யிமைய விற்பொறித்து
இமிழ்கடல் வேலித்
 தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத்
 தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபி
 னாரியர் வணக்கி
நெய்தலைப் பெய்து
 கைபிற் கொளீஇ
அருவிலை நன்கலம்
 வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த்
 தந்துபிறர்க் குதவி
அமையார்த் தேய்த்த
 அணங்குடை நோன்றாள்
இமைய வரம்பன்
 நெடுஞ்சேர லாதனை"

குமட்டூர்க் கண்ணனார் பாடினார். பத்துப் பாட்டு: அவைதாம் (1) புண்ணுமிழ்குருதி (2) மறம் வீங்கு பல்புகழ், (3) பூத்த நெய்தல், (4) சான்றோர் மெய்ம் மறை, (5) நிரையவெள்ளம், (6) துயிலின் பாயல், (7) வலம்படு

வாயனபட்ண, (8) கூந்தல் விறலியர், (9) வளனறு பைதிரம், (10) அட்டு மலர் மார்பன்: இவை, பாட்டின் பதிகம். பாடிப்பெற்ற பரிசில் உம்பற் காட்டு ஐஞ்ஞூறு ஊர் பிரமதாயம் கொடுத்து முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள் வருவதனிற் பாகம் கொடுத்தான் அக்கோ. (பிரமதாயம்—பிராமணர்க்கு விடப்படும் இறையிலி நிலம். அக்கோ—அந்த அரசன், மற்றும் இந்தப் பதிகத்துக் கூறியன விவரிக்கப்படவேண்டியவை பலவுள. அவை, விரிவஞ்சி விடப்படுகின்றன.)

தமிழ் மொழியில் இங்ஙன் சேரவரசரைப் பற்றிச் சங்க காலத்தில் தொகை நூல் ஏற்பட்டிருப்பது போல், சோழவரசரைப் பற்றியாவது, பாண்டியவரசரைப் பற்றியாவது நூல் ஏற்பட்டிருக்கவில்லை. இதுகுறித்து ஆராய்வோமாயின், சோழ பாண்டியர்களைவிடச் சேரவரசர் தமிழ் வளர்ச்சிக்கு உற்ற துணைவர்களாக இருந்தமை பெறப்படும். சேர நாட்டில் இப்போதும் சேரவரசரைச் சார்ந்தோர் உள்ளனர்.

வைணவ பத்தராகக் குலசேகரரும், சைவ பக்தராகச் சேரமான் பெருமாளும் தோன்றித் துதிப் பாடல்கள் பாடியுள்ளனர். இங்ஙனெல்லாம் தமிழ் நாட்டோடு தமிழ் நாடாகவே ஒற்றுமைப் பட்டுச் சேர நாடு அமைந்தாகவேண்டியிருக்க, இப்போது வேறாகக் கருதப்படுவது என்னே! என்னே! இதனைக் காலத்தின் கோலமென்றே கருதவேண்டும். நன்னிலைமை நிலவப் பெருமான் திருவருள் பொழிவானாக!

## தமிழ் எழுத்தாளர் மகாநாடு

இம்மாதம் 7-ந் தேதி மயிலை ரசிக ரஞ்சனி சபை மண்டபத்தில் தமிழ் எழுத்தாள மகனீயர்களின் 4-வது மகாநாடு கோலாகலமாக நடைபெற்றது. ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி குமாரசுவாமியின் வரவேற்புரைக்குப் பின் கல்வி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் மகாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில், 'சர்வ கலாசாலைகளில் தமிழையே போதனமொழியாக மேற்கொள்ளத் தோதாக தமிழ் எழுத்தாளர்கள் மொழிவளத்தைப் பெருக்க முன் வர வேண்டும்' என்று குறிப்பிட்டார். பிறகு, எழுத்தாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ 'தேவன்' எழுத்தாளர்கள் சிந்தித்து மேற்கொண்டு பயனடையக்கூடிய பல விஷயங்களைத் தனது தலைமையுரையில் கூறினர்.

மகாநாட்டையே சிறப்பிப்பதாக அமைந்த பேரம்சம் தலைமையுரைக்குப் பின்பு நடைபெற்ற நிகழ்ச்சியாகும். கம்ப ராமாயணம் முழுமைக்கும் உரை எழுதிய முதல் பெருமையும், ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலக்கண, இலக்கிய விஷயங்களில் மாணவர்களுக்கு வழி காட்டி வரும் பெருமையாளருமான ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியாருக்கும், எளிய இனிய நடையில், சந்தேகத்துக்கே இடமின்றி அருமையாக சரித்திர நூல்களை எழுதியவரும், கல்வெட்டு ஆராய்ச்சித் துறையில் திறமை படைத்தவருமான ஸ்ரீ சதாசிவப் பண்டாரத்தாருக்கும் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்ததே அந்த முக்கிய நிகழ்ச்சியாகும். இந்தத் தமிழிலக்கிய மேதைகளில் அருந் திறனைக் குறித்து ஸ்ரீமான்கள் தி. பொ. மீனாட்சிசுந்தரனார், கி. வா. ஜகந்நாதன், டி. ஜகந்நாதாச்சாரியார், சோமு, டி. புருஷோத்தம முதலியார் ஆகியோர் அருமையாகப் பேசினர். பின்னர் ஸ்ரீ டி. கே. சி.யின் படத்தைத் திறந்து வைத்து சிறந்த அறிவுச் சொற்பொழிவு நிகழ்த்தினர், ஸ்ரீ ராஜாஜி. சங்கப் பொதுச் செயலாளர் ஸ்ரீ அழ. வள்ளியப்பாவின் நன்றியுரைக்குப் பின் அன்றைய நாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. மகாநாட்டையொட்டி புத்தகக் கண் காட்சியொன்றையும் ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள் ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றன. காலையில் ஸ்ரீ எச். வைத்தியநாதனின் வரவேற்புரைக்குப்பின் ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற 'நாடக வளர்ச்சி—எந்த விதத்தில் தேவை' என்ற விவாதத்தைத் துவக்கி வைத்து, 'நாடகத் தந்தை' ஸ்ரீ ப. சம்பந்த முதலியார் பல அரிய யோசனைகளைக் கூறினர். பல எழுத்தாள அன்பர்கள் விவாதத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதியம் எழுத்தாளர் நலனுக்கு அரணான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாலையில் நீதிபதி ஸ்ரீ ஏ. எஸ். பி. ஐயர் தலைமை வகித்து ருசிக்க ருசிக்கப் பேசி, தமிழ்ப் பத்திரிகைகளில் சென்ற ஆண்டு வெளி வந்த சிறந்த கதைகள், கட்டுரைகளுக்குப் பரிசுகள் வழங்கினர். அதன்படி, ஸ்ரீ ரா. கி. ரங்கராஜன் (சூரியா) குமுதத்தில் எழுதிய 'பல்லக்கு' என்ற சிறுகதைக்காக முதல் பரிசையும், 'மித்திரன்' வாரப் பதிப்பில் 'நன்னைச்சு' என்ற தலைப்பில் அரிய சிறு கதை எழுதிய ஸ்ரீ வை. சுப்பிரமணியமும், குமுதத்தில் வெளியான 'இரக்கம் ஒரு விலங்கு' என்ற கதைக்காக ஸ்ரீ ஜ. ரா. சுந்தரேசனும் இரண்டாவது பரிசுகளையும் பெற்றனர்.

அதுபோன்றே, தினமணி சுடரில் ஸ்ரீ பெ. நா. அப்புசாமி எழுதிய 'டெலிவிஷன்' என்ற கட்டுரை முதல் பரிசும், 'சுதேசமித்திரன்' ஞாயிறு மலரில் ஸ்ரீ பி. எச். நெய்யாத் எழுதிய 'தேவிகுளம், பீர்மேடு' என்ற கட்டுரையும், 'சுழகேசரி'யில் வெளியான ஸ்ரீ எஸ். கிருஷ்ணனின் 'தொல்லை தரும் வள்ளுவர்' என்ற கட்டுரையும் இரண்டாவது பரிசுகளையும் பெற்றன.

பின்னர், 'சிறுகதை' என்ற தலைப்பில் ஸ்ரீ பி. எஸ். ராமையா சிறுகதை இலக்கியத்தைப்பற்றி வெகு அழகாக விமரிசனம் செய்து, அரிய பல நல்லுரைகளை வழங்கினர், எழுத்தாளர்களுக்கு.

'கட்டுரை' என்னும் தலைப்பில் ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரியும், ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியும் பேசிய பின், சங்கத் தலைவர் ஸ்ரீ 'தேவன்' அனைவருக்கும் தனது நன்றியறிதலைத் தெரிவித்தார். இத்துடன் இரண்டு நாள் மகாநாடு முடிவு பெற்றது.

# வருஷப்பிறப்பு

[பழைய வருஷம் கழிகிறது; புதிய வருஷம் பிறக்கிறது: நாட்டுப்புறப் பெண்கள், தங்கள் வீட்டுத் தெய்வமான காளி அம்மனைப் போற்றி வருஷப் பிறப்பைக் குரவைக் கூத்திட்டு வரவேற்கின்றனர்]

★

காளியாத்தா—எங்கள்—காளியாத்தா—உன்
கருணை இருக்கவேணும் காளியாத்தா—புது
வருடம் செழிக்கவேணும் காளியாத்தா—நல்ல
வளங்கள் கொழிக்கவேணும் காளியாத்தா—காளி

வானகத்தே சூரியனை ராட்டை சுழற்றி—உருள்
வாரியலைப் பஞ்செடுத்து மழைநூல்பின்னி
கானகத்தில் பூநிறைத்துக் கனிகள் கொஞ்ச—பசுங்
கம்பளம் விரிப்பாளெங்கள் காளியாத்தா—காளி

ஆறுகுளம் குட்டையெல்லாம் தண்ணிநிரம்ப—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னவே
சேறுபடும் நிலமெல்லாம் கீறுகீறியே—கதிர்ச்
செந்நெல் செழிக்கவேணுங் காளியாத்தா—காளி

கொக்குடனே நாரையது கொஞ்சிடவேணும்—மீன்
கொத்திகளும் வட்டமிட்டுச் சுத்திடவேணும்
கெக்கலித் தவளைகத்திச் சொக்கிடவேணும்—மழைக்
கிளர்ச்சிப் பருவம் பார்த்துக் கொட்டிடவேணும்—காளி

பானைநல்லாப் பொங்கவேணும் காளியாத்தா—இன்பப்
படையல் படைக்கவேணும காளியாத்தா
தேனும்பாலும் பொங்கவேணும் காளியாத்தா—எங்கள்
தெம்பு நிறையவேணும் காளியாத்தா—காளி

மாடுகன்று வாழவேணும் காளியாத்தா—நல்ல
வரதுவைக்கோ லுயரவேணும் காளியாத்தா
வீடு நிறையவேணும் காளியாத்தா—வந்த
விருந்து மகிழவேணும் காளியாத்தா—காளி

ஆலையிற் கருப்பஞ்சாறு பாய்ந்திடவேணும்—பஞ்
சாலையிற் துணிமலைகள் சாய்ந்திடவேணும்
சாலையில் போக்குவரத்து மிஞ்சிடவேணும்—கல்விச்
சாலையெல்லாம் வித்தைநலம் விளைஞ்சிடவேணும்—காளி

குத்துவிளக் கேற்றிவைத்துக் கும்பிடவேணும்—பின்னும்
கோலமின் சரவிளக்கும் கொஞ்சிட வேணும்
புத்தும்புதுத் திட்டமொன்றும் தில்லிநகரில்—அதன்
புதுமை சிறக்கவேணும் காளியாத்தா—காளி

கழனியிலே வேலைசெய்து சேறுபடிய—வரும்
கணவரைப் போற்றவேணும் காளியாத்தா
அழகழகாக் குழந்தைகட்கே யாடையுடுத்தி—சின்ன
அணிகளும் பூட்டவேணும் காளியாத்தா—காளி

போன வருஷங்கண்ட புன்மைகள்நீங்க—இப்போ
போந்த வருஷம்நன்மை யாவுமே ஓங்க
தீனக் குழந்தைகளைக் காளியாத்தா—காக்கும்
தெய்வம்நீ யன்றியுண்டோ காளியாத்தா—காளி

**நாடகப் பாத்திரங்கள்**

★

சிவானந்தம்—கதாநாயகன்.
உமா—அவன் மனைவி.
ஆவி—சிவானந்தத்தின் வேண்டா விருந்தாளி.
பார்வதம்—ஆவியின் இவ்வுலக மனைவி.
கிச்சு-சிவானந்தத்தின் மைத்துனன்.

# ஆவி

1

(ஞாயிற்றுக்கிழமை, நடுப்பகல். சிவானந்தம் வெய்யிலை முன்னிட்டு, ஜன்னல்களைச் சாத்தி, அறையின் நடுவில் மின்சார விசிறியின் கீழ் ஈஸிசேரில் சாய்ந்துகொண்டு ஆவி உலக ஆராய்ச்சி பற்றிய புஸ்தகமொன்றில் ஈடுபட்டிருக்கிறான். அவனையும் மூறிக் கொட்டாவியும் தூக்கமும் அவனை ஆட்கொள்ளப் பார்க்கின்றன.)

சிவானந்தம்:—(வாய்விட்டு வாசிக்கிறான்) "சில ஆவி ஆராய்ச்சியாளர்கள் ஆவிகளின் கை, கால் இவற்றின் பரிமாணத்தை உருக்கிய மெழுகைக் கொண்டு அளந்திருக்கிறார்கள். இறந்தவரின் கை, கால் போன்ற அவயவங்களைக் கண் முன் வரவழைத்தவரும் உண்டு. இதேபோல் 'மீடியத்தின்' உதவியில்லாமல் நேர் முகமாக இறந்தவரின் குரலைக் கேட்பதும் சாத்தியம்...(அலுப்புடன்) அப்பப்பா! அண்டப் புளுகு.

குரல்:—தனக்குத் தெரியாத, புரியாத விஷயங்களைப் பொய் என்று சொல்வது மனிதனின் இயல்பு. என்னைப் பார்க்க முடியாவிட்டாலும், என் குரல் இப்போது உங்களுக்குக் கேட்கவில்லையா?

(சிவானந்தம் திடுக்கிட்டு, நான்கு பக்கமும் பார்த்தபின், சமாளித்துக்கொண்டு, புஸ்தகத்தில் ஈடுபட முயற்சிக்கிறான்.)

குரல்:—சற்று முன் நான் உங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள புளிய மரத்திலிருந்து ஜன்னல் வழியாக உள்ளே வந்தேன். இங்கே நிழலாகவும், குளுமையாகவும் இருக்கிறது. இரண்டும் எங்களுக்கு முக்கிய தேவைகள்.

சிவா:—(சிரமத்துடன் சமாளித்துக்கொண்டு) "எங்களுக்கு" என்றால்?

குரல்:— உங்கள் கையில் இருக்கிறதே 'ஆவி உலகம்' என்ற புஸ்தகம்—அந்த உலகின்வாசியாகிய எங்களுக்குத்தான்.

சிவா:—(வாய் குழறி) அப்படியானால் நீங்கள் ஒரு பிசாசா!

ஆவி:—(கடுமையாக) ஆவி என்பது இக்கால, நாகரீகச் சொல். நீங்கள் உபயோகித்த சொல், விக்ரமாதித்ய கால இலக்கியம்.

# உலக விருந்தாளி

**"சியாமா"**

சிவா:—(பயந்து) மன்னிக்க வேண்டும். (தன்னைத் தானே கிள்ளிக் கொள்கிறான்.)

ஆவி:—(சிரித்து) உங்களுக்கு தூக்கம் வந்தது உண்மை தான். ஆனால், நீங்கள் தூங்கவில்லை. இரவை வேண்டி நான் மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டு புளியம் பழத்தை எண்ணிக் கொண்டிருந்தேன். இங்கு நீங்கள் படும் வேதனை என் மனத்தில் நிழலோடியது. எங்களைப் பற்றிய உண்மையை உங்களுக்குச் சொல்லி, அளவளாவ ஓடோடியும் வந்தேன்.

சிவா:—வீண் சிரமம்,

ஆவி:—சிரமமா! இங்கு எத்தனை குஷியாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கிறது. வெளியே ஓரே வெய்யில், பொழுது வளர்ந்துகொண்டே போகிறது.

சிவா:— உங்களை நான் எப்படி நம்புவது?

ஆவி:— யாருக்கு மோசம்?.... போனுப் போகிறது, இதோ, அந்த 'ஸ்டாண்டிலுள்ள' உங்கள் அலாரம் கெடிகாரத்தை ஜன்னலில் கொண்டு வைக்கிறேன் பாருங்கள்.

(கெடிகாரம் தானாகவே இடம் மாறுவதுபோல் தோற்றமளிக்கிறது. அதைக் கண்டு நடுங்கிய சிவானந்தம், கண்களை மூடிக்கொண்டு "போறும், போறும்" என்று அலறுகிறான்.)

ஆவி:—உங்களுக்கு இன்னும் ருசு வேண்டுமானால், இந்த அறையின் சீதோஷ்ணத்தை ஏற்றவோ, குறைக்கவோ என்னால் முடியும். ஜன்னல் கதவுகளைக் கிடுகிடுக்கச் செய்வேன். மின்சார விசிறியைத் தடை செய்வேன்.

சிவா:—(குறுக்கிட்டு) வேண்டாம், வேண்டாம். இதுவே போறும், உங்களை முற்றும் நம்புகிறேன்.

ஆவி:—(வருத்தத்துடன்) நான் வந்த வேளை சரியாக இல்லை. சமையல் அறையில் துயில் கலைந்த உங்கள் இல்லக்கிழத்தி, உங்களைக் காண இங்கு வருகிறாள். நான் இங்கு ஒரு மூலையில் தங்குவதில் ஆட்சேபமொன்றுமில்லையே?

சிவா:—(ஆச்சரியத்துடன்) இதெல்லாம் உமக்கெப்படித் தெரியும்!

(அச்சமயம் சிவானந்தத்தின் மனைவி உமா அறையில் நுழைகிறாள்.)

உமா:—எதெல்லாம் எப்படித் தெரியும்? யாரோடு பேசிக்கொண்டிருந்தீர்கள்?

சிவா:—நானா பேசிக்கொண்டிருந்தேன்?

ஆவி:—பேஷ், அப்படித்தான் பேசவில்லை என்று சாதியும். இல்லாவிட்டால் வீண் வம்பு.

சிவா:—(கோபமாக) உன் குரலைக் காட்டாதேயேன்!

உமா:—(அதற்கு ஒரு மாற்று குறையாமல்) என் குரல் அவ்வளவு கசந்துவிட்டதா?

ஆவி:—ஏதானும் சொல்லிச் சமாளியுங்கள். அந்தம்மாவுக்கு என் குரல் கேட்காது.

உமா:—(கெடிகாரத்தைப் பார்த்து) அழகா, ஆணி அடிச்சு 'ஸ்டாண்டிலே' வச்சிருந்த கெடிகாரத்தை உங்களை யார் இப்படி ஜன்னலில் வைக்கச் சொன்னது? அவசரத்திலே கதவை கிதவை திறக்கறத்தே—

சிவா:—(திடுக்கிட்டு) நானா வச்சேன்!

உமா:—(காரமாக) பின்னே நானா வச்சேன்!

ஆவி:—(மூலையிலிருந்து) வச்சது நான்.

சிவா:—(ஆத்திரமாக) அதான் தெரியறதே.

உமா:—(விசும்பி) தேவல்லையே! முதலில் குரலைக் காட்டாதேன்னேள்! இப்போ கெடிகாரத்தை ஜன்னலில் வச்சது நான்னு சாதிக்கறேளே!

சிவா:—(பரிதாபமாக) உன்னைச் சொல்லலேடி.

ஆவி:—ஐயா பத்திரம். எதையாவது சொல்லி மாட்டிக்காதேயும்.

சிவா:—(கோபமாக) நல்ல வேளையிலே இங்கே வந்தே, நீ தொலைஞ்சா ஒரு உபத்ரவமுமில்லை.

உமா:—(அழுது) அத்தனைக்கு வந்தாடுத்தா? வாரத்திலே ஒரு நாள் தனியா இருக்கேளேன்னு பேச வந்தால், கண்டபடி ஏசறேளே?

ஆவி:—நூற்றுக்கு நூறு நம்பிட வேண்டாம். அந்தம்மா இங்கே வெறுமே பேச மட்டும் வரல்லை. மத்தியானம் சினிமாவுக்குப் போக அடிபோடத்தான்.

சிவா:—(தன்னை மறந்து) மாசக் கடைசியும் அதுவுமா சினிமாவா!

உமா:—(திகைப்பைச் சமாளித்துக் கொண்டு) யார் சினிமான்னா? அப்படிக் கேட்டாத்தான் அழைச்சுண்டு போற ஆளைப் பாரு.

ஆவி:—முழுப் பொய். அந்தம்மா வந்தது அதுக்குத்தான்.

சிவா:—செஞ்சதையும் செஞ்சுட்டு, பொய் வேறயா?

ஆவி:—அப்படிப் போடும் தைரியமா?

உமா:— (கோபமாக) ஏது, இன்னிக்கி வார்த்தைகளை ரொம்ப அள்ளி வீசறுப்பலே இருக்கே! யார் உங்ககிட்டே சினிமாப் பேச்சை எடுத்தது?

சிவா:— எடுக்காட்டா தெரியாதா?

ஆவி:— பேஷ்.

உமா:— அதான் எப்படிங்கறேன்? ஏதாவது இக்ஷிணி, கிக்ஷிணி வந்து சொல்லித்தா?

ஆவி:— ஐயனே, பத்திரம். எதையானும் உளறிக்கொட்டி என்னை மாட்டிவிட்டுடாதேயும். பெண்கள்னா எனக்கு ரொம்ப பயம்.

சிவா:—வாரத்திலே ஒரு நாள் எண்ணெயைத் தேய்ச்சுண்டு, ஹாய்யாக, தூங்கலாம்னு வந்தேன். தரித்திரம் பிடிச்ச நீ, என் வாயைக் கிண்டிவிட்டு—

உமா:—(துள்ளி) ஏன்னா தூங்கித் தொலையுங்களேன், அதுக்காக தரித்திரம், கிரித்திரம்னு ஆசீர்வாதம் பண்ண வேண்டாம். (விம்மி) ஏதோ என் அஞ்ஞானம் பற்றி இழுத்து வந்தது, அதுக்குப் பட்டாச்சு. நான் தொலையறேன்.

சிவா:—ஐய்யோ! உன்னைச் சொல்லலேடி.

உமா:— சொன்னதைச் சொல்லிவிட்டு பொய் வேறயா, முழுப்பூசனியை இலைச் சோற்றிலே மறைக்கிற மாதிரி.

(போகிறாள்).

சிவா:— உமா, உன்னைத்தானே. சற்றுப் பொறேன். எல்லாம் விவரமாச் சொல்றேன்.

ஆவி:— அந்தம்மா இப்போ போறது தான் நல்லதும்பேன். அனுவசியமா எதையானும் சொல்ல ஆரம்பிச்சு, மறுபடியும் மாட்டிக்க வேண்டாம்.

சிவா:— முதல்லே நீ தொலை. எல்லாம் சரியாப் போய்விடும்.

ஆவி:— இந்த கெடிகாரத்தாலே தானே சுவாமி இந்தச் சண்டை ஆரம்பிச்சுது. இருந்த இடத்திலே அதை வச்சுட்டு, நான் அந்தர்தியானமாகிடறேன். அப்போ திருப்திதானே?

உமா:— (போனவள் திரும்பி) அடங்கிப் போறேன்னு, அனுவசியமா 'தொலை கிலை'ன்னு வார்த்தைகளை ஓட்ட வேண்டாம். இஷ்டமில்லேன்னா சொல்லுங்கோ, சாயங்கால ரயில்லே ஊருக்கே போயிடறேன். எனக்கு இரண்டு வேளை சாப்பாடு போட அம்மாவும், அண்ணாவும் தயங்க மாட்டா.

(இப்பொழுது கெடிகாரம் ஜன்னலிலிருந்து வழக்கமான இருப்பிடத்திற்குப் போவது அவள் கண்களில் படுகிறது.)

உமா:— (வாய் குளறி) ஐயோ, அழோ, பாழுங்கழேன், அந்த கெடிகாரத்தை! தானா நகழ்ந்து போகிறதே.

சிவா:— (அவளைத் தாங்கி) அதெல்லாம் ஒண்ணுமில்லேடி. நான்தான் பக்கத்திலேயே இருக்கேனே, எதுக்காகப் பயப்படறே?

உமா:— ஐயோ கிழுகிழுன்னு வழுதே.

(மயக்கமாக அவன்பேரில் சாய்கிறாள்).

ஆவி:— (ஜன்னலிலிருந்து) ரொம்பச் சிரமம் கொடுத்துவிட்டேன். மன்னிக்கணும். என்னைக் கேட்டால், அந்தம்மாவிடம் விஷயத்தைச் சொல்லாமலிருந்தால்தான் தேவலை. அப்போ உத்தரவு வாங்கிக்கட்டுமா?

சிவா:— (கோபமாக) மொதல்லே நீ தொலை. அதுக்கு என் உத்தரவு என்ன?

உமா:— (கண்களைத் திறந்து ஹீனஸ்வரத்தில்) என்னோட இந்த நிலையிலேயும் தொலை, தொலைங்கறேளே.

சிவா:—(அன்புடன்) ஐயோ, உன்னைச் சொல்லலேடி. போயும், போயும், உன்னைச் சொல்வேனா. . . .

## 2

(அடுத்த நாள். இரவு எட்டரை மணி, அறையில் வழக்கமான ஈஸி சேரில் படுத்திருக்கும் சிவானந்தத்தின் முகத்தில் கவலையின் ரேகைகள் ஓடிக் கொட்டிருக்கின்றன. அவன் பக்கத்தில் இருந்த நாற்காலி தானாகவே நகர்ந்து, அவனைத் தூக்கிப்போடச் செய்கிறது. அதே சமயம் ஆவியும் பேசுகிறது).

ஆவி:— மன்னிக்க வேண்டும். பிற்பகலிலிருந்து 'நார்மல்' என்று அறிந்தேன். நாளைக்கு முற்றும் சரியாகிவிடும். வெறும் அதிர்ச்சி. ஆனால், அவசரப்பட்டு நீங்கள் தந்தியடித்து, அவ அம்மாவையும், அண்ணாவையும் வரவழைத்திருக்க வேண்டாம்.


# உலகியல் கதைகள்

(விக்ரமாதித்தன் கதை)

★

வெகு விரைவில்

கவிதைச் சித்திரத் தொடராக

'மித்திர'னில் ஆரம்பமாகிறது.

கவிதையாக்குபவர்: சாலிவாஹனன்.

சித்திரங்கள்: ரெஸாக்.

சிவா:— தங்கள் பரிவுக்கு நன்றி. தயவு செய்து நீங்கள் வந்த வழியே போய் வாரும். உம்மால் நேற்று ஒரு நாள் நான் பட்டது போறும்.

ஆவி:— உங்கள் கோபம் எனக்குப் புரிகிறது. இருந்தாலும் நேற்று நடந்தவைகளுக்கு உண்மையிலேயே நானா பொறுப்பாளி? வெளியே, புளிய மரத்தில் வெப்பம் தாங்கவில்லே. உள்ளே வந்தேன். சாதாரண புருஷன்–பெண் ஜாதி சச்சரவாக முடிந்திருக்க வேண்டியது, அந்த அலாரம் கெடிகாரத்தாலே இத்தனே தூரத்துக்கு வந்துவிட்டது.

சிவா:— தயவு செய்து உங்கள் குசலப் பிரச்னத்தை உங்களவருடன் வைத்துக் கொள்ளுங்களேன்.

ஆவி:— நானாகவா வந்தேன்? நீங்கள் தானே என்னேப்பற்றி அறிய ஏதோ புஸ்தகம் படித்துக்கொண்டிருந்தீர்? பாவமாக இருந்தது, ஏதோ நாலு உண்மை சொல்லிப் போக வந்தேன்.

சிவா:— முதல் குற்றம் என்னுடையது தான். வேண்டுமானால், கன்னத்தில் போட்டுக்கொள்கிறேன். ஆனால், தயவு செய்து இனிமேல் இங்கு வருவதை–

ஆவி:- (குரல் தழதழக்க) அங்கே நான் படும் கொடுமைகளேக் கேட்டால், நீங்கள் இப்படிப் பேசமாட்டீர்.

சிவா:— அப்படி என்ன அவதி ஐயா!

ஆவி:— என் இனத்தார் பாமரராய், விலங்குகளாய், குருடராய், ஏன் வஞ்சகராக இருந்தால்கூடப் பொறுத்துக்கொள்வேன். ஆனால் இந்த பக்திதான்–

சிவா:–( திடுக்கிட்டு) என்ன பக்தியா!

ஆவி:— ஆம் ஐயா பக்தியேதான். நாங்கள் இருப்பது ஏழு உலகங்களில். அவாவா கர்மாவுக்குத் தக்கபடி இறந்தவர் மேலேயோ கீழேயோ இந்த உலகங்களுக்குப் போகிறார்கள். அங்கு ஆவியாக இருக்கும்போதுகூடப் புண்யம் பண்ணி, அதற்கு மேலுள்ள உலகம் போவது சாத்தியம். அநேகமாக எல்லா ஆவிகளுமே மேலே போக ஏதாவது நல்ல காரியங்களில் ஈடுபட்டிருப்பார்கள். "டெரிப்லி டல்" போங்களேன்.

சிவா:— எனக்குப் புரியவில்லே.

ஆவி:— சிரமம்தான். இருப்பதில் கீழுலகத்தில் இருந்தால்தான், மனித உலகத்தோடு அதிகமாகத் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும். எனக்கு வேண்டியதெல்லாம் அதுதான்.

சிவா:— புரிகிறது. இங்கு உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் பாத்திரமானவர்களே விட்டுப் போயிருப்பீர்கள். அதான் மனசு அல்லல்படுகிறது. ஒரு வேளே மனேவி, காதலி–

ஆவி:— ஓய், ஓய், வாயை மூடும். உங்க உலகத்தில் நான் விட்டுப்போன ஒரே பிராணி என் மனேவிதான். அந்தப் புண்ணியவதியிடமிருந்து தப்ப நான் தற்கொலே பண்ணிக் கொண்டேன். இப்போ அதை நினேத்தால்கூட உடல் கிடுகிடுக்கிறது.

சிவா:— உடலா?

ஆவி:— அதுமாதிரி ஒரு உணர்ச்சின்னு வைத்துக்கொள்ளுங்களேன்.

சிவா:— ஆமாம். அந்தம்மா அப்படி என்ன செஞ்சா?

ஆவி:— என்ன செய்யல்லேன்னு கேட்டா, பொருத்தமாக இருக்கும். அந்தக் கிராதகி என்னே அடிக்கக்கூட அடிப்பாள் சுவாமி.

சிவா:— ஐயோ பாவம், நீங்கள் எப்படி உயிரை விட்டேள்?

ஆவி:— ஒரு முழு பாட்டில் தூக்க மாத்திரைகளே விழுங்கி வச்சேன். மொதல்லே பயமாத் தானிருந்தது. இப்போ எல்லாம் பழகிப் போயிடுத்து. இங்கே இஷ்டப்படிப் போகலாம், வரலாம், காற்றில் மேகம்போல் மிதக்கலாம். உங்களுக்குள்ள கவலேகள் கிடையாது.

சிவா:— அந்தம்மா என்ன கதியானுள்?

ஆவி:— மண்ணெண்ணெய்த் தெருவில் 40–ம் நெம்பர் ஸ்டோரில் ஒண்டுக் குடித்தனம் செய்யருள் பர்வதம். ஒரு ஹோட்டலில் இட்டிலிக்கு அரைத்து ஜீவனம். அவ குஷியாத்தானிருக்காள். கோவிலுக்குப் போருள். செவ்வாய், சனி, ஏகாதசி, துவாதசியிலே விதவிதமான பலகாரம். அவளுக்கு ஒரு குறைச்சலில்லே.

(விம்முகிறது).

சிவா:— ஏதோ பழைய புண்ணேக் கிளறிவிட்டேன். மன்னிக்கணும்.

ஆவி:— புண்ணுமில்லே. மண்ணுமில்லே. ஒரு பொம்மனாட்டி ஒரு நாள் கிழமையிலேனும் இறந்த புருஷனே நினேக்க மாட்டாள்? அவளுக்காக நான் உயிரையே விட்டேனே!

சிவா:—அந்தம்மா கிட்டேந்து தப்பத் தானே உயிரை விட்டீர்? அவ எப்படிப் போனால் உங்களுக்கென்ன?

ஆவி:— மனசு கேக்க மாட்டேங்கறது ஐயனே. உலக சம்பிரதாயத்தை ஒட்டி அவள் நாலு சொட்டுக் கண்ணீர்விட்டிருந்தால், நான் எத்தனேயோ தெம்பாக இருப்பேன்.

சிவா:— உண்மை. ஆனால், எல்லோருக்குமே இல்லறம் நல்லறமாயிடறதா?

ஆவி:— (சிறிது குரோதத்துடன்) உமக்கென்னய்யா குறைச்சல்? நேற்று மயக்கம் போட்டு உங்க சம்சாரம் உம்ம பேரிலே சாஞ்சாப்பிலே ஒரு நாள் பர்வதம் என்பேரிலே சாஞ்சிருப்பாளா? . . . (விம்முகிறது)

சிவா:— தப்பு என்பேரிலேதான். உங்க எதிரிலே நான் அவளே அப்படி அணேச்சிருக்கக்கூடாது. ஆனால், எனக்கு அப்போ விஷயம் தெரியாது.

ஆவி:— (நினேவுக்கு வந்து) அடேடே! பேச்சு சுவாரஸ்யத்திலே மறந்தே போய்ட்டேனே! இன்று பிற்பகல் உங்கள் சம்சாரம், நேற்று கெடிகாரம் தானுகவே நகர்ந்தது, நீங்கள் தனக்குத்தானே பேசிண்டது எல்லாம்பற்றி, அவ அண்ணு, அம்மாகிட்டே வத்தி வச்சூட்டாள். சென்ற அரை மணி நேரமா உங்க மைத்துனனும், மாமியாரும் நம்ம பேச்சை–இல்லே, இல்லே, உங்க பேச்சை; என்னேத்தான் எல்லாராலுமே கேட்க முடியாதே–ஒட்டுக் கேட்டிண்டிருக்கா. பேச்சு சுவாரஸ்யத்திலே, நான் சமயத்திலே உம்மை எச்சரிக்கை செய்ய மறந்துவிட்டேன். அவாளே எப்படிச் சமாளிக்கப்போறேளோ, எனக்குத் தெரியாது. நான் வரேன். . .

சிவா:— அடப்பாவி! பெரிய கல்லேத் தூக்கிப் போட்டுட்டு நழுவறயே! (இரைந்து·) உண்மையில் என் க்ஷேமத்தில் உனக்கு அக்கறை இருந்தால், நீ இனிமே இந்தப் பக்கம் அண்டக்கூடாது, ஆமாம். . . .

மைத்துனன் கிச்சு:— (வந்துகொண்டே) அத்திம்பேரே! இந்த 'ப்ரோமைட்' மிக்சரைத் தாற்காலிக சாந்தியாகச் சாப்பிடச் சொன்னர். டாக்டர் காலமே வருராம்.

சிவா:— எனக்கெதுக்கப்பா டாக்டர்!

கிச்சு:— மத்தியான்னம் உமா சொன்னத்தே இத்தனே 'ஸீரியஸ்'னு நான் நினேக்கல்லே. ஆனால், இப்போ கிட்டத்தட்ட அரை மணியா, நீங்கள் உங்களோட பேசிண்டிருந்ததைக் கேட்டவுடன்–

சிவா:— (சிரித்து) அடேடே, அதுவா! அதெல்லாம் வெறும் தமாஷ்.

பிரசித்திபெற்ற

நீபா

- ஹேர் ஆயில்
- டாய்லட் சோப்
- பிரில்லியன்டைன்
- ஸ்னே
- ஊதுபத்திகள்

நறுமணத்திற்கு மறுபெயர்

கங்கா ஒர்க்ஸ், அடையார், மதராஸ்-20.

எனக்கு இந்த ஆவி உலக ஆராய்ச்சியாலே ஒரு பைத்தியம். ஒரு ஆவியோட பேசிண்டிருந்தேன். நேற்றும் இதேதான் நடந்தது, உன் தங்கை பாவம் பயந்து போய்ட்டாள்.

கிச்சு:— அந்த ஆராய்ச்சிக்கெல்லாம் நிறைய மனோதிடம் வேண்டும். இல்லாட்டா இப்படித்தான் நரம்புகளையும்,


டெல்ஹி தென்னிந்தியருக்கு நற்செய்தி!

**ருசியான சாம்பார் பொடி!**
**மணம் கமழும் ரசப் பொடி!!**
**உயர்தர வெற்றிலை பீடா!!!**

சுத்தமான தயாரிப்பு.

**K. G. K. & Co.**

P. B. 604 New Delhi
Show Room:
**(South Indian Boarding House, Connaught Circus, New Delhi)**

தென்னிந்தியர்
பிரத்தியேகத் தேவைகளாவன:

வாசனைப் பாக்கு, கலர் சுண்ணும்பு. அப்பளாம், பப்படம், வடாம், வற்றல், ஊறுகாய்கள், நேந்திரங்காய் வறுவல், காப்பிப்பொடி இவைகளும் கிடைக்கும்.

கல்யாணம் முதலிய விசேஷ வைபவங்களுக்கு விருந்தினரை உபசரிக்க எமது ஸ்பெஷல் "பீடா" வுக்கு ஆர்டர் செய்யுங்கள்.

பிரதி வெள்ளிக்கிழமையும், பண்டிகை நாட்களிலும் சென்னைக்கதம்பம் விற்பனையாகிறது.



**சுதேசமித்திரன், சென்னை-2.**

**அறிவிப்பு**

அடியிற்கண்டுள்ள இடத்திற்குப் புதிதாக நியமித்துள்ள ஏஜண்டின் விலாசத்தைக் கொடுத்துள்ளோம். அன்னாரிடம் மித்திரன் சந்தாதாரர்கள் தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

**கள்ளிக்கோட்டை**

ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாஸன்,
C/o டி. என். ராமசாமி
ஹிந்து நிருபர்.
கள்ளிக்கோட்டை,
சர்க்குலேஷன் மானேஜர்.


மூளையையும் பாதிக்கும். இனிமேலானும் இதுகளுக்கு மூட்டை கட்டி வச்சுடுங்கோ.

சிவா:— நேற்றே வச்சுட்டேனே.

கிச்சு:— எதுக்கும் நாளைக்கு டாக்டரையும் பாத்துடுவோம்.

சிவா:— அதெல்லாம் ஒண்ணுமில்லை அப்பா.

மாமியார்:— (கதவிடுக்கிலிருந்து) அப்படி அவருக்கு வெள்ளைக்காரன் வைத்தியத்திலே நம்பிக்கை இல்லேன்னு மாந்த்ரீகம் பார்க்கலாம். ஒரு மண்டலம் திருவடமருதூரோ, கு ண சேகரமோ போய் பிரதட்சணம் பண்ணினால்—

சிவா:— ச, ச, அதெல்லாம் அப்படி ஒண்ணும் எனக்கு இல்லை மாமி, நீங்க பயப்பட வேண்டாம்.

மாமி:— அப்படிச் சொல்லிட முடியுமா? என்னோட இந்தக் காதாலேதான் கேட்டிண்டிருந்தேன். ஏதேதோ உங்களுக்குள்ளேயே பேசிண்டிருந்தேளே! நேற்று வேறே அந்தக் கெடிகாரம் தானாக நகர்ந்ததுன்னு அவ சாதிக்கிறாள். சாயங்காலம் அவளுக்குச் சுத்திப்போட்டேன். நாளைக்கு இரண்டு பேருக்குமே போடணும். . ஏன் கிச்சு, அத்திம்பேரை வேற வீட்டுக்கு மாற்றிடச் சொல்லேன்.

சிவா:— பட்டணத்திலே எங்கே மாமி அவ்வளவு சுலபமா வீடு கிடைக்கிறது? நீங்களும் கிச்சுவும் கவலைப்படாமல் உமாவை இனிமே நான் பாத்துக்கறேன். இனிமே ஒண்ணும் நேராது பாருங்களேன்.

கிச்சு:— எதுக்கும் அந்த டாக்டரை—

சிவா:— நான் சொன்னால் நம்பேன்.

மாமி:— பொழுது விடிஞ்சா இரண்டு பேரும் சுத்தியானும் போட்டுக் கோங்கோ. இதெல்லாம் தெய்வக் கோளாறு.

சிவா:— சரி மாமி, விடியட்டும். இப்போ உமா தனியா இருக்கா, அங்கே போவோம் வாங்கோ.

## 3

(பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பின், ஒரு ஞாயிற்றுக்கிழமை நடுப்பகல். தன் வழக்கமான ஈஸிசேரில் அரைத் தூக்கத்திலிருக்கிறான் சிவா னந்தம். 'தடால்' என்று சப்தத்துடன் ஜன்னல் திறக்கிறது).

ஆவி:— மன்னிக்க வேண்டும். வெளியே வெய்யில் பொசுக்கறது. பழத்துக்காக யாரோ புளிய மரத்தை உலுக்க வேறே வந்துவிட்டார்கள். ஏப்ரலே இப்படியிருந்தால், மேயும், ஜூனும் எப்படி போகப் போறதோ! . . . உஸ். .

சிவா:— (கடுமையாக) சென்ற தடவை தாங்கள் வந்திருந்தபொழுது, இந்த வரவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தால், பரஸ்பரம் நலமாக இருக்கும் என்று சொன்னதாக நினைப்பு.

ஆவி:— (அதைக் கவனிக்காமல்) தங்கள் மனைவியின் உடல் நலம் அறிய மகிழ்ச்சி.

சிவா:— தங்கள் பிரத்தியேக அன்பிற்குப் பாத்திரனானதால், எனக்குப் பைத்தியக்கார ஆஸ்பத்திரி வாசம் கிட்டவிருந்தது.

ஆவி:— நீங்கள் அப்படி அவசரப்பட்டு, மைத்துனனுக்குத் தகவல் கொடுத்திருக்கக் கூடாது.

சிவா:— என்னைப் பற்றிய வரை அந்தச் சம்பவத்தின் படிப்பினை, மனிதனும், ஆவியும் உறவாட முயற்சிப்பது சுத்த அபத்தம்.

ஆவி:— என்னைப் பற்றிய வரை, ஆவி உலகில் பொழுதுபோக்க எனக்கு வசதிகள் இல்லை என்று ஏற்கெனவே சொல்லி விட்டேன்.

சிவா:— (ஆத்திரமாக) ரொம்ப லட்சணமா இருக்கே! அதுக்கு நானு பலி?

ஆவி:— எனக்கு வேறு வழி?

சிவா:— அங்கு ஏழு உலகங்கள் இருப்பதாகச் சொன்னீரே?

ஆவி:— அந்தப் பேச்சுமட்டும் வேண்டாம். நினைக்கவே உடல்—இல்லை; ஆவி நடுங்குகிறது. மேலும் என் வாழ்க்கையில் கிட்டாததெல்லாம் இங்கு உங்கள் வாழ்வில் காண்பதில் எனக்கு எவ்வளவு ஆனந்தம் தெரியுமா?

சிவா:— அந்த ஆனந்தத்தைப் பகிர்ந்து கொள்ள என்னால் முடியவில்லை. தயவு செய்து போய்வாரும், உம்...

ஆவி:— மன்னிக்க வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக நிம்மதியின்றி அலைந்து திரிந்த நான், இந்தப் பதினைந்து நாட்களாகத்தான் குளுமையையும், நிழலையும் காண்கிறேன். இதை அவ்வளவு சுலபமாக விட்டுப் போவேனென்று நீங்கள் நினைத்தால், அது வீண் கனாதான்.

சிவா:— நான் உம்மோட அளவளாவ மறுத்தால்—

ஆவி:— அறையின் ஒரு மூலையில் சத்தியாக்கிரஹம் செய்வேன். எத்தனை நாழிதான் உம்மால் சும்மா இருக்க முடியும்?

சிவா:— நீங்கள் விதண்டா வாதம் செய்கிறீர். பிறகு என்னைக் குற்றம் சொல்லாதேயும். . .

('காலிங்' மணியை அடிக்கிறான். உமா வருகிறாள்).

சிவா:— (குஷியாக) மணி இரண்டாகிறது. அப்போ கிளம்புவோமா சினிமாவுக்கு?

உமா:— டிபன்?

சிவா:— அதற்குப் பிறகுதான். போய் சமையற்கார அம்மாவை இங்கேயே டிபனையும், காப்பியையும் கொண்டுவரச் சொல். இப்படியே சாப்பிடுவோம்.

உமா:— இதோ ஒரு நொடியில். (ஏதோ நினைவு வந்தவள்போல்) ஆமாம், இந்த அருமைப் புதையலை எங்கு கண்டெடுத்தீர்? அந்தம்மாவைச் சமையற்காரியாகப் பாவிக்கவே, கூச்சமாக இருக்கிறது. ஒரு தாயாருக்குச் சமமான அன்பையும், ஆதரவையும் என் போல் பொழிகிறார்.

சிவா:— எனக்கு மிகவும் வேண்டிய நண்பர் ஒருவர், அவள் விலாசத்தைக் கொடுத்தார்.

ஆவி:— (சந்தேகத்துடன்) என்ன! என்ன!! என்ன!!!

சிவா:— (குஷியாக) அந்தம்மாவின் புருஷன் காலமாகி இரண்டு வருஷங்கள் ஆகின்றன. ஜீவனத்துக்குச் சிரமப் பட்டுக்கொண்டு, எங்கேயோ ஹோட்டலில் இட்டிலிக்கு அரைத்துக்கொண்டிருந்தாள் இந்தம்மா.

ஆவி:— (ஆத்திரத்துடன்) இதற்கு மட்டும் நான் பழிக்குப் பழி வாங்காவிட்டால்—

உமா:— நாம இரண்டு பேர்தானே, சமையற்காரி எதற்குன்னு, நான் முதல்லே தயங்கினதுண்டு. ஆனால், இந்த அம்மாவோட பழகின பிறகு, ஏதோ பெத்தவளோட இருக்கிருப்பிலே மனசிலே ஒரு கிளுகிளுப்பு தோண்றது.

சிவா:— ஆரம்பத்திலே, கொஞ்சம் முன்னபின்னே இருந்தாக்கூட எப்படியானும் அந்தம்மாவைச் சாக்கட்டி, அவர் ஆயுள்வரை நம்மோட இருக்கும்படிப் பண்ணிடு.

ஆவி:— அடப்பாவீ! என்னை விரட்டத்தானே இந்த சூழ்ச்சி!

உமா:— உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். நாம போகச் சொன்னால்கூட அந்தம்மா நகர மாட்டாள். உங்களைப் பார்த்தால்,அவருக்குச் சொந்தப் பிள்ளையைப் பார்க்கருப்பலே இருக்காம். இதைச் சொல்றப்போ அவர் கண்கள் கலங்கியே விட்டன.

சிவா:— இதைச் சொல்றயே நீ. அந்தம்மாவோட புருஷனுக்குக்கூட என்னைக் கண்டால் ஒரு தனிப் பிரியம். படபடக்கிற வெய்யில்லேகூட என்னை நினைச்சுண்டு பார்க்க ஓடி வந்தூடுவார்.

உமா:— (ஆச்சர்யமாக) அப்படியா! அந்தம்மாவோட புருஷனை உங்களுக்குத் தெரியும்னு, இதுவரை எனக்குச் சொல்லவே இல்லையே!

ஆவி:— மாட்டிண்டீரா! இப்போ அந்தம்மாவுக்கு என்ன பதில் சொல்லப் போறேள், பார்க்கறேன்.

சிவா:— (நிதானமாக) அதெல்லாம் நம்ப கல்யாணத்துக்கு முந்திய சிநேகிதம். அதைப் போய் அந்தம்மாகிட்ட உளறி வைக்காதே. தெரிஞ்சவா கிட்ட வேலை செய்யறது கௌரவக் குறைச்சல்னு போயிடப் போறூர்.

ஆவி:— அடப் பாவி!

உமா:— நீங்க சொல்றதும் உண்மைதான். இதைப் போய் அவர் கிட்டே கேட்பானேன்?

சிவா:— (ரகஸ்யம்போல்) அந்தம்மா புருஷனுக்கு எங்கிட்டே பிரியம் இருந்தஹாங்கறதைத் தவிர, இந்தம்மாவிடம் மகா கேவலமாக, மிருகத்தனமாக அவர் நடந்துகொண்டார்.

உமா:— ஐயய்யோ, இப்போ புரியறது. அதான் அந்தம்மா அவர் பேச்சை எடுக்கறதில்லே போலிருக்கு. இரண்டு நாளுக்கு முன், எதேச்சையாக நான் அவர் புருஷனைப்பற்றிக் கேட்டேன். அந்தச் சனியனை விட்டுத்தள்ளுங்கோன்னு ஒரே வார்த்தையில் என்னை அடக்கிவிட்டார்.

ஆவி:— (விம்மி) செத்தவனைப் போய் சனியன்ளா பர்வதம்?

சிவா:— என்ன கஷ்டப்பட்டாளோ அவள், இதிலே தீர்ப்புச் சொல்ல நமக்கு என்ன உரிமை இருக்கு?

ஆவி:— (அழுது) நான் சொன்னதவ்வளவும் சத்தியம் ஐயா. உண்மையிலேயே கஷ்டப்பட்டது நானுக்கும். கை நீட்டி என்னை அவ அடிச்சிருக்கா.

உமா:— (ஈஸி சேரின் பிடியிலே உட்கார்ந்துகொண்டு) யார் எப்படிப் போனுலென்ன? அந்த விஷயத்திலே நான் பாக்கியசாலிதான். என் ராஜாகிட்டே அன்பைத் தவிர வேற நான் கண்டதேயில்லே.

ஆவி:— (அலறி) சார், சார், நான் போயிடறேன். அந்தம்மாவை அப்படி உங்கபோலே சாயச் சொல்லாதேயும். என்னுலே பார்க்கச் சகிக்கல்லே. ஒரு நாள் பர்வதம் எங்கிட்டே இப்படி இருந்ததில்லே.

சிவா:— (மனம் இளகி) அப்போ நேஜமாகவே கிளம்பு. மணி இரண்டரை ஆகப் போகிறது. இனிமேலும் தாமதம் பண்ணினுல், சினிமாவுக்கு டிக்கெட் கிடைச்சாப்பிலேதான்.

உமா:— (ஈஸி சேரின் பிடியிலிருந்து குதித்து) இதோ ஒரு நொடியிலே கிளம்பிடலாம்.

பர்வதம் வந்துகொண்டே:— இங்கேயே காப்பியும், டிபனும் கொண்டு வந்தூட்டேன். சாப்பிடறேளா?

சிவா:— (குஷியாக) அடேடே! நாங்க நெனேச்சுது உங்களுக்கு எப்படி ஜோஸ்யம் தெரிஞ்சது?

பர்வதம்:— (பெருமையாக) சிறுசுகளோட ஆசாபாசங்களைத் தெரிஞ்சுக்க எனக்கு வயசாகலையா. . . ?

ஆவி:— (ஜன்னல் ஓரத்தில் அழுதுகொண்டே) ஒருநாள்கூட இத்தனை கனிவா நீ எங்கிட்டே பேசினதில்லையே பர்வதம்? நான் தொலையறேன். இன்னும் கொஞ்ச நாழி இங்கே இருந்தால், எனக்குப் பைத்தியமே பிடிச்சூடும்.

சிவா:— (பாடுகிறுன்.) பக்தி பண்ணக்கொண்டிருந்தால் முக்தி பெறலாமே—

(ஆவி கோபத்தில் ஜன்னலிலிருந்த அலாரம் கெடிகாரத்தை எறிய, அது நொறுங்குகிறது).

உமா:— அந்தக் கெடிகாரத்தை ஜன்னல்லே வைக்காதீங்கோ, வைக்காதீங்கோன்னு அடிச்சுண்டேன்.

சிவா:— போறது போ. அதோட ஒரு சனியன் தொலைஞ்சுதுன்னு வச்சுக்கோயேன். நாளைக்கே 'லேட்டஸ்ட்' மாடல் கெடிகாரம் ஒண்ணு வாங்கிடறேன்.

பர்வதம்:— (விளக்குமாற்ருல்) கண்ணுடித் தூள்களை ஒதுக்கிக்கொண்டே) எனக்கு ஏனோ இப்போ திடீர்னு 'அவரோட' ஞாபகம் வர்றது! அவர் இருந்த நாள்ளே இப்படித்தான் எதையானும் உடைச்சுத் தூள் பண்ணிண்டே இருப்பார்.

சிவா:— (பாதி தனக்குள்ளாக) பூர்வ ஜன்ம வாசனை அவரை இன்னும் விடல்லே போலிருக்கு!

(திரை)


ஓம்: தத்: ஸத்:

மங்களகரமான எம்து புது வருஷ வாழ்த்துக்கள்!

கே. டி. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின்

**மேல்மாயில் மருந்து**

உலகத்தில் முதன்மைபெற்ற மேக குஷ்டரோக நிவாரணி

மேக நோயால் துன்பப்படுவோருக்கு புத்துயிரளிக்கும் புனித சஞ்சீவி

மேக ரோக நிவாரண எண்ணெய், லேகியம்.

கருமேக, செம்மேகப் படைகள், மேக ரணங்கள், திமிர், மதமதப்பு, குஷ்டம், குழிப்புண், பித்த காரிகம், வாதம், குன்மம், கைகால் எரிச்சல், ரத்த பலக்குறைவு, சிரங்கு, நமைச்சல் மற்றுமுள்ள எல்லாவிதமான துர்நீர் வியாதிகளையும் ஆச்சரியமாக குணப்படுத்தும்.

விவரங்களுக்கு எழுதவும்:

**Dr. K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி & சன்ஸ்;**

5/22, மேல்மாயில P. O. (N. A. Dt.) India.

# பெருமன்னன் சீலவான்

பி. கோதண்டராமன்

ஆசிய ஜோதியாக விளங்கி, அருளுபதேசம் செய்த மகான் புத்தர் பிறந்து 2500 ஆண்டுகள் ஆகின்றன. இவ்வாண்டு மே மாதம், விசாக பூர்ணமியில், அவரது இரண்டாயிரத்து ஐந்நூறும் ஆண்டு விழா உலகெங்கும் கொண்டாடப்படும். அவர் அவதரித்த நம் நாட்டிலும் இவ்விழாவைச் சிறப்புறக் கொண்டாடப் பாரத அரசாங்கம் விரிவான ஏற்பாடுகள் செய்துள்ளது. இதையொட்டி புத்த ஜாதகக் கதைகள் சில நம் 'மித்திர'னில் வெளிவரும். மே மாத இதழ்களில் புத்தர் உதயம், அவருடைய அருளுபதேசங்கள், பௌத்த சமயம் ஆகியவைபற்றிய கட்டுரைகள் வெளிவரும்.

புத்த ஜாதகக் கதைகள் கி. பி. 400-ல் ஆரியசூரன் என்பவரால் பாலி பௌத்த சமய நூல்களிலிருந்து திரட்டப்பட்டுத் தொகுக்கப்பட்டன. இக்கதைகள் புத்தரின் 550 அவதாரங்களைக் கூறுகின்றன. ஒவ்வொரு கதையும் புத்தரின் பூர்வ ஜனனம் ஒன்றில், அதாவது, போதிசத்துவராக (புத்தராக வருவதற்குரியோராக) வாழ்ந்து வந்தபோது, அவரது வாழ்க்கையில் நடந்ததொரு சம்பவத்தைக்கூறுகின்றது. ஒவ்வொருகதையிலும், போதிசத்துவர் மனித உருவிலோ, பிராணியாகவோ, கதாபாத்திரமாக வருகிறார். இக்கதைகள் வசன நடையில் உள்ளனவாயினும், ஆங்காங்கு செய்யுட்களும் காண்கின்றன. சில கதைகளில் வரும் காட்சிகள் பௌத்த சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, பர்கத் தூபியில், (கி. மு. 250–200) கிராதிகளில், ஜாதகக் கதைகளின் காட்சிகள் பல புடைப்புச் சித்திரங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

★

ஒரு காலத்தில் பிரம்மதத்தன் வாரணாசியில் ஆட்சி செலுத்தி வருகையில், போதிசத்துவர் மீண்டும் இவ்வுலகில் அவதரித்து அவன் மகனாகப் பிறந்தார். சீலவான் எனப் பெயர் சூட்டப்பெற்ற அவர், பதினாறு வயதடைந்தபோது சர்வகலைகளிலும் பயிற்சி பெற்றார். பிறகு தகப்பனார் காலஞ்சென்றபின், 'பெருமன்னன் சீலவான்' என்ற பட்டப் பெயருடன் அரியாசனத்திலமர்ந்து மக்களை நீதிநெறி வழுவாமல் ஆண்டு வந்தார். நான்கு நகர வாயில்கள் ஒவ்வொன்றிலும் தருமசாலை நிறுவினார். நகர மத்தியில் ஒன்றும் அரமனைவாயிலில் ஒன்றுமாக மொத்தம் ஆறு தரும சாலைகள் நடைபெற்றன. ஒவ்வொன்றிலும், வறுமைப்பட்ட பிரயாணிகளுக்கும் தேவைப்பட்டவர்களுக்கும் பிச்சை வழங்கப்பட்டது. அவர் சமயக் கட்டளைகளின்படி ஒழுகினார் உபவாச நாட்களை வைதிக முறைப்படி அனுசரித்து வந்தார். அளவற்ற பொறுமையும் அன்பும், யாவர் பாலும் பட்சமும் தயையும் நிரம்பக் காட்டினார். அவரது ராஜ்யம் தரும ராஜ்யமாகவே விளங்கியது. சுருங்கக் கூறின், தகப்பனார் குழந்தைக்குக் காட்டும் பரிவுடன் எவ்வுயிரையும் சம நோக்குடன் பார்த்தார் அவர்.

இவ்விதமாக இருந்து வருகையில், அவருடைய மந்திரிகளில் ஒருவன் அந்தப்புரத்தில் அவருக்கு எதிராகத் துரோகமொன்று செய்தான். இதர மந்திரிகள் அதை அவரிடம் தெரிவித்தனர். தாமே பரிசீலனை செய்து பார்த்த மன்னருக்கு அம்மந்திரியின் குற்றம் தெளிவாயிற்று. ஆகவே, குற்றவாளிக்குச் சொல்லியனுப்பி, 'மடமையால் பார்வையிழந்தவனே, நீ செய்தது பாவச் செயலாகும். என் ராஜ்யத்தில் வாழ்வதற்கு நீ தகுதியற்றவன். உன் மனைவி மக்களை அழைத்துக்கொண்டு, இந்த ராஜ்யத்தைவிட்டு, வெளியேறு' என்று உத்தரவிட்டார். காசி நாட்டிலிருந்து இவ்விதமாக விரட்டப்பட்ட அவன், கோசல மன்னனிடம் வேலைக்கமர்ந்தான்.

அவன் படிப்படியாக உயர்ந்து, மன்னனின் அந்தரங்க ஆலோசகனானான். ஒரு நாள் அவன் கோசல மன்னனைப் பார்த்து, 'மன்னா, காசி ராஜ்யம் ஈக்களால் அசுத்தமடையாத ஒரு நல்ல தேனடைபோன்றது. ஆனால், அதன் மன்னன் பலவீனன். சொற்ப படை பலத்தைக் கொண்டு நீங்கள் அவன் நாட்டை வென்றுவிடலாம்' எனத் தூபம் போட்டான்.

அதன்மீது மன்னன் ஆலோசனை செய்தான். காசி ராஜ்யம் பெரிது. அதை வெல்லச் சிறு படையொன்று போதுமா? தன்னைச் சிக்கவைக்கக் கைக்கூலி தரப்பட்டு அனுப்பப்பட்டவனோ அந்த ஆலோசகன்—எனச் சந்தேகம் எழுந்தது. 'துரோகி, இவ்விதம் கூறக் கூலி வாங்கி வந்திருக்கிறாயோ?' எனச் சினந்து கேட்டான்.

'மன்னா, அப்படியொன்றுமில்லை. நான் பேசுவது உண்மை. ஐயமிருப்பின், அவன் ராஜ்ய எல்லையில் ஒரு கிராமத்தைத் தாக்கச் சில ஆட்களை அனுப்புங்கள். அவர்களைப் பிடித்து அவன் முன்னிலையில் நிறுத்திவைத்தாலும், மன்னன் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கி, விட்டுவிடுகிறானா இல்லையா பாருங்கள்!' என்றான் அந்த ஆலோசகன்.

'இவன் இவ்விதமாக உறுதியாகப் பேசுகிறானே' என்று வியப்புற்றான் மன்னன். தாமதமின்றி அவன் யோசனையைச் சோதித்துப் பார்க்கக் காசியின் எல்லைப்புறத்திலுள்ள ஒரு சிறு கிராமத்தைத் தாக்கத் தன் ஆட்கள் சிலரை அனுப்பினான். அக்கொடியர் பிடிக்கப்பட்டு, காசி மன்னன் முன்கொண்டு செல்லப்பட்டனர். 'குழந்தைகளே, என் கிராமத்தைச் சூறையாடி, மக்களைக் கொன்றதேன்?' என்று கேட்டார் அம்மன்னர்.

'எங்களுக்குப் பிழைக்கும் வழி வேறு இல்லாததே காரணம்' என்றனர் அவர்கள்.

'அப்படியாயின், என்னிடம் நேராக வாராததேன்? இனி அம்மாதிரி செய்யாதீர்கள்' எனக் கூறி, மன்னர் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கி அனுப்பிவிட்டார்.

தம் ராஜ்யத்திற்குத் திரும்பிச் சென்ற அவர்கள், இதையெல்லாம் கோசல மன்னனுக்குத் தெரிவித்தனர். படையொன்று அனுப்புவதற்கு இது போதிய சான்றாகாது எனக் கருதிய கோசல மன்னன், காசி மன்னரின் வேறொரு கிராமத்தைச் சூறையாட இரண்டாவது கோஷ்டியொன்றை அனுப்பினான். இந்தத் தடவை அக்கிராமம் ராஜ்யத்தின் நடுவேயே இருந்தது. படையெடுத்தவர்களை அம்மன்னர் மீண்டும் பரிசுகளுடன் திருப்பியனுப்பிவிட்டார். இதுவும் போதுமான சான்றாகப் புலப்படவில்லை கோசல மன்னனுக்கு. காசியின் தெருக்களிலேயே கொள்ளையடிக்கும்படி மூன்றாவது கோஷ்டியை அனுப்பினான். முன் சென்ற

கோஷ்டியினரைப்போலவே இவர்களும் பரிசுகளுடன் திருப்பியனுப்பப்பட்டனர். கடைசியாக, காசி மன்னர் முற்றும் அப்பாவியேயெனத் தெளிந்த கோசல மன்னன், அவரது ராஜ்யத்தைக் கைப்பற்றத் தன் படைகள், யானைகளுடன் சென்றான்.

அக்காலத்தில், காசி மன்னனிடம் ஆயிரம் போர் வீரர்கள் இருந்தனர். மதம் பிடித்த யானைகளின் தாக்குதலையும் எதிர்த்து நிற்கவல்லவர்கள் அவர்கள். இந்திரனின் வச்சிராயுதமும் அவர்களை அச்சுறுத்த முடியாது. வெல்லுதற்கரிய இவ்வீரர்கள், மன்னர் ஆணையிட்டதும் பாரத நாடு முழுவதையும் அவரது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர வல்லவர். கோசல மன்னன் காசியைப் பிடிக்க வருவதை அறிந்ததும், அச்செய்தியுடன் மன்னனிடம் வந்து, படையெடுத்து வருவோனை எதிர்க்கத் தங்களை அனுப்புமாறு கேட்டனர். பகைவர் நாட்டின் எல்லையை மிதித்ததும், அவர்களைத் தோற்கடித்துப் பிடித்து வருவதாகக் கூறினர். ‘குழந்தைகளே! அப்படியொன்றும் செய்யவேண்டாம். என் காரணமாக எவரும் வருந்தலாகாது. நாட்டாசை பிடித்தோர் விரும்பின், என் நாட்டைப் பிடிக்கட்டுமே’ என்றார் மன்னர். படையெடுப்போரை எதிர்த்து நிற்க, அவர் தம் படையினருக்கு அனுமதியளிக்க அடியோடு மறுத்தார்.

பின்னர், கோசல மன்னன் எல்லையைக் கடந்து மந்திர தேசத்திற்கு வந்தான். காசி ராஜ்ய மந்திரிகள் மன்னரிடம் சென்று படையெழுச்சியை எதிர்க்குமாறு மன்றாடிக் கேட்டனர். மன்னர் மீண்டும் மறுத்தார். கோசல மன்னன் நகர்ப்புறம் தோன்றினான். ‘காசி மன்னர் ராஜ்யத்தைத் துறந்து தன்னிடம் ஒப்படைத்துவிட வேண்டும்; இல்லையேல், சண்டையிட வேண்டும்’ எனத் தாக்கீது அனுப்பினான். தாம் போரிடவில்லை என்றும், வேண்டுமானால் தம் ராஜ்யத்தை அவன் கொள்ளட்டும் என்றும் விடை கூறி அனுப்பினார் காசி மன்னர்.

மூன்றும் தடவையாக மன்னரின் மந்திரிமார்கள் வந்து, கோசல மன்னனை நுழையவிடக் கூடாதென்றும், நகர் வருமுன்பே, அவனை வீழ்த்திக் கைப்பற்றி வர அனுமதி தர வேண்டுமென்றும் கெஞ்சிக் கேட்டனர். விடாப் பிடியாக மறுத்துத் தம் நகர வாயில்களைத் திறந்துவிட வேண்டுமென உத்தரவிட்டு, அவர் தம் ஆயிரம் மந்திரிகள் புடைசூழத் தம் அரியாசனத்தில் அமர்ந்துகொண்டார்.

தன்னைத் தடுப்பாரின்றி நகரில் நுழைந்த கோசல மன்னன், தன் படையுடன் அரண்மனைக்குள் நுழைந்தான். வாயில்கள் அகன்று திறக்கப்பட்டிருந்தன. மன்னன் சீலவான் ஆடம்பரமாகத் தம் அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். அதைக் கண்ட கோசல மன்னன், ‘இவர்களையெல்லாம் பிடித்துக் கரங்களைப் பின்புறமாக வைத்துக் கெட்டியாகக் கட்டி, மயானத்திற்கு இட்டுச் செல்லுங்கள்! அங்கே குழி தோண்டி, கரங்களையும், கால்களையும், அசைக்கமுடியாதபடி கழுத்தளவு புதையுங்கள்! இரவில் குள்ள நரிகள் வந்து அவர்களைப் பட்சித்து, யமலோகம் அனுப்பட்டும்!’ என்று தன் படையினருக்கு உத்தரவிட்டான்.

அக் கொடிய மன்னனின் ஆணைப்படி அவனுடைய ஆட்கள் காசி மன்னனையும் அவன் மந்திரிகளையும் கட்டி இழுத்துச் சென்றனர். அத்தருணத்திலும் சீலவான் அக்கொடியர்பால் சினங்கொள்ளவில்லை. விலங்கிடப்பட்டு அவமானம் செய்யப்பட்ட அவரது மந்திரிமார்களும் அவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு அமைதியாயிருந்தனர்.

மயானத்தில் பெருமன்னன் சீலவான் நடுவிலும் இதரர் அவருக்கு இரு பக்கங்களிலுமாகக் கழுத்தளவு புதைக்கப்பட்டனர். அந்தச் சமயத்திலும் அவர்கள் அடக்கமாயும் கொடுங்கோலன்மீது சிறிதும் பகையுணர்ச்சியின்றியும் இருந்தனர். ‘உங்கள் உள்ளத்தில் அன்பும் தயையும் மட்டுமே நிறைந்திருக்கட்டும், என் குழந்தைகளே,’ என்று மன்னன் சீலவான், தம் தோழர்களுக்குத் தைரியமூட்டினார்.

நள்ளிரவில் குள்ள நரிகள் மானிட மாம்சத்தை உண்ண கூட்டமாக வந்தன. இம்மிருகங்களைக் கண்டதும், மன்னரும் அவருடைய தோழர்களும் பலமாகக் கத்தவே, அவை ஓட்டமெடுத்தன. சிறிது தூரத்தில் நின்று அவை பின்னோக்கின. எவரும் தங்களைப் பின்பற்றி வராதது கண்டு, மீண்டும் முன் சென்றன. இரண்டாந் தடவையும் மன்னரும் தோழர்களும் கத்தவே, அவை மீண்டும் ஓட்டமெடுத்தன. ஆனால், முன்போலச் சிறிது நேரத்திற்குப்பின் திரும்பி வந்தன. மூன்றாந் தடவை எவரும் பின் தொடர்ந்து வாராததைக் கண்டு, ‘இவர்கள் சாகவே உள்ளனர் போலும்’ எனத் தம்முள் எண்ணி, திரும்பவும் வந்தன. கத்தலைக் கேட்டும் அவை திரும்பிப் போகவில்லை. பிரதான நரி மன்னரையும், மற்ற நரிகள் இதர தோழர்களையும் நோக்கிச் சென்றன. சமயோசித புத்தியுடைய மன்னர், பிரதான நரி தம்மை நோக்கி வந்ததைக் கண்டு, கடிக்க விரும்பியதைப் போலத் தொண்டையை உயர்த்தித் தம் பற்களை நரியின் தொண்டையில் ஆழப் பதித்துக் கவ்வினார். மன்னரின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ளத் திணறின நரி, சாவுக்கு அஞ்சிப் பெருவூளையிட்டது. அதன் வேதனையொலி கேட்ட இதர நரிகள், தலைவன் அகப்பட்டுக் கொண்டதாகக் கருதித் தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு இரையைக் கைவிட்டு ஓட்டம் பிடித்தன.

மன்னரின் பற்களினின்று விடுவித்துக்கொள்ள நாடிய நரி, இப்படியும் அப்படியுமாகத் திமிறியடித்தது. அதனால்

மன்னரின் மீதிருந்த மண் இளகியது. அதன்மீது மன்னர் நரியை விட்டுவிட்டுத் தம் பலத்தையெல்லாம் கொண்டு கரங்களை விடுவித்துக்கொண்டார். கரங்களை ஊன்றிப் பள்ளத்திலிருந்து எழும்பினார். தம் தோழர்களுக்குத் தைரியமூட்டி, அவர்களைச் சுற்றியுள்ள மண்ணை இளகச் செய்து, எழுந்திருக்கச் செய்தார். மந்திரிகள் மீண்டும் சுதந்திரமடைந்தனர்.

அப்போது மயானத்தில் ஒரு சவம் வெளியே போடப்பட்டிருந்தது. அப்பகுதி இரண்டு பேய்களின் ஆதிக்க வரம்பின் மத்தியில் இருந்தது. பேய்கள் சவத்தின் பங்குக்காகச் சண்டையிட்டன.

'நம் இருவருக்கும் திருப்தியளிக்கும் முறையில் நாமே பங்கிட்டுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதால், அருகாமையிலுள்ள பெரு மன்னன் சீலவானிடம் செல்வோம். அவர் பாரபட்சமின்றிச் சரியாகப் பங்கிட்டுத் தருவார்' என்றன அப்பேய்கள் இறுதியில். அவை பிணத்தை இழுத்துக்கொண்டு மன்னனிடம் சென்று, 'ஐயன்மீர், இம்மானிட சடலத்தைச் சரியாக இரு கூறுபடுத்தி, எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு அளிப்பீராக' எனக் கேட்டன. மன்னர் அப்பேய்களை நோக்கி, 'தோழர்களே, நீங்கள் கூறும்வண்ணமே செய்கிறேன். ஆனால், நான் அசுத்தமாக இருப்பதால், முதலில் நீராடவேண்டும்' என்றார்.

அதன்மேல் பேய்கள் தம் ஜால சக்தியால் கோசல மன்னன் நீராடுவதற்கெனத் தயார் செய்யப்பட்ட வாசனை நீரைக் கொண்டுவந்தன. மன்னர் நீராடியதும், கோசல மன்னனுக்காக வைக்கப்பட்டிருந்த ஆடைகளைக் கொண்டுவந்து தந்தன. சீலவான் அவற்றை அணிந்ததும், அவை நானாவிதமான வாசனைத் தைலங்கள்கொண்ட பெட்டியைக் கொண்டுவந்தன. அவற்றை அவர் பூசிக்கொண்டபின், தங்கப் பேழையில் அழகிய மலர்கள் கொண்டுவந்தன. அவற்றையெல்லாம் அணிந்த பின், பேய்கள் மன்னனை நோக்கி, 'மேலும் தங்களுக்குச் செய்யக்கூடியது ஏதேனுமுண்டா'வென வினவின. தமக்குப் பசியாயிருக்கிறதென்றார் மன்னர். கொடுங்கோல் மன்னனுக்காகத் தயார் செய்யப்பட்ட அறுசுவையுண்டியுடன் அவை திரும்பி வந்தன. மன்னர் உண்டபின், பேய்கள் கொடுங்கோலனுக்கான சுகந்த நீரை அருந்தக் கொண்டுவந்தன. அவை அத்துடன் பொற்கூஜாவையும் தங்கக் கிண்ணத்தையும் கொண்டுவர மறக்கவில்லை. மன்னர் நீர் அருந்தி, கைகால் கழுவினார். பேய்கள் அவருக்குத் தாம்பூலம் தந்ததும் 'மேலும் வேண்டுவது யாதோ'வெனக் கேட்டன. மன்னர் அவற்றை நோக்கி, 'உங்கள் ஜால சக்தியால் கொடுங்கோலனின் தலையணைக்குக் கீழுள்ள அரசவாளைக் கொண்டு வாருங்கள்' என்று பணித்தான். அவ்விதமே வாள் கொண்டு வரப்பட்டது. மன்னர் பிணத்தை நிறுத்திவைத்து, இரண்டாக வெட்டிச் சரிபாதியாக இரண்டு பேய்களுக்கும் தந்தார். மன்னர் பின்னர் வாளைக் கழுவி, இடையில் ஒருபுறமாக இறுகக் கட்டிக்கொண்டார்.

வயிறு நிரம்பச் சாப்பிட்டுச் சந்துஷ்டியடைந்த பேய்கள், நன்றியுடன் தாங்கள் மேலும் மன்னருக்கு என்ன பணிவிடைகள் செய்யக் கூடுமெனக் கேட்டன. 'உங்கள் மந்திர சக்தியால் என்னைக் கொடுங்கோலனின் அறைக்கு அழைத்துச் செல்லுங்கள். என் மந்திரிகள் ஒவ்வொருவரையும் அவரவர் வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று பணித்தார் மன்னன். பேய்கள் அவ்விதமாகவே பணியை நிறைவேற்றின.

அதுசமயம், கொடுங்கோலன் ராஜரீதியில் தன் மஞ்சத்தில் உறங்கிக்கொண்டிருந்தான். சீலவான் தன் வாளை எடுத்து, அதன் தட்டைப் பாகத்தை அவன் வயிற்றின்மீது வைத்தான். கோசல மன்னன் பெரும் பீதியுடன் எழுந்தான். விளக்கு வெளிச்சத்தில் அருகாமையில் நின்றுகொண்டிருந்தது பெருமன்னன் சீலவானே என்பது தெரிந்தது. தைரியத்தையெல்லாம் வரவழைத்துக்கொண்டு மஞ்சத்திலிருந்து எழுந்து, 'ஐயன்மீர், இப்போதோ இரவுகாலம். காவலாளர் பாரா கொடுக்கின்றனர். கதவுகள் மூடப்பட்டுள்ளன. எவருமே அரண்மனையில் நுழைய முடியாததாயிருக்க, பகட்டான ஆடைகள் அணிந்தும், கையில் வாளேந்தியும், நீங்கள் என் சயன அறைக்கு வந்ததெங்ஙனம்?' என்று கேட்டான். சீலவான் தாம் இடுகாட்டிலிருந்து தப்பிவந்த கதையை ஆதியோடந்தமாகக் கூறினார். கொடியோனின் உள்ளம் இளகியது. 'மானிட இயல்புடையோனாயினும், உங்கள் சீலத்தை நான் அறிந்துகொள்ளவில்லை. மாம்சமும் உதிரமும் உண்ணும் பயங்கரமான, கொடிய பேய்கள்கூட அதை அறிந்துகொண்டுள்ளன. இனி, சீலவானாகிய உங்களுக்கு விரோதமாக யாதொரு சதியும் செய்யேன்' என்று உணர்ச்சியுடன் கூறினான். வாள்மீது நட்புச் சபதம் செய்து, பெருமன்னனின் மன்னிப்பைக் கோரினான். கோசல மன்னன் தன் மஞ்சத்தில் பெரு மன்னனைப் படுக்கவிட்டுத் தான் சிறு கட்டிலொன்றில் படுத்தான்.

பொழுது புலர்ந்தது. பகலவன் வானயாத்திரை தொடங்கிவிட்டான். கொடுங்கோலனின் ஆணைமீது முரசு முழங்கியது. படைகள் திரட்டப்பட்டன. அவர்கள் முன்னிலையில், கோசல மன்னன் சீலவானைத் துதி செய்து, மன்னிப்புக் கோரினான். ராஜ்யத்தை முறைப்படி அவருக்கே மீண்டும் அளித்தான். 'இனிக் கலகம் செய்வோரை அடக்குவது என் வேலை. நான் காவல்காக்க நீங்கள் தரும ராஜ்யம் நடத்துவீராக!' என்றான். இங்ஙனமாகச் சொல்லியபின், பெரு மன்னனைக் காட்டிக்கொடுத்த துரோகிக்கு எதிராகத் தீர்ப்புக் கூறித் தன் படைகளுடனும் யானைகளுடனும் தன் நாட்டுக்கே திரும்பிச் சென்றான்.

ராஜ சின்னமான வெண்குடையின் கீழ், அரபி மான்கால்களையுடைய தங்க ஆசனத்தில் கம்பீரமாகவும் சிறப்பாகவும் அமர்ந்த பெருமன்னன் சீலவான், தம் சிறப்பைப்பற்றிச் சிந்தித்துத் தமக்குள்ளேயே சொல்லிக்கொண்டதாவது: 'நான் பொறுமை காட்டாதிருந்தால், இன்று இச்சிறப்புடன் விளங்கவோ, ஆயிரம் மந்திரிகளுடன் உயிருடன் வாழவோ முடியாதிருந்திருக்கும். என் உறுதியினால் மன்னர் பதவியை மீண்டும் பெற்றேன். அதோடு என் மந்திரிகளின் உயிரையும் காப்பாற்றினேன். சோர்வின்றியும் அஞ்சா நெஞ்சுடனும் முயலுவதே சிறந்த வழி.'

பிறகு மன்னர் தோழர்களைப் பார்த்து, 'நீங்கள் விடாமல் உழைப்பீர்களாக; சோர்வை விலக்குவீர்களாக; நம்பிக்கையைக் கைவிடாமல் உறுதியாக நிற்பீராக; துயரம் யாவும் கடந்த யான், விரும்பிய யாவும் ஆண்டவனருளால் அடைந்துள்ளேன்' என்றார்.

போதி சத்துவர் தம் உள்ளத்தின் நிறைவால், இங்ஙனமாகத் தம் சீடர்களுக்கு இக் கதையைக் கூறினார்.

# இருட்டு

★

## எம். வி. வெங்கட்ராம்

எழுதும்

நெடுங்கதை

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.


## அரிய தமிழ் புத்தகங்கள்

| | |
|---|---|
| மஹாபாரத விஞவிடை | |
| 3 வால்யூம்கள் சேர்த்து | ரூ. 4—0 |
| தனித்தனி வால்யூம் | ரூ. 1—8 |
| பாகவத விஞவிடை | |
| 20 படங்களுடன் | ரூ. 3—0 |
| ராமாயண விஞவிடை | |
| 16 படங்களுடன் | ரூ. 3—0 |
| பகவத்கீதை—சம்ஸ்கிருத மூலமும் தமிழ் கருத்துரையும் | ரூ. 3—8 |
| பாரத வசனம்—ஷண்முகக் கவிராயர் எழுதியது. ஆதிபர்வம் | ரூ. 4—8 |
| ஸபா, ஆரண்ய, விராடபர்வம் | ரூ 6—0 |
| உத்யோக, பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய, சௌப்திக பர்வங்கள் | ரூ. 6—0 |
| ஸ்திரீ சாந்தி, ஆனுசாஸனிக, ஆசுவமேத ஆஸ்ரமவாஸ, மௌஸல மஹாப்ரஸ்தான, ஸ்வர்காரோஹண பர்வங்கள் | ரூ 6—0 |
| எல்லா வால்யூம்களும்சேர்த்து | ரூ. 22—0 |
| வால்மீகி ராமாயண வசனம்: (ஸப்த காண்டங்களும்) | ரூ. 20—0 |
| பால காண்டம் | ரூ 2—8 |
| அயோத்தியா காண்டம் | ரூ 4—0 |
| ஆரண்ய காண்டம் | ரூ. 2—8 |
| கிஷ்கிந்தா காண்டம் | ரூ 2—8 |
| சுந்தர காண்டம் | ரூ 2—8 |
| யுத்த காண்டம் | ரூ. 4—8 |
| உத்தர காண்டம் | ரூ 3—8 |

கிடைக்குமிடம்:—

வாவிள்ள

ராமஸ்வாமி சாஸ்த்ருலு & ஸன்ஸ்,

292, எஸ்பிளனேட். மதராஸ்-1

துப்பறியும் சுப்புடு
"கெட்டும் பட்டணம் சேர்!" என்கிறீர்களே! நானும்தான் பட்டணம் வந்து ஒரு வாரம் ஆகிறது. எங்கே வேலை கிடைக்கிறது?..... அதோ அந்த கைரேகை ஜோதிடனிடம் என் கையைக் காட்டித்தான் பார்க்கிறேனே!
உங்க கையிலே இருக்கிற ரேகைப்படி, சொல்லப்போனா, நீங்க ஒரு துப்பறிபவராகப் போறீங்க!
துப்பறிகிறதா? நானா!
ஆமாங்க! இன்னும் சொல்றேன் கேளுங்க!...
ஐயய்யோ! இங்கேயுமல்ல போலீஸ்காரன் வந்துட்டான்!
ஐயா! பாக்கியையும் சொல்லிவிட்டு ஓடுங்க!
இவுங்க ஏன் இப்படி ஓடுறாங்க?
விடமாட்டேன் ஜோசுயரை! குறுக்கு வழியாகப் போய், எதிரே கை நீட்டுவேன்!
டபார்
ஹா! என்ன ஆச்சரியம்! கொள்ளைக்கார முனுசாமியா? இவனைத்தான் அரசாங்கம் பத்து வருஷமா தேடிக்கிட்டு இருக்கு. நீங்க பிடிச்சுவிட்டீங்களே! உங்களுக்குப் பெரிய பரிசு கிடைக்கப் போகிறது! வாங்க!
என்ன, மிஸ்டர் சுப்புடு! நீங்கள் இனிமேல் துப்பறிபவராகவே இருந்து போலீஸ் இலாகாவுக்கு உதவிபுரிந்து வருவீர்கள் என்று நம்புகிறேன்.
தொடரும்

# திரிவேணி

ஹேமா ஆனந்ததீர்த்தன்

## 15

**எ**ன்ன அக்கா, சௌக்கியமாயிருக்கிறாயா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்த ராமசுவாமியைக்கண்டு பாகீரதி—சேகரின் தாயார்—ஆச்சரிய மடைந்தாள்.

"யார்? ராமுவா! வ ா டா ப் ப ா வா. எப்போ வந்தே?" என்று கேட்டபடி, படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்து கொண்டாள். அவள் பூதாகாரமான சரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் வேதனையால் அந்த ஸ்பிரிங் கட்டில் 'கொர், கொர்' என்று சப்தித்தது.

"உட்கார். யாத்திரை போயிருந்தாயாமே எப்போ வந்தே?"

"இன்னைக்குக் காலையில்தான் வந்தேன்."

"சௌக்கியமாயிருக்கிறாயோ இல்லையோ?

"ஊம். நீதான் படுத்தபடுக்கையாகவே ஆகிவிட்டாய்."

"என்னப்பா பண்றது? இந்த மாதிரி இருந்து எனக்குப் பழக்கமே இல்லை. எவ்வளவோ கஷ்டமாக இருக்கிறது. . ஊம், எங்கெல்லாம் போயிருந்தே? என்ன விசேஷம்?"

"எல்லா இடங்களுக்கும் போய் பாக்கி விடவில்லை. காசி, பிரயாகை, நாசிக், பம்பாய், கல்கத்தா, டில்லி, ஆக்ரா, கேதாரிநாத், பத்ரிநாத்..."

"நாலு மாசம் ஆச்சா நீ போய்."

"ஆச்சு. மேலேயே நாலு நாள் ஆச்சு" என்று கூறி, கையிலிருந்த பையிலிருந்து, ஒரு கங்கா ஜலம் செம்பு, பிரசாதங்கள் கட்டிய ஒரு பொட்டலம், சில படங்கள்— எல்லாவற்றையும் எடுத்து, பாகீரதியிடம் கொடுத்தார்.

"சந்தோஷம்." என்று பாகீரதி அவைகளை வாங்கிக்கொண்டாள்.

"வீட்டில் எல்லோருக்கும் சௌக்கியம் தானே? லீலா, பத்மா, அவள் புருஷன்? ஒருவரும் இங்கே வருகிற வழக்கமே கிடையாது. விட்டுவிட்டீர்கள். பத்மாவின் கல்யாணத்திற்கு முன்பாவது ஏதோ நாலில் எட்டில் லீலா வந்து போய்க்கொண்டிருந்தாள். இப்போ அதுவும் கிடையாது. என்னமோ எல்லோரும் எங்கேயாவது சௌக்கியமாக இருந்தால் சரி" என்று பெருமூச்செறிந்தாள் பாகீரதி.

"எங்கே அக்கா உன் எஜமானர், சேகரன், ஒருவரையும் காணோம்?"

"அவர் ஊரில் இல்லை. பம்பாய் போயிருக்கிறார். இவன் எங்கேயாவது ஊர் சுற்றப் போயிருப்பான் .. நீ ஏதாவது காப்பி கீப்பி சாப்பிடேன்." என்று சொல்லி "கோபாலா!" என்று கூப்பிட்டாள்.

"வேண்டாம் அக்கா. இப்போதுதான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்" ராமசுவாமி மறுத்தார்.

"பரவாயில்லை. வெறும் காப்பியாவது சாப்பிடு" என்று பாகீரதி வற்புறுத்தினாள்.

கோபாலன் வந்து நின்றான்.

"ராமுவுக்கு ஒரு தட்டில் இரண்டு தேன்குழல், ஒரு சாத்துக்குடி. காப்பி. சீக்கிரம் கொண்டுவா." என்று அவனுக்குக் கட்டளை பிறந்தது.

"சரி அம்மா" என்று அவன் போய் விட்டான்.

ராமசுவாமியும் பாகீரதியும் தொடர்ந்து லோகாபிராமமாகச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ஏண்டா ராமு, லீலா நாலு மாசமாக ஸ்நானம் பண்ணல்லையாமே?" என்று பாகீரதி கேட்டதும், ராமசுவாமிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"எனக்குத் தெரியாதே!" என்றார்.

"நல்ல பிள்ளைடா நீ. இதுகூடத் தெரியாமல் இருக்கிறாயே. உனக்கு அவள் லெட்டர் எழுதவில்லையோ?"

"எழுதினாள். இந்த சமாச்சாரம் எழுதவில்லை. வெட்கப்பட்டுக்கொண்டு சும்மா யி ரு ந் து விட்டாள்போலிருக்கிறது." ராமசுவாமி புளுகினார். நான்கு மாசமாக கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஒரு கடிதம்கூட எழுதிக்கொள்ளவில்லை என்ற வெட்கக்கேட்டை வெளியில் சொல்லிக்கொள்ள அவருக்குக்கூட விருப்பமிருக்கவில்லை.

"ஆச்சரியமாயிருக்கே. இங்கே வந்த பி ற் பா டு கூடத் தெரிந்துகொள்ளவில்லையோ நீ?.. போகட்டும் பாவம். இவ்வளவு நாள் இல்லாமல் இப்பவாவது அவளுக்கு விடிந்ததே" என்று சொல்லி பாகீரதி, அவ்வளவு நேரம் உட்கார்ந்து பேசிய களைப்பால் சோர்ந்து போய், படுக்கையில் படுத்துக் கண்ணை மூடிக் கொண்டாள்.

கோபாலன் பலகாரத் தட்டும் காப்பியும் கொண்டுவந்து வைத்தான்.

கண் திறந்து பார்த்த பாகீரதி, "சாப்பிடு ராமு!" என்றாள்.

ராமசுவாமி வேண்டா வெறுப்பாக ஒரு தேன்குழல் விள்ளலை எடுத்து வாயில் போட்டுக்கொண்டார். பாகீரதி

தொடர் கதை

கூறிய சமாச்சாரம் அவரை ஒரு கலக்குக் கலக்கிவிட்டிருந்தது. அவர் முகம் திடீரென மாறுதலடைந்துவிட்டதை பாகீரதியும் கவனிக்கத் தவறவில்லை!

"என்ன ராமு, திடீரென்று ஒரு மாதிரியாக மாறிவிட்டதே முகம்! உடம்பு ஒன்றுமில்லையே?" என்று கேட்டாள்...

"ஒன்றும் இல்லையே. அப்போ. . . நான் வரட்டுமா, அக்கா! இன்னும் நிறைய இடங்களுக்குப் போகவேண்டியிருக்கிறது." என்று ராமசுவாமி எழுந்திருந்தார்.

"சாப்பிடவே இல்லையே ராமு. காப்பி மாத்திரமாவது சாப்பிடு. உட்கார். பேசிக்கொண்டே இருந்தவன் திடீரென்று எப்படியோ மாறிவிட்டாயே. ஏதாவது கோபமா?"

ராமசுவாமி மறுபடியும் உட்கார்ந்து காப்பியை ஆற்றத் தொடங்கினார்.

"உனக்கு எப்படி அக்கா தெரியும்? யார் சொன்னார்கள்?"

"எது ராமு?"

"லீலாவின் சமாச்சாரம்."

"ஓ, அதுவா? யாரோ சொன்னார்களப்பா... மறந்துட்டேன். ஆமாம் ...இட்லி விற்கிறாளே பொன்னம்மா... அவள்தான் வந்து சொன்னான்னு நினைக்கிறேன் ... உனக்கு சமாச்சாரம் தெரியவில்லையேன்னு, அதுதான் கோபம் வந்துடுத்தாக்கும்!" என்று சிரித்தாள் பாகீரதி.

ராமசுவாமி இல்லையென்று மறுக்கவில்லை.

பாகீரதியிடம் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

சைக்கிளின் சக்கரங்கள் வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தன. அதன் மீது அமர்ந்திருந்த ராமசுவாமியின் சிந்தனைகளோ அதைவிட வேகமாகச் சுழன்றன.

"லீலா கர்ப்பமாகியிருக்கிறாள். நான்கு மாசமாயிற்றாம். ஏன் எனக்கு இந்த சமாச்சாரத்தைத் தெரிவிக்கவில்லை." என்று அவர் மனம் குடைந்துகொண்டிருந்தது. பெரும் போராட்டம் நடந்துகொண்டிருந்தது அவர் உள்ளத்திலே.

"இது சந்தோஷப்பட வேண்டிய சமாச்சாரம்தானே?"

"பின் ஏன் எனக்கு இவ்வளவு ஆத்திரம் வருகிறது? லீலா இதை என்னிடமிருந்து மறைக்கக் காரணம்?"

"வெட்கம். மேலும், நான் ஏதாவது கடிதம் எழுதியிருந்தாலல்லவா அவளும் எழுதுவாள்?"

"அது வேறு விஷயம். நான் எழுதினால் என்ன, எழுதாவிட்டால் என்ன? இந்த முக்கியமான சமாச்சாரத்தை அவள் தெரியப்படுத்தாமலிருந்தது தவறுதான்."

"தானே தெரிகிறது. இப்போது தெரியவில்லையா?"

"இருந்தாலும் எனக்கு இதில் ஏதோ சந்தேகம் தட்டுகிறது."

"சந்தேகமா? என்ன சந்தேகம்?"

"இவ்வளவு நாள் இல்லாமல் இப்போ திடீரென்று, அதுவும் நான் ஊரிலில்லாத சமயத்தில்."

"ஊரிலில்லாவிட்டால் என்ன? நான்கு

இருந்தேன்? லீலாவுக்கு இப்போது ஐந்து மாசமாக இருக்கலாம்."

"என்னமோ எனக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. ராஜுவை வீட்டில் சேர்த்தது பிசகு!"

"அடபாவி! இது அடுக்குமா? அபாண்டம்."

"அபாண்டம் இல்லை, ஒன்றும் இல்லை. யாரையும் நம்ப முடியாது இந்தக் காலத்தில். லீலா என்னை வஞ்சித்து விட்டாள்."

"சீ! லீலாவைப்பற்றி இப்படி நினைப்பதும் பாவம்."

"பாவமாவது புண்ணியமாவது. நான் கிழவன், குரூபி. ராஜு அழகன், வாலிபன். போதாதா? நம்பி மோசம் போனேன்."

"ஏன் வீணாக இப்படிப் பதட்டமடைய வேண்டும்? கண்ணால் காணாமல் எதையும் தீர்மானித்து விடக்கூடாது."

"இனி என்னத்தைக் காண்பது? இதோ இப்போதே கண்டாயிற்றே. பாகீரதி இதை என்னிடம் சொல்லும்போதே அவள் குரலில் கலந்திருந்த ஏளனத்தை நான் கவனிக்காமல் போகவில்லை."

"பாகீரதி சாதாரணமாகத்தான் சொன்னாள் என் மனம்தான் எல்லாவற்றையும் தப்பாக நினைத்துக் கொள்கிறது. எனக்கு பௌருஷம் இல்லையென்று நானே தம்பட்டம் அடித்துக்கொள்ள வேண்டுமா?"

"ஏய் சைக்கிள்! எங்கே ஆகாசத்தைப் பார்த்துக்கிட்டு போறே. ரோடு மேலே போய்யா."— போலீஸ்காரன் கத்தினான்.

ராமசுவாமி மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு முன்னேறினார். ஆனாலும் அவர் உள்ளத்தில் எழுந்த போராட்டம் ஓயவில்லை. சைக்கிளின் வேகம் அதிகரித்தது.

ராஜு மேஜைமுன் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தான்.

"திரட்டுப்பால் வேணுமா, ராஜு" என்று கேட்டுக்கொண்டே லீலா உள்ளே வந்தாள். அவள் கையில் சிறு பாத்திரம் ஒன்று இருந்தது. அதிலிருந்து திரட்டுப்பாலை வழித்து எடுத்துக்கொண்டிருந்தாள்.

"அப்புறம் வாங்கிக்கொள்கிறேன். இப்போ வேண்டாம்."

"அப்புறம் என்ன? கொஞ்சம்தான் இருக்கிறது. ஒருவாய்க்குக்கூடக் காணாது. இப்பவே சாப்பிட்டுவிடு" என்று கூறுகையில், ஒரு உருண்டையை வழித்தெடுத்து அவன் முன் நீட்டினாள்.

"இப்போ கையில் வாங்கிக்கொண்டால், கையெல்லாம் பசையாகிவிடும். கை அலம்பிக்கொள்ள வேண்டும். நான் ரொம்பவும் சுவாரஸ்யமாக எழுதிக் கொண்டிருக்கிறேன் லீலா" என்றான்.

"அடே அப்பா. இது ஒரு சோம்பலா? நீ அப்படியே வாயைத் திற. நான் வாயில் போட்டுவிட்டுப்போய் விடுகிறேன்" என்றாள். ராஜு நாற்காலியின் முதுகில் சாய்ந்துகொண்டு 'ஆ'வென்று வாயைத் திறந்தான். லீலா திரட்டுப்பால் உருண்டையை அவன் வாயில் போட்டாள். அது கொஞ்சம் தவறி அவன் மோவாய் மீது விழுந்துவிட்டது.


# உங்களுக்குத் தெரியுமா!

**Eyetex** ஐடெக்ஸ் கண் மை. **Aravind Bindhi** அரவிந்த் பிந்தி, என்ற பெயர்களில் பண்டைகால சாஸ்திரிய முறைப்படி முதன் முதல் கண் மையும், குங்கும சாந்தும் (ஆறு தனித்தனி கலர்களில் ரோஸ், பச்சை, வயலெட், ரோஸ் ரெட், கறுப்பு, மஜந்தா) பெண்மணிகளின் அழகிற்கென்றே தயாரித்து விற்பனை செய்துவரும் அரவிந்த் லாபரட்டரீஸாரால் இதன்மூலம் பொது மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் அறிவிப்பது என்னவென்றால்:

மிகவும் குணமுள்ளதும், பொது மக்களின் ஆதரவையும், விருப்பத்தையும் பெற்றுள்ள "ஐடெக்ஸ்" என்ற கண் மைப்பெட்டிகளைப் போலவும் அரவிந்த் பிந்தி குங்கும சாந்து புட்டிகளைப்போலவும், இதரர்களால் அநேகமாக பெட்டிகளின் அளவு, பெயர், பார்வை, எழுத்துகளின் கோர்வை முதலியவை எங்களது "ஐடெக்ஸ்" கண் மை "அரவிந்த் பிந்தி" குங்கும சாந்துதானோ என்று எளிதில் ஏமாறும்படி புதுப்புதுப்பெயர்களிலும், விதங்களிலும், கண் மை, பிந்தி சாந்து வந்துகொண்டிருக்கின்றன.

எங்களது 'ஐடெக்ஸ்' கண் மை, "அரவிந்த்" பிந்தி குங்கும சாந்தின் குணத்தைக் கண்டு ஆதரவு அளித்து வரும் பொது மக்களும், வியாபாரிகளும், போலிகளைக் கண்டு எளிதில் ஏமாந்துவிடக் கூடுமென்று வாங்கும்போது அடியில் காணும் மார்க்குகளை நன்றாகப் பார்த்து வாங்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்கிறோம். எங்கும் கிடைக்கும். மட்டமான போலிகளை வாங்காதீர்கள்.

குறிப்பு:—நாங்கள் "ஐடெக்ஸ்" கண் மை, ஒரு சைஸில்தான் தயாரிக்கிறோம். (சின்னது பெரியது கிடையாது) அதேமாதிரி எங்கள் அரவிந்த் பிந்தி குங்கும சாந்தும் ஒரு அவுன்ஸ், அரை அவுன்ஸ் புட்டிகளில் கீழ்காணும் டிசைன்களில் தான் விற்கப்படுகின்றன. மற்றவை எல்லாம் போலிகளே! அவைகள் எங்களது தயாரிப்புகள் அல்ல. கடைகளில்வாங்கும்போது கண்மை என்று மட்டும் கேளாமல், ஐடெக்ஸ் கண்மை என்று கேட்டு வாங்குங்கள்.

தயாரித்து வினியோகிப்பவர்கள்:

**அரவிந்த் லாபரட்டரீஸ்,**

**ஆர்காட் ரோட், மதராஸ்-26**

தது, அவன் வாயில் சரியாகப் போட்டு விட்டு, துண்டால் அவன் மோவாயைத் துடைத்துவிட்டாள். அப்போது அகஸ்மாத்தாக அவள் கண்கள் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தன. அங்கே அவள் கண்டது! கண்களில் கனல் தெறிக்க அவர்களையே பார்த்துக்கொண்டு சைக்கிள்மீது உட்கார்ந்திருந்தார் ராமசுவாமி!

லீலா அப்பார்வையைப் பார்த்து நடுநடுங்கிப் போய்விட்டாள். கதவைத் திறக்க ஓடோடிச் சென்றாள். கையில் வைத்திருந்த திரட்டுப்பால் பாத்திரத்தைக் கூடத்தின் ஒரு மூலையில் போட்டுவிட்டுப் போய்க் கதவைத் திறந்தாள்.

உள்ளே நுழையும்போதே ராமசுவாமியின் கைகால்களெல்லாம் பதறிக்கொண்



டிருந்தன. சைக்கிளைத் தொப்பென்று சுவரின்மீது சாய்த்தார். வாசல் கதவை மூடித் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தார். லீலா சமையலறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள்.

"லீலா!" என்று ராமசுவாமி கர்ஜித்தார்.

லீலா அவர் எதிரே வந்து நின்றாள். பெரிய பிரளயம் காத்திருக்கிறது என்பதை அவள் அறிந்துகொண்டுவிட்டாள்.

"லீலா, இது எவ்வளவு நாளாக நடந்து வருகிறது? உண்மையைச் சொல்."

லீலா பதில் பேசாமலிருந்தாள். அவர் எதைப்பற்றிக் கேட்கிறாரென்பது அவளுக்குத் தெரியும். என்ன பதில் சொல்வாள்?

"ஏன் வாயை மூடிக்கொண்டு நிற்கிறாய்? இன்றைக்கு இதற்கு ஒரு முடிவு கட்டிவிடவேண்டும். என்மானம் போகிறது ஊரில்."

"ஏன் இப்படிக் கோபித்துக்கொள்கிறீர்கள்? இப்போ என்ன நடந்துவிட்டது?" என்று லீலா மெதுவான குரலில் கேட்டாள்.

ராஜு தன் அறையில் உட்கார்ந்து படபடக்கும் உள்ளத்துடன் நடக்கப் போவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

பத்மா புறக்கடைப் பக்கத்திலிருந்து வந்தவள், கூடத்தில் ஏதோ அமர்க்களம் நடப்பதைக்கண்டு சமையலறையில் பதுங்கிக்கொண்டு கவனித்தாள்.

"என்ன நடந்துவிட்டதா? இன்னும் என்ன பாக்கியிருக்கிறது என்று கேட்கிறேன்?"

"நீங்கள் இப்படிக் கோபித்துக்கொள்ளும்படி ஒன்றும் நடந்துவிடவில்லை."

"போதும் வாயை மூடு. என் ஆத்திரத்தைக் கிளப்பாதே. என் கண்ணாலேயே பார்த்துவிட்டேனே போறாதா? இந்த மாதிரி காரியம் செய்துவிட்டு, தூக்குப் போட்டுக்கொண்டு சாகாமல் இன்னும் என் எதிரே நின்று வாதாடுகிறாயே. மானம் கெட்டவளே!"

லீலாவுக்குப் பயம் மறைந்துவிட்டது. அவள் உடலிலும் உள்ளத்திலும் ஆத்திரம் புகுந்தது. நிலைமை எக்கச்சக்கமாகப் போய்விட்டது. இனி, பயப்பட்டு என்ன பிரயோஜனம்? அவர் சொன்னபடி ஒரு முடிவு கட்டிவிடவேண்டியதுதான் என்று தீர்மானித்துக்கொண்டாள்.

"அநாவசியமாக ஏன் வார்த்தையைக் கொட்டுகிறீர்கள்? தூக்குப் போட்டுக்கொண்டு சாகும்படியாக நான் ஒன்றும் தவறான காரியம் செய்துவிடவில்லை. வீணைக் கூச்சல் போட்டு, ஊரைக்கூட்டி நீங்கள்தான் இப்போ எல்லார் மானத்தையும் வாங்குகிறீர்கள்!" என்றாள்.

"நன்றாக அப்படித்தான் செய்வேன். எனக்கு ஒன்றும் இல்லை. நான் ஆண் பிள்ளை. ஊர் கூடி உன்னைப் பார்த்துச் சிரிக்கட்டும். எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. உனக்கு அது வேண்டும்."

"நான் என்ன செய்துவிட்டேன் என்று இப்படியெல்லாம் பேசுகிறீர்கள். கடவுள் அறிய நான் ஒரு தவறும் செய்யவில்லை. இது சத்தியம். போதுமா?"

"செய்த பாவமெல்லாம் போதாதென்று பொய்ச்சத்தியம் வேறு செய்யத் துணிந்துவிட்டாயா? பாவி!"

"வீணில் என்னைப்போட்டு இப்படிக் கொல்லாதீர்கள். நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது தவறு. நான் ஒரு நாளும் அப்படி மனத்தாலும் நினைத்தவளல்ல. அவனும் அப்படிப்பட்டவனல்ல."

"எனக்கு ஏன் இதைப்பற்றித் தெரிவிக்கவில்லை?"

"தெரிவித்துவிட்டிருந்தால்? அப்போ மாத்திரம் சந்தேகப்படாமல் இருந்திருப்பீர்களா?"

ராஜுவால் அறையில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. பேச்சு நிமிஷத்திற்கு நிமிஷம் ரொம்பவும் கீழ்த்தரமாகப் போய்க்கொண்டிருந்தது. அவன் உடல் பதறிக்கொண்டிருந்தது. எழுந்து வெளியே வந்து நின்றுகொண்டான்.

"ராமசுவாமி, நீங்கள் இப்படியெல்லாம் பேசுவது கொஞ்சம்கூட நன்றாக இல்லை." என்றான்.

ராஜுவைக்கண்டதும் ராமசுவாமியின் உள்ளம் கொதித்தது. - தம் நிலை மறந்தார்.

"போதும் ராஜு. நிறுத்திக்கொள். நான் பேசுவது நன்றாயில்லை; நீ செய்த காரியம் ரொம்ப நன்றாக இருக்கிறது! நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்துக்கொண்ட கதையாகத்தான் இருக்கிறது. துரோகி!"

"எல்லைமீறிப் பேசவேண்டாம் சார். என்னால் இதற்குமேல் பொறுக்க முடியாது."

"எல்லையை மீறி நீ செய்த காரியத்தை யார் கேட்பது? இன்னும் உன்னைப் பல்லை உடைக்காமல் நான் பேசிக்கொண்டிருப்பது என் முட்டாள்தனம்." என்று குதித்தார் ராமசுவாமி. அவரது கோணல் உதடு இழுத்துக்கொள்ளும் கோரத்தைக் காணச் சகிக்கவில்லை அவனுக்கு.

"நீங்கள் பல்லை உடைக்கும் வரையில் என் கை பூப்பறித்துக் கொண்டிருக்காது. ஞாபகம் இருக்கட்டும்."

லீலா குறுக்கிட்டாள்: "ராஜு, நீ போ உள்ளே. நீ ஏன் அவருடன் பேசுகிறாய்?" என்றாள்.

"உள்ளே ஏன் போகச் சொல்லுகிறாய்? இப்பொழுதே அவனை வெளியே போகச் சொல். இனி ஒரு நிமிஷம்

அவன் இந்த வீட்டில் இருக்கக்கூடாது.” என்றார் ராமசுவாமி.

“போகிறேன். இப்பொழுதே போகிறேன். ஆனால், இந்தமாதிரியான அபவாதத்தைச் சுமந்துகொண்டு இங்கிருந்து போகமாட்டேன்.”

“போகாவிட்டால் கல்தா கொடுத்து வெளியே தள்ளுவேன். அபவாதமாம் அபவாதம். நன்றி கெட்ட நாயே. உன் மேல் கேஸ் போடாமல் நான் விடப் போவதில்லை.”

“ஹா...” என்று அலறினாள் லீலா.

“கேசா? கோர்ட்டா? என்ன அவமானம்? உங்களுக்கு ஏன் புத்தி இப்படியெல்லாம் போகிறது?”

“உன் புத்தி இப்படிப் போனதினால் தான் என் புத்தியும் அதற்குத் தக்கபடி போகிறது.”

அநியாயமாக இப்பெரிய பழியை அவர்கள் மீது சுமத்தாதீர்கள். அவர்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள்” என்று உருக்கமாக வேண்டினாள்.

“பத்மா, நீ அறியாப்பெண். இப்பாவிகள் உன் கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டார்கள், அம்மா! நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள்.”

“இல்லை அத்திம்பேரே. உங்கள் மனசைத்தான் யாரோ கெடுத்துவிட்டார்கள்.” என்று பத்மா சொன்னாள்.

லீலா, ராமசுவாமியின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு அப்படியே படுத்திருந்தாள். ராமசுவாமி அவள் கைகளிலிருந்து தன் பாதங்களை விடுவித்துக் கொண்டு, “சரி, நீங்களெல்லோரும் ஒன்று. எல்லோரும் எப்படியோ எக்கேடோ கெட்டுப்போங்கள். நான் இனி இந்த வீட்டில் இருக்கமாட்டேன். நான் போகிறேன்” என்று புறப்பட்டார்.

லீலா தரையில் குப்புறப்படுத்தபடியே குலுங்கிக் குலுங்கி அழுதுகொண்டிருந்தாள்.

ராஜு நான்கு அடி முன்னால் நடந்து வந்தான்.

“ராமசுவாமி, நீங்கள் எங்கும் போக வேண்டாம். இது உங்கள் வீடு. நான் தான் இடையில் வந்தவன். இப்பொழுதே நான் போய்விடுகிறேன்..... லீலா, அன்றைக்கே நான் சொன்னேனே,

“ஆமாம். நீ பெரிய ரிஷி. உன் சாபம் அப்படியே பலித்துவிடும். . . ஊம் கிளம்பு இங்கிருந்து. ஏன் இன்னும் நிற்கிறாய்?”

“இதோ இப்போதே போகிறேன்” என்று ரூமுக்குச் சென்று ராஜு, தன் துணிமணிகளையெல்லாம் எடுத்து சூட்கேஸில் திணிக்க ஆரம்பித்தான்.

“போ. மறுபடியும் இந்த வீட்டு வாசல் படியில் காலெடுத்து வைக்காதே. உன் மனைவியையும் வேண்டுமானால், அழைத்துக் கொண்டு போ” என்று கர்ஜித்து விட்டு, ராமசுவாமி தன் அறையிலுள்ள கட்டிலில் போய் ‘தொப்’பென்று மல்லாக்காகப் படுத்துக்கொண்டுவிட்டார். களைப்பினால் அவருக்கு மேல்மூச்சு வாங்கியது.

ஐந்து நிமிஷத்தில் ராஜு தன் சாமான்களை எடுத்துக் கொண்டு, “நான் போய் வருகிறேன் லீலா; வருகிறேன் பத்மா; வருகிறேன் மிஸ்டர் ராமசுவாமி. என்றைக்காவது ஒரு நாள் உண்மை உங்களுக்கு விளங்காமல் போகாது” என்று கூறிவிட்டு, சரேலென்று வெளியே சென்றுவிட்டான். படீரென்று அவன் சாத்திய கதவு, வீட்டிலுள்ளவர்களின் மண்டையில் அடித்த மாதிரி இருந்தது.

லீலாவின் அழுகை அதிகரித்தது.



“மறுபடியும் மறுபடியும் அந்த வார்த்தையைச் சொல்லாதீர்கள். உங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொள்கிறேன். கோவிலில் வேண்டுமானால் வந்து சத்தியம் செய்கிறேன். நான் ஒரு பாவமும் அறியாதவள். அநியாயமாக என்மீது இப்பெரிய பழியைச் சுமத்தாதீர்கள்.” என்று அவர் காலில் தடாலென்று விழுந்து, அவரது இரு பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள், லீலா.

பத்மா சமையலறையிலிருந்து வெளியே வந்தாள். அழுது அழுது அவள் கண்கள் சிவந்திருந்தன.

“அக்காவும் தவறு செய்பவள் அல்ல. அவரும் அப்படிப்பட்டவரல்ல. அக்காவும் தம்பியும் போலத்தான் பழகுகிறார்கள். அதைக்கண்டு யாரோ உங்களிடம் வத்தி வைத்திருக்கிறார்கள். அதை நம்பி

தனியாக ரூம் எடுத்துக்கொண்டு வேறு எங்கேயாவது போய்விடுவதாக. நீ கேட்டாயா? இப்போது பார்; உன் தலையிலேயே விடிந்தது” என்றான்.

“நீ தனியாகப் போவதற்கு அவள் எப்படிச் சம்மதிப்பாள்? வேண்டுமென்று தானே உன்னை இங்கே கொண்டுவந்து வைத்துக்கொண்டிருக்கிறாள்” என்றார் ராமசுவாமி, கோண உதடு துடிதுடிக்க.

“ராமசுவாமி! இது அபாண்டம். அநியாயம். இன்னொரு முறை இப்படிச் சொன்னீர்களானால் நாக்கு அழுகித் தான் போகும்” என்று உணர்ச்சி வசப்பட்டுக் கத்தினான்.

பத்மா தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

அன்று இரவு அந்த வீட்டில் யாரும் சாப்பிடவில்லை. ராமசுவாமி அப்படியே படுக்கையை விரித்துப் படுத்துவிட்டார். பத்மா, அக்காவைக் கட்டிக்கொண்டு தரையின்மீதே படுத்துவிட்டாள். வெகு நேரம் இருவருக்கும் தூக்கமே வரவில்லை. ஒருவருடனொருவர் பேசவும் இல்லை. ஆனால், அவர்கள் உள்ளங்கள் மாத்திரம் ஒன்றையொன்று அறிந்து கொண்டு, வேதனையால் துன்புற்றன. அப்படியே இருவரும் தூங்கிப்போய்விட்டனர்.

வருஷாந்திரப் பரீட்சை அன்றோடு முடிவடைந்திருந்தது. பரீட்சை எழுதி விட்டு, ராஜு மாம்பலத்தில் இருந்த தனது அறைக்குச்சென்று, உடை மாற்றிக்கொண்டு களைப்புடன் படுத்தான். கடந்துபோன நாட்களின் நினைவுகள் அவன் மனத்திலே தோன்றின.

அன்று இரவு வீட்டைவிட்டு சூட்கேஸுடன் கிளம்பியவன், நேராக விக்டோரியா ஹாஸ்டலுக்குச் சென்று, காலேஜ் நண்பன் ஒருவனுடைய அறையிலே தங்கினான். மறு நாள் முதற்கொண்டு அவன் அறை தேடும் படலத்தில் ஈடுபட்டான். பத்துப் பன்னிரண்டு ரூபாயில் ஒரு அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாமென்பதுதான் அவன் திட்டம்.

நண்பன் ஒருவனின் உதவியால் கடைசியில், மாம்பலம் சரோஜினித் தெருவில் பத்து ரூபாய் வாடகைக்கு ஒரு அறையைப் பிடித்தான். அந்த வீட்டுக்காரர்கள் மிகவும் நல்லவர்களாகவும், அனுசரணையாகவும் இருந்ததால், அவன் மனத்திற்குப் பெரிதும் ஆறுதலாக இருந்தது.

வீட்டைவிட்டு அவன் கிளம்பிய நான்கு நாட்களுக்கெல்லாம் காலேஜ் அட்ரெஸுக்கு அவன் பெயருக்கு ஐம்பது ரூபாய் மணியார்டரும், ஒரு கடிதமும் வந்திருந்தன. லீலாதான் பணமும், கடிதமும் அனுப்பியிருந்தாள்.

லீலாவின் அக்கடிதத்தை மறுபடியும் படிக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. எழுந்து, சூட்கேஸில் வைத்திருந்த ஒரு கத்தைக் கடிதங்களை வாரிக்கொண்டு வந்தான்.

லீலாவின் அந்த முதல் கடிதத்தை மீண்டும் படித்தான்: "வீடு இழவு வீடு போல் காட்சியளிக்கிறது. நினைக்க நினைக்கத் துக்கம் பொங்குகிறது. நீ எங்கிருக்கிறாயோ, எப்படிக் கஷ்டப்படுகிறாயோ என்று சதா அதே யோசனையாக இருக்கிறது. பத்மாவோ வாய் விட்டுப் பேசாமல் மனத்திலேயே தன் துயரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, நடைப்பிணம்போல் இருக்கிறாள். அவள் துன்பத்தைக் காண என்னால் பொறுக்கவே முடியவில்லை.

இவ்வளவுக்கும் நான்தான் காரணம். நீ என்னை மன்னித்துவிடு. இன்னும் ஒன்றரை வருஷங்கள்தானே இருக்கிறது படிப்பு முடிய? படிப்பை மாத்திரம் விட்டுவிடாதே. இன்று மணியார்டரில் 50 ரூபாய் அனுப்பியிருக்கிறேன். அதைச் செலவுக்கு வைத்துக்கொள். எப்பொழுது பணம் வேண்டுமானாலும் கேட்டு எழுது. கொஞ்சம்கூட யோசிக்காதே. நல்ல ஹோட்டலாகப் பார்த்து சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துகொள். செலவை உத்தேசித்து மட்டமான இடத்தில் சாப்பிட்டுக்கொண்டு உடம்புக்கு ஏதாவது வரவழைத்துக்கொள்ளாதே.

அடிக்கடி கடிதம் மாத்திரம் எழுதிக் கொண்டிரு. மறந்துவிடாதே. நான்கு நாளைக்கொரு தரமாவது உன்னிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்.

இனிமேல் வீடு எனக்கு நரகம்தான். ஏற்கெனவே அவருடைய சுபாவம் உனக்குத் தெரியும். இப்போதோ சொல்லவே வேண்டாம். பயங்கரமான சந்தேகம்—சந்தேகம் என்ன, அவரைப் பொறுத்த வரையில் அவர் முடிவுகட்டியேவிட்டதாகத் தெரிகிறது—அவர் மனத்திலே புகுந்துகொண்டுள்ளது.

அவர் சொன்னதற்காக நீ இந்தப் பக்கம் வராமலே இருந்துவிடாதே. உனக்குத்தான் அவர் வீட்டில் இருக்கும் நேரமும், இல்லாத நேரமும் தெரியுமே. எப்பொழுதாவது நாலில், எட்டில் வந்து போய்க்கொண்டிரு. சாயங்கால வேளைகளில் பத்மாவை வேண்டுமானால், எங்காவது நீ சொல்லும் இடங்களுக்கு அனுப்புகிறேன். இருவரும் பார்த்துப் பேசிக்கொள்ளுங்கள்.

உடம்பைக் கவனித்துக்கொள். இப்படியெல்லாம் நடந்துவிட்டதே என்று மனத்தைப் போட்டு உலுப்பிக்கொள்ளாதே. என் மனம் என்ன பாடுபடுமோ என்றெல்லாம் நினைத்து, உன் மனத்தைத் துன்புறுத்திக்கொள்ளாதே. நீ கவலையில்லாமல் சந்தோஷமாகவும், சௌகர்யமாகவும் இருக்கிறாயென்று தெரிந்தால், எனக்கு அதுவே போதும். என் துயரமெல்லாம் என்னை ஒன்றும் செய்ய முடியாது.

கடிதம் எழுதிக்கொண்டிருக்க மாத்திரம் மறக்காதே."

கடிதத்தைப் படித்து முடித்த ராஜுவின் கண்களில் கண்ணீர் துளும்பி நின்றது. லீலாவின் அன்புக்கு எல்லையே இல்லையோ? அவன் மனம் நெகிழ்ந்தது.

கடிதத்தைக் கீழே வைத்துவிட்டு, மீண்டும் படுக்கையில் சாய்ந்துகொண்டு கடந்த கால நினைவுகளில் மூழ்கினான்.

தவறாமல் லீலாவுக்கோ, பத்மாவுக்கோ நான்கு நாட்களுக்கொரு முறை கடிதம் எழுதி வந்தான். அவர்களிடமிருந்தும் கடிதம் வந்துக்கொண்டிருந்தது. ராஜுவும், பத்மாவும் அவ்வப்போது பனகல் பார்க்கிலும், கடற்கரையிலும் சந்தித்து, வெகு நேரம் பேசிக் கொண்டிருப்பார்கள். லீலா மாத்திரம் வருவது கிடையாது. பத்மா அவனைப் பார்க்க வரும்போதெல்லாம் ஐந்தோ, பத்தோ பணம் கொண்டுவந்து கொடுப்பாள். ராஜு வேண்டாமென்று எவ்வளவு மறுத்துச் சொன்னாலும் கேட்க மாட்டாள்.

"இதெல்லாம் அதிகப்படியான செலவு தானே பத்மா! லீலா எப்படி இதைச் சமாளிக்கிறாளோ தெரியவில்லையே!" என்று ஒரு நாள் அவளைக் கேட்டான்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் இதைப்பற்றியெல்லாம் கவலைப் படக்கூடாது என்றும் அக்கா சொல்லியிருக்கிறாள்" என்று கூறிவிட்டாள் பத்மா.

வீட்டைவிட்டு வெளிப்பட்ட பிற்பாடு ராஜு இரண்டு மூன்று முறை சேகரனைச் சந்திக்க நேரிட்டது. ஒரு முறை கடற்கரையிலும், மற்றொரு முறை ஹோட்டலிலும் சந்தித்தார்கள். மூன்றாவது முறை சேகரன், ராஜுவின் ரூமுக்கே வந்திருந்தான்.

இந்தச் சந்திப்புகளின் பயனாக சேகரனுக்கும் ராஜுவுக்கும் இடையே நட்பு வளர்ந்திருந்தது. என்ன காரணத்தினாலோ ராஜுவுக்கு சேகரன்மீது ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. லீலா, பத்மா இருவரும் அவனை வெறுக்கிறார்கள் என்பது ராஜுவுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், ராஜுவுக்கு மாத்திரம் அவனைக் கண்டால் வெறுப்போ, அலட்சியமோ ஏற்படவில்லை. அவனுடன் பேசிக்கொண்டிருப்பதே ராஜுவுக்கு மன ஆறுதலாக இருந்தது.

ராஜு, தான் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட கதையை சேகரனிடம் சொன்னபோது அவன், "விடு ராஜு. இதற்கெல்லாம் கவலைப்படாதே. மாமா எப்போதுமே சந்தேகப் பிரகிருதி. என் மேல் அவருக்குக் கெட்ட எண்ணம் ஏற்பட்டதற்குக் காரணம் அவரது சந்தேக சுபாவம்தான். கலா பவனம் என்று ஒரு 'டான்ஸ் ஸ்கூல்' என் நண்பன் ஒருவன் நடத்துகிறான். அதில் சேர வேண்டும் என்று எனக்குத் தெரிந்த இரண்டு பெண்களை அழைத்துக்கொண்டு போனேன். அப்படி அழைத்துக்கொண்டு போகும்போது, மாமா பார்த்துவிட்டார். உடனே சந்தேகம்!" என்றான்.

சேகரன் சொல்லுவதில் உண்மை எவ்வளவு, பொய் எவ்வளவு என்பதை ராஜுவால் நிர்ணயம் செய்ய முடியவில்லை. அவன் வாஸ்தவத்திலேயே தீய வழிகளில் பிரவேசித்துள்ளவன்தானா, இல்லையா என்பதை ராஜுவால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவன் சிகரெட் புகைப்பது ஒன்றைத் தவிர வேறொன்றையும் ராஜு அதுவரை நேரில் பார்க்கவில்லை. இப்பொழுது ராஜுவும் சேகரனின் தூண்டுதலால் புகை பிடிக்கும் வழக்கத்தைக் கற்றுக் கொண்டுவிட்டான். ஆனால், பத்மாவுக்குத் தெரியாது. ஏன், சேகரனைத்தான் சந்திப்பதையே ராஜு பத்மாவிடம் சொல்லவில்லை. சொன்னால் அது பத்மாவுக்குப் பிடிக்காதென்று அவனுக்கு நன்றாகத் தெரியும்.

கடிகாரத்தில் மணி ஆறடித்தது. உடனே ராஜு பரபரப்புடன் எழுந்திருந்து, குழாயடிக்குச்சென்றான். அன்று ஆறரை மணிக்கு பனகல் பார்க்கில் பத்மாவைச் சந்திப்பதாக ஏற்பாடாகியிருந்தது. பத்மா வந்து காத்துக் கொண்டிருப்பாள் என்ற எண்ணத்துடன் சட்டுப்புட்டென்று முகம் அலம்பிக் கொண்டு, உடை அணிந்து புறப்பட்டான்.

(தொடரும்)


## ஹோமியோபதி

வைத்தியம் மிகச் சிறந்தது. சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. தமிழில் தபால்மூலம் குறைந்த செலவில் இவ்வைத்திய முறையைக் கற்றுக்கொள்ள இதுவே கடைசி சந்தர்ப்பம். விருப்பம் இருந்தால் முழு விவரங்களுக்கு இன்றே எழுதுங்கள்

ஹோமியோபதி ஹௌஸ், S. W.
77, ராமகிருஷ்ணமடம்ரோடு, மதராஸ்-28.

# வேலை நிறுத்தம்

## மகாம்

'அகில இந்திய காப்பிக் குடி ஒழிப்போர் கட்சி'யினாரின் மகாநாடு சென்னையில் கூடி, "வரும் மார்ச் மாதம் இரண்டாம் தேதியை, 'காப்பி ஒழிப்புத் தின'மாகக் கொண்டாடவேண்டும். அன்று நாட்டில் உள்ள சகல ஹோட்டல்களும் மூடப்பட வேண்டும். எத்தனை முறை புதுடில்லிக்குக் காவடி எடுத்தும், எத்தனையோ ஆயிரம் கூட்டங்களில் பிரசாரம் செய்தும் காப்பி குடிப்பதை சட்ட விரோதம் என்று மத்திய சர்க்கார் இன்றுவரை பிரகடனம் செய்யவில்லை. சர்க்காரின் இந்த மந்த புத்தியைக் கண்டிக்கும் வகையில் நாடெங்கும் ஹர்த்தால் நடைபெற வேண்டும். சர்க்கார் காரியாலயங்களும், பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும், தொழிற்சாலைகளும் வேலை நிறுத்தம் செய்யவேண்டும். எல்லாக் காப்பி ஹோட்டல்களின் முன்பும் சாத்வீக மறியல் நடக்கவேண்டும். பொது ஜனங்களின் ஒத்துழைப்பு இதற்கெல்லாம் மிகவும் தேவை. எல்லாவற்றையும் விட முக்கியமானது, ஹர்த்தால் மிகவும் அமைதியுடன் நடை பெறவேண்டும்" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானம் பத்திரிகைகளில் வெளியானதை, ஒரு கையில் காப்பி டம்ளரும் மறு கையில் பத்திரிகையுமாகப் படித்து வந்தவர்கள் பார்த்ததும், ஒரு துள்ளுத் துள்ளி, அந்தத் தீர்மானம் அச்சான செய்தித்தாளையே கொதிக்கும் காப்பியினால் குளிப்பாட்டினார்கள்! பிறகு, தாங்களே கொதித்து எழுந்தார்கள். நாடெங்கும் உள்ள காப்பிக் குடி அடியார்களும், காப்பிப்பொடி ஆழ்வார்களும் கண்டனக் கூட்டங்கள் போட்டுத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். "கடவுளாலும் முடியாது!" என்ற தலைப்பின்கீழ்,

"காப்பி நல்ல காப்பி!
சீப்பிக் குடிக்கும் காப்பி!
சீனி சேர்த்த காப்பி!
தெம்பு சேர்க்கும் காப்பி!
இன்பம் வளர்க்கும் காப்பி!
துன்பம் துடைக்கும் காப்பி!

என்று தொடங்கின ஒரு கவிதையைக் 'காப்பி தாஸன்' என்பவர் எழுதி, பிரபல பத்திரிகை ஒன்றில் வெளியிட்டிருந்தார்.

காப்பியினிடம் பொதுஜனங்களுக்கு இருந்த பற்றுதலைக் கண்டு, 'அகில இந்திய காப்பிக்குடி ஒழிப்போர் கட்சி'யினருக்குக் கவலை அதிகமாகிவிட்டது. பொதுஜனங்களிடம் காப்பியின் தீமைகள் மனத்தில் படும்படி எடுத்துச் சொல்வதற்காகவும், ஹர்த்தால் தினமான மார்ச் இரண்டாம் தேதி எல்லோரும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை விவரித்துச் சொல்வதற்கும் தொண்டர் படை ஒன்றைத் திரட்டினார்கள் சென்னையில். சுமார் ஆயிரம் வீரத் தொண்டர்கள் அந்தப் படையில் சேர்ந்தார்கள். காப்பியின் தீமைகளைப்பற்றி அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. 'அகில இந்திய காப்பிக்குடி ஒழிப்போர்' கட்சியின் தலைவரான ஸ்ரீயுத ஷர்பத்வாலா, சென்னை மாவட்டத்தின் தலைவரான ஸ்ரீமான் பதனிப் பிரியருக்கு (பதவிப் பிரியர் அல்ல) "மார்ச் மாத 2-ந் தேதி ஹர்த்தால் வெற்றியுடன் நடப்பதாக!" என்று ஒரு ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார்.

மார்ச் இரண்டாம் தேதிக்கு ஒரு மாதமே இருந்தது. காப்பிக்குடி ஒழிப்போர் கட்சியின் சென்னைக் கிளை, அதனுடைய தலைவர் பதனிப்பிரியர், உதவித் தலைவர் ஸ்ரீ மோர்க்குடியார், காரியதரிசி ஜனாப் பாதாம்கீர் ஸாஹேப் ஆகிய உற்சாகிகளுடைய பலத்தினால் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்தது. சென்னையின் தெருவெல்லாம், "காப்பியரக்கன் ஒழிக", "காப்பி ஒரு ஷைத்தான்", "மோர் (அதிகமான) மோர் சாப்பிடுங்கள்", "சங்கீத வித்வான்களே! காபி பாடுங்கள், ஆனால், காப்பியை விடுங்கள். பதிலுக்குப் 'பதனி'யை சாதகம் செய்யுங்கள்!" என்ற வாசகங்கள் தாரினாலும் காவிக் கட்டியினாலும் எழுதப்பெற்று விளங்கின!

ஆயிரம் தொண்டர்களுக்கும் தினம் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு நாள் காலையிலும் ஆறு மணிக்கு அவர்கள் கூடிவிடுவார்கள். சிற்றுண்டியுடன் காப்பிக்குப் பதில் தேனீர், ஓவல்டின், மைலோ முதலிய பானங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. வயிறு நிறைந்த தொண்டர்கள், தலைவருடைய பேச்சைப் பருகுவார்கள். தலைவர் ஸ்ரீ பதனிப்பிரியர், மார்ச் இரண்டாம் தேதி எல்லோரும் வேலை நிறுத்தம் செய்யவேண்டியதன் அவசியத்தைப்பற்றி விளக்குவார். காலேஜ் மாணவர்கள் எப்படிப் பாடங்களைக் கரைத்துக் குடிப்பதை விட்டுவிட்டு, காப்பி குடித்துக் கரைந்து போகிறார்கள் என்றும், சர்க்கார் காரியாலய சிப்பந்திகள் தங்கள் அலுவலகங்களில் உள்ள கான்டீன்களில் காப்பி குடித்துக்கொண்டே காலம் ஓட்டுகிறார்களே தவிர, வேறு வேலை செய்வதில்லையென்றும், காப்பி ஹோட்டல்கள் உண்மையில் கள்ளுக் கடைகளைவிட மோசம் ஆற்றிவிட்டு, "ஆகையினால், கள்ளுக் குடியை ஒழித்த நமது சர்க்கார், இந்தக் காப்பிக் குடியையும் ஒழித்திருக்கவேண்டும். அப்படி அவர்கள் செய்யாததைக் கண்டிப்பதே நமது நோக்கம். நமது இந்த நோக்கம் சாத்வீகமான ஹர்த்தால்மூலம் வெளிப்பட வேண்டும். அன்று யாருமே வேலை செய்யக் கூடாது. செய்யாமல் பார்த்துக்கொள்வது உங்கள் கடமை. பள்ளிப் பிள்ளைகள், காலேஜ் குமரிகள், காளைகள் பாடசாலைகளை விட்டு வெளிவரச் செய்ய வேண்டும். காரியாலயங்கள், கம்பெனிகள் எல்லாம் மூடப்பட வேண்டும். ஹோட்டல்கள் கட்டாயம் மூடியாகவேண்டும். மற்றவர்கள் எல்லோரும் சர்க்காரிடம் தங்களுக்குள்ள அதிருப்தியைக் காட்டும் வகையில் 'ஸ்டிரைக்' செய்ய வேண்டும்" என்று தினம் தொண்டர்களுக்குப் போதிப்பார் தலைவர்.

மார்ச் மாதம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. தொண்டர்கள் தினம் ஒரு டிபனும், வேளைக்கொரு பானமும் (காப்பியைத் தவிர) பண்ணிக்கொண்டு, தங்களுடைய தொண்டையின் பலத்தை வளர்த்துக்கொண்டார்கள். "மாணவர்களே! காப்பியடித்தாலும், காப்பி குடிக்காதீர்கள்!", "குடும்பத் தலைவிகளே, காப்பியை நிறுத்துங்கள். மாதம் ஒரு புது நகை செய்து கொள்ளலாம்!", "எழுத்தாளர்களே! உங்கள் கதையில் காப்பியின் புகழ் பாடாதீர்கள்! நீங்களும் காப்பியை ஒழித்துவிட்டுக் கதை எழுதுங்கள், உலக இலக்கியமாக அது அமையும்" என்று எழுதின அட்டைகள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்வதற்காகத் தயாராயின.

மார்ச் மாதம் முதல் தேதி வந்தது. ஆயிரம் தொண்டர்களும் அணிவகுத்துக் கோஷங்களை எழுப்பி, 'சுலோக' அட்டைகளுடன் நடைபழகி, ஒத்திகை நடத்தின காட்சி பிரமாதமாக இருந்தது. தலைவர், உப-தலைவர், காரியதரிசி மூவருக்கும் ஏற்பாடுகள் மிகவும் திருப்தியளித்தன. மறுநாள் சென்னை நகரம் முழுவதும் ஹர்த்தாலில் மூழ்கித் தெருவெல்லாம் வெறிச்சோடி இருக்கும் காட்சியை அவர்கள் மனக்கண்முன் கண்டு மகிழ்ந்தார்கள். 'வேலை செய்யாத சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், படிக்காத மாணவ, மாணவிகள், டபரா ஓசை கேட்காத ஹோட்டல்கள். . . . !' என்ன

வெற்றி!' என்று குதூகலித்தார்கள். ஆயிரம் தொண்டர்களும், தாங்கள் மூன்று பேரும் ஆக ஆயிரத்து மூன்று பேர்கள் இழைக்கப்போகும் அ தி ச ய த் தை நினைக்க, அவர்களுக்கு உணர்ச்சிமேலிட்டது. கட்டுப்பாட்டுடன் நடக்கப் பழகின ஆயிரம் தொண்டர்களை, வேலை நிறுத்தம் ஏன் என்பதைப்பற்றித் திரும்பவும் ஒரு முறை நினைவூட்டி, மறுநாள் மார்ச் மாதம் இரண்டாம் தேதி காலை ஆறு மணிக்கு வந்து சேரும்படி வேண்டிக் கொண்டு, அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள்.

மறு நாள் பொழுது புலர்ந்தது. கீழ் வானம் செவேலென்று காட்டிற்று. புள்ளினங்கள் உதயகீதம் பாடின. அகில இந்திய காப்பிக்குடி ஒழிப்போர் கட்சியின் சென்னை மாவட்டத் தலைவர் ஸ்ரீமான் பதனிபிரியரும் உப தலைவர் ஸ்ரீ மோர்க் குடியாரும், கா ரி ய தரிசி ஜனப் பாதாம்கீர் ஸாஹேபும் காலை ஆறு மணிக்கே வந்து, கட்சியின் கட்டிட வாசலில் கூடினர்கள். நிமிஷம் ஏறஏற அவர்கள் முகம் கவலையைக் காட்டிற்று. மணி ஏழடித்தும் ஆயிரம் தொண்டர்களில் ஒருவர்கூட வரவில்லை! எட்டும் அடித்துவிட்டது; தொண்டர்களைப்பற்றிய தகவலே இல்லை!

காப்பிக் குடியின் தீமைகளைப்பற்றியும், அதை சர்க்கார் தடை செய்யாததன் தவறைப்பற்றியும், அதனல் ச ர் க் காருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, வேலை நிறுத்தம் செய்யவேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் ஒரு மாத காலமாகப் பாடம் கேட்டுப் பழகிப்போன தொண்டர்கள், அந்தப் புனித தினமான மார்ச் மாதம் 2-ம் தேதி தாங்களே வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்து விட்ட விவரம், பாவம், மூன்று தலைவர்களுக்கும் எங்கே தெரியப் போகிறது!





சில்லறை விற்பனைக்கான

கிளை ஆபீஸ்கள்:

285, சைனுபஜார் ரோடு,

மதராஸ்

&

71, பாண்டி பஜார்,

தியாகராய நகர்


# எழுத்துலகம்

எஸ். ராஜா

இன்றைய வங்காளி நாவலாசிரியர்களிலே தாராசங்கர் பானர்ஜியை முதல் வரிசையில் இருப்பவர் என்று சொல்ல வேண்டும். அவர் 1898-ல் பிறந்தவர். தாயாரிடமிருந்தும், ஒரு அத்தையிடமிருந்தும் கதைகள் கேட்டுக் கேட்டு அவர் கதை சொல்லும் திறமையைப் பெற்றதாக அவரே ஒரு தரம் சொல்லியிருக்கிருர். "எழுத்தாளனுவதா, அரசியல் வாதியாவதா?' என்று எனக்குள்ளேயே பல வருஷங்களாக ஒரு போராட்டம் நடந்தது. அதில் எழுத்தாளன் கட்சிதான் இறுதியில் வெற்றி பெற்றது" என்று ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிருர் அவர்.

அரசியல் இயக்கங்களில் கலந்து கொண்டு அவர் பல தடவைகள் ஜெயிலுக்குப் போயிருக்கிருர். கொஞ்ச நாள் முற்போக்கு இலக்கியச் சங்கத்தில் அங்கத்தினராகவும் இருந்தார். ஆரம்பத்தில் கவிதைகள் எழுதியவர், பிறகு ஒரு நாடகம் எழுதினுர். அதற்குப் பிறகு ஒன்றன் பின் ஒன்ருகப் பல சிறு கதைகளும், நாவல்களும் எழுதியிருக்கிருர். "வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்ற நீ எழுத்தாளனுக வெற்றி பெறுவாய். அது நிச்சயம்" என்று ரவீந்திர நாத தாகூர் ஒரு தரம் அவரிடம் சொன்னுர்.

அவருடைய முதல் நாவல் 1934-ல் பிரசுரமாயிற்று. அது முதல் வருஷத்தில் 40 பிரதிகள்தான் விற்றதாம். அதற்குப் பிறகு இரண்டு வருஷத்திற்கு ஒரு நாவல் வீதம் அவர் பல நாவல்கள் எழுதியிருக்கிருர். அக்கினி என்ற அவருடைய நாவல் தமிழிலும் வெளிவந்திருக்கிறது. அவர் நாவல்களில் பல ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இன்றைய சமூகப் பிரச்னைகளை மையமாக வைத்து, அவர் எழுதுகிற நாவல்கள் சக்தி வாய்ந்தவையாகவும், மிகவும் சிறந்த சிந்தனைகளை அடக்கியவைகளாகவும் இ ரு க் கு ம். ஆனல், சரத் சந்திரர் மாதிரி அவர் ஸர்வஜனரஞ்சகமாக எழுத வேண்டும் என்று எண்ணியதே கிடையாது.

1943-ல் கல்கத்தா சர்வகலாசாலை அவருக்கு 'சரத்சந்திரா மெடல்' என்று ஒரு மெடலை அளித்தது. "நான் சாகும் நாளை அறிந்து, சாவைச் சாகு முன் அனுபவித்து அறிய நான் விரும்புகிறேன்" என்று பத்திரிகை நிருபர் ஒருவரிடம் அவர் கூறினுராம். காந்தீய வழியிலே தீவிர நம்பிக்கையுள்ளவர் அவர். பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் போதே அவருக்குக் கல்யாணமாகி விட்டது.

ஃ ஃ ஃ ஃ

1063 பாஷைகளில் கிறிஸ்தவ வேதமாகிய பைபிள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. உலகத்து ஜனங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்வழிகள் தங்கள் சொந்த பாஷைகளில் பைபிளைப்

படும் இந்த பாஷைகளில், ஒரு 700 பாஷைகளாக உருவம் பெற்றிருக்கவில்லை என்று சொல்லலாம். பெல்ஜியன் காங்கோவில் பேசப்படும் சிலுபா பாஷை எழுதுகிற பாஷையாக பைபிள் அதில் வெளியாகு முன் பழக்கத்தில் இல்லை.

திபேத் தேசத்து பாஷையில் பைபிளை மொழிபெயர்த்து அச்சிட 92 வருஷங்கள் பிடித்ததாம். யோஸப் கெர்கான் என்பவர் இந்த மொழிபெயர்ப்பை முடிக்க முப்பத்தைந்து வருஷங்கள் பாடுபட்டாராம். தன் எழுபதாவது வயதில் தன் கையாலேயே பைபிளில் பெரும் பகுதியையும் அவர் மொழிபெயர்த்து எழுதி முடித்தாராம். முடித்த ஐந்தாவது நாள் அவர் இறந்துவிட்டார்.

வென்லி பிராந்தியத்து சீன பாஷையில் பைபிளை மொழிபெயர்த்தவரைப் பற்றிப் பிரமாதமாகச் சொல்கிருர்கள். பல பாஷைகளில் பைபிளை மொழிபெயர்ப்பதால் ஏற்பட்ட சிரமங்கள் சொல்லி முடியாது. ஸஹாரா பாலைவனத்து ஓரத்தில் வசிக்கிற மோஸ்ஸி பாஷை பேசுகிற மக்களுக்கு 'நங்கூரம்' என்ருல் என்ன, கடல் என்ருல் என்ன?' என்றே தெரியாதாம். அந்தப் பாஷையில் இப்பொருள்களைக் குறிக்கிற வார்த்தைகளும் கிடையாது. இடத்துக்கு ஏற்றபடி மாற்றி மொழிபெயர்க்க வேண்டியதாக இருந்தது. அதே போல விக்டோரியா ஏரிப் பிராந்தியத்தில் வசிக்கும் ஜான்ஸ்கி ஜனங்களிடையே திருடர்கள் மட்டும்தான் வாசற் கதவை வந்து தட்டலாம் என்று ஒரு விதி உண்டாம். "வாசலில் நின்று தான் கதவைத் தட்டுகிறேன்" என்கிற பைபிள் வாக்கியத்தை அப்படியேமொழிபெயர்த்தால், கடவுள் திருடன் என்று அவர்கள் அர்த்தம் பண்ணிக்கொள்வார்கள். அதற்காக மாற்றி அமைத்துக்கொள்ள வேண்

டியதாக இருந்ததாம். இந்திய பாஷைகள் எல்லாவற்றிலுமே (சம்ஸ்கிருதம் உள்பட) பைபிள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பைபிளை உலகில் பரப்பும் சங்கம் 1804-ல் இங்கிலாந்தில் தோன்றியது. 1953-ல் மட்டும் அறுபது லட்சத்துக்கு அதிகமான பைபிள் பிரதிகளைப் பிரிட்டிஷ் சங்கம் வினியோகித்ததாம். அமெரிக்கக் கிளைச் சங்கம் நூற்றைம்பது லட்சம் பிரதிகள் வினியோகித்ததாம். உலகில் எங்கும் வினியோகமாகிற பைபிள்கள் இப்போது சோவியத் ரஷ்யாவுக்குள் மட்டும் அதிகாரபூர்வ

# மாட்னி ஷோ

**'ஆர்வி'**

'டண், டண்'–மணி இரண்டு அடித்ததும் எனக்குப் போன வெள்ளிக்கிழமை ஞாபகம் வந்தது.

அதேபோல இந்த வெள்ளிக்கிழமைப் பொழுதையும் பயன்படுத்திக்கொண்டால் என்ன? அம்மா ஏதாவது சொல்வாளோ? அவளுக்கு என்ன, ஆறு ஆறரை மணிக்கெல்லாம் நான் மாப்பிள்ளைபோல ஜம்மென்னு சிங்காரித்துக்கொண்டு தயாராக இருக்கவேண்டியதுதானே! அதற்குள் தாராளமாகத் திரும்பிவிடலாம். அதுவரையில் அம்மா என்னைத் தேடமாட்டாள்.

நான் சந்தன சோப்பைக் குழைத்து 'ஷாங்க்'கிலே முகத்தைக் கழுவிக்கொண்டேன். முகக்ஷவரம் செய்துகொண்ட முகம் பட்டுமாதிரி வழவழவென்று எனக்கே தொட்டுப் பார்க்க இன்பமாக இருந்தது. ஒட்டு வரி மீசையை அப்படியே வைத்துக்கொண்டிருந்திருக்கலாம். ஹானர்ஸ் பரீட்சைக்குப் போயிருப்பவனுக்கு, இந்த உரிமையெல்லாம் உண்டு. ஆனால், அம்மாவுக்கு இது எங்கே புரியப்போகிறது? மீசையைக் கண்டு பயப்படக்கூடியவர்கள் தங்கள் வீட்டுப் பெண்ணைமட்டும் எப்படித் தைரியமாகக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறார்கள்? அம்மா பழங் காலத்தைச் சேர்ந்தவள். இத்தனை வருஷங்கள் ஆகியும் அப்பாவோடுகூட எங்கேயாவது போகும்போது, குனிந்த தலை நிமிரமாட்டாள். தெரிந்தவர்களைக் கண்டுவிட்டாலோ, கேட்கவே வேண்டியதில்லை. அப்பாவுக்குப் பின்னே பதுங்கிவிடுவாள். இப்பொழுது காலம் அப்படியா இருக்கிறது? எவ்வளவோ மாறியிருக்கிறது. எல்லாவற்றிலுமே மாறியிருக்கிறது. இதெல்லாம் அவளுக்குப் புரிந்தால்தானே? சில முகங்களுக்கே ஒற்றைக் கோட்டு மீசை எடுப்பாக இருக்கும். சில பெண்களுக்கே இந்த மீசை வைத்த முகங்கள் கவர்ச்சியாகப் படுமாம்!

'படுமாம்' என்ன? படும், பட்டிருக்கிறது என்பது எனக்கே தெரியும். போன வெள்ளிக்கிழமை...

ஃ ஃ ஃ

'மாட்னி ஷோ' என்று முதலில் ஆரம்பித்தானே ஒருவன்—ஏன், எதற்கு ஆரம்பித்தான்? பணத்தை அவசர அவசரமாக, சட்டுப்புட்டென்று வாரிக் குவித்துவிட வேண்டும் என்று ஆசையோ? இருக்காது. ஜனங்கள் அவசர அவசரமாகக் கெட்டுப் போகவேண்டும் என்றும் அவன் எண்ணியிருக்கமாட்டான். அதுதான் உயர்ந்த கலைகளில் ஒன்றாகிவிட்டதே! நம் வாழ்க்கையோடு பிரிக்க முடியாதபடி அது கலந்துபோய்விட்டதே! மனித ஜாதியில் ஏற்படுகிற தொல்லைகளுக்குத் தகுந்தபடி ஆறுதல் கிடைக்க வழியில்லாமல் போய்விட்டது. அன்றாடம் எத்தனை துன்பங்கள்; எத்தனை துயரங்கள்! அவற்றை அவ்வப்போது போக்கிக் கொள்ள வேண்டாமா? க்யூ வரிசையில் அவற்றை உடனுக்குடனே விரட்டியடிக்க வழி தேடினால்தான் உண்டு. இதற்காக மாலை ஆறு மணி வரையில் எவனாவது காத்திருக்கலாமா? ஓய்ந்து, களைத்துப் போன உள்ளத்துக்கு உல்லாசம் கொடுக்கச் சாயங்காலம்வரையில் காத்திருக்க வைப்பது நாகரிக சமுதாயத்துக்கு அடையாளமாகாது. அதற்காகவே இந்த 'மாட்னி ஷோ'வை ஒரு மேதை ஏற்படுத்தியிருக்கிறான்! அதைப் பயன்படுத்திக்கொள்ளாமல் இருப்பது யாருடைய தவறு?... அதனால், போன வெள்ளிக்கிழமை போனமாதிரி இன்றும் போகவேண்டியதுதான்...

சரி; போகவேண்டியதுதான். ஆனால், இன்றைக்கு என்று இப்படி ஒரு முக்கியமான வேலையை அம்மாவும் அப்பாவும் சேர்ந்து, என் தலையில் சுமத்தி வைத்திருக்கிறார்களே! எனக்கு இன்னும் இந்தக் குழப்பம் தீரவில்லை. யோசனையில் சிடுக்கு விழுந்துவிட்டால், நூலில் முடிச்சு விழுந்ததுபோலத்தான். சட்டென்று பிரிக்க முடியாது.

ஃ ஃ ஃ

அன்று இப்படித்தான் இதே நேரத்தில் வேறு ஒரு குழப்பம்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்திகளில் சிறந்தவன் யார் என்பது மாதிரி தமிழ், ஹிந்தி, ஆங்கிலம்!

பாஷைப் பிரச்னையில் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிற குழப்பம், அன்று எனக்கும் விசுவத்துக்கும் வந்துவிட்டது. கட்டுச் சோற்று மூட்டையைக் கட்டிக் கொண்டு போவதாக இருந்தால்தான் தமிழ்ப் படத்தைப்பற்றி யோசிக்கலாம் என்பது என் கட்சி. கொடுக்கும் பணம் கூட ஜீரணம் ஆவதற்குள், போனதுமே பொசுக்கென்று திரும்பி வருகிற அரை நிர்வாண ஆங்கிலப் படம் வேண்டாம் என்பது விசுவத்தின் கட்சி. ஆனால், ஹிந்திப் படம் தேவலையா? தமிழ்ப் படங்களின் 'போர்' அடிக்கிற நீளம், ஆங்கிலப் படங்களின் அரை நிர்வாணத்தின் அலங்கோலம், புரியாத பாஷை — மூன்றும் விசித்திரமாக இணைந்த ஹிந்திப் படங்களைப்பற்றி இரண்டு பேருக்குமே ஒரே அபிப்பிராயம்தான். அதனால் அந்தப் பேச்சே எழவில்லை.

எதையாவது ஒன்றைப்பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வருவது என்று போய்விட்டால், அதற்கு முடிவே ஏற்படுவதில்லை. ஆனால், விசுவம் அப்படியில்லை.

"சரி, நீ கிளம்பு முதலில், சொல்கிறேன்" என்றான் அவன்.

"இப்பொழுதேயா?"

"ஆமாம், ஆமாம். கிளம்பு!"

"எந்தப் படத்துக்கு? தமிழா, ஆங்கிலமா?"

"ஏதோ ஒரு படத்துக்கு. போகும்போதே யோசித்தால் போச்சு. இப்பவே முதற்கொண்டு குழம்புவானேன்?"

"அதுவும் சரிதான்!"

எனக்குப் பிடித்த பல வழிகளில் இது ஒன்று. எனவே, உடனே கிளம்பிவிட்டேன். ஆனால், வழியில் ஓர் ஆங்கிலத் தியேட்டர், சுவரொட்டி வர்ணப் படங்களும் விளம்பரங்களும் கண்ணையும் கருத்தையும் பிடித்து இழுத்து, "வா, வா" என்று அழைத்தன. விசுவத்துக்கு இந்த மாதிரியான படங்கள் பிடிக்காது என்று அர்த்தமில்லை. மிகவும் பிடிக்கும். ஆனால், இவ்வளவு சீக்கிரமாக முடிந்துவிடுவதுதான் அவனுக்குப் . பிடிப்பதில்லை.

லாபியில் நின்ற யாரோ ஒருவரிடம் போய், "என் ஸார், படம் எப்படி?" என்று கேட்டான் விசுவம்.

"முந்தி நீங்க பார்த்ததில்லையா? படம் பிரமாதம்தான். ஆனால், ஏழாயிரம் அடிகூட இல்லை; ரொம்பச் சின்னது" என்றார் அவர்.

"உருக்கு நெய் அல்வாதான்; ஆனால், வயிற்றுப் பசிக்குப் போதாது" என்று சொல்லிக்கொண்டே, விசுவம் கோபத்தோடு நிமிர்ந்து, என்னைப் பார்த்தான். என் பிடிவாதத்தினால்தானே பஸ்ஸைவிட்டுப் பாதியில் இறங்கினோம். அதில்தான் கோபம் அவனுக்கு. உடனே கைக்கடிகாரத்தைப் பார்த்தான். கோபம் கொஞ்சம் மாறியது.

"சரி; ஆரம்பிக்கிற சமயமாகத்தான் இருக்கும். வா, நடந்தே போகலாம்" என்று என் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வாசலுக்கு வெளியே வந்தான்.

"வெய்யில் மண்டையைப் பிளக்கிறதே, விசுவம்" என்றேன் நான்.

"பிளக்காது; பிளந்தாலும் வெடிக்காது. உம். வேகமாக நட!"

அங்கிருந்து அரை மைல்போல அந்த வெய்யிலில் வேகவேக நடந்து, தமிழ்ப்படத் தியேட்டருக்குள் நுழைந்தோம். படம் ஆரம்பமாகிவிட்டது.

"அரை மணி ஆகியிருந்தால்கூடப் பரவாயில்லை. கதை எழுதினவன் ஒருவன் பெயரைத் தவிர, மற்ற அத்தனை பேருடைய பெயர்களைக் காட்டி முடிக்கவே, கால் மணிக்கு மேலாகிவிடும். பிறகுதான் படம் தொடங்கும். கதை ஆரம்பம் என்றால் பாட்டும் நடனமும் இல்லாமல் போகுமா? இரண்டும் குறைந்தது கால்மணி நேரத்துக்குள் முடியாது. அதனால் பாதகமில்லை; வா, வா!" என்று டிக்கட் வாங்கப்போனான் விசுவம். ஒன்றே கால் ரூபாய் டிக்கட்டிலே இரண்டே இரண்டுதான் மீதி. அவற்றை வாங்கிக்கொண்டு நுழைந்தால், ஒரே கும்மிருட்டு! வெய்யிலில் வேறு வந்திருக்கிறோமா, ஒன்றுமே புரியவில்லை.

கறுப்புத் திரையை விலக்கிக் கொண்டு உள்ளே அடியெடுத்து வைத்ததுமே பாட்டரி விளக்குகளை வைத்துக் கொண்டிருந்த இருவர் ஆளுக்கு ஒரு பக்கமாக இழுத்துக்கொண்டு போனார்கள். பல்வரிசையில் ஒன்று மட்டும் பொக்கையாகப் போனதுபோல், நடுவில் ஒரே ஓர் இடம். அந்த இடத்தை மட்டும் கூட வந்தவன், வெளிச்சம் போட்டுக் காட்டினான். வெளிச்சம் அணைந்ததும் இருள்தான். இருளிலே நிதானமாகத் தட்டித் தடவிக்கொண்டு போனேன்.

கொஞ்சம் பொறுத்திருந்தால் கண் தெரிந்திருக்கும். அதுவரையில் மற்றவர்கள் பொறுப்பார்களா? உத்தேசமாகப் பார்த்த இடம் புரியவில்லை. யார் காலோ இடறியது. கை ஒன்று என் கையைப் பிடித்து ஒதுக்கிவிட்டது. கடைசியில் எப்படியோ இடத்தில் உட்கார்ந்துவிட்டேன். பிறகுதான் எனக்கு நல்ல மூச்சு வந்தது. நல்ல மூச்சோடு ஒரு நறுமணமும் கலந்து வருவதை அப்போதுதான் நுகர்ந்தேன்.

திடீரென்று எல்லாரும் சிரித்தார்கள். என்னைப் பார்த்து அல்ல; படத்தில் நடந்த ஒரு கட்டத்தைக் கண்டு. நான் மெல்லத் தைரியம் கொண்டு, என் பக்கத்தில் யார் என்று கவனித்தேன். இருளிலும் பளிச்சென்று ஒரு பெண்ணுருவம் தெரிந்தது.

எனக்கு யோசனைதான். அதனால்தான்

அதில் இதுவரை யாரும் உட்கார முன்வரவில்லை. நான் மட்டும் போய் ஒரு பெண்ணுக்குப் பக்கத்தில் உட்காருவது சரியா? சரியோ, தப்போ வேறு வழியில்லை. ஆணும் பெண்ணும்தான் இக்காலத்தில் சரிநிகர் சமானமாயிற்றே! உயர்வகுப்புகளில் தெரியாமலா பெண்களுக்கு என்று தனிப் பகுதி பிரிக்காமல் இருக்கிறார்கள்?—எனக்குக் குழப்பம் ஆரம்பமாகிவிட்டது.

அது எப்படி அந்தக் குழப்பம் தீர்ந்தது?

ஃ ஃ ஃ

ஞாபகம் போன வெள்ளிக்கிழமையைத் துரத்த, கை முகத்தில் ஸ்நோவைத் தெரியாத்தனமாகத் தடவிவிட்டது. போட்டுக்கொண்ட பிறகு என்ன செய்வது?

சட்டையை மாட்டிக்கொண்டு கண்ணாடிமுன் நிற்கும்போதுகூட என் யோசனை ஒரு முடிவுக்கு வரவில்லை; 'மாட்னி ஷோ'வுக்குப் போவதா, வேண்டாமா?

என் யோசனை முடிவுறுததற்காக எதுவும் காத்திருக்கவில்லை. பணத்தை எடுத்து வைத்துக்கொண்டேன். கல்கத்தா 'ஷூ'வை மாட்டிக்கொண்டேன். கைக்கடிகாரத்தைக் காதில் வைத்துப் பார்த்துக்கொண்டேன். புறப்பட்டு விட்டேன்.

போகும் வழியெல்லாம் யோசனைதான். 'மணி இரண்டே கால் ஆகிவிட்டதே, படம் ஆரம்பமாகியிருக்குமோ! ஆரம்பித்தால் என்ன, அன்று மாதிரியே ஒரு பெண்ணுக்குப் பக்கத்தில் உட்காரும்படி ஆகுமோ? அவளே ஏன் வந்திருக்கக்கூடாது? அதே இடத்தில் ஏன் உட்கார்ந்திருக்கக்கூடாது? எல்லாம் நம் கையிலா இருக்கிறது!'—

'ஆனால், மாடினிக்குப் போகிற எண்ணம் ஏன் எனக்கு உண்டாயிற்று?—அதுவும் பார்த்த படத்தையே பார்க்க? —அதுவும் விசுவத்துக்குத் தெரியாமல் தனியாக?—'

அம்மா இப்போது விசுவத்தைத்தான் மலைபோல நம்பியிருந்தாள். அவளுக்கு வரவர மூச்சை அடைக்கிறதாம். என் கையால் ஒருத்திக்கு மாலை என்று போட்டு வீட்டுக்கு அழைத்து வராவிட்டால், அவளுக்குத் தைரியம் என்பதே ஏற்படாதாம். என்னை வழிக்குக் கொண்டுவர விசுவத்தினால்தான் முடியுமாம். இன்று பெண் பார்க்க வர நான் சம்மதித்ததற்கே விசுவம்தான் காரணம் என்று அம்மா நம்பியிருந்தாள்.

நம்பியிருக்கட்டும்; நானும் அவள் திருப்திக்காகப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். ஆனால், பெண்ணும் கண்ணுக்கு நன்றாக இருந்து திருப்தியாகப் போய்விட்டால் என்ன செய்வது? எனக்குத் தெரியும்; அப்படி ஒருபோதும் ஆகாது.

அது என்ன ஆடா, மாடா, பண்டமா, பொருளா? பெண் பார்ப்பது என்று ஒருத்தியைப் போய்ப் பார்த்துவிட்டு வருவதாவது? பார்த்துவிட்டால் அன்பு, ஆசை எல்லாம் ஏற்பட்டுவிடுமா? குணம், குற்றம் எல்லாம் புரிந்துவிடுமா? பேத்தல்! முன்பின் பார்க்காமல், பழகாமல், உள்ளத்தின் போக்கை உணராமல், உணர முயலாமல் எதைப் போய்ப் பார்த்துவிட்டு வருவது? பார்ப்பதாம்; கண்ணுக்கு நன்றாக இருந்தால் சம்மதித்து விடுவதாம்!

ஐயையோ, மணி இரண்டரை! படம் ஆரம்பமாகிவிட்டது. அதே நெருக்கடி! அதே இருட்டு! அதே பாட்டரி விளக்குக்காரன்! அதே இடம்! ஆனால், இது யார் பக்கத்தில் புளிமூட்டை மாதிரி ஒருவன்!

பருமன்; கசகசப்பு; வேர்வை நாற்றம்! கையைப் பிடியில் வைத்துக்கொள்ள விடாதபடி இம்சை! ஒண்டி ஒடுங்கிக்கொண்டு ஹடயோகம் செய்வதுபோல அப்படி இப்படி அசையாமல் ஒடிந்த உள்ளத்தோடு உட்கார்ந்திருந்தேன்.

நேரத்தை நீளம் இழுத்துக்கொண்டே போயிற்று. முடிவு விடிவு காண்கிற வழியாகவே தெரியவில்லை. எழுந்து



போவதா, இருப்பதா?—மீண்டும் குழப்பம்!

⁂ ⁂ ⁂

**ம**ணி ஆறரை.

நிச்சயம் அம்மாவும் விசுவமும் என்னைச் சபித்துக்கொண்டேயிருப்பார்கள்! பயந்துகொண்டே ஒரு பேபி டாக்ஸியை வைத்துக்கொண்டு, வீடு வந்து சேர்ந்தேன்.

விசுவத்தின் முகம் கடுகடுவென்றிருந்தது. அம்மாவின் முகத்தில் கவலை தெரிந்தது. நான் வந்ததும் வராததுமாக, "நாழியாகிவிட்டதா, என்ன? புறப்படுவோமா?" என்றேன்.

விசுவம் உடனே பேசவில்லை. என் முகத்தைப் பார்த்துவிட்டு, "போ! உன் முகத்தில் வழியும் எண்ணெயைக் கழுவிக்கொண்டு வா!" என்றான்.

இதற்குத்தான் நான் ஸ்னோ போட்டுக் கொள்வதில்லை. போட்டதும் மொட மொடவென்று இருக்கும் முகத்தில் விளக்கெண்ணெய் பூசினதுபோல—குழப்பம்—புழுக்கம்—எல்லாம் சேர்ந்துகொண்டு விட்டால்?

விசுவம், நான், அப்பா, அம்மா நால்வருமாகப் பெண் பார்க்கப் போனோம். கவலை தோய்ந்த முகத்தோடு பெண் வீட்டார் எங்கள் வரவை எதிர்நோக்கியிருப்பது தெரிந்தது. எங்களைக் கண்ட பிறகுதான், அவர்கள் முகத்தில் ஒளி படரத் தொடங்கியது.

உபசாரம், வரவேற்பு எல்லாம் ஒழுங்காக, உயர்வாகவே இருந்தன. அம்மா ஏதோ சொன்னாள். விசுவம் ஏதோ சொன்னான். அப்பா ஏதோ சொன்னார். எல்லாரும் வட்டமாக நடு ஹாலில் போட்டிருந்த ரத்தின கம்பளத்தில் உட்கார்ந்திருந்தோம்.

எனக்குத் தெளிவாகத் தெரியவேண்டும் என்று அம்மா, பெண்ணின் தாயைப் பார்த்து, "இண்டர் பரீட்சை எழுதியிருக்காளோ?" என்றாள்.

நானும் அந்தக் கேள்வியிலும் அதன் பதிலிலும் திருப்திப்படுவதுபோல் காட்டிக்கொண்டேன். அதற்குள் தோழி ஒருத்தி அழைத்துவர, கையிலே தாம்பூலத் தட்டேந்தி, குனிந்த தலை நிமிராமல், அன்ன நடை நடந்து, தளிரென அவள் வந்தாள்.

"எல்லாருக்கும் நமஸ்காரம் பண்ணு, அம்மா!"—யாரோ சொன்னார்கள்.

என்னை வெட்கம் கீழே இழுத்தது. கம்பளத்தின் நூல் ஒன்றை இழுத்துக் கொண்டிருந்தேன்.

"மாப்பிள்ளை சார், நன்றாக் கவனிச்சுக்குங்க!" இதையும் யாரோ சொன்னார்கள்.

நிமிர்ந்தேன்; அவளும் நிமிர்ந்தாள். பார்த்தேன்; அவளும் பார்த்தாள். மின்னல் நெளிவதுபோல புருவங்கள் நெளிந்தன. விர்ர்ர்ர்... இரண்டு பேருக்குமே 'ஷாக்' அடித்ததுபோலிருந்தது. சாமானிய அதிர்ச்சியல்ல; விவரிக்கத் தெரியாத அதிர்ச்சி எல்லாம் கிர்கிர்ரென்று எனக்குத் தலை கீழாகச் சுற்றியது.

அவள் உள்ளே போய்விட்டாள். எவ்வளவு நேரம் ஆயிற்றோ!

"பாடத் தெரியுமோ? அவனுக்கு இந்தப் பாட்டு, கதை, சிற்பம் என்றால் ஒரே பைத்தியம்" என்றாள் என் அம்மா.

"பாடத் தெரியும்... ஆனால் அவளுக்கு ரொம்பக் கூச்சமா இருக்குப் போலிருக்கு. தயங்கறா..." என்று அவளுக்காக அவளை அழைத்து வந்த தோழி சமாதானம் சொன்னாள்.

பிறகு எல்லாம் முடிவாகிவிட்டது போல, முகூர்த்தம் என்று வைத்துக் கொண்டால் எங்கே, எப்போது, எப்படி என்றெல்லாம் பேச்சு போய்க்கொண்டிருந்தது. நான் எழுந்து வெளியில் வந்துவிட்டேன்.

"என்ன இருந்தாலும் படித்த பெண்கள் என்றாலே அது ஒரு தனி அழகுதான். காலேஜில் படிக்கிறவள் என்றால், எப்படியோ ஏதோ என்று கவலைப்பட்டுக்கொண்டு இருந்தேன். ஆனால், பெண் கிளியாட்டமா இருக்கா. என்ன அடக்கம்; லட்சணம்!" என்று திரும்பும் வழியில் அம்மா, பெண்ணைப்பற்றி வர்ணிக்கத் தொடங்கினாள்.

"படித்தால் பதவிசே இருக்காது; இல்லாத ஸ்டைல் எல்லாம்தான் இருக்கும் என்பார்கள்...ஆனால், அதெல்லாம் கொஞ்சம்கூட இல்லாமல்... ரொம்ப அடக்கம்தான். இவனுக்குச் சரியான ஜோடிதான்!" என்று ஒத்துப் பாடினான் விசுவம்.

அம்மா என் முகத்தைப் பார்த்தாள்.

"நீங்கள் அப்புறம் வர்ணிக்கலாம்; முதலில் அவன் அபிப்பிராயத்தைக் கேளுங்கள்!" என்றார் அப்பா.

விசுவம் என் முகத்தைப் பார்த்தான்.

நான் வேகமாகத் தலையை ஆட்டினேன். இதை யாருமே எதிர்பார்க்கவில்லை.

"என்னடா, வாயைவிட்டுச் சொல்லேன்" என்றாள் அம்மா.

"எனக்கு வேண்டாம்; நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை!"

"ஏன் பெண்ணுக்கு என்ன?"

"நீதான் சொன்னயே கிளி என்று; அதிலும் படித்த கிளி என்று! அதனால் தான் சொல்கிறேன்; கிளி எனக்கு வேண்டாம், அம்மா, வேண்டாம்!"

⁂ ⁂ ⁂

**வி**சுவத்துக்கு அன்று 'மாட்னி ஷோ'வில் நடந்தது ஒன்றையும் நான் சொல்லவில்லை. அப்புறம்தான் தனியாக இருந்தபோது சொன்னேன்.

அன்று என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவள் இவளேதான்! பக்கத்தில் பெண்—நறுமணம்—சுற்றிலும் இருள்! எதிரே கதாநாயகனும் கதாநாயகியும் பல கோணங்களில், நிலைகளில் கொஞ்சி, கெஞ்சி, அஞ்சி, மிஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

இதே பார்வை!

கதாநாயகனுக்கும் என்னைப்போல ஒற்றை வரி மீசை; கறுப்புக்கோடு போட்ட மாதிரி, சிவந்த, எடுப்பான முகத்துக்கு ஆண்மையின் கம்பீரத்தை 'அண்டர் லைன்' செய்து காட்டுவதுபோல. நான் என்னையும் அவன் உருவத்தையும் ஒப்பிட்டு—எவற்றில் நாங்கள் வேறுபடுகிறோம் என்று படத்தோடு ஆராய்ச்சியும் பண்ணிக் கொண்டிருந்தேன். பக்கத்தில் இருப்பவர்களின் ஞாபகம் இல்லை. கையைப் பக்கத்தில் இருந்த பிடியில் ஊன்றிக்கொண்டேன். பிடிக்கு மேலே

மற்றொரு கை எனக்கு முன்னே அமர்ந்திருந்தது. என் கை பட்டதும் அது விசுக்கென்று விலகிக் கொண்டது.

கால்களைக் கட்டுப்பாட்டோடு ஒரே நிலையில் வைத்துப் பழகியிருந்தால், சௌகரியமாய் இருக்கும். கல்லூரியிலே இஷ்டப்படி அட்டகாசமாய் உட்கார்ந்து, சாய்ந்து பழக்கம். இங்கே அந்தப் பழக்கத்தைக் கொண்டாட முடியுமா? தெரியாமல் இரண்டு மூன்று முறை கால் அவள் காலை இடித்துவிட்டது.

அதற்காக மன்னிப்புக் கேட்பது போல, "ஸாரி!" என்றுகூட முணுமுணுத்தேன். என் வார்த்தைகள் என் உதட்டை விட்டுக் கிளம்பவேயில்லை. அவள் பதறியதாகவும் தெரியவில்லை. கால்பட்ட வேதனையில் கையிலே அவளுடைய தாவணித் துணி அகப்பட்டுக் கொண்டதை உணரவில்லை. அவள் குனிந்தபோதுதான், என் தவறு தெரிந்தது.

அதெல்லாம் எப்படி நேர்ந்ததோ? என் குழப்பத்தில் எப்படிச் சொல்வது? என் காலுக்கடியில் அவள் கால் செருப்பு!

அவள் அடிக்கடிக் குனிந்து நெளிந்து கொண்டிருந்ததைக் கண்டு, அவளுக்கு அந்தப் பக்கத்திலிருந்து, "என்ன ஸுலோ?" என்று ஒரு பெண் குரல் கேட்டது. அவள் தனியாக வரவில்லை!

என் பக்கத்திலிருந்தவள் பெயர் ஸுலோ. ஸுலோசனாவோ, ஸுலேகாவோ அல்லது வேறு ஏதாவதோ?

"நத்திங்.. இன்னிக்கு நல்ல கூட்டம்! இல்லே?" என்றாள் ஸுலோ.

"படம்தான் மோசம் என்றால் இங்கே வரவங்களும் அதைவிட மோசமாக இருப்பாங்கபோலிருக்கே! பொம்பிளையையே பார்த்திருக்க மாட்டாங்களோ? படம் பாக்கறபோது விசில் அடிக்கிறாங்களே, நேரிலே பார்த்தால் எப்படியிருப்பாங்க?"

ஸுலோ என் பக்கம் ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு, "உஸ்..." என்றாள் அவளிடம்.

அவள் திரும்பியபோது அவளுடைய முழங்கை என் விலாவில் இடித்தது. எனக்குக் கூச்சம் அதிகம். விலாவைத் தொட்டால், துள்ளி விழுந்து விடுவேன். இடி லேசாக இருந்ததால் துள்ளலும் லேசாகத்தான் இருந்தது.

ஸுலோ சிரித்தாள். எதற்குச் சிரித்தாளோ?

முகத்தைத் துடைத்துக்கொண்ட கைக்குட்டைத் துணியை அந்தத் துள்ளலில் விட்டுவிட்டேன்போலிருக்கிறது. கீழே தேடினேன். பையில் தேடினேன். அவள் கையையும், காலையும் அநாவசியமாக இடித்ததுதான் மிச்சம்; அந்தத் துணி அகப்படவில்லை.

கைக்குட்டையையே கொண்டு வரவில்லையோ? இல்லை; கொண்டு வந்தேன் போலிருக்கிறதே.. இல்லை இருந்தது, இருந்தது, இல்லை!—சரி; தொலையட்டும்.

"பேசாமல் 'மார்னிங் பியூட்டி'க்கே போயிருக்கலாம். இதென்ன சம்பாஷணையா? பிரசங்கம் பண்ணுகிறானே—பெண்ணிடம் வந்து.. மூணு மணி வரையிலும் என்ன பண்ணுவது என்று

# திரைக்குப் பின்...

★

## 'ஆர்வி'
எழுதும்
## தொடர் கதை

✻

**விரைவில்**
**ஆரம்பமாகிறது.**

நீ தவிச்சயேன்னு வந்தேன். நடிப்பா இது! தலையைக் கலைச்சிக்கிட்டு, சட்டையைப் —பிச்சிக்கிட்டு..." ஸுலோவின் பக்கத்தில் இருந்தவன், படத்தோடு கூடவே, இவ்விதம் பேசிக்கொண்டே இருந்தான்.

அப்போது என் கைமீது என்னவோ மெல்ல ஊர்வதுபோலிருந்தது. படத்தின் வெளிச்சத்தில் குனிந்து பார்த்தேன். காணாமல்போன கைக்குட்டைத் துணியை, அவள் விரல்கள் என் கைமீது வைத்தன.

எனக்குத் திக்கென்றது. 'அவள் மடியிலேயேவா இதைப் போட்டுவிட்டேன்? பாவம், நல்லவள்போல இருக்கு. இன்னொருத்தியாக இருந்தால், என்னைப் பற்றி என்ன எண்ணியிருப்பாள். என் மானம் போயிருக்குமே!' என்று எண்ணிக்கொண்டேன். எனக்கு ஏற்பட்ட படபடப்பில் குப்பென்று வேர்த்தது. மீசைக் கோட்டில் வேர்வை முத்துக்கள் வந்து தேங்கின.

படமோ ரஸங்களையெல்லாம் நையாண்டி பண்ணிக்கொண்டிருந்தது. வளவளவென்று கதை காடுமேடெல்லாம் போய்க்கொண்டேயிருந்தது. பைத்தியக்காரத்தனமான கோணங்கி சேஷ்டைகளை ஹாஸ்யமாக எண்ணி, முன் வரிசைகள் ரசித்துக் கொண்டிருந்தன. கோபத்தைக் காட்டும் காட்சிகளில் எல்லாப் பாத்திரங்களும் குலைத்தார்கள். சோகம் வந்தபோது, பின்னணி இசையுடன் புலம்பினார்கள். வேலைக்காரி ஒருத்தி, "வாழ்வே—நீ ஒரு வானவில்தான்" என்று செந்தமிழில் பாடினாள். பாடி முடித்துவிட்டு, செந்தமிழ்ச் சொற்களை மறந்துவிட்டு, கொச்சைத் தமிழில் பேசினாள். கதாநாயகன் இரண்டு மூன்று இடங்களில் வேலை கிடைக்கவில்லை என்றவுடனே, தாடியும் மீசையும் வளர்த்துக்கொண்டு, கிழிந்த சட்டையுடன் ஜனங்களே இல்லாத நெடுஞ்சாலையில் பாட்டாளி—பஞ்சாலை முதலாளிப் பாட்டு ஒன்றைப் பாடி, பிச்சை கேட்கத் தொடங்கிவிட்டான். அவனுடைய ஹிந்தி மெட்டுப் பாட்டுக்குச் சபை "டப்டப்"பென்று தாளம் போட்டு வந்தது.

நான்—ஸுலோ—அவள் சிநேகிதி மூவரும் கிட்டத்தட்ட ஒரே நிலையில் தவித்துக்கொண்டிருந்தோம். ஸுலோ தன் தோழியிடம் ரகசியமாக, ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். பிறகு இருவருமாக என்னைப் பார்ப்பதுபோல இருந்தது. நானே படத்தைக் கவனிப்பது போல் பாசாங்கு செய்தேன். நான் கைக்குட்டையை அவள் மடியில் போட்டதையும் காலாலும் கையாலும் இடித்ததையும்பற்றித் தன் தோழியிடம் சொல்லி, யோசனை கேட்கிறாளோ என்று எனக்கு அச்சமாகவே இருந்தது. அந்த அச்சத்தில் உடல் ஒரு கட்டுப்பாட்டில் அடங்கவில்லை. மறந்து மறந்து என் கையும் காலும் அவளைத் தீண்டிக் கொண்டேயிருந்தன. எல்லாம் நான் வேண்டும் என்றே செய்வதாகத்தான் அவளுக்குத் தோன்றியிருக்கும். இதில் சந்தேகமில்லை. ஒரு சிறு மாச் சட்டம் வாலிபனுக்கும் யுவதிக்கும் நடுவில் இருந்துவிட்டால் போதுமா?

"டிரிண்.. டிரிண்."

என் சோதனைக்கெல்லாம் முடிவாக, இடைவேளை வந்தது. ஒளி பளிச்சென்று பரவியது. கதவுகள், கருநீலத் திரைகள் எல்லாம் விடுவிடென்று விலகின. வெய்யில்கூடத் தெரிந்தது.

நான் திரும்பிப் பார்த்தேன். அவளும் என்னைத் திரும்பிப் பார்த்தாள். கண்கள், கண்களைப் பார்த்துக்கொண்டன.

கண்ணுக்குப் பக்கத்திலே, கன்னத்திலே ஒரு சிறு கறுப்புப்புள்ளி; மச்சமோ, 'மேக்கப்'போ தெரியவில்லை. மின்னல் வளைவு மாதிரி புருவங்கள் சிலிர்த்து

வளைந்தன. வேர்த்துச் சிவந்த முகம். வெண்முத்துப் பல் வரிசை; பச்சைப் பாசியெனப் பிரிந்த நேர் வகிடு; அண்ணாந்து பார்க்கும் அஜந்தாக் கொண்டை; முழங்கை சோளி; நாகரிகத்திலே பழமைக்குத் திரும்புவதுபோன்ற நாகரிகம், கழைநாட்டு வாசனை வீசும் நாகரிகம்...

நான் நொடிக்குள் இவ்வளவையும் கவனித்து விட்டேன். அவளும் நொடிக்குள் என்னை—என் மீசையுள்பட—கவனித்து விட்டாள். அதற்குமேல் வெளிச்சத்தில் நாலு பேர் கண்ணில் படும்படியாக அவ்வளவு நெருக்கமாக உட்கார்ந்திருக்கக் கூச்சப்பட்டுக்கொண்டு, விசுவத்தைத் தேடி லாபிக்கு வந்தேன். அங்கே இருந்த நிலைக்கண்ணாடி ஒன்றில் தற்செயலாக என் உருவம் தெரிந்தது. என் உதட்டின் கோணத்திலே விவரம் தெரியாத ஒரு தெளிவு ஓடி மறைந்தது.

விசுவத்துக்குக் கூட்டம் என்றாலே ஒரு குஷி. அவனுடைய குஷியை அவன் கையிலுள்ள "பர்க்கிலி" சிகரெட்டின் புகைச் சுருளிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

"என்ன மிஸ்டர், படம், இடம் எல்லாம் எப்படி?" என்று கேட்டான் அவன்.

நான் பதில் சொல்லவில்லை. ஸாலோவுக்கு என் நடத்தையில் சந்தேகம் வந்திருக்கும். நான் திரும்பிப் போய் உட்காரும்போது, அவள் இடம் மாறி உட்கார்ந்திருந்தால், அதிலேயே அவள் கருத்து தெரிந்துவிடும், பார்க்கலாம் என்று தான் என் நினைவு ஓடிற்று. அவனிடம் விடைபெற்றுக்கொண்டு என் இடத்துக்கு விரைந்தேன்.

பாலைப் பூசியதுபோன்ற விழிகளில் குளுமை நிறைந்திருந்தது. அவள் பழைய இடத்திலேயேதான், அதாவது என் பக்கத்து இடத்திலேயேதான், பிராகாரத்துச் சிற்பம்போல நெளிந்து அமர்ந்திருந்தாள். 'நல்ல வேளை; பிழைத்தேன்! என்னைத் தவறாக எண்ணி அஞ்சி ஓடவில்லை!' என்று எண்ணிக்கொண்டே, கையைப் பிடியில் ஊன்றிக் கொள்ளாமல் ஒடுங்கி, நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன்.

மீண்டும் விளக்குகள் பொக்குப் பொக்கென்று அணைந்தன; திரைகள் மூடிக்கொண்டன. இருளுக்குள் நாங்கள் மூழ்கிவிட்டோம். அந்த இருட் குகையிலே நறுமணம் வீசுகின்ற அந்தப் பாசிக் கூந்தல், என் கழுத்தருகே நெருங்கி வருவதுபோல் தோன்றியது. தங்க மூலாம் பூசியதுபோன்ற பதுமைக் கை ஒன்று கைப்பிடியில் மெல்ல தவழ்ந்து வந்தது. என் மடிமீது ஏதோ வெள்ளையாக ஒன்று விழுந்தது. என்னவென்று திடுக்கிட்டு, அதைக் கூர்ந்து கவனித்தேன். கைக்குட்டைத் துணி!

'இது என்ன, வேண்டுமென்றே போட்டதா, கைத்தவறுதலாக விழுந்ததா? இதை எடுத்து அவளிடம் கொடுப்பதா, இல்லை, தெரியாததுபோல் இருப்பதா? இது பயத்திலே விழுந்ததா, துணிச்சலாய் எறிந்ததா?'—என் அறிவு குழம்பத் தொடங்கிவிட்டது. கேள்வி; மறுப்பு.

நான் மெல்ல அதை எடுத்துக்கொண்டேன்.

அவள் மெல்ல இப்போது காற்றோடு முணுமுணுத்தாள். "இதுதான் உங்களுடையது!"

படம் மங்குவதற்குள் பார்த்தேன். அது என்னுடைய கைக்குட்டைதான். அப்படியானால், முன்னே எடுத்துக் கொண்டது அவளுடையது. அதை உடனே பையிலிருந்து எடுத்துக் கையில் கொடுக்கப் போனேன். இருளிலே அவள் கை எதிர்கொண்டு வந்து ஏந்திக்கொண்டது. கைக்குட்டை கை மாறும்போது, க்ஷணத் தயக்கம்; கையிரண்டும் தயங்கின. கை நாடி தந்தி கொடுத்தது. 'கட்டுக் கட கட... கட்டுக் கட கட... கட்டுக் கட கட்டுக் கட்டு...'

என் கண்கள் படத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால், மனம் தான் பதியவில்லை. தவறை உணர்ந்து கொண்டவைபோல் இரண்டு கைகளும் அவசரமாகப் பிரிந்தன.

சுற்றிலும் அமைதி சூழ்ந்திருந்தது. எதிரே வெள்ளைத் திரையில் படம் ஊர்ந்துகொண்டிருந்தது. எல்லாரும் அதைப் பார்ப்பதிலேயே ஆழ்ந்து போயிருந்தார்கள். ஆனால், எனக்கு நிச்சயம் தெரியும்; இரண்டே இரண்டு பேர் மட்டும் தீவிரமாகப் படம் பார்ப்பது போல் பாசாங்குதான் செய்து கொண்டிருந்தார்கள். ஒன்று அவள்; மற்றொன்று நான். காலை நீட்டின இடத்தில் ஒரு கால் இருந்தது; கையை வைத்த இடத்தில் ஒரு கை இருந்தது.

வாழ்க்கைக்காக ஸினிமா என்பது போய், சினிமாவைப்போல வாழ்க்கை என்பதாக ஆகிவிட்டதுபோன்ற மயக்கம் எனக்கு. அதே டெக்னிக்—அதாவது உத்தி!

ஸினிமா நாகரிகத்தை உண்டாக்குகிறதா, உடைக்கிறதா? பெண்களைப் பார்த்து ஸினிமாவைப் பிடிக்கிறார்களா, ஸினிமாவைப் பார்த்துப் பெண்கள் நடக்கிறார்களா?

பயம், படபடப்பு; வியப்பு, வேகம். — மனம், கண், கை மூன்றும் உள்நாட்டுக் கலகம் விளைத்துக்கொண்டிருந்தன. வெகு வெகுத் தீவிரமாகப் படம் பார்த்துக்கொண்டுதான் இருந்தோம்!

"டிரிண், டிரிண்..."

படம் முடிந்தது; அனைத்தும் நடுவில் அறுந்ததுபோன்ற முகத்தை வைத்துக் கொண்டு, எல்லாரும் வெளியில் வந்தார்கள். எனக்கு முன்னால் ஸாலோ தன் தோழியுடன் விருட்டென்று எழுந்து போனாள். கூட்டத்திலே கலந்து மறைந்து போகுமுன், ஒரு முறை என்னை ஏறெடுத்துப் பார்த்துவிட்டுப் போனாள்.

அதே பார்வைதான்! அவளேதான் இவள்!

⁂ ⁂ ⁂

இரவெல்லாம் ஒரே குழப்பம்.

படித்தவள், படிக்காதவள்; கிராமத்துப் பெண், நகரத்துப் பெண்; பயந்தவள், துணிந்தவள்; அழகுள்ள பெண், குணமுள்ள பெண்; குணமிருந்து அழகில்லாத பெண்; அழகிருந்து குணமில்

எல்லாரையும்பற்றி யோசித்தாயிற்று. முடிவு என்னவோ வழக்கமான முடிவு தான். அதாவது குழப்பம்.

விசுவம் மீண்டும் காலையில் வந்தான். மறுபடியும் எல்லாவற்றையும் யோசித்துக் காலையில் முடிவு செய்வதாக அவனிடம் வாக்குக் கொடுத்திருந்தேன்.

“ஆயிரம் சொல்லு. முகத்தைப் பார்த்தாலே நடத்தையைச் சொல்லிவிடலாமே. என்ன களை! என்ன சாந்தம்! நன்றாகப் படித்திருக்கிறாளாம் என்று துளியாவது கர்வமோ, டம்பமோ இருக்கிறதா? இந்தமாதிரிப் பெண் கிடைப்பாளாடா?” என்றான் அவன்.

“இந்தமாதிரிப் பெண் எனக்கு வேண்டாம்!”

“ஏன்?”

“ஏனென்றால், இவளைப் பார்த்த பிறகு எனக்கு இந்தத் தலைமுறைப் பெண்களிடமே நம்பிக்கையில்லை. எனக்குக் கல்யாணமே வேண்டாம்.”

“இவள்தான் வேண்டாமா? வேறு ஒருத்தியுமே வேண்டாமா?”

“ஒருத்தியுமே வேண்டாம்.”

“இவ்வளவு சொல்கிறவன், நீ சரியாக நடந்துகொண்டிருக்க வேண்டாமா?”

“நான் சரியாகத்தான் இருந்தேன். தவறாகப் புரிந்துகொள்ளும்படி இடம் வைத்துக் கொள்வானேன்? ஆணும் பெண்ணும் சமம் என்றால் ‘மாட்னி ஷோ’வில் வேண்டுமானால், சேர்ந்து உட்காரலாம். ஆனால், கல்யாணம்வரையில் அதைக் கொண்டுபோக ஊர் மாறவில்லையே! மனிதர்கள் மாறவில்லையே! அந்தஸ்திலே சமமாக இருக்கலாம்; உறவு என்பது வேறு.”

“அவள் உள்ளத்தில் சரியாக இருந்திருந்தால்?”

“ஆண் ஆண்தான்; பெண் பெண்தான். இரண்டு பேர்களுடைய மனோலோகமும் வேறு வேறு. அப்பாவாக இருந்தாலும், கணவனாக இருந்தாலும் அந்த லோகத்திலே அடியெடுத்து வைக்க முடியாது. எப்படியிருந்தாலும் எனக்கு வேண்டாம்.”

“சரி; உன்னிடம் இவ்வளவு தாரம் நடந்துகொண்டவளை, நீ கைவிடலாமா?”

“எனக்கு அவர்களிடம் ஒரு கண்ணியம், மதிப்பு உண்டாக வேண்டாமா?”

“ஒருத்தி இப்படி இருந்தால், எல்லாருமே இப்படித்தான் என்று நீதான் சந்தேகப்படுகிறாயே!”

“நான் சந்தேகப்பட்டால், என்னை விலக்கிவிடேன். உலகத்தில் எத்தனையோ மாப்பிள்ளைகள். சந்தேகப்படாத நீயே இதோ எதிரில் இருக்கிறாயே!”

“அப்போ..என்னதான் சொல்கிறாய் நீ?”

“உடையிலும் தோற்றத்திலும் கீழ் நாட்டு மவுசு வந்திருக்கிறது சரிதான். நன்றாகத்தான் இருக்கிறது. அதேபோல உள்ளத்துப் பண்பிலும் அந்த மணம் வீச வேண்டும். அதுவரையில், நான் இப்படியே இருந்து விடுகிறேன்.”

“அதற்குள் நீ கிழவனாகி விடுவாயே!”

“அதனால்தான் எனக்கு வேண்டவே வேண்டாம் என்று சொல்கிறேன்.”

மானமாக எதையும் சொல்லமாட்டாயே?”

“மாட்டேன். எனக்கு ஏன் வம்பு?”

“சரி, தொலை! அவள் இஷ்டப்பட்டால் நான் பண்ணிக்கொள்கிறேன் அவளை!”

“பண்ணிக்கொண்டால் நீயாவது அவளைத் தனியாக ‘மாட்னி ஷோ’வுக்கு அனுப்பாமல் இரு. மனசு இப்படித்தான் எப்போதாவது தத்துப் பித்து என்று கட்டு மீறிப்போய் இருக்கச் சொல்லும். இதெல்லாம் ஆண்களுக்கு இயற்கையாக ஒறுத்துப் போகும்; பெண்களுக்கு ஒறுக்காது. அப்புறம் நீ கஷ்டப்படுவாய்!” என்றேன் நான்.

விசுவம் போய்விட்டான். எதையுமே போகிற வழியில் தீர்த்துக்கொள்கிற சுபாவம் அவனுக்கு.

நம் நாட்டின் நகரங்களிலும் கிராமங்களிலும் எல்லோராலும் விரும்பப்பட்டு அதிக விற்பனையாவது T. A. S. ரத்தினம் பட்டணம் பொடி. அதிக விற்பனையே உயர் குணத்துக்கு அத்தாட்சியான பொது மக்களின் தீர்ப்பு அல்லவா?

T·A·S ரத்தினம்
பட்டணம் பொடி
தபால் பெட்டி 1151, சென்னை - 21

பாத்ருடுவின் “பாலசஞ்சீவினி” REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயாகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
19, தெற்குமாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354.
கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

# நவ நாகரீகக் குறிப்புகள்

காசினி

“உங்கள் ஊரில் இப்போ எதற்கும் ஒரு ‘சீட்டு’ கட்டுகிறார்களாமே? வெள்ளிப் பாத்திரத்திலிருந்து பித்தளைப் பாத்திரம் வரையில், பீரோ–நாற்காலி முதலிய சாமான்கள், பட்டுப் புடவையிலிருந்து, சாதா சீட்டிப் புடவை வரையில் எல்லாவற்றுக்கும் ‘சீட்டு’ இருக்காமே? அதுவும் ‘சீட்டு’ விழுந்து விட்டால் அப்புறம் பணம் கட்டவே வேண்டாமாமே? அஞ்சு ரூபாய்க்கு ஐம்பது ரூபாய் புடவை, அல்லது பாத்திரம் கிடைக்குமாமே? எங்கள் எதிர்வீட்டு மாட்டுப் பெண் சுலோசனா சொல்லுகிறாளே, உண்மைதானா? புடவைச் சீட்டுக்கு நான் சேர முடியுமா?” என்று நீ எழுதி இருக்கிறாய்.

உன் கடிதம் வந்த சமயம், பார்வதி, ராஜம்–நாதன், வேதவல்லி–சாரி, என் அத்தை, நான் எல்லோருமாக எங்கள் வீட்டு ஹாலில் வழக்கம் போல் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

“ஆமாம்னா, இப்போ எதற்கும் ஒரு ‘சீட்டு’ கட்டுகிறார்கள்; என் மருமாள் சரஸ்வதிகூட, இன்னிக்கு ஏதோ புடவைச் சீட்டு குலுக்கும் தினம் என்று போயிருக்கிறாள்!” என்றாள் வேதவல்லி–சாரி.

அவள் வாயை மூடுமுன், கையில் ஒரு பொட்டலத்துடனும், முகத்தில் வெற்றி மகிழ்ச்சியுடனும் சரஸ்வதி உள்ளே வந்தாள்.

“முதல் ‘சீட்டு’ எனக்கு விழுந்துவிட்டது! இதோ புடவை!”என்று பொட்டலத்தை வேதவல்லி–சாரியிடம் கொடுத்தாள்.

“அதிருஷ்டக்காரி!” என்று பார்வதியும், “அடிச்சையா பிரைஸை!” என்று நாங்களும் சொன்னோம்.

புடவை பட்டுப் புடவைதான். ஆழ்ந்த அரக்கு நிறம். மஞ்சள் கரை போட்டிருந்தது. சாண் அகலக் கரைதான். முக்கால் முழ மஞ்சள் முந்தாணி. கரையில் வெள்ளையில் ஆரணிச் சீர் விழுந்திருந்தது. நல்ல அழுத்தமான புடவை.

“‘சீட்டு’ எவ்வளவு?” என்று ராஜம்–நாதன் கேட்டாள்.

“அஞ்சு ரூபாய். நான் இனிமேல் பணம் கட்ட வேண்டாம்!” என்றாள் சரஸ்வதி. அவளுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை.

“அஞ்சு ரூபாய்க்கு இந்தப் புடவையா? இதென்ன பகல் கொள்ளையா? இதில் ஏதோ சூது இருக்கு!” என்று பார்வதி சொன்னாள்.

“ஆமாம்; கட்டாயம் மற்றவர்களை ஏமாத்தினால்தான் இதை உனக்குக் கொடுக்க முடியும்! குறுக்கு எழுத்துப் போட்டிப் பந்தயங்களை நிறுத்தினாற் போல், இதையும் அரசாங்கம் நிறுத்த வேண்டியதுதான்! இதென்ன அநியாயம்!” என்றாள் ராஜம்–நாதன்.

சரஸ்வதிக்கு முகம் குன்றிவிட்டது. “அப்படி இல்லை. இதில்...!” என்று நான் கூறிக்கொண்டிருக்கும் போதே, “இதோ பாருங்கோ! அஞ்சு ரூபாய்க்கு சரஸ்வதிக்கு இப்படி ஒரு நல்ல புடவை கிடைச்சுட்டதேயென்று உங்கள் இரண்டு பேருக்கும் பொறாமை என்றே எண்ணுகிறேன். இல்லாவிட்டால் இப்படிப் பேச மாட்டீர்கள்!” என்று என் அத்தை ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டாள்.

“எங்களுக்கு என்ன, புடவை வாங்க...” என்று, பார்வதி காரசாரமாக ஆரம்பிக்கவே, “இந்த ‘சீட்டு’ விஷயத்தை முதலில் கேளுங்கள். அப்புறம் இதில் சூது இருக்கா என்பது விளங்கும்!” என்று நான் குறுக்கிட்டேன்.

இதுதான் இந்தச் ‘சீட்டு’களின் முழு விவரம்: ‘சீட்டு’ பிடிப்பது என்று, நம்பிக்கையான ஒரு சிநேகிதர், அல்லது கடை முதலாளிகளே இந்தச் சீட்டுக்களுக்கு ஏற்பாடு செய்கிறார்கள். அநேகமாக ‘பிரைஸ்’ புடவை, பாத்திரம் இவைகளின் விலை ஐம்பத்திஐந்து ரூபாய் என்று இருக்கும். மாதம் அஞ்சு ரூபாயாக பன்னிரண்டு மாதங்களுக்குக் கட்ட வேண்டும். முதலில் நூறு சீட்டு கட்டும் ஆட்கள் சேர்ந்த பிறகே சீட்டைத் துவங்குவார்கள்.

மாதம் ஒரு முறை சீட்டு குலுக்குவார்கள். ‘பிரைஸ்’ விழுந்தவர்கள் அந்த மாதத்துடன் பணம் கட்ட வேண்டாம். ஆனால் மாதத்திற்கு ஒரு ‘பிரைஸ்’தான் உண்டு. பன்னிரண்டாவது மாதம், ‘பிரைஸ்’ கிடைக்காத பாக்கியுள்ள எண்பத்தி எட்டுப் பேர்களுக்கும், ஆளுக்கு ஐம்பத்தி ஐந்து ரூபாய் மதிப்புள்ள ஒரு புடவையோ, பாத்திரமோ, எதற்குச் சீட்டு கட்டினார்களோ அது உண்டு. ஆனால் இவர்கள் அஞ்சு ரூபாய் மேலே கொடுப்பார்கள். சீட்டு விலைக்குத்தான் புடவை, பாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை. மேல் பணம் கொடுத்து அவரவர் இஷ்டப்படிக்கூட வாங்கிக்கொள்ளலாம்.

இப்போது நீயே கணக்கு பார்த்துக் கொள். கடைக்காரனுக்கும், அவனுக்கு ஒத்தாசை செய்பவர்களுக்கும் லாபம் இருக்கிறது. சீட்டு விழுந்தவர்களுக்கும் நல்ல லாபம். மற்றவர்கள் தவணை முறையில் கட்டுவதால், அந்த ஐந்து ரூபாய்கள் அதிகம் கொடுப்பதை பொருட்படுத்துவதில்லை. கடையில் கடனாக வாங்கியிருந்தால் இன்னும் அதிகப் பணம் கொடுக்க வேண்டியிருக்குமே என்று திருப்தியாக இருந்து விடுகிறார்கள்.

இதை எல்லாம் நான் விளக்கினதும், “தேவலையே! இதன் விவரமே எனக்குத் தெரியாது. இருந்தாலும் ஐம்பத்தைந்து ரூபாய்க்கு இந்தப் புடவை ரொம்பவும் அழுத்தமாக, அழகாக இருக்கே! உனக்கு இரட்டை அதிருஷ்டம் போ!” என்றாள் ராஜம்–நாதன்.

கைப்பணம் இருபது ரூபாய் மேலே போட்டுத்தான் அந்தப் புடவையை வாங்கியிருப்பதாக சரஸ்வதி சொன்ன பின்னர்தான் அவளுக்கு மனது சமாதானம் அடைந்தது.

உனக்கு எந்த சீட்டில் சேர வேண்டும்? புடவையா, எவர்–சில்வர் பாத்திரமா? இது இரண்டும்தான் இப்போ மும்முரமாக நடக்கிறது.

இதோ!

சி. எம். சாமி

பலவிருத்தி குளிகை

உபயோகியுங்கள்.

மிகுந்த பலத்தையும் இரத்தவிருத்தியையும் உண்டாக்குகிறது.

60 குளிகை விலை ரூ. 6—0—0.

கவலை வேண்டாம்

எந்நாட்பட்ட எவ்வித வியாதிக்கும் மருந்துகளடங்கிய கியாட்லாக்

இனம்

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி-S.I.

# வெள்ளையத்தேவன் பாறை




மாலை ஆறு மணிக்கு மலையிலிருந்து இறங்கி இருட்டுவதற்குள் ஜீப்பில் ஊர் திரும்பிவிட வேண்டும் என்பது புறப்படும் போது நாங்கள் போட்டிருந்த திட்டம். ஆனால், மனிதயத்தனத்திற்கும் மேற்பட்ட சக்தி ஒன்று "உலகில் நான் இருக்கிறேன், என்னை மறந்துவிடாதீர்கள்" என்று அறிவுறுத்துவதுபோல, நம்முடைய திட்டம் சில சமயங்களில் மாறிவிடுகிறதே! அந்த மாதிரியே தான் அன்றைக்கும் நடந்துவிட்டது. ஆம்! மாலை ஐந்து மணிக்கே மழை பெரிதாகப் பிடித்துக் கொண்டது.

நான், வீராசாமித் தேவர், கோடைககானலிலிருந்து வந்திருந்த வேட்டை நிபுணர் ஜான்ஸன், மூவரும் மாலை ஆறரை மணிக்குக் கொங்கு மலையின் அடிவாரத்திலுள்ள கபிலக்குறிச்சி கிராமத்திலிருந்து மலைக்குப் புறப்பட்டிருந்தோம். காட்டிலாகா ரஸ்தா, மலை மேல் குறிப்பிட்ட சில இடங்கள் வரை ஜீப்பிலேயே செல்ல வசதயாக இருக்குமென்று முன்பே தெரிந்துகொண்டிருந்தோம்.

நானும் வேட்டை நிபுணர் ஜான்ஸனும்தாம் அந்த மலைக்குப் புதியவர்கள். வீராசாமித் தேவரோ இருபது வருஷங்களுக்கு மேலாகத் தம் சொந்த ஊராகிய கபிலக்குறிச்சி கிராமத்திலிருந்து, அங்கே வாரந் தவறாமல் வேட்டைக்குப் போய்ப்பழகியவர். ஜான்ஸன் ஆங்கிலோ-இந்திய இளைஞர். மதுரை அமெரிக்கன் காலேஜில் படிக்கும்போது தமிழ்ப் பாட சம்பந்தமாக அடிக்கடி என்னிடம் தமிழ்ச் சங்கத்திற்கு வந்து சந்தேகங்களைத் தெளிவு செய்து கொண்டு போவார். இதனால் எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டது. ஆகவேதான் அவர் கோடைக்கானலிலிருந்து கொங்கு மலைக்கு வேட்டையாடப் போகும்போது மதுரையில் என்னைச் சந்தித்து, "சார்! நீங்களும் வாருங்களேன். உங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை லீவுதானே? கொங்குமலை இயற்கை வளம் மிக்க இடமாம். போய்விட்டு வரலாம்"—என்றார். நானும் "சரி" என்று புறப்பட்டுவிட்டேன். நாங்கள் இருவரும் சனிக்கிழமை இரவு கபிலக்குறிச்சியை அடைந்து அங்கே எங்களுக்கு வழி விவரங்களைத் தெரிவப்பதற்காகவும்,

நா. பார்த்தசாரதி

…ணைக்காகவும் தேடிக்கொண்ட ஆள் …ன் வீராசாமித் தேவர். ஜான்ஸனும் …தவரும் வேட்டைக்காரார்கள். அவர்க …ருக்கிடையே நான்போவது எனக்கென் …வோ போலிருந்தது. "வேட்டையாட …ந்திருப்பவர்களோடு நாம் இயற்கை …ளத்தை ரசிக்கலாம் என்றெண்ணிக் …காண்டு வந்தது, நம்முடைய பிசகு"- …ன்று மலைக்குப் போகும்போது நான் …ண்ணினேன். ஏனென்றால், ஜீப்பில் …பாய்க்கொண்டிருக்கும் போதே …தேதோ வேட்டை சம்பந்தமான …ஷயங்களைப்பற்றி நான் ஒருவன் …டுவில் அமர்ந்திருப்பதையே மறந்து …ிட்டுத் தங்களுக்குள் சம்பாஷிக்கத் …தாடங்கிவிட்டார்கள் வீ ர ர சாமித் …தவரும், ஜான்ஸனும்.

ஆனால், முடிவில் என்னவோ, அவர்கள் …ருவருக்கும் கிடைத்த வேட்டையை …ிட எனக்குத்தான் பெரியதொரு …வட்டை கிடைத்தது! அதுதான் இந்தக் …தை!

## 2

ஆறு மணிக்கு மலையிலிருந்து புறப் …டுவோம் என்று எதிர்பார்த்ததற்கு …ாறாக, மழை சோனமாரியாகப் பிடித் …துக் கொண்டுவிட்டது. மணி ஏழரை …ஆகியும் வேகம் குறையவோ, நிற்கவோ …இல்லை. "இந்த மழையில் ஜீப் நிச்சய …ாகப் போகாது! பாதை முழுவதும் …ரே தண்ணீர் மயமாக இருக்கும்"- …ன்று வீராசாமித் தேவர் கூறிவிடவே, …மழை நின்று பாதையில் தண்ணீர் …டிந்த பிறகே போவது என்று முடிவு …சய்தோம். இருட்டு வேறு பயங்கர …ாகச் சூழ்ந்திருந்தது.

நாலைந்து பேர் தங்குவதற்கு வசதி …ாக இருந்த மலைக்குகை ஒன்றைக் …ண்டுபிடித்தார் தேவர். அதிலே மழை …நிற்கிறவரை நாங்கள் தங்கலாம் …ன்பது அவர் ஏற்பாடு.

"உள்ளே இருட்டாக இருக்கிறது …தவரே! எதுவும் துஷ்ட மிருகங்கள் …துங்கியிருந்தாலும் தெரிந்து கொள்


சுதேசமித்திரன், சென்னை-2

**தேவை**

கீழ்க்கண்ட இடங்களில் எமது மித்திரன் தினப்பதிப்பு, வாரப்பதிப்பு களை விற்பனை செய்யவும், சந்தா தாரர்களுக்குப் பட்டுவாடா செய்ய வும் ஊக்கமுள்ள ஏஜெண்டுகள் தேவை. விண்ணப்பதாரர் செக்யூ ரிடி கட்டக்கூடியவராகவும் உள்ளூர் வாசியாகவும் இருத்தல் நலம். விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாஸ தாருக்கு எழுதவும்.

விஜயவாடா
குத்தி
அனந்தப்பூர்
நெல்லூர்
கூடூர்
கடப்பை

சர்குலேஷன் மானேஜர்.


வதற்கில்லையே"-என்று குகைக்குள் நுழைவதற்குத் தயங்கினேன் நான்.

"சந்தேகம் எதற்கு? அதையும்தான் பார்த்துவிடுவோமே!" என்று கூறிக் கொண்டே, குகையை நோக்கித் துப் பாக்கியால் ஒரு முறை சுட்டார் ஜான் ஸன். துப்பாக்கி ரவை பாறையில் மோதி எதிரொலித்ததே தவிர, வேறு எவ்விதச் சலனமும் குகைக்குள் இல்லை.

"இப்போது உங்களுக்குச் சந்தேகம் இல்லையே?"-தேவர் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே கேட்டார். நான் சம்மதத்திற்கு அறிகுறியாகத் தலை அசைத்தேன். மூவரும் வேட்டையாடிய மிருகங்கள், உடன் கொணர்ந்திருந்த மற்றச் சாமான்கள் சகிதம் குகைக்குள் நுழைந்தோம். சிகரெட் பொருத்திக் கொள்வதற்காக ஜான்ஸன் கொணர்ந் திருந்த தீப் பெட்டியை வாங்கிய தேவர், குகையில் அங்கங்கே கிடந்த சுள்ளிகளைத் துழாவி எடுத்து நெருப்பு மூட்டினார். குகைக்குள் வெளிச்சம் பரவியது.

தேவரும், ஜான்ஸனும் வேட்டையாடி வந்திருந்த மிருகங்களின் உடல்கள் அந்த வெளிச்சத்தில் பயங்கரமாகக் காட்சியளித்தன.

நான் அந்தக் குகைக்குள் உலாவிக் கொண்டே, அதைச் சுற்றி ஒரு கண் ணோட்டம் விட்டேன். தெற்கு வடக்காக அமைந்திருந்த அந்தக் குகைக்குத் தென் புறம் வாயில் இருந்தது. குகையின் வட கிழக்குப் பக்கத்துப் பாறை ஒன்றின் மேல் சென்ற என் பார்வை, அப்படியே அந்தப் பாறையில் நிலைத்தது. ஒரு கணம் நான் அப்படியே திகைத்து நின்றுவிட்டேன். மெல்ல நின்று நிதா னித்து, ஊன்றிப் பார்த்தபோதுதான் அந்தப் பாறையின் மேல் நிற்பது சிலை என்று புரிந்துகொள்ள முடிந்தது.

அருகிற் சென்று பார்த்தேன். ஒரு கையில் ஓங்கிய அரிவாள். மற்றோர் கையில் பாலாக் கம்பு. ஆறடி உயரம். வாட்டசாட்டமான உடல். மத யானை போன்ற தோற்றம். தொலைவிலிருந்து பார்க்கிற எவரும் அந்த உருவத்தைச் சிலை என்று சொன்னால் நம்பமாட்டார்கள். எண் ணெய் வழிந்து வழிந்து கருமை பள பளத்தது அந்தச் சிலையில். கம்பீரமும், பெருமிதமும் தோன்றும் மீசையோடு கூடிய அந்தச் சிலையின் முகத்தோற்றம் காண்பவர்களைச் சற்றே நடுங்கவைக்காம லிருக்காது. 'கருப்பன்'-என்ற பெயரில் கிராம தேவதைகளில் ஒன்றாக விளங்கும் துஷ்டதேவதையின் சிலையைப்போலத் தான் ஏறக்குறைய இந்தச் சிலையும் இருந்தது. ஆனால், இதன் ஆகிருதி பெரிது! இந்தச் சிலையைப்பற்றி வீரா சாமித் தேவரிடம் விசாரிக்க வேண்டும் என்றெண்ணிக்கொண்டேன் நான். இதற் குள் அங்கேயே ஸ்டவ் மூட்டித் தேநீர் தயாரித்து முடித்துவிட்ட வீராசாமித் தேவர், கொஞ்சம் ரொட்டியும் தேநீரும் எடுத்துக்கொண்டு என்னிடம் வந்தார். நான் அதுதான் சமயம் என்று அவ ரிடம் என் கேள்வியைக் கேட்டு வைத் தேன்: "வீராசாமித் தேவரே! இது என்ன ஐயா, இங்கே ஒரு பெரிய சிலை இருக்கிறதே? இந்தக் குகை ஏதாவது கோவிலோ?"-

தேவர் தேநீரையும் ரொட்டியையும் எனக்கருகிலுள்ள ஒரு பாறையில் வைத்துக்கொண்டே, என் கேள்விக்குப் பதில் சொன்னார்:

"இதுங்களா? இது வெள்ளையத் தேவன் சிலை. இந்த இடம் ஒரு கோவில் மாதிரித்தான்னு வச்சுக்குங்களேன். இதுக்கு 'வெள்ளையத் தேவன் பாறை' என்று இந்தப் பக்கம் பேர் சொல்ற துங்க...இந்த வெள்ளையத் தேவனைப் பற்றிய சம்பவங்களையும், வீரப் பிரதா பங்களையும் சொன்னாலே, வருஷக்கணக் காகச் சொல்லலாமுங்களே!" என்று பூர்வ பீடிகை போட்டார், தேவர்.

இதற்குள் ஜான்ஸனும் அங்கே எழுந்து வந்து, சிலையை ஆச்சரியத்தோடு பார்த் துக்கொண்டே நின்றார். நான் ரொட்டி யையும், தேநீரையும் 'தீர்த்துக் கட்டி' விட்டு, வீராசாமித் தேவரின் வாயைக் கிண்டினேன்.

வீராசாமித் தேவர் வெள்ளையத் தேவ னின் வாழ்க்கையைப் பற்றிய சம்பவங் களைப் பின்னபின்னமாகக் கூறினார். நான் மொத்தமாகவே ஒரு கதையாகத் தொகுத்திருக்கிறேன்.

## 3

கபிலக்குறிச்சி மறவர்களின் இருபத் தெட்டாவது தலைமுறையில் தலைக்கட்டு நாட்டாண்மையாக விளங்கிய வீர பாண்டியத் தேவரின் மூத்த பிள்ளை தான் இந்த வெள்ளையத் தேவன். நாட் டாண்மைத் தேவருக்கு ஒரு பெண்ணும் இருந்தாள். அவள் வெள்ளையனுக்கு இளையவள். மீனாட்சி என்று அவளுக்குப் பெயர். வெள்ளையனுக்கு இருபத்தைந்து வயது ஆன போது மீனாட்சிக்கு வயது பதினேழு. இருவருக்கும் எட்டு வருஷ வித்தியாசம். இந்த இரு மக்களையும் நாட்டாண்மைத் தேவருக்குக் கால் கட் டாக விட்டுவிட்டு, அவர் மனைவி சில வருஷங்களுக்கு முன் காலமாகிவிட் டாள். உறவு முறைக்குள்ளே பலர் வற் புறுத்தியும் நாட்டாண்மைத் தேவர், 'அதற்குப்பின் இரண்டாந்தார விருப் பம் எனக்குக் கிஞ்சித்தும் இல்லை, என்று மறுத்துவிட்டார்.

இப்படியிருக்கும் நிலையில்தான் பரம சாதுவாயிருந்த வெள்ளையத் தேவன், மனங் கொதித்துத் தன் வாழ்க்கையின் போக்கையே மாற்றிக்கொள்ளத் தக்க அந்தச்சம்பவம் நிகழ்ந்தது! வெள்ளையத் தேவனை மட்டுமில்லை; எங்கள் ஊரையே பாதித்தது, அந்தச் சம்பவம்.

இங்கே எங்கள் ஊருக்கு மேற்கே, மேல மலை அடிவாரத்தில் காிசல் குளம் என்று ஓர் ஊர் இன்றும் இருக்கிறது. அங்கும் எங்கள் மறக்குடியைச் சேர்ந்தவர்கள் தாம் அதிகமாக வசிக்கிறார்கள். பெண் கொடுக்கல், வாங்கல், இனம், ஒன்றுக்குள் ஒன்று,-என்றிவ்வாறாக நாங்கள் இரண் டூர்க்காரர்களும் நெருக்கமான தொடர் புடையவர்கள். வீர பாண்டியத் தேவர் மகள் மீனாட்சியைப் பரிசம் போட்டுத் தம் மகனுக்கு மணம் முடிப்பதற்காகக் கரிசல்குளத்து நாட்டாண்மைக்காரர்

[illegible] கல்யாணம், [illegible], எந்த விசேஷமென்றாலும் ஊரிலுள்ள அத்தனை தலைக்கட்டுகளையும் கலந்துகொண்டு செய்ய வேண்டும்'—என்று இங்கே கபிலக்குறிச்சியில் ஒரு கட்டுப்பாடு இருந்தது. இதன்படி நாட்டாண்மைத் தேவரும் எங்களூர்த் தலைக்கட்டுகளை ஒன்றுகூட்டி, மீனாட்சியின் கல்யாண சமாசாரத்தைப் பிரஸ்தாபித்தார். தலைக்கட்டுகளும் சம்மதித்துக் கல்யாணத்திற்கு அனுமதி கொடுத்தனர்.

வீரபாண்டியத்தேவர் மகள் மீனாட்சி நல்ல அழகி. அரபிக் குதிரை மாதிரி வளர்ந்த தேகம், கரு வண்டுகள்போல் சுழலும் கவர்ச்சிகரமான விழிகளோடு கூடிய அவள் முகத்தை இன்று முழுவதும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். எத்தனைக்கு எத்தனை அழகு இருந்ததோ, அத்தனை சாத்வீமான சுபாவமுடைய பெண்.

'இந்தப் பெண் தங்களூர் நாட்டாண்மைக்காரருக்கு மருமகளாக வரப் போகிறாள்' என்ற செய்தி கரிசல்குளத்தாருக்கே தனி மகிழ்ச்சியைக் கொடுத்தது. கல்யாணத்தை அந்த வருஷம் சித்திரையில் விமரிசையாக நடத்திவிட்டார்கள். கல்யாணம் நடந்த மறு வாரமே கரிசல்குளத்தார் பெண்ணை அழைத்துச் சென்றுவிட்டார்கள். இது நடந்து மறு மாதத்திலேயே உள்ளூரிலிருந்த முறைப்பெண் ஒருத்தி வெள்ளையனை மாலையிட்டாள்.

ஆறு மாதம் கழிந்தது. இந்தக் கல்யாணத்தை நடத்துவதற்கென்றே காத்திருந்தவர்போல, வீரபாண்டியத் தேவர் ஒரு மாதம் குளிர்க் காய்ச்சலால் வருந்தி முடிவில் காலமானார். வெள்ளையத் தேவனையும், மீனாட்சியையும் மட்டுமில்லை; எங்கள் கபிலக்குறிச்சியையே மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது அவரது மரணம்.

நாட்டாண்மைத்தேவர் காலமாகிவிட்டதனால், அடுத்தபடி 'யாரை நாட்டாண்மை' ஆக்குவது என்று தலைக் கட்டுக்கள் கூடி யோசித்தார்கள். வாலிபப் பருவத்தினன் ஆனாலும் சாத்வீகமான குணமும், பொறுப்புணர்ச்சியும், தேவையான விஷய ஞானமும் இருந்ததனால் வெள்ளையத் தேவனையே அடுத்த நாட்டாண்மையாகத் தேர்ந்தெடுத்தார்கள். வெள்ளையனும் தன்னுடைய வயதுக்கு மீறிய அந்தப் பொறுப்பை ஏற்றுச் சாமர்த்தியமாக நிர்வகித்து வந்தான். வீரபாண்டியத் தேவர் இல்லாத குறையை அவனுடைய திறமையால் போக்கிவிட்டான். அவன் சாமர்த்தியத்துக்கு ஒரு சோதனையாக வந்தது அந்தச் சம்பவம்.

அது தை மாதம்! அன்று வெள்ளிக் கிழமை. உள்ளூர் மாரியம்மன் கோவிலின் வருஷாந்தரத் திருவிழாவிற்காக வெள்ளையத் தேவன் வீட்டில் தலைக்கட்டுக்கள் கூடியிருந்தார்கள். திருவிழாவுக்குத் தேதி குறிப்பிடுவது முதல், 'எப்படி எப்படி நடத்தலாம்?' என்பதுவரை அவர்கள் கூடி ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் திடீரென்று 'சல் சல்'—என்ற சதங்கை ஒலியோடு வீட்டு வாசலில் ஒரு வில் வண்டி வந்து நின்றது. யாவரும் காரணம் புரியாமல் திகைத்தனர். வெள்ளையன் எழுந்து வீட்டு வாசலுக்கு வந்து பார்த்தான்.

வண்டிக்காரன் மூட்டை முடிச்சுக்களை இரண்டு கைகளிலும் எடுத்துக்கொண்டு முன்னால்வர, மீனாட்சி அழுதழுது சிவந்த கண்களுடன் துயரமே உருவாய், அவன் பின்னால் நடந்து வந்தாள்.

வெள்ளையத் தேவன் மனம் ஏதேதோ எண்ணிப் பதறியது! வண்டிக்காரன் மூட்டை முடிச்சுக்களைத் திண்ணையிலேயே போட்டுவிட்டுத் திரும்பிப் பாராமல், வண்டியில் போய் ஏறிக்கொண்டு போய்விட்டான். வெள்ளையனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை!

மீனாட்சி வாசற்படியில் வந்து நீரொழுகும் கண்களுடன் தலைகுனிந்து நின்றாள். இதற்குள் வீட்டிற்குள்ளே உட்கார்ந்திருந்த தலைக்கட்டுக்களும் ஒவ்வொருவராக எழுந்திருந்து, வாசற்புறம் வந்துவிட்டார்கள்.

"இது என்ன மீனாட்சி?"— வெள்ளையத் தேவன் பரபரப்போடு கேட்டான்.

சிறிது நேரம் மீனாட்சி பதிலே சொல்லவில்லை. வெறுங்கண்ணீர், விக்கலும், விம்மலும் சேர்ந்த அழுகையாகப் பீறிட்டுக்கொண்டு வந்தது இப்போது.

"இப்படி ஒன்றும் சொல்லாமல் அழுதால், எனக்கென்ன புரியும் மீனாட்சி?"— அவன் மீண்டும் கேட்டான்.

"அண்ணா... நான்... நான் வந்து மலடியாம் அண்ணா! .. . அவங்க என்னை ஒதுக்கிட்டு வேறே இடத்துலே. . . கட்டிக்கப் போறாங்களாம்!" ... விம்மலுக்கும் மீறிப் பொங்கி வரும் அழுகையை அடக்க முடியாது திணறிக்கொண்டே கூறினாள் மீனாட்சி. அடுத்த கணம் அவள் வீட்டிற்குள்ளே புடவைத் தலைப்பால் முகத்தை மறைத்துக்கொண்டே, அழுதவாறு ஓடிவிட்டாள். வெள்ளையனின் மனைவி அவளைக் கைத்தாங்கலாக உள்ளே அழைத்துச் சென்றாள்.

"ஹாங்! அப்படியாசொன்னான்? கரிசல் குளத்தானுக்கு என்ன திமிர்?"— பசியோடு குகைக்குள் இருக்கும் சிங்கத்தின் முழக்கத்தைப்போலிருந்தது, தேவனுடைய குரல். நாட்டாண்மையின் ஆத்திரத்தைவிடத் தலைக்கட்டுக்களின் ஆத்திரம் அதிகமாகவே இருந்தது. ஏனென்றால், அது வெள்ளையத் தேவனுடைய குடும்பத்துக்கு ஏற்பட்ட அவமானம் மட்டுமில்லை; கபிலக் குறிச்சி ஊருக்கே ஏற்பட்ட அவமானம். அத்தனை பேரும் மனம் கொதித்துக் குமுறலானார்கள்.

ஐந்தே முக்கால், ஆறு அடி மதிக்கத் தக்க உயரமும், கட்டு மஸ்தான தேகமும், ராஜ கம்பீரமும், வாலிப அழகும் திகழும் தோற்றமும் கொண்ட வெள்ளையத் தேவன் தங்கைக்கு நேர்ந்த அவமானத்தால், எரிமலையாகவே மாறிவிட்டிருந்தான்.

"இப்பொழுதே ஆயுதங்களை எடுத்துக்கொண்டு புறப்படுங்கள்! அந்தக் கரிசல் குளத்தானுக்கு சரியானபடி புத்தி புகட்டுவோம்!" இடியேறுபோல முழங்கியது வெள்ளையனின் குரல்.

மறுவிநாடி அங்கே இருந்த அத்தனை பேருடைய கைகளிலும் பாலாக் கம்புகளும், வெட்டரிவாள்களும் மின்னின. 'கபிலக் குறிச்சியின் தன்மானத்தின் சக்தி எவ்வளவு பெரியது?'—என்பதைப் பிரத்தியட்சமாகக் காட்டினர் அங்குள்ளோர். அந்தி மயங்கி, இருள் சூழும் நேரத்தில் கரிசல்குளத்தையே சூறையாடி விடுவது என்ற நோக்கத்தோடு புறப்பட்டனர் அவர்கள்.

அந்த நேரத்தில்தான் வெள்ளையனுக்கு முறைப் பெண் கொடுத்த மாமன், செய்தியைக் கேள்விப்பட்டு, அவசரமாக ஓடிவந்தார். புறப்பட்டவர்கள் அவரால் கையமர்த்தி நிறுத்தப்பட்டனர். வெள்ளையனும் தயங்கி நின்றான்.

அவர் கூறினார்:— "வெள்ளை, ஆத்திரப்பட்டு எதையும் செய்யாதே! அவசியம் வரும்போது வெட்டரிவாளும், பாலாக் கம்பும் கிடைக்காமலா போய்விடப் போகின்றன? கொஞ்சம் பொறு! நான் உள்ளே போய் மீனாட்சியிடம் பதவாகமாக விஷயத்தைக் கேட்டுக்கொண்டு வருகிறேன். 'அவன்' இவளை ஒதுக்கிவிட்டு, மறு தாரம் கட்டிக்கொள்வதில் ஏதோ ஒரு சூழ்ச்சி அடங்கியிருக்கிறது. அதை அறிந்தபின், நாம் ஆவன செய்யலாம்! . . . தயவு செய்து நான் விசாரித்துக்கொண்டு வருகிறவரை நீயும், தலைக்கட்டுக்களும் இங்கேயே இருக்க வேண்டும்."—இப்படி வேண்டுதல் செய்துகொண்டு உள்ளே சென்றார் வெள்ளையத் தேவனின் மாமன். தேவனும் அவனைச் சேர்ந்தவர்களும் அவருக்காகத் தாமதித்து நின்றார்கள்.

கால் நாழிகையில் அவர் உள்ளிருந்து திரும்பி வந்தார். அவர் முகத்தில் தெளிவு தென்பட்டது. வெள்ளையத் தேவனின் அருகே வந்து நின்றுகொண்டு அவர் கூறினார்:—

"விஷயம் இப்போதுதான் விளங்குகின்றது! உன் தங்கையிடம் சரியாக விசாரித்துக் கொள்ளாமலேயே நீ புறப்பட்டு விட்டாயே? நான் உள்ளே போய் அவளுக்கு ஆறுதல் கூறி, ஆசுவாசப்படுத்தி விசாரித்ததில் உண்மை வெளி வந்துவிட்டது. காிசல்குளம் பண்ணைத்தேவரை உனக்குத் தெரிந்திருக்கும். பொிய செல்வந்தர். அவருக்கு இருக்கும் ஒரே ஒரு பெண்தான் வாரிசு. சொத்தெல்லாம் நாளை அந்தப் பெண்ணுக்குத்தான் சேர வேண்டும். தம் பெண்ணுக்குக் கல்யாண வயது வந்துவிட்டதனால் பண்ணைத் தேவர் எப்படியும் இந்தச் சித்திரைக்குள் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும் என்றிருக்கிறாராம். 'மலடி' என்று சொல்லி ஒதுக்கிவிட்டு, பண்ணைத் தேவாின் சொத்துக்கு ஆசைப்பட்டு அவர் பெண்ணுக்குப் பாிசம்

போடப் போகிறானும் உன் மருமகப் பிள்ளை. இதுதான் விஷயம்!"

"பார்த்துவிடலாமே அவன் பாிசம் போடுவதை! மாமா! இந்த வெள்ளையத்தேவன் உடலில் உயிர் இருக்கிற வரை அதை நடக்கவிட மாட்டேன்"—வெள்ளை குமுறினான்.

"வெள்ளை! இந்த மாதிாி நாசூக்கான விஷயங்களிலெல்லாம் கத்தியைவிட யுக்திதான் பயன்படும். உன்னிடம் ஆத்திரம்தான் இருக்கிறதே தவிர அனுபவம் இல்லை. முதலில் தலைக்கட்டுக்களை எல்லாம் வீட்டுக்கனுப்பு. மாாியம்மன் திருவிழாவைப்பற்றி இந்த விவகாரம் ஓய்ந்த பின், சாவதானமாகப் பேசிக்கொள்ளலாம். மீனாட்சி விவகாரத்தில் இப்போதைக்கு இவர்களுடைய ஒத்துழைப்பு தேவையில்லை. விவகாரம் யுக்தியால் தீர்வதற்கு எனது யோசனையை நீ கேள்"—மாமன் கூறினார்.

வெள்ளையத் தேவனும் அப்படியே செய்தான். தலைக்கட்டுக்கள், 'மாமன் வந்து தங்கள் ஆத்திரத்துக்கு அணை போட்டுவிட்டானே!' என்று அவனை நொந்துகொண்டே வீடு திரும்பினர்.

பாலாக்கம்பையும், அாிவாளையும் மூலையில் வீசி எறிந்துவிட்டு, அனுபவஸ்தரான மாமனுக்கு முன்பு அமர்ந்தான் வெள்ளையத் தேவன். அப்போது மாலைப் போது கழிந்து, இருள் சூழ்ந்து கொண்டிருந்தது.

கிழவர் ஆரம்பித்தார்: "வெள்ளை! இந்த முயற்சியில் வெற்றி பெற வேண்டுமானால், நாம் கொள்ளைக்காரர்களாக மாற வேண்டும். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேணும். வேறு வழியில்லை. . . ."

"மாமா! நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே! . . . தெளிவாகச் சொல்லுங்கள். . ."

"சொல்கிறேன் கேள் வெள்ளை! நம்முடைய கொங்கு மலையின் மேல் ஒரு பாறைக் குகை இருக்கிறதே, உனக்குத் தெரியுமோ?"

"ஏன்? நான் வேட்டைக்குப் போகும்போதெல்லாம் அந்தக் குகைப் பக்கம் போவேனே! ."

நாளை விடிவதற்குள் பண்ணைத்தேவாின் மகளை அந்தக் குகையில் கொண்டு போய் இரண்டாம் பேருக்குத் தொியாமல் சிறைப்படுத்தி வைத்துவிட வேண்டும். உன்னையும் என்னையும் தவிர வேறு எவருக்கும் இந்த இரகசியத்தை வெளியிட்டுவிடக்கூடாது."

"என்ன! பண்ணைத் தேவாின் மகளையா?"

"ஆமாம்! மீனாட்சியை உன் மருமகன் காலில் விழுந்து ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்கு வேறு வழியே இல்லை வெள்ளை! பண்ணைத் தேவர் மகள் பொன்னியைச் சிலகாலம் நாம் மறைத்து வைக்க வேண்டும். அதனால்தான் காிசல்குளத்தான் உன் தங்கையை நாடச் செய்யலாம்."

"சாி மாமா! அப்படியே வைத்துக் கொண்டாலும் இப்போது அதைச் செய்வதற்கு முடியுமா?"

"ஏன் முடியாது வெள்ளை? நாளைக்கு விடிந்தால், உன் மருமகன் பண்ணைத் தேவாிடம் பாிசம் போட்டுவிடுவான். இன்றைக்கு இரவு பின் நிலா. நம் காாியத்தைச் செய்ய வசதியாக இருக்கும்! நேரே காிசல்குளம் போக வேண்டியது. நிலாக் கிளம்புவதற்குள் பொன்னியைக் கிளப்பிக்கொண்டு கொங்குமலைக் குகைக்குக் கொண்டு போய்விட வேண்டியது.

இன்னும் சிறிது நேரத்தில் நாம்
ப வேண்டும்."

ள்ளயத் தேவன் சம்மதித்தான்.
து நேரத்தில் சாப்பாட்டை
த்துக்கொண்டு, மாமனும் அவனும்
பட்டார்கள்.

ம்மா, மீனாட்சி! நானும் உன்
னும் மாரியம்மன் கோவில் திரு
விஷயமாகக் கொஞ்சம் இப்படி
யே போய்விட்டு வருகிறோம். வர
லும் ஆகலாம். நீயும் மதனியும்
க்கொள்ளுங்கள். வீணை மனசை
டிக்கொள்ள வேண்டாம். உன்னைப்
ன் வீட்டில் கொண்டு போய்ச்
பது என் பொறுப்பு."—போகும்
கிழவர் மீனாட்சியிடம் கூறி
ப் புறப்பட்டார்.

ளில் வேகமாக நடந்து, ஊர்
யிலுள்ள ஓர் ஆலமரத்தடியில்
நின்றனர், வெள்ளையத்தேவனும்
மாமனும். அங்கே மரத்தின்
களில் இரண்டு குதிரைகள் முன்
ாடாகக் கட்டி வைக்கப்பட்டிருந்
ஆளுக்கு ஒரு குதிரையில் ஏறிக்
டு காிசல் குளத்தை நோக்கிச்
னர்.

குளம் ஊர் எல்லையை அடைந்த
ழவர் குதிரையை நிறுத்தினர்.

வெள்ளையத்தேவன் கையில் ஒரு பச்சிலையைக் கொடுத்து விட்டு, அவர் கூறினர்.

"வெள்ளை! இந்தப் பச்சிலையை மூக்கருகிலே காட்டினல், யாரும் பிரக்ஞை தவறிவிடுவார்கள்! ஜாக்கிரதை! காரியத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு, இங்கே பொன்னியோடு வந்து சேர். அதற்குள் நிலா உதயமாகி விடும்! நேரே மலைக் குகைக்குப் போய்விடலாம். . .'

வெள்ளையத் தேவன் தன் குதிரையையும் ஊர் எல்லையிலேயே நிறுத்திவிட்டு மாமன் கொடுத்த பச்சிலையோடு கால்நடையாக ஊருக்குள் நுழைந்தான்.

காிசல்குளத்தில் பண்ணைத் தேவாின் வீடு ஊாின் மேலப்பக்கத்தில் ஒரு பொிய தோட்டத்துக்கு நடுவே இருந்தது. ஏறக்குறைய ஒரு குட்டி அரண்மனையைப்போல விளங்கியது அந்த வீடு! தன் தகப்பனர் வீரபாண்டியத் தேவர் உயிரோடிருந்தபோது அவரோடு இரண்டு மூன்று முறை அந்த வீட்டிற்கு வந்துபோயிருக்கிறன் வெள்ளையத் தேவன். மாமன் கூறியதிலிருந்து, 'வீட்டின் கூடத்தில் தான் பொன்னி படுத்து உறங்குவது வழக்கம்'—என்று எண்ணினன் அவன்.

பின் நிலாக் காலமாகையினல் இருட்டு மகா பயங்கரமாகக் கப்பிக் கிடந்திடந்தது. பண்ணைத் தேவர் அரண்மனைத் தோட்டத்தைச் சுற்றி ஒன்றரை ஆள் உயரத்திற்கு மதில் 'இந்த மதிற் சுவாில்' எடுத்திருந்தது. எந்த இடம் உள்ளே ஏறிக் குதிப்பதற்கு வசதியாக இருக்கும்' என்று பார்த்துக் கொண்டே இருளில் மதிலைச் சுற்றிவந்தான் வெள்ளைத் தேவன்.

மதிலின் தென் மேற்கு மூலைக்கு வந்த போது, அவனுக்கு மிக அருகில் இருளின் நடுவே தொிந்த ஒரு காட்சி அவனைத் திடுக்கிட்டு நிற்கும் படிச் செய்தது. சாியாக அவன் வந்திருக்கும் அதே நாளில், அதே இரவில் பண்ணைத் தேவாின் வீட்டிலே கொள்ளையடிப்பதற்காக ஒரு கொள்ளைக் கூட்டத்தினரும் அங்கே வந்திருந்தார்கள்! அந்தப் பிராந்தியத்தில் 'தீவட்டிக் கொள்ளைக்காரர்கள்'—என்ற ஒரு வகைத் திருடர்கள் அப்போது, நல்ல இருட் காலத்தில் இப்படிக் கூட்டமாக வந்து சூறையாடிச் செல்லும் நிகழ்ச்சி, அடிக்கடி நடந்து வந்தது. இதுவரை அவர்கள் துணிந்து கொள்ளைக்கு வராத இடங்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று கபிலக்குறிச்சி; மற்றொன்று காிசல்குளம். ஏனென்றல், இரண்டு இடங்களிலும் மறவர்கள் அதிகமாக வசித்து வந்ததுதான் அவர்கள் அச்சத்துக்குக் காரணம்.

தேவனின் இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. அவனது இடுப்பிலே 'சுரிகை' எனப்படும் பழைய காலத்துச் சுழல் கத்தி ஒன்று மட்டும்தான் இருந்தது. மாமன் கொடுத்தனுப்பியிருந்த பச்சிலை, மார்புச் சட்டையின் பைக்குள்ளே இருந்தது!

கொள்ளைக்காரர்கள் பத்துப் பன்னிரண்டு பேர்களாவது இருப்பார்கள். ஒவ்வொருவர் கையிலும் ஒரு சிறு தீவட்டியும் இருந்தது. வெள்ளையத் தேவன் எந்தக் காரியத்தைச் செய்வதற்காகத் தயங்கித் தயங்கிச் சுற்றிவந்து கொண்டிருந்தானோ, அதே காரியத்தை அவர்கள் சுலபமாகச் செய்துகொண்டிருந்தனர். மதிற்சுவரையொட்டி ஒரு ஆள் சற்றே குனிந்தாற்போல நின்றுகொண்டான். கொள்ளைக்காரர்கள் ஒவ்வொருவராக அவன் முதுகில் பச்சைக் குதிரை விளையாடுவதைப்போல ஏறி, மதிற்சுவரைத் தாண்டி உள்ளே குதித்தனர். இருளில் நின்றுகொண்டிருந்த வெள்ளையத் தேவன் கூர்ந்து கவனித்தான். அவன் மூளை மிகவும் சுறுசுறுப்போடு வேலை செய்தது.

இன்னும் நாலைந்து கொள்ளைக்காரர்களே தாவி ஏற வேண்டியிருந்தது. 'தாவிக் குதிப்பதற்கு இடையூறாக இருக்கும்' என்று கருதி, முன்பே ஏறியவர்கள் உள்ளே வாங்கிக்கொண்டு போயிருந்தார்கள். குனிந்து கொண்டிருந்தவன், முதுகில் ஏறித் தாவுவதற்குக் காத்திருந்தவர்கள்—ஆகியோர் அங்கே நிற்பது, கண் பார்வையைத் தீட்சண்யப்படுத்திக் கொண்டு பார்த்தாலொழியத் தெரியாது. அவ்வளவு இருட்டு.

சட்டென்று அடிமேல் அடி வைத்து, மெல்ல அவர்கள் தாவிக்கொண்டிருந்த இடத்தை அடைந்தான், வெள்ளையத் தேவன். ஆயிற்று! கடைசி ஆளும் தாவிக் குதித்துவிட்டான். கடைசி ஆளின் தலை சுவருக்கு அப்பால் மறைவதைப் பார்த்துவிட்டு குனிந்திருப்பவன் நிமிர்வதற்குள் தானும் அவனைச் சாதனமாகக் கொண்டே, தாவிவிடக் கருதிய வெள்ளையத் தேவன், விருட்டென்று பாய்ந்து, குனிந்திருந்தவன் முதுகில் கைகளை ஊன்றினான். குனிந்திருந்தவனும் அவனை வேற்றாள் என்று கருதியதாகத் தெரியவில்லை. ஆனால், அவசரத்தினாலும், ஆத்திரத்தினாலும் தாவிய வேகத்தில் முதுகில் கை வைப்பதற்குப் பதிலாகக் குனிந்திருந்தவனின் கழுத்தில் கையை வைத்துவிட்டான், தேவன். இதனால் குனிந்திருந்தவனும், வெள்ளையத் தேவனும் ஒருங்கே ஒருவர் மேல் ஒருவராகக் கீழே விழுந்து புரண்டார்கள்.

கீழே விழுந்து புரண்ட கலவரத்திலே குனிந்திருந்த ஆள் தேவனைச் சந்தேகிக்கும்படியாக குழப்பம் ஒன்று நடந்துவிட்டது. கையைக் கழுத்தில் வைத்துக் கீழே விழுந்தவுடன், "பார்த்து ஏறக்கூடாதுங்களா?" என்று கம்பளத்து நாயக்கமார் பேசும் ஒரு வகைத் தெலுங்கிலே குனிந்திருந்தவன் கொச்சையாகக் கேட்கவே, அதற்கு எப்படிப் பதில் சொல்வது என்று விளங்காமல் திகைத்தான் தேவன்.

இதற்குள் உள்ளே சென்றிருந்த கொள்ளைக்காரர்களுடைய சங்கேதமான ஒலி ஒன்று, "நாங்கள் அத்தனை பேரும் சென்றுவிட்டோம்" என்பதற்கு அறிகுறியாகச் 'சீழ்க்கை' ரூபத்தில் ஒலித்து விட்டது. அந்த ஒலியைக் கேட்ட மாத்

குனிவதற்குத் தயாராகிக்கொண்டிருந்த அந்தப் பருத்த மனிதன் குனிவதை நிறுத்திவிட்டு, "யாரடா நீ?" என்று வெள்ளையத் தேவன்மேல் குபீரென்று பாய்ந்தான்!

எப்போது தான் தாவவேண்டிய குறி தவறிவிட்டதோ, அப்போதே இம்மாதிரி ஆபத்து எதுவும் நேரலாம் என்று தயாராக எதிர்பார்த்துக்கொண்டிருந்த வெள்ளையத் தேவன், தன்னை நோக்கிப் பாய்ந்தவனின் வாயை ஒரு கையால் இறுகப் பொத்திக்கொண்டு, அவனை இந்தப்புறம் அந்தப்புறம் திமிர முடியாமற் கட்டி, மூக்கில் பச்சிலையை எடுத்துக் காட்டினான். முழுசாக இரண்டு விநாடி கழிவதற்குள் அந்த மனிதன் கீழே விழுந்துவிட்டான். முற்றிலும் பிரக்ஞை தவறிப் போய்விட்டது, அவனுக்கு. அவனை மெல்ல இழுத்துச் சென்று, தோட்டச் சுவரின் தென்புறத்திலுள்ள பாழுங் கிணறு ஒன்றின் ஓரமாக இருந்த புதரில் தள்ளிவிட்டு வெள்ளையத் தேவன் திரும்பவும், மிக அருகில் இரண்டு குதிரைகள் நடைபோட்டு வரும் குளம்பொலி கேட்கவும் சரியாக இருந்தது. முதலில் பயமும், சந்தேகமும் அடைந்தாலும் பின் சிந்தித்தான். 'வேறு யார் வரக்கூடும்? மாமன்தான் நேரமாயிற்றே, இந்த வெள்ளையை இன்னும் காணோமே என்று குதிரை மீது வரக்கூடும்' என்று அனுமானித்தான் தேவன்.

இப்படி எண்ணிக்கொண்டு மனத் தைரியத்தோடு குளம்பு ஒலி வந்த திசையில் வேகமாக எதிர்நோக்கி நடந்தான் வெள்ளையத் தேவன். அவன் எண்ணியது வீண் போகவில்லை! மாமன்தான் வந்துகொண்டிருந்தார். குதிரையின் அருகில் வெள்ளை நெருங்கியதும், "யாரடா அவன்?" என்று இடுப்பிலிருந்த கத்தியை உருவினார் மாமன்.

"ஏது? மிரட்டல் பலமாக இருக்கிறதே மாமா?"—இலேசாகச் சிரித்துக்கொண்டே கேட்டான், வெள்ளையத் தேவன்.

நடந்த விஷயத்தை ஆதியோடந்தமாகக் கூறிய பின், "இப்போது நாம் என்ன செய்யலாம் மாமா?"—என்று கேட்டான் அவன்.

"வெள்ளை! பகைவர்களைவிட அயோக்கியர்கள் மோசமானவர்கள். அயோக்கியர்களின் காரியம் தனக்கு நன்மையைத் தருமானாலும் அதைத் தடுப்பதுதான் மறவனின் அறம். இப்போது இங்கே தீவட்டிக் கொள்ளையடிக்க வந்திருக்கும் அத்தனை திருடரும் வேற்றவராகிய கம்பளத்து நாயக்கமார்கள். பண்ணைத் தேவருடைய சொத்தை இவர்கள் கொள்ளையடித்துக்கொண்டு விடுவார்களானால், நமக்கென்ன லாபம்? பண்ணைத் தேவரை இந்தப் பயங்கரத்திலிருந்து நாம் காப்பாற்றுவோமானால், நாளை அவரிடமே, 'மீனாட்சியின் கணவன் சொத்துக்கு ஆசைப்பட்டு அவளை ஒதுக்கிவிட்டு, உங்கள் மகளுக்குப் பரிசம் போடுகிறேனென்று வருகிறான். நீங்கள் அவனுக்குப் புத்தி சொல்லி, நல்லபடியாக மீனாட்சியை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்

டும்!' என்று வேண்டிக்கொள்ளலாம்."— மாமா கூறினார்.

"நீங்கள் சொல்வதும் ஒருவகைக்கு நல்லதாகத்தான் படுகிறது மாமா!"

"யோசனைக்கு இது நேரமில்லை வெள்ளை! உடனே புறப்படு. குதிரையில் ஏறிக்கொள்."

இருவரும் குதிரையில் ஏறிக்கொண்டனர். கடிவாளத்தைச் சுண்டி வேகமாக மீண்டும் பண்ணைத் தேவர் மாளிகையை நோக்கிச் செலுத்தினான், வெள்ளையத் தேவன். மாமனும் பின்தொடர்ந்தார். மதிளோரமாகவே கொள்ளைக்காரர்கள் ஏறிக் குதித்த இடத்தருகே வந்து குதிரையை நிறுத்தினார்கள்.

"மாமா! உள்ளே போயிருக்கின்ற திருடர்களோ, பன்னிரண்டு பேருக்கு மேல் இருப்பார்கள். நாமோ, இரண்டு பேர்! எப்படி நாம் அவர்களிடமிருந்து தேவரின் சொத்தை மீட்பது? ஏதாவது தந்திரமாகச் செய்தால்தான் இந்த முயற்சியில் நமக்கு வெற்றி கிடைக்கும்"—என்று குதிரையை இழுத்து நிறுத்திக் கொண்டே கூறினான் வெள்ளையத் தேவன்.

"தந்திரமான வழி ஒன்று இருக்கிறது வெள்ளை! நாமிருவரும் இங்கேயே நின்று கொள்ள வேண்டியது. உள்ளே நாம் போகவே வேண்டாம். அவர்கள் நிச்சயமாக எவரையும் உயிர்ச் சேதப்படுத்தப் போவதில்லை. வேண்டுமானால் கட்டிப் போட்டுவிட்டுக் கொள்ளையடிக்கப் போகிறார்கள். இந்தக் கம்பளத்தார் தீவட்டிக் கொள்ளையின் வழக்கமே இது தான்! எல்லாவற்றையும் கொள்ளையடித்து விட்டு மீண்டும் மதில் வழியாக ஏறிக் குதிப்பதற்கு இந்த இடத்திற்குத்தான் வரப்போகிறார்கள். கொள்ளை வெற்றிகரமாக முடிந்து திரும்பும்போது தீவட்டியை அணைத்துவிடுவதும் இவர்களுடைய வழக்கங்களிலே ஒன்று. இதனால் இருட்டு நம் காரியத்துக்குப் பெரிதும் உதவி செய்யும்."

"என்ன தந்திரம் மாமா அது?"

"போகும்போது அவர்கள் ஒரு ஆளை முதுகில் காலை வைத்து ஏறுவதற்காகப் பயன்படுத்தினார்கள் அல்லவா? அந்த ஆளைத்தான் நீ மயக்கமுறச் செய்து, புதருக்குள்ளே கொண்டுபோய்த் தள்ளிவிட்டாயே! அந்த ஆளாக நான் நடிக்கிறேன். ஒவ்வொரு ஆளாக இறங்க இறங்க நீ பக்கத்தில் சுருள் கத்தியோடு மறைந்திருந்து 'வேலையைத் தீர்த்துப்' பாழுங் கிணற்றில் போட்டுவிடு!"

"மாமா! ஆபத்து நிறைந்த காரியமாயிற்றே இது? இதனால் நமக்கென்ன லாபம்? அகப்பட்டுக்கொண்டோமானால், நாமும் இறக்க நேரிடுமே?"

"மதிளேறி இறங்குகின்ற அவர்களில் முதல் ஆளின் கையிலேதான் கொள்ளையடித்த பொருள்களெல்லாம் இருக்கப் போகின்றன. முதுகில் காலை வைத்து இறங்குவதற்கு முன் அவன் கொள்ளைப் பொருளை நிச்சயம் என்னிடம்தான் கொடுப்பான்! இருளில் 'நான் வேற்றவன்'—என்ற வித்தியாசத்தை அவன் கண்டுபிடிக்க முடியாது. பண்ணைத் தேவரின் பொருளைக் கட்டாயம் மீட்டு, அவரிடம் கொடுத்துவிடலாம். அப்படிக் கொடுத்தால், அவருடைய நன்மதிப்பு நிச்சயம் கிடைக்கும். இவைகளெல்லாம் நமக்கு லாபம் இல்லையானால் சொல்! இப்போதே திரும்பி விடுவோம்."—மாமன் சிறிது கோபம் தொனிக்கும் குரலிலேயே இப்படிக் கூறினார்.

"நல்லது! அப்படியே செய்யலாம் மாமா" என்று வெள்ளை சம்மதித்தான்.

இதற்குள் உட்புறம் மதிற் சுவரோரத்தில் ஆட்கள் தடதடவென்று ஓடிவரும் ஓசையும், 'நாங்கள் வந்துவிட்டோம்! வெளியிலிருக்கும் நீ, இறங்குவதற்கு வசதியாகக் குனிந்துகொள்' என்பதை எச்சரிக்கும் சீழ்க்கை ஒலியும் கேட்டது.

மாமன், 'நான் குனிந்து நிற்கிறேன்! தயார்' என்பதற்கு அறிகுறியாக ஒரு சீழ்க்கை அடித்துவிட்டுக் குனிந்து நின்றுகொண்டார். வெள்ளையத் தேவன் சுருள் கத்தியை உருவிக்கொண்டு சுவர் ஓரமாக இருளில் மறைந்து நின்று கொண்டான்.

முதல் ஆள் கையில் ஒரு பெரிய மூட்டையோடு மாமனின் முதுகில் காலை வைத்து இறங்கினான். தேவன் திடீரென்று பாய்ந்து அவன் கூச்சல் இடாமல் வாயை மூடி, அவனிடமிருந்த மூட்டையைப் பறித்துக்கொண்டு, அவனைச் சுருள் கத்திக்கு இரையாக்கிப் பாழுங் கிணற்றுக்கு அனுப்பினான். இப்படியே மற்றும் பதினொரு திருடர்களையும் பரலோகத்துக்கு அனுப்பிவிட்டனர் தேவனும் மாமனும்!

பதின்மூன்றாவது ஆள் அந்தத் தீவட்டிக் கொள்ளைக் கூட்டத்தின் தலைவனாக இருக்க வேண்டும்! அவனுக்குமட்டும் அவர்கள் தந்திரம் அம்பலமாகிவிட்டது. காரணம், அவன் மட்டும் கையில் ஒரு சிறு தீவட்டி வைத்திருந்தான். சுவரில் தீவட்டியோடு நின்ற அவன், உடனே மாமனின் முதுகிலே காலை வைத்து இறங்க முற்படாமல், மேலே நின்று கொண்டே, தீவட்டியை மாமனின் முகத்துக்கு நேரே கீழே வீசி எறிந்தான். தீவட்டி கீழே விழவும் சுற்றிலும் இருள் விலகி ஒளி தோன்றியது!

தன் ஆட்கள் எவரும் அங்கே இல்லாததையும் சுவரோரமாக இரத்தம் தோய்ந்த சுருள் கத்தியோடு இளங்காளை போன்ற ஒருவன் நின்றுகொண்டிருப்பதையும், அவன் காலடியில் கொள்ளைப் பொருளின் மூட்டை கிடப்பதையும், குனிந்து நிற்பவனும் வேற்றாள் என்பதையும், அவன் தீவட்டி ஒளியில் அந்த ஒரு விநாடியில் நன்றாகப் புரிந்துகொண்டான். யுக்தியில் கைதேர்ந்த அந்தக் கொள்ளைக் கூட்டத் தலைவன், சிந்தனை தேங்கிய மனத்தோடு மீண்டும் விழிகளைச் சுற்றும்முற்றும் ஓட்டினான். பத்து இருபது அடி தூரம் மேற்கே தள்ளிச் சுவர் ஓரமாக இரண்டு குதிரைகள் சவாரிக்கு ஏற்ற நிலையில் தயாராக நிறுத்தப்பட்டிருப்பதையும் அவன் கண்கள் கண்டுகொண்டன.

சுவரின் மேல் நிற்பவன் தயங்குவதைக் கண்டதுமே தேவனும் மாமனும் 'விழித்


வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்டபுண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் களிம்பு.

# சைபால் CIBOL

ஏமனீஸ்

# பேபி கிரைப்

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

## "எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

## தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி,

மதுரை.

துக் கொண்டனர். தங்களை அவன் சந்தேகித்து விட்டான் என்பது அவர்களுக்கு ஐயமறத் தெரிந்துவிட்டது!

குனிந்துகொண்டிருந்த மாமன் சட்டென்று விலகி நின்று, கத்தியை உருவினார். தேவனும் அவரும் சுவரில் நிற்பவனுக்கு நேரே உருவிய கத்திகளோடு மறித்துக்கொண்டு நின்றனர். கொள்ளைப் பொருள்களின் மூட்டை அவர்கள் காலடியில் இருந்தது.

சுவரில் நின்றவன் ஒரு விநாடி திகைத்தான். அடுத்த விநாடி விருட்டென்று தன் இடையிலிருந்த சிறு பிச்சுவாக் கத்தி ஒன்றை உருவினான். உருவிய வேகத்தில் வெள்ளையத் தேவனின் வலது தோள் பட்டையைக் குறி வைத்து வீசினான்.

இதைச் சிறிதும் எதிர்பாராத வெள்ளையத் தேவன், சட்டென்று கத்தி வீச்சிலிருந்து தப்புவதற்காகக் குனிந்து கொடுத்தான். ஆனால்...அந்தோ!...விதியின் கொடுமையை என்னவென்று சொல்வது? தோள்பட்டையில் பாய வேண்டிய கொள்ளைக்காரனின் பிச்சுவா, வெள்ளையத் தேவனின் வலது செவியின் மேற்பாகத்தை ஆழமாகத் தாக்கிவிட்டுக் கீழே விழுந்தது. தேவன் வலி பொறுக்க முடியாமல் அலறினான். மாமன் திடுக்கிட்டு அவனருகிற் சென்றார். கத்தி பாய்ந்த வேகத்தில் காதில் சுட்டு விரலளவு துளைத்திருந்தது! சுவரின் மேலிருந்த கொள்ளைக்காரன் கைகளைப் பலமாக ஓங்கிக்கொண்டே, தெலுங்கில் ஏதோ இரைந்து கத்திவிட்டு, அப்படியே சுவரின் மேல் தளத்திலேயே நடந்து சென்று ஒரு குதிரையின் முதுகில் பாய்ந்துவிட்டான். தேவனும் மாமனும் இதைக் கவனித்து ஓடி வருவதற்குள் குதிரை இருளில் ஒரு பர்லாங் தூரம் சென்றுவிட்டது!

"இவ்வளவு முயன்றும் இவன் தப்பிவிட்டானே?"–மாமன் கூறினார்.

காதில் கத்தி துளைத்த இடத்தில் இசிவெடுத்து வலி துடிதுடிக்கச் செய்தது வெள்ளையத் தேவனை. அவன் அப்படியே அசந்து போய்விட்டான். மாமன் தன் தலைப்பாகைத் துணியைக் கிழித்து மண்டையோடு சேர்த்து வெள்ளையனின் காதில் ஒரு கட்டுப் போட்டு இரத்தம் வருவதைத் தடுத்தார்.

"மாமா!...வலி பிராணன் போகிறதே!"–வெள்ளை அலறினான்.

"வெள்ளை, பொறு. உள்ளே வீட்டிற்குள் போய்விட்டால், காதுக்கு ஏதாவது மருந்து போடலாம். இந்தக் கொள்ளைப் பொருள்களின் மூட்டையோடும் குதிரையோடும் இங்கேயே மதிலோரத்தில் நின்றுகொண்டிருப்போமானால், நாமே இந்தக் கொள்ளையை நடத்தினோம், என்று மற்றவர்கள் வந்து தீர்மானிக்கும்படி ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும்!"–மாமன் பதறினார். மீதமிருந்த மற்றொரு குதிரையை இழுத்துக்கொண்டு போய்க் கொள்ளைப் பொருள்களின் மூட்டை கிடந்த இடத்தில் சுவருகே ஏறிக் குதிப்பதற்கு வசதியாக நிறுத்தினார். அப்போது தீவட்டி வெளிச்சத்தில் கீழே கிடந்த அந்தப் பிச்சுவாக் கத்தி அவர் கண்களில் பட்டது. வெள்ளையத் தேவனின் காதைத் துளைத்துவிட்டுக் கீழே வீழ்ந்திருந்த அந்தக் கத்தியின் நுனியில் குருதிக் கறை படிந்திருந்தது. மாமன் அதைக் கீழே குனிந்து எடுத்தார்.

அருகில் தரையில் புழுதியோடு புழுதியாக விழுந்து, மங்கலான ஒளியைக் கொடுத்துக்கொண்டிருந்த தீவட்டியைக் குனிந்து எடுத்துக் கத்தியின் பிடிக்கு நேரே காண்பித்தான் வெள்ளையத் தேவன்.

மறுகணம், "பாப்பைய நாயக்கன்" என்று அந்தக் கத்தியின் பிடியில் செதுக்கியிருந்த எழுத்துக்களை அதில் கண்டு இரைந்து படித்தார் மாமன். அவை தெலுங்கு எழுத்துக்கள். மாமன் கத்தியை இடுப்பிலே செருகி, மறைவாகப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டார்.

"வெள்ளை! உனக்குத் தெலுங்கு தெரியாது அல்லவா? உன்மேல் இந்தக் கத்தியை வீசிவிட்டு ஓடியபோது, அவன் உன்னை நோக்கித் தெலுங்கில் கத்தினானே, அதற்கு என்ன அர்த்தம் என்பதைத் தெரிந்துகொண்டாயா?"

"இல்லையே மாமா!"

"'இன்று இந்தக் கொள்ளையில் நான் அடைந்திருக்க வேண்டிய பரிபூரணமான வெற்றியை நீ கெடுத்துவிட்டாய்! இனிமேல், என்றும், எந்த விநாடியிலும், நீ யாராக இருந்தாலும், உன் உயிரை நான் கொள்ளையிட முயன்றுகொண்டிருப்பேன் என்பதை மறந்துவிடாதே! ஜாக்கிரதை. இந்தா! பெற்றுக்கொள், 'நீ யார்?' என்பதை என்றும் நான் கண்டு கொள்ள ஓர் அடையாளச் சின்னம்'–இவ்வாறு கூறிவிட்டுச் சென்றான் அவன்."

இதன்பின் அவர்கள் இருவரும் குதிரையை நிறுத்தி, அதன் மூலமாகக் கொள்ளைப் பொருள் அடங்கிய மூட்டையையும் எடுத்துக்கொண்டு, மதிற்சுவரைக் கடந்து தோட்டத்திற்குள் குதித்தனர். வெளியே தரையில் கிடந்த தீவட்டி அணைந்துவிட்டதால், குதிரை இருளோடு இருளாகச் சுவருகில் நின்றுகொண்டிருந்தது. அப்போதுதான் பின்நிலா மேலே கிளம்புகின்ற நேரம் ஆகியிருந்தது.

மாளிகை வாசலில் இரண்டு பெரிய நாய்கள் ரத்தம் கக்கிச் செத்துக் கிடந்தன. அவைகளின் கழுத்துக்கள் திருகி முறுக்கப்பட்டிருந்தன. அது திருடர்களின் கைவரிசை என்று தேவனும் மாமனும் அறிந்துகொண்டிருந்தனர். மாளிகைக்குள் எந்தப் பொருளும் அதிகமாகச் சூறையாடி இறைக்கப்படவில்லை. வீடு 'ஒழுங்காகவே' இருந்தது. கீழ் அறையிலிருந்த ஒரு பெரிய இரும்புப் பெட்டி மட்டிலும் உடைக்கப்பட்டுக் காலியாகக் கிடந்தது! தீவட்டிகளிலிருந்து வடிந்திருந்த எண்ணெய், அங்கங்கே கீழே சிந்தித்தரையைஅசங்கியப்படுத்தியிருந்தது. தூணில் இரண்டு காவற்காரர்கள் கட்டிவைக்கப்பட்டிருந்தனர். ஆனால், அவர்களுக்கு அப்போது தம் நினைவிருந்ததாகத் தெரியவில்லை.

மாடிக்குச் செல்லும் கதவு வெளிப்பக்கம் தாழ் போடப்பட்டிருந்தது. உட்புறமிருந்து யாரோ பலங்கொண்டமட்டும் கதவைத் தட்டிக் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தார்கள்.

கையில் கொண்டு வந்திருந்த கொள்ளைப் பொருள்கள் அடங்கிய மூட்டையை உடைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டிக்கருகில் போட்டுவிட்டு, ஓடிப்போய் மாடிக்குச் செல்லும் கதவின் வெளிப்புறத்துத் தாழ்ப்பாளை நீக்கித் திறந்தார் மாமன். வெள்ளையத் தேவன் தூணில் கட்டப்பட்டிருந்த காவலர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

மாடிக் கதவை மாமன் திறந்ததும், பண்ணைத் தேவர், அவர் மனைவி, மகள் பொன்னி மூவரும் உடம்பெல்லாம் வேர்த்து விறுவிறுத்துப்போய்க் கீழே இறங்கினார்கள்.

அவர்களை ஆசுவாசப்படுத்தி அமர்த்தி, நடந்த கதையை எல்லாம் மாமனும் வெள்ளையத் தேவனும் கூறினார்கள். இதற்குள் பொன்னியும் அவள் தாயுமாகச் சேர்ந்து வெள்ளையனை தூணிலிருந்து

விடுவிக்கப்பட்டிருந்த காவற்காரர்கள் முகத்தில் தண்ணீர் தெளித்து, மயக்கத்தைப் போக்கினர்.

அப்போது மாமன் வெள்ளையத் தேவனுக்குக் காதில் ஏற்பட்ட காயத்தைப் பண்ணைத் தேவரிடம் கூறி, 'கொஞ்சம் தேங்காய் எண்ணெயும் கரித் தூளும் வேண்டும்'—என்று கேட்டார்.

பொன்னியின் களங்கமற்ற முகத்தையும், தெய்வீக அழகையும் பார்த்துக்கொண்டிருந்த வெள்ளையத் தேவன், "ஆஹா! ஒரு பாவமுமறியாத இந்தப் பேதைப் பெண்ணைக் கடத்திக்கொண்டு போக வேண்டுமென்று நினைத்தோமே? எவ்வளவு பெரிய பாவத்திலிருந்து கொள்ளைக்காரர்கள்மூலம் கடவுள் நம்மைக் காப்பாற்றியிருக்கிறார்!"—என்று தனக்குள் எண்ணிக்கொண்டான். காவற்காரர்கள் மூட்டையைப் பரிசோதித்துத் திருடு போனவை எல்லாம் மீண்டுவிட்டதாகக் கூறினர்.

"ஆமாம்! பண்ணைத் தேவரே! நீங்கள் மாடியில் எப்படி அகப்பட்டுக்கொண்டீர்கள்?"—என்றார் மாமன், மருந்தைக் குழைத்துக்கொண்டே.

"கொள்ளைக்காரர்கள் உள்ளே நுழைந்ததும், இந்தக் காவற்காரன்களைக் கட்டி வைத்துவிட்டு, மாடிக் கதவை வெளிப்புறத்தில் தாழ்ப் போட்டுவிட்டார்கள். அவர்கள் இரும்புப் பெட்டியை உடைக்கிற சப்தம் கேட்டு, நாங்கள் விழித்துக்கொண்டு, பதறிப்போய் கீழே இறங்கினால், கதவு திறக்கவில்லை. வேறு வழியின்றி நீங்கள் இருவரும் வருகிறவரை தட்டிக்கொண்டே கூச்சலிட்டுக்கொண்டிருந்தோம்!....ஆமாம்! அது சரி; நீங்கள் இருவரும் இந்த அர்த்த ராத்திரியில் கரிசல் குளத்தில் இங்கே என் வீட்டை நாடி வரவேண்டிய காரணம் என்னவோ?"—பண்ணைத் தேவர் கேட்டார்.

வெள்ளையத் தேவனுடைய காதில் மருந்தைக் குழைத்துத் தடவி, அதைக் கட்டிக்கொண்டே, பண்ணைத் தேவரின் இந்தக் கேள்விக்கு விடை கூறினார் மாமன்.

"ஓ! அதைக் கேட்கிறீர்களா? சொல்கிறேன், பண்ணைத் தேவரே! ஓர் அவசர காரியமாக உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தோம். என் சம்பந்தி வீரபாண்டியத் தேவரின் மகள் மீனாட்சியின்—அதாவது இவன் தங்கையின்—கணவன் உங்கள் கரிசல்குளம் நாட்டாண்மைக்காரரின் மூத்த மகன். அவன் இப்போது கொஞ்சம் சொத்துக்கு ஆசைப்பட்டு, மீனாட்சியை மலடி என்று அபாண்டப் பழி சுமத்தி ஒதுக்கிவிட்டு, வேறோர் இடத்தில் மறுதாரத்திற்குப் பரிசம்போட முயன்று கொண்டிருக்கிறான். நீங்கள் இதில் தலையிட்டு நியாயம் தேடித் தருவீர்கள் என்று உங்களைக் கலந்துகொண்டு போகத்தான் இவ்வளவு அவசரமாக வந்தோம்...அதோடு இன்னோர் விஷயம்! நீங்கள் வித்தியாசமாக நினைத்துக்கொள்ளாமலிருந்தால் வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறேன்...'"—மாமன் மெல்லக் கேட்டார்.

"தாராளமாகச் சொல்லுங்கள்! என்னுடைய சொத்தையெல்லாம் மீட்டுக் கொடுத்து இன்றிரவு நீங்கள் எனக்குச் செய்திருக்கும் மகத்தான உதவிக்கு நான் பெரிதும் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்."

"வேறொன்றுமில்லை! நாளைக் காலையில் மீனாட்சியை ஒதுக்கி வைத்த அதே பயல்தான் உங்கள் பெண் பொன்னிக்குப் பரிசம் போட வரப்போவதாக நாங்கள் கேள்விப்பட்டோம்!..அதுதான்.."—மாமன் மெதுவாகப் பணிந்த குரலில் இழுத்து இழுத்துப் பேசினார்.

"என்ன?...எல்லாம் பெரிய சூழ்ச்சியாக அல்லவா இருக்கும்போலிருக்கிறது! கரிசல்குளத்து நாட்டாண்மையின் மாமன் என்னிடம் வந்து, தன் வகையில் யாரோ ஒரு பையனை அல்லவா பரிசம் போட நாளைக் காலை அழைத்து வருவதாகக் கூறினான்? ஓஹோ! நீங்கள் இப்போது கூறியபின்பல்லவா இதில் அடங்கியுள்ள சூது புலனாகிறது? தானே நேரில் வந்தால் மீனாட்சியை ஒதுக்கி வைத்த விவகாரம் எல்லாம் தெரிந்துவிடும் என்று பயந்து, தன் மகனுக்கு என் மகளை முடித்து, எனது சொத்துக்களை அபகரிக்கத் தனது மாமனை அல்லவா தூதனுப்பியிருக்கிறான்? அப்படியா விஷயம்?"—பண்ணைத் தேவர் ஆத்திரத்தோடு பேசினார். நாட்டாண்மையிடம் அவருக்கிருந்த சினத்தை இந்தக் கோபமே காட்டியது.

திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்ட வெள்ளையன், "மாமா! நான் பச்சிலையைக் காட்டி மூர்ச்சையுறச் செய்து ஒரு ஆளைப் புதரில் தள்ளினேன் அல்லவா? அவனுக்கு இந்நேரம் பிரக்ஞை வந்தாலும் வந்திருக்கும். பயல், வெளியே நிறுத்தியிருக்கும் மற்றோர் குதிரையைத் 'தன் பங்குக்கு ஆயிற்று'—என்று ஏறிக்கொண்டு போய்விடப் போகிறான்! நான் போய் அவன் அகப்பட்டால், அந்தப் பயலை இங்கே இழுத்துக்கொண்டு வருகிறேன்"— என்று கூறிக்கொண்டே எழுந்தான்.

அதற்குள் பண்ணைத் தேவரே, "கொஞ்சம் பொறு தம்பி! பின் நிலா உச்சிக்கு வந்துவிட்டது. நாம் எல்லோருமே போய் மதிற்பக்கம் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம்! அதோடு நீயும் உன் மாமனும் தீர்த்துக்கட்டிய ஆட்களை எல்லாம் பாழுங்கிணற்றிலிருந்து எடுத்துக் கமுக்கமாக அடக்கம் செய்ய வேண்டியது முக்கியம். இந்தக் காவற்காரர்களையும் நம்மோடு அழைத்துப் போய் அந்தக் காரியத்தையெல்லாம் நிறைவேற்றிவிடலாம்..."—என்று இவ்வாறு கூறிவிட்டுச் சிறிது நேரம் அமைதியாக இருந்தவர், மீண்டும் தொடர்ந்து மாமனை நோக்கிக் கூறலானார்:

"பெரியவரே! என்னால் உங்கள் மருமகனுக்கு ஏற்பட்ட சிரமம் மிகத் துன்புறுத்துகின்றது என் மனத்தை! ஆனால், ஒன்றுமட்டும் வைத்துக்கொள்ளுங்கள். இதற்கெல்லாம் சரியானபடி கைம்மாறும் நன்றியும் செய்யாமல் விட்டுவிட மாட்டேன். உங்கள் மருமகன் என் பழைய நண்பர் வீரபாண்டியத் தேவரின் புதல்வன் என்ற நினைவே என்னை இன்று பெருமகிழ்ச்சி அடையச் செய்கிறது." பண்ணைத் தேவர் கூறிவிட்டுத் தன் காவற்காரர்களையும் கூப்பிட்டுக்கொண்டு, வெளியே செல்வதற்குத் தயாராக எழுந்து நின்றார்.

மாமனும் வெள்ளையத்தேவனும் கூட அவருடன் புறப்படுவதற்குத் தயாரானார்கள். உள்ளே அறையின் கதவோரத்தில் பொன்னியின் மருண்ட விழிகள், தன்னை நோக்குவதை வெள்ளையத் தேவன் கண்டான். இதயத்தின் ஆழத்




தைத் துழாவும் அந்த அழகான பார்வை காதில் கத்தி துளைத்திருந்த வலியையும் மறக்கச் செய்து, அவனைக் கவர்ந்தது.

பண்ணைத் தேவரின் வேலையாட்கள் கையில் தீப் பந்தம் ஏந்தி முன் செல்ல, மூவரும் மதிற் கதவைத் திறந்துகொண்டு சுவரோரமாகப் பாழுங்கிணறும் அடர்ந்த புதருமாக இருந்த இடத்தை அடைந்தனர்.

கிணற்றருகிலே புதருக்குள் தீப்பந்தத்தை இருள் அகலும்படியாகக் காட்டினார்கள் வேலையாட்கள். வெள்ளையத் தேவன் பச்சிலையை மூக்கிலுடைத்துத் தள்ளிய ஆள் அங்கேயே அவன் தள்ளியபடி விறைத்துக் கிடந்தான். தீவட்டியைத் தன் கையில் வாங்கிக்கொண்டு வேலைக்காரர்களை அந்த ஆளைப் புதரிலிருந்து இழுத்துப் போடுமாறு கட்டளையிட்டான் வெள்ளையத்தேவன். வேலைக்காரர்கள் புதரிலிருந்து அந்தப் பருத்த சரீரத்தை வெளியே தூக்கிக்கொண்டு வந்து போட்டார்கள்.

தீவட்டி வெளிச்சத்தில் அந்த ஆளின் முகத்தைப்பார்த்த பண்ணைத்தேவர், ஏககாலத்தில் வியப்பும் ஆத்திரமும் தொனிக்கும் குரலில், "அட நன்றி கெட்ட பயலே! நீதானா? . . நல்லவனைப் போல நடித்து என் வீட்டில் ஒரு மாதம் வேலைக்கு இருந்து ஓடிப்போன இரகசியம் இப்போதல்லவா புரிகிறது? 'வெங்கு நாயக்க'னின் சுயரூபம் இதுதானா? நீ கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த உளவாளியா?"—என்று இரைந்தார்.

மாமனும் வெள்ளையத்தேவனும் ஒருவாறு விஷயத்தைப் புரிந்துகொண்டனர். கொள்ளைக்காரர்கள் தங்கள் ஆளையே தேவர் வீட்டில் வேலை செய்ய விட்டு உளவறிந்திருக்கிறார்கள் என்பதை நினைக்க நினைக்க, அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

கீழே கிடந்த சரீரத்தில் நீலம் பாரித்து, நரம்புகள் புடைத்துத் தெரிந்தன. மார்பிலே கையை வைத்துப் பரிசோதித்த மாமன், உதட்டைப் பிதுக்கினார். உடல் ஜில்லிட்டுப் போயிருந்தது.

"புதருக்குள் இவன் பிரக்ஞையற்றுக் கிடந்தபோது, ஏதோ விஷ ஜந்து இவனைத் தீண்டியிருக்க வேண்டும். ஆள் நாக்கைப் பிளந்துவிட்டான்—" என்று கூறிக்கொண்டே, கையை விரித்துக் காட்டியபடி தலை நிமிர்ந்தார் மாமன்.

இதன்பின், "பாழுங்கிணற்றிற்குள்ளே கிடக்கும் உடல்களோடு வெங்கு நாயக்கனின் உடலையும் சேர்த்து யாவற்றையும் பொழுது விடிவதற்குள் அப்புறப்படுத்தி அடக்கம் செய்துவிடவேண்டும்—" என்று வேலைக்காரர்களுக்குக் கூறிவிட்டு, அவர்கள் மூவரும் மாளிகைக்குள் சென்றனர். போகும்போது வெளியே நின்ற குதிரையையும் இழுத்துக்கொண்டுபோய்ப் பண்ணைத் தேவரின் குதிரை லாயத்திலுள்ள குதிரைகளோடு கட்டிப் புல்லை அள்ளிப்போட்டான் வெள்ளையத் தேவன்.

"நாளை நண்பகலுக்குள் மீனாட்சியின் கணவன் தானே வலுவில் கபிலக் குறிச்சிக்குப் போய் அவளைப் பணித்து அழைத்துக்கொண்டு வரச் செய்யவில்லையானால், என் பெயர் பண்ணைத் தேவனில்லை! நீங்கள் இருவரும் கவலையின்றிக் குறை இரவையும் இங்கேயே ஓய்வெடுத்துக்கொண்டு அமைதியாகக் கழியுங்கள்—" என்றார் பண்ணைத்தேவர். அவர் வேண்டுகோளைத் தட்ட முடியாமல், மாமனும் வெள்ளையனும் அங்கேயே மாளிகையில் தங்கினர்.

ஆனால், இரவின் எஞ்சிய பகுதியில் அந்த மாளிகையில் அன்று எவருமே உறங்கவில்லை. உறங்க முயன்றார்கள். ஆனால், உறக்கம் வந்தால்தானே!

முதல் நாளிரவில் பண்ணைத் தேவர் கூறிய வாக்குப்படி மீனாட்சியை அவள் கணவனே நண்பகலுக்குள் கபிலக் குறிச்சி சென்று அழைத்து வருமாறு செய்துவிட்டார். கரிசல்குளம் ஊரில் அவருக்கிருந்த செல்வாக்கு இந்தக் காரியத்தைத் துரிதமாக நிறைவேற்றியது.

மீனாட்சிக்கு நல்வாழ்வு திரும்பிவிட்டதில் பெரிதும் மகிழ்ந்த மாமனும் வெள்ளையத்தேவனும், அதற்கு மூல காரணமாக இருந்த பண்ணைத் தேவருக்கு நன்றி கூறிவிட்டு ஊருக்குக் கிளம்பச் சித்தமானார்கள்.

ஆனால், "பெரியவரே! நீங்களும் தம்பியும், இப்போது போகவேண்டாம். உங்களிடம் நான் தனியே பேச வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது"—என்று கூறி, மாமனையும் தேவனையும் பண்ணைத் தேவர் தடுத்து விட்டார்.

மாமனைமட்டும் தனியே அழைத்துச் சென்று, அவரிடம் ஒரு வியக்கத்தக்க செய்தியைப் பிரஸ்தாபித்தார் பண்ணைத்தேவர்.

"பெரியவரே! நான் இப்பொழுது உங்களை வேண்டிக்கொள்ளப் போகிற வேண்டுகோள் உங்களுக்குக் கோபத்தை உண்டாக்குவதாகவே இருக்கலாம். ஆனால், எப்படியும் என்னை வித்தியாசமாக நினைத்துக்கொள்ளாமல், நீங்கள் இதற்குச் சம்மதித்துத்தான் ஆக வேண்டும்"—என்று பண்ணைத் தேவர் பீடிகை போடும்போதே,

"நீங்கள் சொல்லி, நான் எதை மறுக்கப் போகிறேன், பண்ணைத் தேவரே? தாராளமாகச் சொல்லுங்கள்"— என்று குழைந்து கொடுத்தார் மாமன்.

"அப்படியில்லை பெரியவரே! வாஸ்தவத்திலேயே எவருக்கும் கோபத்தை உண்டாக்கக் கூடிய விஷயம் நான் பிரஸ்தாபிக்கப் போவது?"

"சும்மா சொல்லுங்கள்."

"வெள்ளையத்தேவன் ஏற்கெனவே உங்கள் மருமகன்! உங்கள் அருமை மகள் அவன் மனைவியாயிருக்கிறாள். இப்போது என் மகள் பொன்னிக்கும் அவனிடம் அதே ஸ்தானத்தைப் பெறுவதற்கு, நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். இதுதான் என் வேண்டுகோள்"—

மாமன் முகத்தில் அடுக்கடுக்காகச் சுருக்கங்கள் விழுந்தன. அவர் சிந்தனையில் ஆழ்ந்தார். பண்ணைத்தேவர் மாமனின் முகத்தையே இமையாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"உங்கள் விருப்பத்தை நான் மறுக்க விரும்பவில்லை. ஆனால், தற்போது வெள்ளையத் தேவனின் மனைவியாக விளங்கும் என் மகள், இதற்குச் சம்மதிக்கின்றாளோ, என்னவோ? அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்." சிந்தனை செய்த பிறகு மாமன் கூறினார்.

"உங்கள் மகளையும் வெள்ளையனையும் முழு மனத்தோடு இதற்குச் சம்மதிக்கச் செய்வது என் பொறுப்பு. வயது முதிர்ந்த அனுபவஸ்தராகிய உங்கள் சம்மதந்தான் இப்போது எனக்குத் தேவை."

"என் சம்மதம் இந்தக் கணமே கிடைத்ததாக வைத்துக்கொள்ளலாம்."

அவர்கள் பேச்சு இவ்வளவிலே முடிந்தது. பொன்னியை அழைத்துக்கொண்டு, கபிலக்குறிச்சிக்குப் புறப்பட்டார் பண்ணைத்தேவர். இடையில், மீனாட்சிக்குப் பெருந்தீங்கு இழைக்க எண்ணிய

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

**பிரபல ஜோதிஷர்**

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூபா. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்
தபோநிதி
தியாகராய நகர், மதராஸ்-17
தபால் பெட்டி 1417

கரிசல்குளத்தான், தன் பிழைக்காக எல்லோரையும் வணங்கி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

பண்ணைத் தேவர், மாலை மயங்கும் நேரத்திற்குக் கபிலக்குறிச்சியின் தலைக்கட்டுக்களோடும், வெள்ளையனின் முதல் மனைவியோடும், மீண்டும் பண்ணை மாளிகைக்குத் திரும்பி வந்தார்.

வெள்ளையனின் முதல் மனைவியும், தலைக்கட்டுக்களும் அவன் பொன்னியையும் மணந்துகொள்வதற்குத் தங்கள் சம்மதத்தை முழுமனத்தோடு தெரிவித்தனர். வெள்ளையத் தேவனுக்கு ஏற்கெனவே பொன்னியிடமிருந்த மறைமுகமான சபலம், அவன் இதை மறுக்கத் தூண்டவில்லை.

“நல்லவற்றை உடனே செய்ய வேண்டும் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாளையே ஒரு நல்லமுகூர்த்தம் இருக்கிறது. பரிசம் போடாமலே நாளைக் காலை கோவிலில் திருப்பூட்டை நடத்திவிட வேண்டும்” என்றார் பண்ணைத்தேவர்.

எல்லோருமே அதற்கு உடன்பட்டனர். வெள்ளையத் தேவனைவிட அவன் முதல் மனைவிக்குத்தான் பொன்னியின் களங்கமற்ற சுபாவத்தில் பெரிதும் காதல் ஏற்பட்டிருந்தது! முதலில் தயங்கினாலும், பின்பு இந்தப் புதிய சம்பந்தம் தன் மகளுக்குக் கெடுதலைத் தராதென்றெண்ணி, மனம் அமைதியடைந்தார் மாமன். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடந்து ஆறு வருடங்களுக்குப் பிறகுதான் வெள்ளையத் தேவனுடைய வாழ்க்கையில் அந்தப் பயங்கரமான நிகழ்ச்சி குறுக்கிட்டது.

இந்த ஆறு வருடங்களுக்குள் வெள்ளையத் தேவனின் வாழ்க்கையில்தான் எத்தனை மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன! உயிருக்குயிராக வலதுகைபோல விளங்கிய மாமனும் பண்ணைத்தேவரும் இப்போது இந்த உலகில் இல்லை. அவர்கள் காலஞ்சென்று வருடங்கள் இரண்டு ஓடிவிட்டன. பண்ணைத் தேவருடைய சொத்துக்கும் அதிபதியாகி, இந்த வட்டாரத்திலேயே ஒரு சிற்றரசனைப்போல விளங்கி வந்தான் வெள்ளையத் தேவன். முதல் மனைவியிடம் ஒரு பெண்ணும் பொன்னியிடம் இரண்டு ஆண் குழந்தைகளுமாக மக்கட் செல்வங்களைப் பெற்றிருந்தான் அவன்.

கரிசல்குளத்தில் மீனாட்சி, இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயாகிக் கணவனோடு அமைதியான வாழ்க்கை நடத்தி வந்தாள். பண்ணைத் தேவர் காலமான மறுவருடத்திலிருந்து, கபிலக்குறிச்சிக்கு மட்டுமின்றிக் கரிசல்குளத்திற்கும் வெள்ளையத் தேவனே நாட்டாண்மையாகியிருந்தான். செல்வத்தாலும், செல்வாக்கினாலும், ஆள் பலத்தினாலும், இரண்டு ஊர்களின் ஆட்சியையும் திறமையாக நடத்திவந்தான் அவன். இந்த வட்டாரத்து மக்கள் அவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி மதித்து வந்தார்கள். ஆறாண்டுகளாக ஊர் நன்மை குறித்து அவன் செய்த வீர தீரச் செயல்கள் அனந்தம். ஊர் மக்களுக்கும், பொதுக்காரியங்களுக்கும், கோவில் குளங்களுக்கும் செய்த தானதர்மங்கள் அளவிட முடியாதவை.

மாசி மாதத்தின் நடுப் பகுதியில் ஓர் புதன்கிழமை. என்றுமில்லாதபடி அன்று என்னவோ காலையில் எழுந்ததிலிருந்தே கொங்குமலைக்கு வேட்டையாடப் போக வேண்டுமென்ற அபூர்வ ஆசை வெள்ளையத் தேவனுக்கு ஏற்பட்டது. நாலு தலைக் கட்டுக்களும் அவனுடன் துணையாக வேட்டைக்குப் புறப்படத் தயாராக இருந்தனர்.

காலையில் சுமார் பத்துப் பதினொரு நாழிகைக்கு வெள்ளையத் தேவனும் அவன் சகாக்களும் கொங்கு மலையை அடைந்து வேட்டையைத் தொடங்கினார்கள். உச்சிப்பொழுதுவரை, வேட்டை சுவாரஸ்யமாக நடந்தது. சகாக்கள் மூலைக்கொருவராக அடர்ந்த மலைப் பகுதியில் தனித்தனியே பிரிந்து சென்றுவிட்டனர்.

வெள்ளையத் தேவனுக்கு அந்த மலையில் சுற்றிக்கொண்டிருந்த பளியன் ஒருவன் மிகவும் உதவியாக இருந்தான்.

ஒருமுறை பராக்குப் பார்த்துக்கொண்டே, தொலைவில் மேய்ந்துகொண்டிருந்த மான் ஒன்றின்மேல் வில்லை நாணேற்றிய அவன், கீழே இருந்த பாறை தடுக்கி விழுந்துவிட்டான். அப்படி அவன் விழுந்தபோதுதான், அந்தப் பளியன் ஒரு புதரிலிருந்து அவனைத் தூக்கிவிடுவதற்காக வந்தான். தூக்கிவிட வந்தபோது, அவன் வெள்ளையனின் வலது காதில் கையை வைத்து எதையோ தடவினான். “அடேடே! காதில் எறும்பு நுழைந்துவிட்டதே!” என்று கூறியவாறே, கையால் எதையோ எடுத்தெறிவதுபோல எடுத்தும் எறிந்தான். இதன்பின் வெள்ளையத் தேவன் அவனை, “நீ என்னோடு வரவேண்டிய அவசியம் இல்லை! உன் உதவிக்கு நன்றி. எனக்கு வேட்டையாடத் தெரியும்” என்று கூறித் தடுத்தும் கேட்காமல் பின்தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தான், அந்தப் பளியன். ‘சரி! வந்தால் வந்துவிட்டுப் போகிறான். நமக்கென்ன?’ என்று பேசாமல் இருந்துவிட்டான் வெள்ளையத் தேவன்.

கதிரவன் தலைக்கு நேரே வந்து நண்பகல் ஆனபோது, வேட்டையை நிறுத்திவிட்டுச் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளக் கருதிய வெள்ளையத் தேவன், சகாக்களைத் தேடி நடந்தான். அப்போது அந்தப் பளியனும் அவனையே பின்பற்றி வந்தான்.

“ஏய்! நீ பேசாமல் இங்கிருந்து போகிறாயா? உன் முதுகுக்கு ஏதாவது கேட்கிறதா? எதற்காக என் பின்னாலேயே வருகிறாய்?” – கூறிக்கொண்டே வில்தண்டை அந்தப் பளியனை நோக்கி ஓங்கினான் வெள்ளையன்.

அவன் உடனே பதறி, “ஐயோ சாமீ! இந்த ஏழையைத் தப்பாக நினைக்கிறீர்களே! தங்குவதற்கு இடம் தெரியாமல் சுற்றி அலைகிறீர்களே, இங்கே ஒரு சுனைக் கரையில் நான் வசிக்கும் குகை இருக்கிறது. அங்கேயே உங்களைத் தங்கச் செய்யலாம் என்பதற்காக அல்லவா, நான் உங்களோடு வருகிறேன்” என்று கூறினான்.

“நான் தங்குவதற்கு இடம் தேடவில்லை பளியரே! என்னோடு வந்த சகாக்களைத் தேடுகிறேன்.”

“நல்லதாகப் போயிற்று சாமீ! நீங்கள் என் குகையிலே தங்கி இருங்கள். ஒரு நொடியில் நான் உங்கள் சகாக்களைத் தேடிக் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறேன். மலையிலுள்ள வழிகள் எனக்குக் கரதலப் பாடம். இந்த ஏழையின் வேண்டுகோளை நீங்கள் நிராகரிக்கக்கூடாது”– அந்தப் பளியன் வெள்ளையனின் கால்களைப் பிடித்துக்கொண்டு மன்றாடினான். வெள்ளைக்கு மனம் இரங்கியது.

"சரி! நீ என்னை உன் குகையில் கொண்டு போய் விட்டுவிட்டு அவர்களைத் தேடிவா."— அவன் இணங்கினான்.

இருவரும் நடந்தனர். மரங்களடர்ந்த பகுதியில் ஓர் படிக நிற நீர்ச் சுனையின் கரையிலிருந்த குகையினருகில் வந்ததும் அவன், "சாமீ! இதுதான் என் குகை! நீங்கள் இதற்குள்ளே சென்று இருங்கள்!... நான் போய் அவர்களைத் தேடி வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு நடந்தான்...வெள்ளை குகைக்குள் நுழைந்தான். அதற்குள் பளிஞனின் குரல்,

"சாமீ! ஒரு சிறு உதவி! என் வில்லும் ஆயுதங்களும் குகைக்குள்ளே இருக்கின்றன. இப்போது உள்ளேபோய் எடுத்துக்கொண்டு வர நேரம் ஆகும். நான் தேடிப் போகிற வழியில் துஷ்ட மிருகங்கள் எதிர்ப்பட்டாலும் படலாம்...தயவு செய்து உங்கள் வில்லையும் கத்தியையும் தருகிறீர்களா?" என்று கேட்டது. வெள்ளை திரும்பிப் பார்த்தான். பளிஞன் சுனைக் கரையில் நின்று தயங்கித் தயங்கிக் கேட்டான்.

'குகைக்குள் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும்போது, தனக்கு ஆயுதங்கள் எதற்கு?' என்றெண்ணிய வெள்ளையன், "இந்தா! எடுத்துக்கொண்டு போ!" என்று தன் ஆயுதங்களையெல்லாம் களைந்து பளிஞனுக்காகக் கீழே வைத்துவிட்டுக் குகையை நோக்கி நடந்தான். பளிஞன் ஓடிவந்து, வில்லையும் அம்பறுத்தூணியையும் கையில் எடுத்தான்.

மறு விநாடி குகைக்குள் நுழைந்துகொண்டிருந்த வெள்ளையன், 'ஆ!' என்று அலறிக்கொண்டே, சுருண்டு விழுந்து பாறைகளில் உருண்டான். யாரோ தடதடவென்று ஓடிவரும் சப்தம் அவனுடைய செவிகளில் விழுந்தது. ஒரு கூரிய அம்பு அவன் முதுகிலே பாய்ந்து மார்பு வழியாக ஊடுருவியிருந்தது. அதிலிருந்து குருதி பீறிட்டுப் பாறைகளில் வடிந்து, சுனை நீரில் சங்கமமாகி, அதன் படிக நிறத்தைச் சிவப்பாக்கிக்கொண்டிருந்தது. மறுபடி வெள்ளையத் தேவனுக்குப் பிரக்ஞை வந்தபோது, தான் குகைக்குள்ளே படுக்கவைக்கப்பட்டிருப்பதையும், தன் மார்பை ஊடுருவியிருந்த அம்பு எடுக்கப்பட்டு, அதில் பச்சிலை மருந்து இட்டுக் கட்டப்பட்டிருப்பதையும், தன்னோடு வந்த அந்தப் பளிஞனைக் குகையில் ஒரு பாறைமேல் கொடிகளால் இறுக்கிக் கட்டியிருப்பதையும் கண்டான். அவனைச் சுற்றி அவன் சகாக்களான தலைக்கட்டுக்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் முகத்தில் துயரம் நிறைந்திருந்தது.

அவனுக்குப் பிரக்ஞை வந்து கண் விழித்ததைக் கண்டதும், தலைக்கட்டுக்கள் துயரம் தாங்க முடியாமல் 'ஹோ' வென்று வாய்விட்டு அலறிவிட்டார்கள். வெள்ளையத் தேவன் அழவில்லை. அம்பு ஊடுருவியிருந்த வலியை அவன் பொருட்படுத்தவில்லை. அவன் முகத்தில் மனித நயனங்கள் காணக் கிடைக்காத தெய்வீக தேஜஸ் படிந்திருந்தது. பாரிஜாத புஷ்பத்தைச் சரப்படுத்தி வைத்தாற்போன்ற ஓர் அற்புதமான சிரிப்பு அவன் இதழ்களை அணி செய்தது. 'வெள்ளையத் தேவன்', தன் எதிரே பாறையில் கட்டிவைக்கப்பட்டிருந்த அந்தப் பளிஞனைச் சிறிது நேரம் அதே புன்னகையோடு உற்றுப் பார்த்தான். பின்பு தலைக்கட்டுக்களைப் பார்த்துக் கூறினான்:

"நண்பர்களே! முதலில் இவனைப் பாறையிலிருந்து அவிழ்த்து விடுங்கள்."

"பிரபு! இந்த அயோக்கியன்தான் தங்கள் முதுகில் அம்பு செலுத்தியவன்! இவனை விடுவதாவது? சித்திரவதை செய்ய வேண்டும்."—தலைக்கட்டுக்கள் கொதிக்கும் குரலில் கூறினார்கள்.

"உங்கள் எல்லோரையும்விட, இவனைப் பற்றியும், இவன் செயல்களைப்பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும் நண்பர்களே! இவன் மலைப்பளிஞன் இல்லை! தீவட்டிக் கொள்ளைக்காரர்களின் தலைவன். என்னைப் பழி வாங்குவதற்குக் காத்திருந்த பாப்பைய நாயக்கன்! சில நாழிகைகளுக்கு முன் இவன் என் காதிலிருந்த கத்தி வடுவை எறும்பு புகுந்துவிட்டதாகப் பொய் சொல்லித் தடவிப் பார்த்ததும், பிறகு என்னை இடைவிடாமல் பின்தொடர்ந்ததும், இவனுடைய நடிப்பையும் மீறி உண்மையை எனக்குக் கூறிவிட்டன. ஆனால், 'நல்ல கம்பளத்து நாயக்கர் குலத்தில் பிறந்த இந்த ஆண்மகன், என்னோடு நேருக்குநேர் போரிடாமல், என் முதுகிலே அம்பு போட்டு என்னைக் கொன்று தனக்கு இழுக்கைத் தேடிக்கொண்டுவிட்டானே?'—என்றுதான் இந்த மரணாவஸ்தை நிலையில் நான் ஏங்குகிறேன். என் வாழ்வில் என்றாவது ஒரு நாள் இவன் எனக்கு எமனாக வருவான் என்பதை இன்றல்ல, ஆறு வருஷத்துக்கு முன்பே நான் அறிவேன்... அது இருக்கட்டும், நான் வேண்டிக்கொள்கிறேன்... நண்பர்களே... முதல் வேலையாக இவனை அவிழ்த்துவிடுங்கள்... நீங்கள் அவிழ்த்துவிட மறுத்தால், நான்தான் உயிர்வேதனையோடு எழுந்திருந்தாவது அவிழ்த்துவிட வேண்டும்."—இப்படிக் கூறியவாறே, வெள்ளையன் கையூன்றி எழுந்திருக்க யத்தனித்தான்.

"வேண்டாம் பிரபு, வேண்டாம். நாங்களே செய்கிறோம்"—என்று கூறிக்கொண்டே, உடனிருந்தவர்கள் பாறையிலிருந்து அந்தப் பளிஞனை அவிழ்த்துவிட்டனர். கொடிகளால் இறுக்கப்பட்டுக் கிடந்ததனால் அவன் உடலில் பாளம் பாளமாகத் தடிப்பு விழுந்து கன்றிப் போயிருந்தது.

"பாப்பையா! கொஞ்சம் இப்படி என் அருகே வா"—அன்பு இழையும் கருணைக் குரலில் வெள்ளையத் தேவன் அழைத்தான்.

"என்னை மன்னித்துவிடுங்கள். . நீங்கள் மனிதரில்லை; தெய்வம்"...தழுதழுக்கும் குரலில் இவ்வாறு கூறிக்கொண்டே, வெள்ளையத் தேவனின் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான் பாப்பைய நாயக்கன்.

"என்னை வணங்காதே பாப்பையா. தெய்வம் மனித சரீரத்தில் இல்லை. அந்தச் சரீரத்தின் அதியுன்னதமான குணங்களில் இருக்கிறது. அந்தக் குணங்களை உன் சரீரத்தில் குடியேற்றுகிற முயற்சியில் ஈடுபட்டால், நாளை முதல் உனக்கும் மற்றவர்களுக்கும் நீயேதான் தெய்வம்."

"இல்லை, இல்லை. நான் பாவி. கொலை பாதகன். திருடன். தீவட்டிக் கொள்ளைக்காரன். நான் தெய்வமாக முடியாது."—பாப்பையன் கதறினான்.

"ஏன் முடியாது? நன்றாக முடியும்! தெய்வத்தை இந்தத் தலைமுறையில் வணங்கும் அடியார்கள், அடுத்த தலைமுறைக்குத் தாங்களே தெய்வமாகிவிடுகிறார்களல்லவா? உன் ஒழுங்கான வாழ்வுக்கு வழி சொல்லுகிறேன் பாப்பையா! அதை நீ கேட்பாயா?"

"கேட்கிறேன் சுவாமி!"

"வெறுமனே சொன்னால் போதாது! இதோ! கீழே வடிந்திருக்கும் என் ரத்தத்தைத் தொட்டு, 'நான் நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன்' என்று சத்தியம் செய்ய வேண்டும்."

பாப்பையன் அப்படியே வெள்ளையத் தேவனின் ரத்தத்தைத் தொட்டு வணங்கிச் சத்தியம் செய்தான்.

"நான் சொல்வதை, இவனுக்குச் செய்து கொடுக்க நீங்கள் பொறுப்பு! எனவே, நீங்களும் இப்படியே ஒரு சத்தியம் செய்யுங்கள்"—என்று தன் சகாக்

களையும் வேண்டிக்கொண்டான் வெள்ளையத் தேவன்.

அவர்களும் அப்படியே ரத்தத்தைத் தொட்டு சத்தியம் செய்தார்கள். இப்படி இரு சாராரும் சத்தியம் செய்து முடிந்த பின், "நண்பர்களே! எல்லோரும் இப்போது கவனமாக நான் கூறுவதைக் கேளுங்கள்"—என்று தொடங்கி வெள்ளையத் தேவன் கூறலானான்:—

"தலைக்கட்டுக்களே! கவனித்துக் கேளுங்கள். இது என் வேண்டுகோளின் முக்கியமான அம்சம். பாப்பையா! நீயும் கேள். பண்ணைத் தேவருடைய செல்வ வளமே பாப்பையனுக்கும் எனக்கும் நேரடியாகப் பகையை உண்டாக்கிவிட்டது. இப்போதோ பொன்னியை மணம் செய்துகொண்டதன் மூலமாக அந்தச் செல்வத்துக்கு நான் உரிமையாளன் ஆகிவிட்டேன். ஆனால், இதோ இன்னும் சிறிது நேரத்தில் என்னுடைய உலக வாழ்க்கையே முடியப் போகிறது. நீங்கள் போட்டிருக்கும் பச்சிலை மருந்தெல்லாம் இதற்குப் பயன்படாது. ஏனென்றால், பாப்பைய நாயக்கன் விட்ட அம்பு என் இதயத்தின் முக்கியமான இரத்தக் குழாயைத் துளைத்துவிட்டது. இனி நான் பிழைப்பது நடக்க முடியாத காரியம். எனவே, உங்களிடம் இதை வேண்டுகின்றேன்:

பொன்னி மூலம் என்னைச் சேர்ந்திருக்கும் பண்ணைத் தேவரின் சொத்துக்களையும், அவருடைய காிசல்குளத்துத் தோட்ட மாளிகையையும் நாளையிலிருந்து பாப்பையனுக்கு உரிமையாக்க வேண்டும். அதைச் செய்வதாகத் தலைக்கட்டுக்களாகிய நீங்களும், ஏற்றுக்கொள்வதாகப் பாப்பையனாகிய இவனும் என் ரத்தத்தைத் தொட்டுச் சத்தியம் செய்துவிட்டீர்கள். இனி நீங்கள் மறுக்க முடியாது!"

"ஐயோ! சுவாமீ! ... என்னை மீண்டும் 'செல்வம், ஆசை' என்ற படுகுழிகளில் தள்ளாதீர்கள். நான் இப்படியே உங்களோடு சாகப் போகிறேன்."—பாப்பையன் அலறினான்.

"கூடாது! பாப்பையா, அன்றிரவு எந்த மாளிகையில் நீ சுவரேறிக் குதித்துத் திருடனாக நுழைந்தாயோ, அதே மாளிகைக்குச் சொந்தக்காரனாகப் போகிறாய். ஒரு காலத்தில் உன்னை ஏங்கவைத்த செல்வம், உனக்குக் கிடைக்கப் போகிறது. தானதர்மங்களை மனங்குளிரச் செய்து, கர்மயோகியாக வாழ்நாளைக் கழி. உன்னை அழ வைத்த செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்துக் கொடுத்துப் பழிவாங்கு! உன்னைத் திருடனாக்கிய செல்வம், வருங்காலத்தில் பிறரையும் திருடராக்காமல் அதன் கொட்டத்தை ஒடுக்கு!"—ஆவேசம் வந்தவன் போல மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே போனான் வெள்ளையத்தேவன்.

"பிரபு! தங்கள் மனைவி மக்களுக்கு நாங்கள் என்ன பதில் கூறுவது?" தலைக்கட்டுக்கள் அழுகைக்கு இடையே விம்மிக்கொண்டே கேட்டனர்.

"வெள்ளையத் தேவர் வானுலகில் இருந்து, எப்போதும் உங்கள் நலனைக் கண்காணித்து வருவார் என்று கூறுங்கள். நீங்கள் செய்த சத்தியத்தின் மேல் ஆணையாகப் பாப்பைய நாயக்கன் தான் பழைய தீவட்டிக் கொள்ளைக்காரனென்றோ, அவனால் நான் கொலை செய்யப்பட்டேன் என்றோ, என் மனைவி மக்களிடம் கூறக்கூடாது! முடிந்தவரை பிறரிடமும் கூற வேண்டாம்"— வெள்ளையத் தேவன் கூறினான். உள்ளத்தின் கருணையொளி அவன் சொற்களிலே பிரகாசித்தது. அடுத்த கணம்...அவன் ஜீவன் ஒளியோடு ஒளியாக ஐக்கியமாயிற்று. ஜீவனற்ற வெள்ளையத் தேவனின் சரீரத்தை தங்கள் கண்ணீரால் நீராட்டி, குகைக்குள்ளேயே அடக்கம் செய்தனர் தலைக்கட்டுக்கள்.

இதற்கப்பால், பாப்பையநாயக்கன் பண்ணைத்தேவர் மாளிகையை அன்ன சத்திரமாக மாற்றி, ஏழை எளியவர்களுக்குச் சோறிடும் தர்மத்தில் ஈடுபட்டான். தன்னை மனிதனாக்கிய வெள்ளையத் தேவனுக்கு சிலை செய்து, அவன் இறந்த கொங்குமலைக் குகையிலேயே அதைத் தெய்வமாகப் பிரதிஷ்டை செய்தான். காிசல்குளத்திற்கும் கபிலக்குறிச்சிக்கும் குல தெய்வமானான் வெள்ளையத் தேவன். எந்தக் கரங்களால் வெள்ளையத் தேவனின் முதுகில் அம்பைத் தொடுத்தானோ, அதே கரங்களால் அவனுடைய சிலையின் திருவடிகளில் மலரைச் சொரிந்து, மனம் நெகிழப் பூசை செய்தான் பாப்பையன். வெள்ளையனின் மனைவி மக்களும் ஊராரைப்போலவே அந்தச் சிலையைத் தெய்வமாக வழிபடலானார்கள். மாசி மாதம் அவன் இறந்த நாள் பெருவிழாவாக இரண்டு ஊராராலும் கொண்டாடப்பட்டது. வெள்ளையத் தேவன் தெய்வமானான். அவனது இரத்தம் சிந்திய பாறை, அவன் சிலை நிற்கும் கோயிலாயிற்று.

ஃ ஃ ஃ

வீராசாமித்தேவர் எனக்கும் ஜான்ஸனுக்கும் இந்தக் கதையைக் கூறி முடித்த போது, இரவு மணி பதினொன்றரைக்கு மேல் ஆகியிருந்தது. மழையும் நின்று வெகு நேரமாகியிருந்ததனால், வானத்தில் மேகங்கள் வெளி வாங்கியிருந்தன. நட்சத்திரங்களும், நிலாவும் ஒளியைப் பரப்பியதால், பாலில் முழுகிய தெய்வ பிம்பம்போல மலையில் நிலவொளி அங்கங்கே தவழ்ந்தது. நான் குகைக்குள்ளிருந்த வெள்ளையத் தேவனின் அந்தக் கம்பீரமான சிலையின் அருகில் சென்று பார்த்தேன். "மூன்று தலைமுறைக்கு முந்திச் செய்த சிலைங்க இது!" என்றார் வீராசாமித் தேவர். பெருமிதம் விளங்கும் அந்தச் சிலை வாய் திறந்து,

"தெய்வம் மனித சரீரத்திலே இல்லை. அந்தச் சரீரத்தின் அதியுன்னதமான குணங்களில் இருக்கிறது" என்று என்னிடம் கூறுவதுபோல ஒரு பிரமை எனக்கு ஏற்பட்டது.

நாங்கள் ஜீப்பில் ஊர் திரும்பும் போது, "இவர் சொன்ன கதையைப் போலவே, இந்த ஊரைப்பற்றி மதுரை ஜில்லாவின் பழைய கெஜட்டில் ஒரு வரலாறு படித்ததாக ஞாபகம் வருகிறது" என்றார் ஜான்ஸன்.

"இருக்கலாம்" என்றேன் நான்.

*

## எதிர்பார்த்ததும் எதிர்பாராததும்!



சிறுவர் தொடர்கதை

# அதிசய வீணை

வாண்டுமாமா

சேகரும், மல்லாரியும் ஹோட்டலில்தான் தங்கி இருந்தார்கள். அந்தப் புது மனிதன் பங்களாவிலே தங்கி இருந்தான். அவன் விரும்பினால், அங்கேயே தங்கி இருக்கலாம் என்றார் ராஜ்குமார். அவர் வேண்டுகோளை நிராகரிக்காமல் ஏற்றுக்கொண்டு விட்டான் அந்த மனிதன். அவன் பங்களாவில் தங்கி இருந்தாலும், அதிகமாக யார் கண்ணிலும் படுவதில்லை. அவனுக்காகக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்குள்ளேயே நாளின் பெரும் பகுதியையும் கழித்தான். அவனுக்கு இன்னும் பழைய ஞாபக சக்தி திரும்பவில்லை. பட்டுவின் தகப்பனார் அவனிடம் அந்த சைனா பொம்மையின் கதையை விவரமாகச் சொன்னார். ஒருவேளை பழைய ஞாபகங்களினால் அவன் மூளையில் ஏற்பட்ட அதிர்ச்சி நீங்கி, அவன் குணமடைந்து, தன்னைப்பற்றிய உண்மையைச் சொல்லமாட்டானா என்ற ஆசை அவருக்கு. ஆனால், அவனிடம் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை.

இத்தனை நடந்த பிறகும்கூட ராஜ்குமார் தன் பாட்டிக்கு-அதாவது நூறு வயதுக் கிழவி மாணிக்கவல்லிக்கு-இந்தக் குழப்பங்களைப் பற்றிச் சொல்லவே இல்லை. காரணம், அவளுக்கு இன்னும் பத்து தினங்களில் நூற்றாண்டு வைபவம் கொண்டாட ஏற்பாடாகி இருந்தது. அதற்குத்தான் மலேயாவிலிருந்து கோவிந்தசாமி தன் குழந்தைகளான பட்டு, கோபுவுடனும், ராஜ்குமார் சென்னையிலிருந்து சகுந்தலாவுடனும் வந்திருந்தார்கள். இந்த சமயத்தில் அவளை எந்தவித அதிர்ச்சியோ, அதிக ஆனந்தமோ, குழப்பமோ பாதிக்காமல் காப்பாற்றுவது முக்கியமல்லவா?

ஒவ்வொரு நாளும் இரவு நேரத்தில் பங்களாத் தோப்பின் தாமரைக் குளக்கரையிலுள்ள பளிங்கு மண்டபத்தில் குழந்தைகள் கூடிப் பேசுவது வழக்கம். ஒவ்வொரு நாளும் ஒருவர் ஏதாவது சுவாரஸ்யமான விஷயத்தைச் சொல்ல வேண்டும். யாரும் எந்த ரகசியத்தையும் மனதில் வைத்துக்கொள்ளக்கூடாது என்பது சகுந்தலாவின் கட்டளை.

அந்தப் பளிங்கு மண்டபத்தில் சேகரைத் தவிர, மற்ற எல்லோரும் -சகுந்தலா, விச்சு, சரஸா, ராமு, பட்டு, கோபு-கூடியிருந்தார்கள். இப்போதெல்லாம்-அதாவது அந்தப் புது மனிதன் தோன்றி அவன் அந்தப் பங்களாவிலேயே வசிக்க ஆரம்பித்த பிறகு-சேகரும், மல்லாரியும் பங்களாவுக்கு வருவதில்லை. தங்கள் உரிமை ஸ்தாபிக்கப்பட்ட பிறகுதான் அங்கு வரப் போவதாகக் கூறிவிட்டார் மல்லாரி. சகுந்தலாவுக்கு சேகரைப் பிரிந்திருப்பது மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், என்ன செய்வது?

கோபு, அன்று கடற்கரையில் தாங்கள் ஒரு குகைக்குள் புகுந்து ஆராய்ச்சி செய்ததைச் சொன்னான்.

“குகைகளைப் பற்றி நான் கதைகளில் படித்திருக்கிறேன். இன்றைக்கு நிஜமாகவே குகைக்குள் போகும்போது, என் உடல் சிலிர்த்தது. ஆரம்பத்தில் உற்சாகமாகத்தான் இருந்தது. ‘கருகும்’ என்றிருந்த இருட்டில் நடந்து போகப் போக நெஞ்சைக் கலக்க ஆரம்பித்தது.

திடீரென்று படிகளில் என் கால் இடறிற்று. வரிசையாகப் படிகள். எங்கோ மேலே போவதற்கு வழி. ஆச்சரியமாக இருந்தது எனக்கு. படிகளில் ஏறினேன். கொஞ்ச நேரத்தில் ஒரு கதவின் முன்னால் நான் நின்றேன். வெகு உயரத்திலிருந்த ஒரு சிறு இடைவெளி வழியாக தூண்போல சூரிய வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. அந்தக் கதவை நெட்டித் திறக்க முயன்றேன். முடியவில்லை” என்றான் கோபு.

"அந்தக் கதவுக்குப் பின்னால் விசாலமான திறந்த வெளி இருக்க வேண்டும். ஏனென்றால், மறு பக்கத்தில் ஏதோ ஒரு குரல் கேட்பதுபோல இருந்தது. நெருப்புப் பற்றவைக்கும் சடபுடா சப்தம். பாத்திரங்களை உருட்டுவதுபோலக் கூட இருந்தது" என்று தயங்கினான் பட்டு. சகுந்தலாவுக்கு இந்த வர்ணனைகள் வியப்பாகவும் சுவாரஸ்யமாகவும் இருந்தன. ஆனால், விச்சு மட்டும் எங்கேயோ பார்த்தபடி இருந்தான். அவன் முகத்தில் சிந்தனை தோய்ந்திருந்தது. இதைக் கவனித்துவிட்டாள் சகுந்தலா.

"விச்சு, நான் உன்னை சாயந்திரத்திலிருந்து கவனித்து வருகிறேன். உன் மனத்தில் என்னமோ இருக்கிறது. அதை நீ எங்களிடமிருந்து மறைக்கப் பார்க்கிறாய். நமது பளிங்குமேடை விதிகளுக்கு இது நேர்மாறானது. அவரவர் தங்கள் மனதிலுள்ளதைச் சொல்லிவிட வேண்டும்" என்றாள்.

விச்சு தன் மனதில் ஒரு ரகசியத்தை மறைத்துக்கொண்டுதான் இருந்தான். ஆனால், அதை வெளியிடுவதினால் சகுந்தலாவின் மனது புண்படுமே என்றுதான் பேசாமல் இருந்தான். இப்போது அவளே வற்புறுத்தும்போது, எப்படிச் சொல்லாமல் இருப்பது? அது அவள் அன்புக்குப் பாத்திரமான சேகரைப் பற்றியதுதான்.

அன்று காலை பங்களாவுக்கு வரும்போது வழியில் சேகரைப் பார்த்துவிட்டு வரலாம் என்று ஹோட்டலுக்குப் போனான் விச்சு. ஆனால், ஹோட்டலின் தோட்டத்தில் மல்லாரியும், சேகரும் நிற்பதைத் தூரத்திலிருந்தே கவனித்துவிட்டான். விச்சு தங்களை நோக்கி வந்துகொண்டிருப்பதை அவர்கள் கவனிக்கவில்லை. ஆனால், விச்சு அவர்கள் பேசுவதை நன்றாகக் கேட்கும்படியான தூரத்தில் ஒரு செடி மறைவுக்கு வந்த பிறகுதான், மேலே அவர்களை அணுகாதபடி அப்படியே நின்றுகொண்டான். காரணம், மல்லாரியின் பேச்சுதான். மல்லாரி படபடப்பாகக் கோபத்துடன் பேசிக்கொண்டிருந்தார். சேகரின் முகத்தில் கவலையும், பயமும் கலந்து வழிந்துகொண்டிருந்தன.

"இப்படி அவசரப்பட்டால் எல்லாம் குட்டிச் சுவர்தான். தெரிந்ததா? பயப்படாதே. எல்லாம் நம் திட்டப்படி நடக்கும். சொத்து சாமானியமானதல்ல. தெரிந்ததா? நம்ம இரண்டாவது பிளான்படிச் சகல ஏற்பாடுகளும் செய்துவிட்டேன். குகையிலிருந்து அப்படியே கடல் மார்க்கமாகப் போக வழி இருக்கிறது. அந்தக் காலத்திலே கொள்ளைக்காரர்கள் எல்லாம் அப்படித்தான் தப்பிச் செல்வார்களாம்"–இப்படி மல்லாரி சேகருக்குத் தைரியம் மூட்டிக்கொண்டிருப்பதைக் கேட்டான் விச்சு. இதற்குமேல் சேகரை சந்திக்கப் பிடிக்கவில்லை. அவன் மனதிலிருந்த நிம்மதி போய்விட்டது. சேகரிடம் அவனுக்கிருந்த நல்ல அபிப்பிராயம் கரைந்துவிட்டது.

இந்த விவரத்தை விச்சு பளிங்கு மண்டபத்தில் கூடி இருந்த கோஷ்டிகளிடம் தெரிவிக்கவே, சகுந்தலாவின் முகம் கடுகாகச் சிறுத்து விட்டது. அதற்குமேல் யாருக்கும் சந்தோஷமாகப் பேசப் பிடிக்கவில்லை. மௌனமாகக் கலைந்து விட்டது, பளிங்கு மண்டபக் கூட்டம்.

காலையில் குழந்தைகளை வேலைக்கார வேலப்பனின் கூக்குரல் எழுப்பிற்று. அவன் அப்படிக் கத்தியதற்குக் காரணம் பங்களாவிலிருந்த விலையுயர்ந்த நகைகள், ஆபரணங்கள், புராதனமான பொருள்கள் எல்லாம் களவாடப்பட்டிருந்ததுதான். மல்லிகைக் கொல்லை ஜமீனிலுள்ள விலையுயர்ந்த பொருள்களைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அத்தனை பிரபலமானது மல்லிகைக் கொல்லை ஜமீன் சொத்துக்கள். விச்சுவுக்குத் தன் தகப்பனார் முன்பு ஒரு தடவை நகரத்தில் நடந்த திருட்டைப்பற்றிப் பேசும்போது ஜமீனிலுள்ள விலையுயர்ந்த நகைகளைப் பத்திரமாக வைக்கும்படிச் சொன்னது நினைவுக்கு வந்தது.

"இத்தனை உயர்ந்த நகைகளையும், ஆபரணங்களையும் ஏன் இவர்கள் அஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டும்?" என்று நினைத்தான் விச்சு. ஆனால், மாணிக்கவல்லியின் குணம் அவனுக்குத் தெரியுமா? "இந்த விலையுயர்ந்த பொருள்களெல்லாம் பிறர் பார்த்து மகிழ்வதற்குத்தானே தவிர, பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைப்பதற்கல்ல" என்று அவைகளை ஹாலில் அலங்காரமாக கண்ணாடி பீரோக்களில் பொருட்காட்சிபோல வைத்திருக்க ஏற்பாடு செய்திருந்தாள் மாணிக்கவல்லி. எவ்வளவோ வெளிநாட்டுக்காரர்கள் எல்லாம் ஒரு காலத்தில் மல்லிகைக் கொல்லை ஜமீனிலுள்ள விலையுயர்ந்த பொக்கிஷப் பொருட் காட்சி சாலையைப் போட்டோ பிடித்துக்கொண்டு போயிருக்கிறார்கள். அது இன்று களவாடப்பட்டு விட்டது. வரதராஜன் விஷயத்தைக் கிழவியிடம் சொல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்த விஷயத்தை மூடி வைக்க முடியுமா?

திருட்டுப் போன செய்தியைக் கேட்ட மாணிக்கவல்லியின் தளர்ந்த உடல், கோபத்தினால் துடித்தது. திருடர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டுமென்றும், அவர்கள் குடும்பத்தை விட்டு அந்த நகைகள் போய்விட்டால், பிறகு வம்சமே பாழாகி விடும் என்றும் தன் பேரன்மார்களுக்கு எச்சரித்தாள் பாட்டி.

(தொடரும்)



"என்ன டெலிபோன் ஆபரேடர்! இத்தோடு நாலாவது தடவையாக எனக்கு நீ 'ராங்' நம்பரைக் கொடுத்திருக்கிறாய்!...எந்த 'ராங்' நம்பரைக் கேட்டால் 4327 கிடைக்கும் என்றாவது சொல்லித் தொலையேன்!"

சுதேசமித்திரன்

# உங்கள் காலபலன்

பி. வி. ராவ்

**1956 ஏப்ரல் 13௳ முதல் (துன்முகிஞு சித்திரைமீ 1௳ முதல் 31௳) மே 13௳ முடிய.**

[கீழ்க்கண்ட பலன்களை சந்திர ராசி, சூரிய ராசி, லக்ன ராசி மூன்றிலிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்.]

## ...மேஷ ராசி...

அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய

மேற்கொள்ளும் வேலையிலும், தொழிலிலும் சிறந்த முன்னேற்றம் விளைவிக்கும் வகையில் வாழ்க்கை முறையைத் திருத்தியமைப்பதாக இருக்கிறது, இம்மாதத்திய கிரக அமைப்பு. சனியின் பார்வை பெற்றிருக்கும் 10-ல் செவ்வாய், குறிப்பிட்ட லட்சியத்தில் வெற்றி காண ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும். தொழில் துறை, வியாபாரம், விஞ்ஞானம் ஆகியவற்றில் முனைவுள்ளவர்களுக்கு இம்மாதம் மிகவும் சாதகம் பயப்பதாக இருக்கிறது. அதிக உற்சாகமிருப்பதோடு முக்கிய மாறுதலும் நிகழலாம். உமது லக்னாதிபதி செவ்வாய் உச்சத்திலிருப்பதால், கிடைக்கும் வாய்ப்புகளை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டால், தொழிலில் மட்டுமன்றி நிதி விஷயங்களிலும் நல்ல பயனடையலாம். மேற்கொண்டுள்ள வேலைகள் சந்தோஷமான முறையில் முடிவுறுவதையும், அதன் பயனாக ஊக்கமும், சரியான படி சிந்திக்கும் திறனும், மகத்தான பலன்களும் விளைவதையும் 4-ல் குரு குறிக்கிறது. உமது ராசியின் மூலம் சூரிய கதி, மாறுபட்ட நிலைமைகளிலும், சூழ்நிலைகளிலும் பிற்கால வாழ்க்கை பற்றிய ஒரு புது நோக்கு ஏற்படுவதையும், சமூக, உத்தியோக, குடும்ப வட்டாரங்களில் பொறுப்புகள் மிகுவதையும் குறிக்கிறது. குரு, சனி ஆகியவற்றால் பார்க்கப்படும் செவ்வாய், வெற்றிப் பலனளிப்பதாகக் காணும் பல விவகாரங்களில் உம்மைப்பற்றி நீரே இறுமாப்புக்கொள்ளச் செய்யும். உமது புத்திரர்களில் ஒருவர் விசேஷ கவனத்தைக் கவர்ந்து ஆச்சரியத்தை யூட்டுவார். நண்பர், உறவினருடன் தகராறைத் தவிர்க்கவும்.

பண விவகாரம்:— உமது தனாதிபதி சுக்கிரன், லாபாதிபதி சனியின் பார்வை பட்டு ஸ்வக்ஷேத்திரத்திலேயே நல்ல முறையில் இருப்பதால், இதுவரை இருந்த பண சம்பந்தமான கவலைகள் நீங்கி நிதி வசதிகள் பெருகும். மாத முதல் பாதி உபரி வருமான இனங்களைக் கண்டுபிடிக்க சாதகமானது. மாத இரண்டாம் பாதியில் பணத்தைக் கையாள்வதில் எச்சரிக்கையையும், விவேகத்தையும் பிரயோகிப்பது அவசியமாகலாம்.

குடும்பமும், சூழ்நிலையும்:— குடும்ப வாழ்க்கை சந்தோஷமும், ஒற்றுமையும் நிறைந்ததாக இருக்கும். உமது திட்டங்களை நிறைவேற்றுவதில் உறவினர்களும் நண்பர்களும் முக்கியமான பாகத்தை வகிப்பர். 6-ம் வீட்டை செவ்வாய், சனி ஆகிய பாபக் கிரகங்கள் பார்ப்பது, துணிச்சலான காரியங்களில் ஈடுபாடும், ஹேஷ்ய போங்களில் முனைவும் ஏற்படச் செய்யும். உத்தயோக விஷயங்கள் பற்றிய நோக்கிலும், குறிக்கோள்களிலும் செயலூக்கத்துடன், காரியகரமான சிந்தனையும் அவசியம். ஹேஷ்ய விஷயங்களில் இறங்குவதில் யதார்த்த நிலைமையை அனுசரித்து செயல்படுவது அவசியம். கல்யாண வைபவம் ஏதாவதிருந்தால், வெற்றிகரமாக நடைபெறும். உமது தேகாரோக்கியம் பற்றி விசேஷ கவனம் அவசியம்.

உத்தியோகம்:—உத்தியோக உயர்வு பற்றி நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது, இம்மாதம். இஷ்டபூர்த்தியும் தொலைவில் இல்லை. ஆனால், பூசல் மனப்பான்மையும், முன்பின் யோசியாமையும், பிறர் சொல்லுக்கு செவிசாய்க்காமல் நடத்தலும் மேலிடும். தயையும், காருண்யமும் மிக்கதாக மனநிலையை மாற்றிக்கொள்வது உமக்கு நன்மை பயப்பதாக இருக்கும். சிலருக்கு, பிறர் ஆசைப்படக் கூடிய, நிர்வாகப் பொறுப்புகள் மிகுந்த பதவி வகிப்பதும் சாத்தியமாகலாம்.

வியாபாரம்:— திருப்தியான முறையில் வியாபாரம் இருந்துவரும் என்றாலும், 8-ம் வீட்டிலிருக்கும் சனி, ராகு ஆகியவற்றால் அநாவசியமான சலனங்களும், தாமதமும், வியாபாரத் தேக்கமும் சம்பவிக்கலாம். இரண்டாவது பாதியைவிட முதல் பாதி வியாபாரிகளைப் பணக்காரர்களாக்கும். கூட்டு வியாபாரம் உற்சாகமளிப்பதாக இராது.

ஏப்ரல் 15 19 22 28 மே 3 8 9 10 12 13 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 14 16 18 21 23 மே 5 11—நல்ல நாட்களல்ல.

## ..ரிஷப ராசி..

கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம்பாதம் முடிய

நன்மையும், தீமையும் கலந்த மாதமிது. 12-ம் வீட்டில் சூரிய சஞ்சாரம், வீட்டுப் பிரச்னை, உறவினர்களுடன் மன வேற்றுமை, உமக்கு எதிராகப் பகைவர்களின் இரகசிய நடவடிக்கைகள், உம்மிலும் பெரியவர்களுடன் திருப்தியற்ற உறவுகள், உற்ற சகோதரரின் தவறான அபிப்பிராயத்துக்கு ஆளாகுதல், அதையொட்டிய உண்மை விளக்கம், கோர்ட்டுத் தொல்லை ஆகியவற்றை வற்புறுத்துகிறது. உமது லக்னாதிபதி சுக்கிரன் பாபக் கிரகங்களின் பார்வை பெற்று ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பதால், எந்த விவாதத்திலும், கருத்து மாறுபாட்டிலும் நீர் வெற்றி காண்பீர். உமது தொழில் சம்பந்தமாக நீர் மேற்கொண்டுள்ள வேலையையும், பொறுப்புகளையும் சிறப்பாக நிர்வகிப்பது சாத்தியமாகும். கல்யாண நிகழ்ச்சி ஏதாவது உண்டாயின் சாதகமாக நிறைவேறும். பல நண்பர்கள் உம்மைச் சுற்றி

வட்டமிடுவர். அவர்களது உதவியையோ, ஆதரவையோ பெற மாத முதல் பாதி சிலாக்கியமானது. 7-ல் பாபக் கிரகங்கள் தொழில் துறையில் உமது முன்னேற்றத்துக்குத் தாமதமும், தடையும் விளைக்கும். அநேகமாகப் பலருக்குப் பிரயாணம் ஏற்படலாம். முதல் பாதியை விட இரண்டாவது பாதியில் தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். முறையே 3, 9-ம் வீடுகளில் குருவும் குஜனும் ஒன்றையொன்று எதிர்த்துக் கொண்டிருப்பதால், வேதாந்த விசாரங்களில் மனம் பெரிதும் ஈடுபடும். உமது நெருங்கிய உறவினர் ஒருவர் திடீரென்று வாழ்க்கையில் உயர்வு காண்பார். 3-ல் குரு, பத்திரிகைத் துறை ஈடுபாடுகள், பிரசுரங்கள், எழுத்துக்கள், சட்டசம்பந்தமான விஷயங்கள் ஆகியவைகளுக்கு உதவிகாமாக இருக்கும். வக்கீல்கள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் ஆகியவை பிரகாசிக்கும்.

பண நிலைமை:— 12-லிருக்கும் தனாதிபதியை செவ்வாய் பார்ப்பது பண விஷயங்களுக்குப் பெருத்த பாதகமாக இருக்கிறது. அநாவசியமான சண்டைகளும், சமாளிக்க வேண்டிய பணத் தொல்லைகளும் மாத முதல் பாதியில் உம்மைப் பெரிதும் கவலைக்குட்படுத்தும். இரண்டாவது பாதியில், புதன் விருஷபத்தில் பிரவேசிப்பதாலும், சுக்கிரன் 2-வது வீட்டில் பிரவேசிப்பதாலும் மிகுந்த பிரயாசையின்றியே ஸ்திரமானதும், சீரானதுமான வருமானம் உண்டாகும். இரண்டாவதைவிட முதல் பாதியில் மிகுந்த செலவிருக்கும்.

குடும்பமும், சூழ்நிலையும்:— குடும்பச் சூழ்நிலை மிகவும் பாதகமாக இராதென்றாலும், விரும்பும் வசதிகளெல்லாம் இராமல் போகலாம். நில சம்பந்தமான பேரங்கள் எதுவும் நல்ல முறையில் முடிவு பெறா. உமது தாயைப்பற்றிய கவலை இருக்கும். உமது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாலேயே அநாவசியமான புரைசல் காணும்.

உத்தியோகம்:— செவ்வாயின் பார்வை பெற்று 12-ல் சூரிய சஞ்சாரம் உத்தியோகத்தில் ஆதரவு அளிப்பதாக இல்லை. உமது மேலதிகாரியுடன் கடுப்பான முறையில் தொடர்புகொள்வதைத் தவிர்க்கவும். இம்மாதம் வேலை மாற்றமோ, இடமாற்றமோ சம்பவிக்கக்கூடும்.

வியாபாரிகள்:— வியாபாரிகளுக்கு இம்மாதம் நன்மை பயப்பதாக இல்லை. விவேகத்துடன் கையாளப்பட்டால் வெளிநாட்டு வியாபாரத்தால் திடீர் லாபத்தை அடைவது சாத்தியமாகலாம். ஆனால், மறுமுறை அதுபோன்றே ஈடுபடுவாரானால், இந்த ராசிக்காரரின் வியாபாரத்தில் சீர்குலைவோ, அன்றி பண நஷ்டமோ ஏற்படலாம். கூட்டு வியாபாரம் சம்பந்தமாக கோர்ட்டில் ஒரு கேஸ் வரலாம்.

ஏப்ரல் 15 17 19 20 22 26 28 மே 3 8 12 13—நல்ல நாட்களல்ல.

ஏப்ரல் 14 16 21 23 30 மே 5 11—நல்ல நாட்களல்ல.

## மிதுன ராசி

மிருகசீரிஷம் 3-ம் பாதம்முதல்
திருவாதிரை, புனர்வஸு
3-ம் பாதம் முடிய

வீட்டிலும், உத்தியோகத் துறையிலும் முக்கியமான சம்பவங்கள் நிகழப்போவதைக் குறிப்பதாக இருக்கிறது, இம்மாத கிரக சேர்க்கை. 11-ல் சூரியகதி, வேலை தேடல், வேலை உயர்வு, தனிப்பட்ட முயற்சி, வீட்டு வசதிகள்—ஆகியவைகள் பற்றி சிரத்தை எடுத்துக்கொண்டு முனைந்தால் சாதகமான வாய்ப்புகள் ஏற்படுவதைக் குறிக்கிறது. ஆரோக்கிய, தன கிரகங்கள் இம்மாதம் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 12-ல் இருக்கும் 5-ம் வீட்டு அதிபதி சுக்கிரனுக்கு, சனி, ராகு ஆகியவற்றின் பார்வையிருப்பதால், அவசியமற்ற மன உளைச்சல்களும், பண விஷயம், தேக நலன் ஆகியவைபற்றி கவலையும் ஏற்படும். உற்சாகமிக்க புது நண்பர்கள் கிடைப்பர். ஆனால், அவர்களைத் தேர்ந்து எடுத்துக்கொள்வதில் மிகவும் விவேகமான முறையில் பாகுபாட்டை உபயோகிக்கவேண்டும். ஏனெனில், அவர்களில் ஒருவர் உமக்கு எதிராக மிகவும் வலிமை படைத்தவராதலால், உமக்குப் பாதகமான முறையில் உம்மைச் செலுத்திக் கொண்டு போகக்கூடும். சகோதரர், அல்லது சகோதரி ஒருவருடன் உமக்கு மனவேறுபாடு ஏற்படலாம். அதன் காரணமாக, மிகுந்த தன ஆதாயம் அடைய முடியும் என்று நீர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு பத்திரம் அல்லது ரிகார்டு பற்றிய கவலையும் மிகும். மாத இரண்டாவது பாதியில் சந்தோஷம் அளிக்கும் வகையில் மன அமைதியும், சகித்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையும் இருக்கும். 6-வது வீட்டில் சனியும், ராகுவும், 8-ம் வீட்டில் உச்சம் பெற்றிருக்கும் செவ்வாயும் சிலரது தேக நலன் எதிர்பாராத வகையில் சீர்கெடுவதையோ, வேண்டியவர் எனக் கருதப்படுபவரே சதித்திட்டம் வகுப்பதையோ குறிக்கிறது. கல்யாண நிகழ்ச்சி ஏதாவது உண்டாயின் இரண்டாவது பாதி சாதகமானது.

## 1956 ஏப்ரல் 13-ந்தேதி கிரக நிலை.

<table>
<tr><td></td><td>புதன்<br>சூரியன்</td><td>சந்திரன்<br>கேது<br>சுக்கிரன்</td><td></td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">ஏப்ரல் 17உ<br>குருவுக்கு வக்ர நிவர்த்தி<br>ஏப்ரல் 25உ<br>புதன் விருஷபத்தில் பிரவேசம்<br>ஏப்ரல் 29உ<br>சுக்கிரன் மிதுனத்தில் பிரவேசம்.</td><td>குரு<br>உரானஸ்</td></tr>
<tr><td>செவ்வாய்</td><td></td></tr>
<tr><td></td><td>வ - சனி,<br>ராகு</td><td>நெப்டியூன்-</td><td></td></tr>
</table>

பண நிலைமை:—உச்ச ஸ்தானத்திலிருக்கும் செவ்வாய், குரு ஆகிய கிரகங்கள் பண விஷயத்தில் மிகவும் சக்தி பொருந்தியவைகளாக இருப்பதால் நிதி நிலைமை தெம்பாக இருக்கும். பின்னும் சொத்து சேரும் வகையில் எதிர்பாராத லாபம் கிடைப்பதுடன், திடீர் பண ஏற்றத் தாழ்வுகளும் நிகழலாம். பண விஷயத்தில் கஷ்டமின்மை இருந்து வருமென்றாலும், விற்றல் வாங்கல் விஷயத்தில் பகுத்தறிவைப் பயன்படுத்தவேண்டும்.

குடும்பமும், சூழ்நிலையும்:—நீர் எதிர்பார்த்த அளவு இல்லையென்றாலும், ஓரளவு குடும்ப வாழ்வு சந்தோஷமளிப்பதாகவே இருக்கும். உத்தியோக சம்பந்தமாக வெளி அலுவல்களில் அதிகம் ஈடுபட்டிருப்பது காரணமாக, வீட்டு வாழ்க்கையை ரசிக்க மிகுந்த வாய்ப்பு இராது. முதலீடு செய்தல் இம்மாதம் லாபகரமாகத் தோன்றுகிறது. தேக ஆரோக்கியம் ஓரளவு கெடக்கூடும்.

உத்தியோகம்:—உத்தியோக ஸ்தானாதிபதி குரு 2-வது வீட்டில் உச்சத்திலிருப்பது உமது மேலதிகாரி அலுவலகத்தில் உமது பதவிக்கு மிகவும் ஆதாரவாக இருப்பதைக் குறிக்கிறது. அந்தஸ்து உயர்வோ, வேலை உயர்வோ காண்கிறது. உமக்குப் பின்னால் சில நாசகாரக் கும்பல் வேலை செய்வதைக் குறிக்கிறது, செவ்வாயின் நிலைமை.

வியாபாரிகளுக்கு:—வியாபாரிகளுக்கு இம்மாதம் சாதகமானது. நிதி வசதிகள் உறுதியாக இருக்கின்றன. எதர்பாராத லாபமும் காண்கிறது. கூட்டாளிகளுடன் சண்டை சச்சரவுகளைத் தவிர்க்கவும்.

ஏப்ரல் 15 18 19 20 22 28; மே 3 6 8 10 12-நல்ல நாட்கள்.

ஏப்ரல் 16 17 21 23 30; மே 5 9 10 11-நல்ல நாட்களல்ல.

# கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய

மேற்கொள்ளப்படும் வேலைகளில் லாபமளிக்கும் புது முயற்சிகள் உண்டாவதையும், உம் முன் உள்ள விவகாரங்களில் நீர் எண்ணியபடி வெற்றி பெறுவதையும் கிரகநிலை அறிவுறுத்துகிறது. புதுப்புது வாய்ப்புகளும், சூழ்நிலைகளும் எதிர்ப்பட்டு உமது கவனத்தைக் கவரும். ஆகவே, உமது பாக்கியாதிபதியும், உத்தியோகாதிபதியும் உச்சத்திலிருப்பது காரணமாக, ஆக்ககரமான துறைகளில் முனைவைச் செலுத்திப் பரிமளிக்க முடியும் உம்மால். இந்த இரு சக்திவாய்ந்த கிரகங்களும் ஒன்றையொன்று எதிர்த்துக்கொண்டிருப்பது, ஆரம்பத்தில் தடைகளும் நிச்சயமற்ற போக்குகளையும், தடங்கல்களையும் விளைவிக்கும். ஆனால், உமது உறுதியான மனோ வலிமையாலும், இடைவிடாத உழைப்பாலும் இவைகளைத் தவிர்க்கவும், கடக்கவும் முடியும். நீர் ஈடுபடும் நடவடிக்கைகள் இரு பங்காவதோடு, நீர் திட்டமிடும் காரியங்களில் எதிர்பார்த்த பலனை அடைவதும் சாத்தியமாகும். கோர்ட் விவகாரம் ஏதாவது இருந்தால் உமக்குச் சாதகமாக முடியும். கேந்திரத்திலுள்ள கிரகங்கள், உயர் வட்டாரத்தில் நீர் பழகுவதையும், மிகுந்த செல்வாக்கும், அந்தஸ்தும் உள்ளவர்களின் தொடர்பால் நீர் பயன் பெறுவதையும் குறிக்கின்றன. உமது நெருங்கிய நண்பர்களில் ஒருவர் இம்மாதம் முக்கியமான பாகமேற்பார். அவருடன் எந்தவிதமான பணம் கொடுக்கல் வாங்கல்களையும் தவிர்க்கவும். அபூர்வமான ஒரு உறவினர் நீர் ஆச்சரியப்படும் வகையில் உம்மைச் சந்திப்பார் உமது குழந்தைகள் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற உகந்த மாதமிது. அவர்களைப்பற்றி நீர் சந்தோஷமாக இருக்கலாம். ஜன்ம ராசியில் குரு, கல்யாண பேச்சு வார்த்தையை சுலபமாக்கி வைக்கும்.

பண நிலைமை:—தனாதிபதி உச்சம் பெற்றிருப்பதும், லாபாதிபதி சுக்கிரன் தனது ராசியாலேயே இருப்பதும் பண நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்பதைக் குறிக்கிறது. உமது புது பண விவகார ஈடுபாடுகளில் சாதககரமான புது வாய்ப்பு ஏற்படுவதை குருவின் நிலை குறிப்பிடுகிறது. 2–வது வீட்டு அதிபதி உச்சத்திலிருப்பது திடீர்ப் பணக்காரராகும் திட்டம் இம்மாதம் உருவாவதைக் குறிக்கிறது.

குடும்பமும், சூழ்நிலையும்:—கிரகங்களின் சஞ்சாரம் வீட்டு வாழ்க்கையில் சந்தோஷத்துக்கு ஆதரவாக இருக்கின்றதென்றாலும், 5, 7–ல் பாபக் கிரகங்கள் காரணமாக தொல்லைதரும் சக்திகள் குதிகொள்ளவே செய்கின்றன. நிலத்தில் முதலீடு லாபகரமானது. உணர்ச்சி வசப்பட்டு சச்சரவு தேடிக்கொள்ளாதீர். துரோக நடவடிக்கையாலோ, நன்றி கெட்ட நண்பர்களாலோ எதிர்பாராத நஷ்டமேற்படலாம்.

உத்தியோகம்:—10–ம் வீட்டு அதிபதி உச்சம் பெற்றிருப்பதோடு, 10–லுள்ள சூரியனும் உச்சத்திலிருப்பது, உள்ள உயர்நிலையைக் காப்பாற்றிக்கொள்ள முடிவதோடு, மேலும் மதிப்பு வாய்ந்த உயர் அந்தஸ்தையடைவதையும் குறிக்கிறது. உமது காரியத் திறமையில் மேலதிகாரி முழுக்க முழுக்க மகிழ்ந்து போவார். நிர்வாகப் பொறுப்புள்ள உயர் உத்தியோகஸ்தர்களும், சட்ட சம்பந்தமாகக் கூர்மதிவாய்ந்த வக்கீல்களும் இம்மாதம் மிகவும் மகிழ்ச்சிகரமாக இருப்பதையும், வாழ்க்கையில் வெற்றி பயப்பதாக இருப்பதையும் காண்பர்.

வியாபாரிகள்:—வியாபாரிகள் மிகுந்த ஹேஷ்யபோ முனைவுள்ளவர்களாக இருப்பர். வியாபாரம் அபிவிருத்தியாகும். மேலும் மூலதனத்துடன் புதுக் கூட்டாளிகள் சேர்வர். சனி செவ்வாயைப் பார்ப்பது காரணமாக கூட்டாளிகளிடை சிறு மனஸ்தாபம் காணலாம். வெளி

கிளைகள், அல்லது வாய்ப்புகள் வியாபாரத் துறையில் புதுத்திருப்பத்தை உண்டாக்கும்.

ஏப்ரல் 15 18 19 20 22 25 28, மே. 6 8 10 12 14 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 14 16 21 23 27 30; மே 11–நல்ல நாட்களல்ல.

# சிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல்பாதம் முடிய

தேக நலன் பற்றிய கவலை, சிணுங்கவைக்கும் சூழ்நிலை, உத்தியோக நலன் ஆகியவைகளைக் குறிப்பதாக இருக்கிறது, இம்மாத கிரக அமைப்பு. லக்னத்தை செவ்வாய் பார்ப்பதும், குரு, சனி, ராகு ஆகியவற்றின் ஸ்தான விசேஷமும், உமது பொது நலனைப்பற்றிய கவலையை உண்டாக்கும். 9–ம் வீட்டின் மூலம் சூரியகதி, உமது எதிர்காலத் திட்டங்களையும், தூரப் பயணத்தையும், புதுத் திட்டங்களையும், சட்ட விஷயங்களில் உமது கவலையையும், செலவை அதிகரிக்கும் எதிர்பாராத விஷயங்களையும், தற்போதைய வாழ்வைப் பற்றிய இருண்ட நோக்கையும், கடைசியாக உமது அடிப்படை ஆத்மீக உணர்வையும் வற்புறுத்துவதாக இருக்கிறது. மிகுந்த உணர்ச்சி வசப்படுதலும், அதன் காரணமாக தேகம் உஷ்ணமடைந்து நரம்புத் தளர்ச்சியும் ஏற்படும். ஆதாரமற்ற எண்ணங்களும், பிறர் கருத்துக்கே பிராதான்யமும் ஏற்படலாம். 10–ல் சுக்கிரனால் பெருந்தலைகளுடன் தொடர்பு ஏற்பட்டு, அவர்கள் மூலம் தொழில் அல்லது உத்தியோகத் துறையில் ஓரளவு பயனடையலாம். புதியதொரு வாய்ப்புக்கு உரிய காலம் நெருங்குவதையும், வெளியார், உறவினர் ஒருவரின் உதவியால் அதில் நீர் மிகுந்த கவனம் செலுத்துவதையும் ஏப்ரல் 25–ந் தேதி சம்பவிக்கும் பௌர்ணமி குறிக்கிறது. உம்மால் சிலருடைய வாழ்க்கை விவகாரங்களில் தேசீய, உலக சம்பவங்கள் கவனத்துக்கு உரியவைகளாக இருக்குமாதலால், அவற்றில் மிகுந்த அக்கறை இருக்கும். விரைவான அபிவிருத்திகள் ஏதும் காணப்படவில்லையென்றாலும், எதிர்பார்க்கும் எந்த சம்பவத்துக்கும் தயாராகவும், புத்திசாலித்தனமான தீர்க்கதிருஷ்டியுடனும் நடந்துகொள்ள வேண்டும். உமது உத்தியோக சம்பந்தமாக நீர் தொடர்புகொள்ள நேருபவர்களோடும், நீர் மேற்கொண்டுள்ள காரியத்திலும் தப்பபிப்பிராயத்துக்கும், மனஸ்தாபத்துக்கும் இடமில்லாமல் செய்யவும்.

பண நிலைமை:—மிகுந்த பண ஏற்றத்தாழ்வுகளும், உணர்ச்சி வசப்பட்டு ஏற்கப்படும் எதிர்பாராத, அவசியமற்ற செலவுகளும் காணப்படுகின்றன. ஆனால், உமது கடமைகளை நிறைவேற்றுவது சுலபமாகவே இருக்கும். சிலரது விஷயத்தில் தாற்காலிகமாகக் கடன் வாங்குவது தவிர்க்க முடியாததாக இருக்கலாம்.

குடும்பமும், சூழ்நிலையும்:—பாபக் கிரகங்களின் பார்வை குடும்ப வட்டாரத்தில் உமது மன உளைச்சலைக் குறிக்கிறது. இன்பம் நிறைந்த வாழ்க்கை நடத்துவதற்குரிய எல்லா வகை வசதிகளும் உமக்கு இருக்கக்கூடுமானாலும், தற்கால வாழ்க்கைச் சூழ்நிலைகள் குடும்ப வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சந்தோஷங்களை அனுபவிப்பதற்கு மாறாகவே இருக்கின்றன. சிலரது விஷயத்தில் முதலீடு சாத்தியமே. திருமண வைபவம் ஏதாவது நிகழலாம். மாத இரண்டாம் பாதியில் உயர் வட்டாரத்திலிருந்து புது நண்பர்கள் உம்மை நாடுவர்.

உத்தியோகம்:—பாபக் கிரகங்களின் பார்வைகள் மிகுந்த வேலைச் சுமைக்கு ஆளாகியிருப்பதைக் குறிக்கின்றன. மேலதிகாரியின் நல்லெண்ணத்திற்கு வெகுவாகப் பாத்திரமாகியிருப்பதால், உத்தியோகத் துறையில் விரும்பத்தக்க மாறுதலை எதிர்பார்க்கலாம். சாத்தியமானவரை பணத்தைக் கையாள்வதைத் தவிர்க்கவும். இன்றேல் நிதி

வியாபாரிகள்:—வெற்றிகரமாக ஹேஷ்யம் செய்யக் கூடிய முறையில் இருக்கும் வெளிநாட்டு வியாபார மொன்றே ஊக்கமளிக்கக்கூடியதாக இருக்கிறது. உள் நாட்டு வியாபாரம் அவ்வளவு ஊக்கமளிப்பதாக இல்லை. பங்குகளும், கடன் பத்திரங்களும் வியாபாரிகளின் கவனத்தைக் கவரும். ஹேஷ்ய பேரம்—குறிப்பாக பங்குகள் பற்றி—வியாபாரிகளைக் கஷ்டத்துக்கு ஆளாக்கலாம்.

ஏப்ரல் 18 19 20 27; மே 2 8 12 14—நல்ல நாட்கள்.

ஏப்ரல் 16 21 23 30; மே 5 9 10—நல்ல நாட்களல்ல.

# கன்னியா ராசி

உத்திரம் 2-ம் பாதம் முதல்
ஹஸ்தம், சித்திரை
2 ம்-பாதம் முடிய

திருப்தியற்ற உடல்நிலை, தொல்லை தரும் தொலை தூரப் பயணம், குடும்ப விவகாரப் போக்கு குறித்து ஏமாற்றமும் ஆத்திரமும் மேலிட்ட பதட்டமான மனப்பாங்கு, வீட்டுக் காரியங்களில் சிரத்தை, சகோதர—சகோதரிகளுடன் உறவு, மனைவியின் தேகாரோக்கியத்துக்கு திடீரென பாதகம் அல்லது குடும்பத்தில் சௌஜன்யம் ஓங்குதல் ஆகிய 8ம் வீட்டு விவகாரங்கள் இம்மாதம் வலியுறுத்தப்பெறுகின்றன. சனிக்குச் சுக்கிரன், குரு பார்வையிருப்பதால், மனைவி குழந்தைகளின் க்ஷேமாபிவிருத்திக்கான ஏற்பாடுகளையும், லாபகர சொத்து கொடுக்கல்—வாங்கல்களையும் திட்டமிட்ட பிரகாரம் நிறைவேற்ற இயலும். உமது சுய முயற்சியும், கற்பனை திறமையும் புதிய வழிதுறைகளை வெற்றிகரமாக ஆராய்ந்து பலன் காணப் பயன்படும். பொதுவாக, மேலிடம் அல்லது பெரியவர்களின் தயவால் உமது எண்ணங்களை ஈடேற்றிக்கொள்ள இயலும். 5-ல் செவ்வாய் காரணமாக பரபரப்பும் அவசர புத்தியும் மேலிட்டு, உமது முன்னேற்றத்தை பாதிக்கும் வகையில் ரகசியங்களைக் கக்கிவிடக்கூடும். வயிற்றுக்கோளாறு, உப்புசம், எரிச்சல் காரணமாக உமது உடல்நிலை சிர்கெடுதல், குழந்தைகளின் ஆரோக்கியக்குறைவு ஆகியவற்றால் மன நிம்மதியிராது. 29-ந் தேதி சுக்கிரன் பத்தாம் வீட்டில் பிரவேசிப்பதிலிருந்து அன்றாட வாழ்க்கையில் புதிய தெம்பும் உற்சாகமும் ஏற்படும். பண விவகாரம் பற்றிய பிரச்னைகளைத் தீர்க்க வழிகாண இயலும்.

பண விவகாரம்:—நிதி வசதிக்கு சுக்கிரனும் குருவும் உத்தரவாதமளிப்பினும், 12-க்கு பாபிகளின் பார்வையால் செலவு பெருகி, கஷ்டம் ஏற்படலாம். பிற்பாதியில் நிலுவைகள் வசூலாகி, தஸ்தாவேஜு சம்பந்தமான விஷயங்கள் அநுகூலமாக முடிவுறும். பொதுவாக இம்மாதம் அதிக சிரமமின்றி பொறுப்புகளை நிறைவேற்றிவிடலாம்.

குடும்பமும் சூழ்நிலையும்:—நான்காம் வீட்டிற்கு இரு மருங்கிலும் பாபிகள், சுமுக சூழ்நிலைக்கு ஏதுவாக இல்லை. சுக்கிரன், குரு நிலை காரணமாக, சமூகப் பழக்க வழக்கங்கள், ஈடுபாடுகளும், குடும்பத்தில் மகிழ்ச்சியும், வீட்டில் வசதிகளும் பூரணமாக மறுக்கப்படா. பகையாளிகளையும், துவேஷிகளையும் அண்டவிட வேண்டாம். நிலத்தில் முதலீடு செய்ய இது நல்ல தருணம். சுப காரியமும் நேரலாம்.

உத்தியோகம்:—ஆபீசில் ஆதரவு காண்பதோடு பிற்பாதியில் உத்தியோக உயர்வும் இருக்கலாம். மேலதிகாரியின் சிலாகிப்பு நடிக்கும். முதலாளி—பாட்டாளி இரு சாராரிடமும் நல்ல பெயர் எடுக்கலாம்.

வியாபாரிகளுக்கு:—ஹேஷ்ய பேரத்திற்கு இது முக்கிய மாதமென்றாலும், மித மிஞ்சிய நிதானமற்ற போக்கால் எதிர்பாராத நஷ்டத்தை செவ்வாய் கொடுக்கும். கூட்டு வியாபாரம் தழைத்தாலும் கூட்டாளிகளிடையே சௌஜன்யமிராது.

ஏப்ரல் 15 19 27 மே 1 8 12 13 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 16 18 21 23 30 மே 1 3 5 10 நல்ல நாட்களல்ல.

# துலா ராசி

சித்திரை 3-ம் பாதம் முதல்
சுவாதி, விசாகம் 3-ம் பாதம்
முடிய

வெளியாருடன் தொடர்புள்ள முக்கிய காரியங்கள்—குறிப்பாக விவாக விவகாரம், போட்டி, சமூக பொது விவகாரங்களில் எதிர்ப்பு போன்றவை இம்மாதம் வலியுறுத்தப்படுகின்றன. கேந்திரத்திலுள்ள கிரகங்கள் பலதரப்பட்ட அலுவல்களைக் குறிக்கின்றன. நண்பர்கள் ஆகர்ஷிக்கப்படுவர்; அவர்களில் சிலரிடம் பொறுமை குடிகொண்டிருக்கும். கல்வி, கடிதப் போக்குவரத்து, பத்திரிகைத் தொழில், அண்டை அயலாருடன் மனஸ்தாபம் ஆகியவை முக்கியமாகத் திகழும். 4-ல் செவ்வாய்க்கு இரு முக்கிய கிரகங்களின் பார்வையால், சூழ்நிலையில் மாறுதல் நேரலாம். நிறைவேற்றத்திற்காகக் காத்திருக்கும் விஷயங்கள் இம்மாதம் இனிது முடிவுறும். சுக்கிரனுக்கு சனியின் பார்வையால் முதல் பாதி மந்தகதியிலிருப்பினும், பிற்பாதியில் எண்ணங்களைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். பிறருடைய தவறான செயல்களென நீங்கள் கருதுபவை குறித்து ஆத்திரமும், சகிப்பின்மையும் மீறிடச் செய்யும் 7-ல் சூரியனுக்கு செவ்வாயின் பார்வை. கருத்து வேற்றுமைக்கு உள்ளானவருடன் பேச்சிலும், நடத்தையிலும் கோபம் தொனிக்கும். 25-ந் தேதி பௌர்ணமி, வெற்றியளிக்கும் சுப சூசகம். அந்நியரின் வாக்குறுதிகளுக்கும், இனிய பேச்சுக்கும் பஞ்சமிரா; ஆனால் அவை காரியகாமாவது துர்லபம். பொதுவாக இம்மாதம் உணர்ச்சி மேலிட்டு, ஏமாற்றங்கள் அளிக்குமே யொழிய, யதார்த்த நிலைக்கு ஒவ்வாதது.

பண விவகாரம்:—தன, லாப ஸ்தானாதிபதிகளின் கேந்திர நிலை, பண வசதியில் அபிவிருத்திக்கும் கல்வியில் வெற்றிக்கும் நல்ல அறிகுறியாகும். சனியின் பார்வையால் வீட்டில் செலவு கட்டுமீறி, முடை அதிகரிக்கும். புதிய வருவாய்த் துறைகள் ஏற்படலாம். கைமாற்று சுலபமாகக் கிடைக்கும். கடனாளிகள் மேலும் கடன் வாங்க நேரலாம்.

குடும்பமும் சூழ்நிலையும்:—கேந்திரத்திலுள்ள கிரகங்களால் அவ்வப்போது எரிச்சலும் சௌஜன்யமின்மையும் ஏற்படலாம். சுபர்களின் கடாக்ஷத்தால் மகிழ்ச்சி நிலவ இடமிருக்கிறது. தொலைதூரப் பயணம் சம்பவிக்கலாம். விவாகப் பிராப்திக்கும் அறிகுறி காணப்படுகிறது.

உத்தியோகம்:—பதவி உயர்வு, ஆபீசில் அதிக ஆதரவு, உற்சாகம் ஆகியவற்றை கிரக அமைப்பு சுட்டுகிறது. மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமையைத் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கல்களும் இம்மாதம் வேண்டாம். கடுமையாக உழைப்பினும், முதலாளியைத் திருப்தி படுத்துவது எளிதல்ல. சகாக்களும் உமக்கு எதிராக அவர் மனதைக் கலைப்பர்.

வியாபாரிகளுக்கு:—லாபம் தரும் வியாபார மாதம் இது. முன்னேற்றத்துக்கு எதிர்ப்பும் இடையூறுமிருப்பினும் வர்த்தகம் ஸ்திரமாகும். கூட்டாளிகளிடையே மனஸ்தாபம் ஏற்படலாம்.

ஏப்ரல் 15 16 18 19 20 22 25 27 மே 3 8 10 12 14 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 14 21 23 30 மே 5 10 11 13 நல்ல நாட்களல்ல.

# விருச்சிக ராசி..

விசாகம் 4-ம் பாதம் முதல்,
அனுஷம் கேட்டை முடிய

நற்பலனளிக்கும் கிரக சேர்க்கை, இம்மாதத்திய விசேட அம்சமாகும். 3-ல் ராசியாதிபதிக்கு குருவின் கடாக்ஷமும், சனியின் திருஷ்டியும் புதிய வாழ்க்கை முறையை வகுத்துக்கொள்ள அனுகூலமாயுள்ளன. உமது

துறையிலுள்ளோருக்குப் பெரும் சவாலாகத் தோன்றியுள்ள வாய்ப்புகள், பிணைப்புகள் மூலம் இன்றைய அபிலாஷைகளும், ஸ்திரத்தன்மை நாடும் எண்ணங்களும் தீவிரமாக மாறுதல் அடையக்கூடும். செவ்வாய்க்கு குரு பார்வை காரணமாக யாரும் துணிந்திராத புதியவழியில் உமது சிந்தனை, செயல் அல்லது வியாபாரத்தை–உமக்கே உரித்தான முறையில்–நடத்திக்காட்ட ஆர்வம் மிகும். ஆகவே, உத்தியோகத் துறையில் மகோன்னத காலத்திற்கு இது வித்திடும் மாதம். தன, புத்தி ஸ்தானாதிபதி குரு, மேலதிகாரிகள் பெரியார்களின் ஆதாரவைப் பெற்றுத்தரும். வருங்கால உயர்வுக்கு அவர்களே உம்மைத் தயார் செய்வர். சரியான தருணத்தில், சரியான இடத்தில் நீங்கள் தலை கொடுப்பதன் மூலம் அவர்களுடைய முழு ஆதாரவையும் பெற்றுப் பயன் அடையலாம். உத்தியோக நிமித்தம் பிரயாணமும் நேரலாம். சிலருக்கு விவாகம் நேரலாம். கவர்ச்சிகரமான ஆனால் நிலையற்ற சிநேகம் ஏற்படக்கூடும். இன்ஷூரன்ஸ், வக்கீல்கள், புதிய கம்பெனி ஆரம்பிப்போர் ஆகியோர் பிராபல்ய மடைவர். வியாஜ்யத்தில் சுலப ஜெயம் காணலாம். சகோதரர்களிடையே பரஸ்பர ஸௌஜன்யம் நிலவும்.

பண விவகாரம்:–9–ல் குரு, நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மையைக் குறிக்கின்றது. மேலிடத்தார், அல்லது இன்ஷூரன்ஸ், அல்லது பணக்கார பந்துவிடமிருந்து பணம் வரலாம். ஆனால், செலவும் கட்டுங்கடங்காமல் போகிறது.

குடும்பமும் சூழ்நிலையும்:—சௌஜன்யத்திற்கு வீட்டில் குறைவில்லையென்றாலும் வெளியிடத்து. அலுவல்களில்தான் நாட்டம் இருக்கும். குழந்தைகளில் ஒன்றின் முன்னேற்றம் திருப்தியும் திகைப்பும் அளிக்கும். சொத்தில் முதலீடு இம்மாதத்திய முக்கிய நிகழ்ச்சியாம். சந்தேகாஸ்பதமான தஸ்தாவேஜியில் கையொப்பமிடவேண்டாம்.

உத்தியோகம்:—10–ம் அதிபதி உச்சமடைந்து, அந்த ஸ்தானத்துக்கு அருகே குரு உச்சமாயிருப்பதால், முதலாளியின் உதவி மூலம் விரும்பிய உயர்வு கிடைக்க ஏதுவாகும். சகாக்களுடன் போட்டி, பொறாமை, தகராறுகளைத் தவிர்க்கவும். சனியின் பார்வையால் முன்னேற்றம் சிறிது தாமதமாகலாம். கடும் உழைப்பும், பொறுப்பும் காத்திருக்கின்றன.

வியாபாரிகளுக்கு:—வர்த்தகம் வெகுவாக முன்னேறும். வெளிநாட்டு வியாபாரம் வெற்றியளிக்கும். கூட்டு வியாபாரம் தழைக்கும். புதிய கூட்டாளிகள் சேரக்கூடும். கடிதப் போக்குவரத்தால் எதிர்பார்த்த பலன் கிட்டும்.

ஏப்ரல் 15 17 18 19 20 27 28 மே 1 8 9 12 14 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 14 21 23 30 மே 5 9 10 நல்ல நாட்களல்ல.

# தனுர் ராசி

மூலம் பூராடம். உத்திராடம்
முதல் பாதம் முடிய

ராசிக்கு இரு புறமும் மூன்று பாபிகள்; ராசியாதிபதி 8–ல் உச்சம் ஆகியவற்றால் எடுத்த காரியங்களில் இடையூறும், அதனால் எரிச்சலும், அதிருப்தியும் பதட்டமும் மேலிடுவது இம்மாத சாதாரண நிகழ்ச்சியாம். முன்போல் மனோதிடமிருப்பதற்குப் பதிலாக ஒருவித மனக்கிலேசம் காணப்படும். செவ்வாய்க்கு இரு முக்கிய கிரகங்கள் பார்வையால், முன்னைவிட குழந்தைகள்பால் அதிக கவனமும் அதிக நேரம் செலவிடுதலும் அவசியமாகும். தீட்சண்ய கிரகங்கள் இரண்டு நேருக்குநேர் பார்த்துக்கொள்வதால், உணர்ச்சிவசப்பட்டு பேச்சிலும் செயலிலும் நிதானம் இழக்கக்கூடும். விபரீத விளைவுகளைத் தவிர்க்க, ஆரம்ப முதலே கட்டுப்பாடு அவசியம். 9–ம் அதிபதி உச்சமாயிருப்பது, அதிகாரிகளிடமிருந்து ஆதரவும் தயவும் கிட்டச் செய்வதோடு, நண்பர்கள், ஸ்தாபனங்கள், சங்கங்களிடமிருந்து பண வருவாய்க்கும் வழி செய்யும். 11–ம் அதிபதி சுக்கிரன் 6–ல் இருப்பதன் காரணமாக, உறவினரே உமக்கு விரோதமாக பண விஷயத்தில் வேலை செய்வர். புதிய நண்பர்கள் மூலம் வீட்டிலும் வெளியிலும் அனுகூலம் ஏற்படும்.

குரு, சூரியன் உச்சநிலை, சொந்த ஊருக்கு விஜயத்தையோ அல்லது வெகுநாளாகச் சந்திக்காதவர்களைச் சந்திப்பதையோ குறிக்கிறது. பந்துக்களில் ஒருவர் பண உதவியை நாடலாம். சகோதர–சகோதரிகள் போன்ற நெருங்கிய உறவினருடன் நல்லுறவு நிலவாது.

பண விவகாரம்:— தனாதிபதி 12–ல் ராகுவுடனிருப்பதும், 2–ல் செவ்வாயும் நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மைக்கு உத்திரவாதமளிக்கா. குடும்பம், உறவினர், குழந்தைகளுக்காக அளவுக்கு மீறி செலவு செய்ய நேரிடும். லாபாதிபதி தனாதிபதியைப் பார்ப்பதால் எப்படியாவது வருவாயைத் தேடிக்கொள்ள இயலும். 2–ல் செவ்வாய் இல்லாதிருந்தால் இம்மாதம் அனாயச தனப்பிராப்திக்கு இடமிருந்திருக்கும். கண் பார்வை சீர்கெட்டு சிகித்சை அவசியமாகலாம்.

குடும்பமும், சூழ்நிலையும்:— 2, 8, 12–லுள்ள கிரகங்கள் சௌஜன்ய குடும்ப வாழ்க்கைக்கு அனுகுணமாயில்லை. ஜாகை மாற்றம் பற்றி ஆலோசிக்கப்படலாம். முயற்சிகளிருப்பினும் முதலீடு எளிதல்ல.

உத்தயோகம்:— ஆபீசில் நிலைமை குறித்து கவலை தோன்றாது. நீங்கள் விரும்பினால், அதிக அதிகாரமோ வேலை மாற்றமோ கிடைக்கலாம். ரகசிய விரோதிகள் சுறுசுறுப்பாயிருப்பர்.

வியாபாரிகளுக்கு:—நல்ல வியாபாரம் காரணமாக வர்த்தகர்களுக்குக் கணிசமான லாபம் கிடைக்கும். விஸ்தரிப்புக்கு இடையூறாகப் பண முடை ஏற்படலாம்.

ஏப்ரல் 14 15 18 19 20 22 27 28 மே 8 11 12 14 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 16 17 19 21 23 25 மே 3 5 10 நல்ல நாட்களல்ல.

# மகர ராசி

உத்திராடம் 2-ம் பாதம் முதல்
திருவோணம், அவிட்டம்
2-ம் பாதம் முடிய

உத்தியோக வேட்டை, பதவி உயர்வு, சுய முயற்சி, வருமானப் பெருக்கம், நல்ல ஜாகைக்கு மாற வாய்ப்பு ஆகியவற்றுக்கு அனுகூலமாக இம்மாதத்திய சாதக கிரக அமைப்பு இருக்கிறது. உமது அலுவல்களில் முதல் வழி செல்லப் போதிய ஊக்கமும் தைரியமும் செவ்வாயும் குருவும் அளிக்கும். பந்துஜன உறவும், குடும்பப் பிரச்னைகளும் இடையறாது உமது கவனத்தைக் கவர்ந்து, சௌகரிய சூழ்நிலைக்கு ஏதுவான வகையில் தீர்வு காணப்படும். பொதுவாக குழந்தைகளால் கவலை ஏற்படும். மூன்று உச்ச கிரகங்களும், விரிவான துறைகளில் சுறுசுறுப்பாயிருக்கச் செய்வதோடு உமக்கு உரித்தான வழியில் செயலாற்றவும் வகை செய்யும். உத்தியோகத் துறையைப்போல சமூக, குடும்ப விவகாரங்களிலும் தீவிர கவனமிருக்கும். எதிர்ப்புகளிடையே நீங்கள் முன்னேற இயலுமாதலால், சோர்வுணர்ச்சியை விரட்டி தெம்பை மீட்டுக்கொள்ளலாம். விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளரும் பிரமிக்கத்தக்க சாதனைகள் குறித்துப் பெருமையடையலாம். இவை பிறரால் அங்கீகரிக்கப்பட்டு சீக்கிரமே அதனால் அனுகூலமும் கிடைக்கும். லட்சிய சித்திக்கு, செல்வாக்கு மிகுந்த நண்பர்கள் உதவி புரிவர். வீட்டில் விவாகம் நடைபெறலாம். நிதானத்தைக் கையாண்டு பதட்டத்தைத் தவிர்க்கவும். சுற்றியுள்ளவர்கள் பேச்சைக் கேட்டு தீராலோசியாமல் நடப்பதால் பாதகம் விளையக்கூடும். காதல் புரிய விசேஷ வாய்ப்புகள் கிடைக்கலாம். ஆனால் அவற்றை அவ்வளவாக நம்பி இறங்க முடியாது.

பண விவகாரம்:— இம்மாதம் நிதி வசதிக்குத் தடங்கலிராது. நட்பும், பண விஷயங்களும் பிணைந்துகொண்டிருக்கின்றன. புதிய வருவாய்த் துறைகள் ஆராயப்படும். கடும் செலவு காத்திருக்கிறது. சனி–செவ்வாய் பரிவர்த்தனையால் திடீர் தனலாபம் சித்திக்கலாம்.

குடும்பமும், சூழ்நிலையும்:— தொல்லைகள் மலிந்த குடும்ப வட்டாரத்தில் சௌஜன்ய வாழ்க்கைக்கு முயற்சி செய்வீர். செவ்வாயின் நிலையால் மனைவியின் உடல்நிலை பாதிக்கப்படுவதோடு, சண்டை சச்சரவு மனஸ்தாபங்களுக்கும்

**உத்தியோகம்:—** ஜீவனஸ்தானாதிபதி சுக்கிரன் ஸ்வக்ஷேத்திரமாயிருப்பதால், முதலாளியின் அபிமானத்துக்குப் பாத்திரமாகலாம். முன்னைவிட ஆபீசில் பொறுப்பும், நம்பிக்கையும் அதிகரிக்கும். பணம் உம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால், முன்னைவிட கண்காணிப்பும், உஷாரும் அவசியமாகிறது. மாத பிற்பாதி அவ்வளவு சுகமாயிராது. இடமாற்றம் பற்றிய யோசனை வெற்றிகரமாக நிறைவேறலாம்.

**வியாபாரிகளுக்கு:—** வியாபார முன்னேற்றத்திற்கும், விரிவான அபிவிருத்திக்கும் ஆதாரமாகக் கடிதப் போக்குவரத்து விளங்கும். வெளி நாட்டு வியாபாரம் அதிக லாபம் தரும். கூட்டு வியாபாரம் தழைக்கும். பங்குகள், பத்திரங்களிலிருந்து வருமானம் உண்டு.

ஏப்ரல் 15 17 18 20 22 27 28 மே 3 6 8 9 12 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 21 23 25 மே 1 5 10 11 நல்ல நாட்களல்ல.

# கும்ப ராசி

அவிட்டம் 3-ம் பாதம் முதல்
சதயம், பூரட்டாதி
3-ம் பாதம் முடிய

பிரதான கிரகங்கள் உங்களுக்கு நன்மை பயப்பதாக அமையவில்லை. உச்சமடைந்திருக்கும் குருவும், செவ்வாயும் நிதி, உத்தியோக, குடும்ப விவகாரங்களில் பரபரப்பான நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன. பிறருக்காகவும் இவ்வாறு அலுவல்களில் திளைக்கவேண்டிவரும். ஆனால், 12-ல் செவ்வாய்க்கு பிற கிரகங்களின் பார்வையால், எடுத்த காரியங்கள் சித்திப்பது கடினமே. இதனால் மனநிம்மதி பறிபோகும். பதட்டம் மேலிட்டு, சக ஊழியர்களின் அதிருப்திக்குப் பாத்திரமாகலாம். உத்தேசித்த லட்சிய சித்திக்குப் பொறுமையையே பூஷணமாகக் கொள்ளவேண்டும். கடிதப் போக்குவரத்து உமது பிரச்னைகளை—குறிப்பாக பண சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்க்க உதவிகரமாயிருக்கும். தூர இடத்துக்குப் பிரயாண திட்டத்தை வெற்றிகரமாக வகுக்கலாம். சூரியனின் ஸ்தான விசேஷத்தால் உயர் வட்டாரப் பழக்கமேற்பட்டு அதனால் அனுகூலமும் உண்டாகும். சிப்பந்திகள், முதலாளிகளால் நன்கு நடத்தப்படமாட்டார்கள். பொதுப்பணம் உமது வசமிருப்பின் அதன் சிக்கலான நிர்வாகத்தில் சிக்கித்தவிக்க வேண்டிவரும். விவாகப் பேச்சுகளை சுலபமாக முடிக்கலாம். தொலைதூரச் செய்தி உற்சாகமூட்டும். ஒரு விவாகம் சம்பந்தமாகவோ, அல்லது மனைவி மூலம் குடும்பத் தகராறு சம்பந்தமாகவோ பெருத்த ஏமாற்றமும், வேதனையும் ஏற்படலாம்.

**பண விவகாரம்:—**தனாதிபதி, அந்த ஸ்தானத்திற்கு திரிகோணத்திலிருப்பது, செலவுக்குத் தேவைப்படும் நிதி கிடைக்க உதவிகரமாயிருக்கும். ஆனால் 6-லிருப்பதால் வருமான ஏற்றத்தாழ்விருக்கும். அநாவசிய சிக்கல்களும் காணப்படுகின்றன. கடும் செலவு ஏறுகிறது.

**குடும்பமும், சூழ்நிலையும்:—** முக்கிய கிரகங்கள் மகிழ்ச்சிகர வாழ்க்கைக்குக் குந்தகமாயிருப்பினும் சூரியன் சுக்கிரன் நிலையால் ஓரளவுக்கு வாழ்க்கையில் உல்லாசமிருக்கும். முதல் பாதியில் வாஹனம் குறித்து கவலை ஏற்படலாம். பிற்பாதி சுமாராயிருக்கிறது. முதலீடும் சாத்தியமே.

**உத்தியோகம்:—** 10-ல் ராகுவுடன் வீற்றிருக்கும் ராசியாதிபதி சென்றதை விட இம்மாதம் அதிக சுபர்களின் பார்வை பெறுவதால், எவர் தயவை நீங்கள் நாடுவீர்களோ அவரிடமிருந்து அனுகூலம் பெற இயலும். ரகசிய விரோதிகளின் சதியாலோசனை குறித்து ஜாக்கிரதையாயிருத்தல் அவசியம்.

**வியாபாரிகளுக்கு:—** ஹேஷ்ய பேரங்கள் குறித்து ஏற்படும் தொல்லைகளை 7-ம் அதிபதி தீர்த்துவிடும். கடும் செலவு எதிர்ப்படுகிறது. புதிய ஈடுபாடுகள் பத்திரமானவை என்று சொல்ல முடியாது. கூட்டாளிகளிடையே தகராறும் அபிப்பிராயபேதமும் நிலவும்.

ஏப்ரல் 15 18 19 22 27 மே 8 9 12 14 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 16 17 21 23 26 30 மே 3 5 10 11 நல்ல நாட்க

# ..மீன ராசி..

பூரட்டாதி 4-ம் பாதம் முதல்
உத்திரட்டாதி, ரேவதி முடிய

பிரதான கிரகங்கள் சாதக நிலையிலிருப்பதால், முன்னைவிட கட்டுப்பாடுகள் குறைவதோடு சொந்தக் கருத்தை அடித்துச் சொல்ல மனோதிடமும் அதிகரிக்கும். மனதுக்கினிய காரியங்கள், பொழுதுபோக்கு; குழந்தைகள், அன்புக்குப் பாத்திரமானவர்களின் ஆசைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம், புதிய அபிலாஷைகள் ஆகியவை வலியுறுத்தப் பெறுகின்றன. மனம் குளிரச்செய்யும் லாபமும், சாதனைகளும் எதிர்பார்க்கப்படலாமெனத் தோன்றுகிறது. ஆனால், கிரக ஆதரவைப் பயன் படுத்துவதைப் பொறுத்திருக்கும் இது. உறவினர், நண்பர், ஒருமனத்தவருடன் சந்தோஷமாகப் பொழுதுபோக்க இது உற்ற காலம். 2-ல் சூரியன், பண விஷயத்தில் அஜாக்கிரதை குறித்தும், சொத்துகளுக்கு நாசம் குறித்தும் எச்சரிக்கையாயிருப்பதை அவசியமாக்குகிறது. கடிதப் போக்குவரத்து, உமது தியாகம், சகோதர-சகோதரி போன்றோர் நலனில் சிரத்தை, சமூகத்தொடர்புகள், உயர் அந்தஸ்திலுள்ளோருடன் பழக்கம் ஆகியவற்றில் இம்மாதம் நிலையான கவனம் செலுத்தப்படும். குருவுக்கு செவ்வாயின் பார்வை, அலுவல்களைக் கவனிப்பதிலும் வெளியாருடன் தொடர்பிலும் பொறுமை, தீர்ந்த அனுபவம், பிரத்யட்ச நோக்கு ஆகியவற்றை பிரதிபலிக்கின்றது. பௌர்ணமியின்போது உருவாகும் கிரக சேர்க்கை காரணமாக, உமது மனதுக்குப் பிடித்த விஷயம் குறித்து புனர் மதிப்பீடு அல்லது பழைய ஆர்வம் ஏற்படலாம். ரஸமான அனுபவங்கள், மகிழ்ச்சிகர நிகழ்ச்சிகள் பற்றிய எதிர்பாராத இனிய தகவல்கள், நல்ல மனபக்குவம், மனநிம்மதி ஆகியவற்றை எதிர்பார்க்க கிரக அமைப்பு உத்திரவாதமளிக்கின்றது. நண்பர்களிடமிருந்து இம்மாதம் பெருமளவில் சகாயம் கிடைக்கும். உமக்குப் பெயரும் புகழும் பெற்றுத்தரும் அலுவல்களில் ஊக்கமூட்டி பக்கபலமாக அவர்கள் நிற்பர்.

**பண விவகாரம்:—** தனாதிபதி உச்சமடைந்து தனது வீட்டைப் பார்ப்பதாலும், முக்கிய கிரகங்களின் பார்வை பெற்றிருப்பதாலும் பண வசதிக்குப் பஞ்சமிராது. புதிய அலுவல்கள் மூலம் உத்தியோக முன்னேற்றத்திற்கு குரு சாதகமாயிருக்கிறது.

**குடும்பமும், சூழ்நிலையும்:—** வீட்டில் மகிழ்ச்சியும் சௌஜன்யமும் நிலவும். வாழ்க்கையை ருசிமிக்கதாக்கும் உறவினர்களும், விருந்தாளிகளும் வந்து சேருவர். தாயின் உடல்நிலை கவலையளிக்கக்கூடும். வீட்டுப் பிரச்னை பற்றியும் ஆலோசிக்கப்படலாம்.

**உத்தியோகம்:—** ஜீவனஸ்தானாதிபதி உச்சமாயிருப்பதால் ஆபீசில் இடையூறுகளிரா. இரு பக்கங்களிலும் பாவிகளிருப்பது, குறிப்பிட்ட முக்கியபதவிக்கு நீங்கள் பிரயத்னம் செய்வதைக் குறிக்கிறது. பொறுமைமிக்க சகாக்களின் போட்டியும், ரகசிய விரோதிகளின் விஷமமும் காணப்படுகின்றன. ஆனால், ராசியாதிபதியின் நிலை, அவையனைத்தையும் முறியடித்துவிடும்.

**வியாபாரிகளுக்கு:—** நல்ல லாபத்துடன் தைரியமாக ஹேஷ்ய பேரங்களில் இம்மாதம் ஈடுபடலாம். முதல் பாதியில் கடிதப் போக்குவரத்து மூலம் வர்த்தகத் தொடர்புகளேற்பட்டு, வியாபாரமும் வெளியில் பெருகும். கூட்டு வியாபாரம் ஓங்கும்.

ஏப்ரல் 15 16 18 19 22 27 மே 3 8 9 12 நல்ல நாட்கள்.

ஏப்ரல் 21 23 28 30 மே 1 5 10 13 நல்ல நாட்களல்ல.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
நெ. 5, வாஸுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை—5.

முத்தலம் பணியும் முடியுடை வேந்தன்
புத்திர சோகம் போக்கிடவே
இத்தரை மீதி லிராமனை யருளிய
**சித்திரைச் செல்வி!** வாழிய நீ!

அன்பை யளித்தாய் அண்ணல் புத்தனுல்;
அன்ன மளித்தாய் அமுத சுரபியால்;
உன்னை நினைத்தால் உலகு செழிக்குமால்
அன்னை **வைகாசீ!** வாழிய நீ!

பொன்னிறத் துளிரால் பொலிவுறுங் காவில்
தென்ற லெனுந் திருத் தேரேறி
கன்னல் மாரன் ரதியுட னுலவுந்
தண்மதி **ஆனீ!** வாழிய நீ!

காடொடு மேடும் கலப்பையி னுறவால்
நீடுரு மணிகள் நிறைத் திடவே
பாடிடும் உழவர் பயன்தரும் 'பட்டம்'
தேடிடும் **ஆடீ!** வாழிய நீ!

கண்ணனைப் போற்றித் திருவினை வாழ்த்திக்
கணபதி ராயன் கழல் வணங்கி,
பண்ணெடு பரதம் பயின்றிட வளரும்
வண்ண **ஆவணீ!** வாழிய நீ!

இன்பமும் பொருளும் இயல்இசைத் தமிழும்
எங்கணும் பரவித் தழைத் தோங்க
ஒன்ப திரவினுல் உலகினை யாளும்
உயர் **புரட்டாசீ!** வாழிய நீ!

துயரெனும் நரகா சுரன் அழிவாலே
தோன்றிய மகிழ்வின் நீ ராட்டி,
அயர்வற நிதியம் நிறைவொடு பொழியும்
**ஐப்பசி** நங்காய் வாழிய நீ!

மலைபுனல் கோயில் மனைகுடில் யாவும்
மணி விளக்காலே அணி அணியாய்க்
கலையொளி வீசும் கலங்கரை விளக்கே!
**கார்த்திகைத்** தாயே! வாழிய நீ!

பாவ மெனும் பே ராழியை நீந்த
பரம்பொருள் காட்டும் அருள் மொழியாம்
மாபெரும் 'கீதை' மன்னுயிர்க் கீந்த
**மார்கழி** மாதா! வாழிய நீ!

கார் வளத்தாலே கதிர்வளம் பெருக!
நீர் வளத்தோடு ஆநிரை பெருக!
போர்களும் புயல்களும் புவியினில் ஒழிய,
பொங்கிடும் **தையே!** வாழிய நீ!

பேசிடு மொழியும் புரிந்திடு செயலும்
பிழையில வாகி நலமுறவே
மாசுக ளில்லா பூசனை யேற்று
மலர்ந்தனை **மாசீ!** வாழிய நீ!

சங்கரன் பிரமன் சார்ந்தவிண் ணமரர்
பொங்கிடுங் களிப்பால் புகழ் பாட
மங்கை செந்திருவின் மணவினை முடித்தாய்!
மங்கள **பங்குனி!** வாழிய நீ!

—பி. அநுமந்த ராவ்.

# மோகமுள்

தி. ஜானகிராமன்



பேசும்போது எவ்வளவு நடுக்கம்! எவ்வளவு பயம், கலவரம்! அதற்கு நேர் மாருக இப்போது உடலும், உள்ளமும் லேசாகி மிதக்கின்றன. இதை முதலில் அப்பாவுக்கு எழுத வேண்டும். ரங்கண்ணு ஏற்றுக்கொள்வாரோ மாட்டாரோ என்று சந்தேகமும், அச்சமும் வேதனைப்படுத்தினதற்கெல்லாம் 'என்னிக்கடா வரே குழந்தை?' என்று, அவர் தாளுகக் கேட்டது எத்தனையோ மடங்கு ஈடு செய்துவிட்டது. குழந்தைமாதிரிதான் இருந்தார் அவர். குழந்தையைப்போலக் கள்ளமில்லாத சிரிப்பு, எதைப் பார்த்தாலும் ஆச்சரியம்! சங்கீதத்தைத் தவிர அவருக்கு எதுவும் வியப்பாகத்தான் இருக்கும்போலிருக்கிறது. தியாகராமனை நிறையப் படித்து, விவேகம் பெற்றவர் என்று அவர் புகழ்ந்ததும், 'கொக்குக்கு ஒன்றே மதி' என்று தன்னைத் தாழ்த்திக் கொண்டதும், 'மேலுக்குச் சொன்னதில்லை' என்று அந்தத் தொனியும், கண்ணும் வெட்ட வெளிச்சமாகச் சொல்கின்றன. சங்கீதத்தைத் தவிர, வேறு ஒன்றும் தெரியுமென்று அவர் காட்டிக் கொள்ளவில்லை. தெரியாமலிருப்பது குறையென்று நினைப்பதாகவும் அவர் காட்டிக்கொள்ளவில்லை. இந்த ஒன்றையே நாம் சரியாகச் செய்தால் போதும், நமக்கு வேறு எதற்கும் பொழுது இல்லை, தேவையில்லை என்ற உறுதி அவருக்குத் தீர்மானமாக இருக்கும்போலிருக்கிறது. தன்னந்தனியாக அந்தச் சிறு வீட்டின் நடையின் ஒட்டுத் திண்ணையில், சிறு பெட்ரூம் விளக்கின் பழுப்பிருட்டில் அவர் உட்கார்ந்திருந்த தோரணையையும், யாரையும் எதிர்பார்க்காததுபோன்ற தன்னம்பிக்கையையும் பார்க்கும்போது, இந்த உறுதி நிச்சயமாக அவருக்கு இருக்க வேண்டுமென்றுதான் தோன்றுகிறது.

அப்பாமாதிரிதான் இருப்பாரோ என்னமோ இவரும்? அப்பாவுக்கும் அவர் படிப்பு, பஜனை, பிரார்த்தனையைத் தவிர ஒன்றும் தெரியாது. கூப்பிட்ட இடத்திற்குப் போவார். கூப்பிட்டவர்கள், எப்படிக் கூப்பிட்டார்கள், கூப்பிட்ட குரல், முக பாவம் எப்படியிருந்தது என்றெல்லாம் யோசிக்கமாட்டார். தாளுக வலுவில் யாரையும் போய்ப் பார்ப்பதுமில்லை. ஆனால், 'தான்' என்கிற நினைப்பும் கிடையாது. நாமாகப் போய்ப்பார்த்தால், கூப்பிடாமல் போனால், ஏதாவது தவருக நினைத்துக்கொண்டுவிடப் போகிருர்களே என்ற பயம்தான். கூப்பிடாத போதே வந்து பார்க்கிருர்களே என்று மனித வர்க்கத்தின் பெரும்பான்மை திருப்திப்படுகிற சர்வ சாதாரண விஷயம் அவருக்குத் தெரியாது.

"என்னடா ராஜம், நீகூடப் பேசாம வறியே, என்ன?" என்ருர் தியாகராமன்.

உண்மைதான். கும்பேச்வரன் கோவில் வடக்கு வீதியைவிட்டு, கடைத் தெருவையும் கடந்து, ராமசுவாமி கோவில் கிழக்குப் பிராகாரம் திரும்புகிறவரையில் யாரும் பேசத்தான் இல்லை.

"அவன்தான் பேச வாண்டாம்னுன்" என்ருன் பாபு.

"இல்லேப்பா, நீங்க கதவைத் திறக்கறபோது, ரங்கண்ணு உட்கார்ந்திண்டிருந்தாரே, அது அப்படியே நிற்கிறது கண் முன்னுலே" என்ருன் ராஜம்.

"நான்கூட அதைப் பத்திதான் நெனச்சிண்டிருக்கேன்."

"ஏதாவது வேதத்திலேர்ந்து மனசுக்குள்ளே சொல்லிண்டிருந்தாரோ...? பாடசாலைப் பையன்களெல்லாம் வேதம் நெட்டுருப் போடும்போது இப்படித்தான் கையை ஆட்டிண்டிருப்பாங்க. ஸ்வரம் மேலே போனு, கைமேலே போகும். கீழே போனு கீழே தாழும்."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை ரங்கண்ணுவுக்கு வேதமும் தெரியாது, புராணமும் தெரியாது... ஏதாவது சங்கீத சம்பந்தமாத்தான் இருக்கும். நீதான் சொல்லேண்டா பாபு, குலாம் காதர் கிட்ட போய் கோகுலாஷ்டமியைப் பத்திக் கேக்கருனே இவன்!"

"நானும் உங்கள்ட்டத்தான் கேட்டுத் தெரிஞ்சிக்கணும்னு இருந்தேன்."

"அவ்வளவுதானு?"

"நீங்க என்ன நினைக்கிறேள்?"

"ஏதாவது கீர்த்தனையை மனசுக்குள்ளே பாடிண்டிருக்காரோ என்னவோன்னுதான் நெனச்சேன் நான்."

"நானும் அதுதான் நெனச்சேன்."

"கேக்காத சங்கீதம் கேட்கிற சங்கீதத்தைவிட இனிமைன்னு இங்கிலீஷ்லெ சொல்ருளே, அந்த மாதிரி கேக்காத சங்கீதத்தைக் கேட்டிண்டிருந்தாரோ என்னவோ!" என்று ராஜம் சிரித்தான்.

யாரும் சிறிது நேரம் பேசவில்லை. சற்றுக் கழித்து, "ஏண்டா சிரிக்கிறே, ராஜம்?" என்று கேட்டார் தியாகராமன்.

"நான் சிரிக்கலியே."

"பரிகாசமாச் சொன்னுப்போல இருந்தது, அதுக்காகக் கேக்கறேன்."

★ தொடர் நாவல் ★

"நான் பரிகாசம் பண்ணலியே. நான் ஸுயுக்தியாச் சொல்றேனேன்னு எனக்குச் சிரிப்பு வந்துது."

"அதாவது நீ சொல்றதை உனக்கே நம்ப முடியலியா?"

"எனக்கு என்னப்பா தெரியும்? சங்கீதம் தெரியுமா? இங்கிலீஷ்லெ எங்கியோ வாசிச்சுது சட்டுனு ஞாபகம் வந்துது. சொன்னேன். சில பேர் பாடினா, கேக்காம இருக்கறதே நல்லதுன்னு சீதாராமன் சொல்லுவார். அவா பாடாம இருந்தா, அந்த கேக்காத சங்கீதம் ஆபத்து விளைவிக்காத சங்கீதம்னு சொல்லுவர் அவர். அதுவும் ஞாபகம் வந்துது" என்று சிரித்தான் ராஜம்.

"ம். . ." என்று பெருமூச்சுவிட்டார் தியாகராமன்.

ராஜம் சொன்னது இருவரையுமே சிந்தனையில் ஆழ்த்திவிட்டது. அவன் எப்படிச் சொன்னானோ? அவன் சொன்னது மட்டும் மறுபடியும் பேச்சை மேலே போகாமல் நிறுத்திவிட்டது. வீடு வருகிற வரையில் அந்த மௌனம் கலையவில்லை.

"அப்ப, புதன்கிழமே காலமே போறியா?" என்று உள்ளே போவதற்கு முன் நின்றார் தியாகராமன்.

"சரி.."

"போறபோது வெறும் கையோடு போக வாண்டாம். கொஞ்சம் பழம், வெத்திலை பாக்கு ஏதாவது வாங்கிண்டு போ. அவர் முன்னாடி வச்சு நமஸ்காரம் பண்ணிப்பிட்டு ஆரம்பிக்கலாம்."

"சரி."

அவர் உள்ளே போனதும் பாபு சொன்னான்: "உங்கப்பா நெனச்சோடனேயே, எதையும் செஞ்சு முடிச்சுவிடுவர் போலிருக்கே."

"தன் காரியத்தைத் தவிர."

"அது இன்னும் நல்லது."

"இனிமே உன்னைப் பார்க்கவே முடியாது இப்ப மாதிரியெல்லாம்" என்றான் ராஜம்.

"எல்லாம் நீயே சொல்லிப்பிட்டா, நான் என்ன சொல்றது?"

"அதுக்கில்லே பாபு. காலேஜிலேயும் வாசிக்கணும், பாட்டும் சொல்லிண்டு சாதகமும் பண்ணணும். மூலை மூலையா ஊர்லெ நாம பேசிண்டும் இருக்கணும்—எல்லாம் செய்ய முடியாதுங்கறேன்."

"எல்லாம் முடியும்—கொஞ்சம் தூக்கத்தைக் குறைச்சுக்கறது."

"என் தூக்கம் என்ன ஆறது?"

"உன்னோடு பேசிப்பிட்டுப் போய் சாதகம் பண்றேன்."

"அப்ப ஊரார் தூக்கம்?"

"எங்கியாவது தனியா ஒரு இடமாப் பாத்துப் போறேன்."

"இங்கே என்ன பீச் இருக்கா? இல்லெ மானம் பாத்த சீமையா? இடறி விழுந்தா வீடு, மனுஷன். நீ ராத்திரி ரண்டு மணிக்குப் பாடினா, யாராவது எங்கேருந்தாவது ஏந்திண்டு வந்து குரவளையைப் புடிச்சிப்பிடுவான்."

"அப்ப என்னதான் பண்ணணும்கறே?"

"எங்கப்பா சொன்னாப்பல இருக்க வேண்டியதுதான்."

"எனக்கு இருக்க முடியாது."

"இருக்க முடியாதுன்னா, • பாடம், சங்கீதம் ஏதாவது ஒண்ணு நஷ்டமாப் போயிடும்...சும்மா காதலன் மாதிரி 'எனக்கு இருக்க முடியாது'ன்னு சொல்லிப்பிட்டா ஒண்ணும் நடக்காது."

பாபு சிரித்தான். "காதலன் காதலியைப் பிரிக்க முடியுமா?"

"இந்த மாதிரி காதலன் காதலியை சங்கீதம், கல்யாணம், யமுனா—இப்படி யாராவது பிரிச்சுப்பிடுவா?"

பாபு ஒன்றும் பதில் பேசவில்லை. சற்றுக் கழித்து "யமுனாவும் கல்யாணம் ஆகிப் போயிடப் போறா. அப்புறம் என்ன?—அப்படியே நம்மைப் பிரிக்கிறதாக நீ சொல்றாப்போல வச்சுக்குவமே. பிரிக்க முடியாது—இருந்தாலும் நீ சொல்றியே, அதுக்காக சொல்றேன்" என்றான்.

"அவளுக்குக் கல்யாணம் ஆற வரையில்?"

"______"

"நீ எதுக்குன்னுதான் நேரம் ஒதுக்கி வச்சுக்கப்போறே? இருக்கிறது இருபத்திநாலு மணிதான்."

பாபு அதற்கும் பதில் சொல்லவில்லை.

"பாபு, சும்மா குழந்தைமாதிரி பேசாதே. நல்ல திறமைகள்ளாம் இருக்கறபோது, பொழுதைப் போக்காம அதுகளை வளர்த்துக்கறதுதான் புத்தியுள்ளவன் செய்ய வேண்டிய காரியம்.. ஒரு நல்ல காரியத்திலே ஈடுபட்டோம்னா, மோகினி மயக்கு மாதிரி நம்ம கவனத்தை அந்தண்டை இழுத்துண்டு போறதுக்கு எவ்வளவோ வந்து சேரும். ஸ்நேகிதம், காதல், பணம் சம்பாதிக்கிற ஆசை—இப்படி ஏதாவது ஒரு பேர் வச்சுண்டு வரும் அதெல்லாம். அதுக்கெல்லாம் இடம் கொடுத்தா, காரியம் கெட்டுப் போயிடும். பின்னால் வருத்தமாயிருக்கும்."

ராஜம் கால் நகத்தைக் கிள்ளிக் கொண்டே பேசிக்கொண்டிருந்தான்.

"என்ன, நான் சொல்றதெல்லாம் சரியாயில்லைபோல் தோண்றதா?"

"நீ மூணு சொன்னியே, அதிலே முதலாவதுதான் தவறாகத் தோண்றது."

"என் அபிப்பிராயம் அது. மூணும் சரின்னுதான் நான் நினைக்கிறேன். ஸ்நேகிதம், காதல் எல்லாம் ஒண்ணுதான். . . ஆனால் காதல் வந்தா ஸ்நேகிதம் தூக்கத்திலே இடுப்புச் சோமன் அவிழ்ந்து போறாப்போல நம்மறியாம போயிடும்."

"தூக்கத்திலே எல்லாருக்கும் வேஷ்டி அவிழ்கிறதில்லையே."

"அதுவும் சரி, சும்மா உபமானத்துக்காகச் சொன்னேன்" என்றான் ராஜம்.

"அதிருக்கட்டும். நீ என்னமோ காதல்லெல்லாம் ஈடுபட்டு, ஸ்நேகிதத்தை நழுவ விட்டுப்பிட்டாப்போலப் பேசறியே. ரொம்ப அனுபவிச்ச மாதிரி. . ."

"நாம அனுபவிச்சாத்தானா? உலகத்தைப் பாத்துத் தெரிஞ்சுக்கப்படாதா?"

"யார் யாரு அப்படிப் பண்ணியிருக்கா? காதல்லெ நட்பை நழுவவிட்டவா யாரு?"

"எத்தனையோ பேர்?"

"எனக்கும் நாலு சொல்லேன்."

"நீ ஒண்ணு."

"யாரு! நானா!"

"என்ன தூக்கிவாரிப்போட்டாப்போல நானாங்கிறியே?"

மேலே இப்படி சந்தேகப்படும்னு நெனக்கலே அதை நெனச்சாத்தான் பரிதாபமாயிருக்கு."

ராஜம் பதில் சொல்லவில்லே. மறுபடியும் அவன் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது.

"பாபு, நீ சொல்லுகிற வார்த்தைகளே யோசிச்சு, ரண்டு அர்த்தம் தொனிக்கும்படியா அளந்து சொல்றயா, இல்லே, என்னமோ வாயிலெ வந்ததைச் சொல்றியா- தொியலே எனக்கு."

"தூக்கிவாரித்தான் போடறது நீ சொல்றது."

"எது? நான் தெரிஞ்சிண்டிருக்கேன்கிறதா?"

"இல்லே. இல்லாததை இருக்காப்பல தெரிஞ்சிண்டிருக்கேங்கிறியே. அதுதான்."

"என்ன இல்லாதது? நான் சொல்றது சரியில்லேயா?"

பாபு உண்மையாகவே அடக்க முடியாமல் சிரித்தான்.

திடீரென்று அவனுக்குப் பளிச்சென்று என்னமோ தோன்றிற்று 'தேள் கொட்டி, மருந்து வாங்கிக்கொடுத்தது இவனுக்குத் தெரிந்துவிட்டதா? அப்படியானல், அந்தக் கடிதமும் தெரிந்திருக்குமா? எப்படித் தெரிந்திருக்கும்? நாம் சொல்லவில்லேயே....யாராவது பார்த்துத்தான் விட்டார்களா?'

"பக்கத்து வீட்டிலெ யாராவது அழகாயிருந்தா, உடனே காதல் வந்துவிடும்னு தீர்மானிச்சுட்டாப்போலிருக்கு நீ" என்று சிரித்துக்கொண்டே, பதில் சொன்னன் அவன்.

ராஜம் புன்சிரிப்புடன் அவனேக் கண் கொட்டாமல் பத்து விநாடி பார்த்தான்.

"என்ன பாக்கறே, ராஜம்?"

"நீ இவ்வளவு கெட்டிக்காரனயிருக்கியேன்னுதான்."

"நீயும் இவ்வளவு அசடாயிருக்கியேன்னு எனக்குச் சிரிப்பு வாது."

"வாஸ்தவம்" என்று சொல்லிச் சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, தொடர்ந்து சொன்னன் ராஜம்: "நானும் சட்டுனு தீர்மானம் பண்றது தப்பு தான்."

"தப்புதான்."

"மகா பொல்லாதவன் நீ, பாபு. இருந்தாலும் எனக்குப் பரிதாபமாயிருக்கோல்லியோ, சொன்னேன்."

"நீ பரிதாபப்பட வேண்டாம். எனக்குக் காதல் இல்லே, சிநேகம்

"அளந்து பேசறதே என் கிட்ட கிடையாது."

மறுபடியும் பேசாமலிருந்துவிட்டு சொன்னன் ராஜம்: "நீ என்னை ஒரேயடியாக் குழப்பறியே."

"ஒண்ணும் குழப்பலே. உனக்குள்ளே தவறு என்னமோ நெனச்சுனூட்டே. நான் பேசறது குழப்பருப்போலியும், கெட்டிக்காரத்தனமாய்ப் பேசறுப் போலியும் இருக்கு. அவ்வளவுதான்."

'சரி, என்று பெருமூச்சுவிட்டு, "இந்த விஷயத்தை இதோட நிறுத்திக்க வேண்டியதுதான். நீ பிடிபடாம நழுவறே."

"நான் நழுவலே. பிடியிலேயே இருக்கேன். நன்னச் சொல்லு. நான் விளக்கறேன்."

"வாண்டாம். இன்னிக்கி போதும்."

"ஏன், குறையோட நிறுத்துவானேன்?"

"நீதான் சொல்லிப்பிட்டயே—காதல் கீதல் ஒண்ணும் இல்லேன்னு. அப்பறம் என்ன?"

"நீ ஒப்புக்கொண்டதாச் சொல்லலியே, நான் சொல்றதை."

"ஒப்புத்துண்டதாகச் சொன்னத்தான் விடுவாயோ?"

"சொன்னப் போராது. மனசோட நம்பணும். ஒண்ணும் இல்லேன்னு."

"அப்பறம் என் மனசோட போய் சண்டைக்கு நிப்பே; நீ நம்பினது போராது; இன்னும் நன்ன நம்பணும்னு."

"ஆனல், உன் மனசு முழுக்க நம்பிவிடாதா நான் சொல்றதை?"

"பாபு, நான் மறுபடியும் சொல்றேன். நீ கெட்டிக்காரன். நீ சொல்றதை நான் நம்பறேன இல்லியாங்கறதைப் பத்தி நான் அப்பறம்தான் சொல்லணும். நானே தெளிவா இல்லெ. இன்னிக்கி சாயங்காலம் திடீர்னு சுக்கானைத் திருப்பினே பாரு, அது மாதிரி இப்ப எங்கேயோ பேச்சைத் திருப்பிவிட்டே. எங்கேன்னு நான் கண்டுபிடிக்கறதுக்குள்ளியும் என்னைக் குழப்பிக் கிழப்பி, என்னமோ பண்ணிப்பிட்டே. இன்னிக்கி இந்த விஷயத்தை இதோட விட்டுடுவோமே."

"விட்டுடறேன். விட்டுடு விட்டுடுன்னு சொல்றபோதே, நீ எங்கியாவது பொடி வச்சுப்பிடறே. எனக்குத் தாங்க மாட்டேங்கறது. நான் பேச்சைத் திருப்பவும் இல்லே. குழப்பவும் இல்லே."

"நிஜமாவா?"

"நிஜம்மாத்தான். ஏன், கையிலடிச்சு சத்தியம் பண்ணணுமா? வேணும்னு பண்றேன்."

"அப்படின்ன நான் சொன்னது தப்புதான்."

"ராஜம், ஒண்ணே ஒண்ணு சொல்றேன், கேட்டுக்கோ."

"என்ன?"

"நான் உன்னேடு சேர்ந்தப்பறம் எனக்கு ஒரு புது உலகம், புது தத்துவம் தெரிஞ்சுது. நான் அந்த விதத்திலே அதிர்ஷ்டசாலிதான்."

"அப்படி என்ன புதுசாத் தெரிஞ்சுனுட்டே எங்கிட்டே?"

"பெண்களைத் தெய்வமா நெனச்சு—அதுவும் நாம் பார்க்கிற பெண்களையெல்லாம் தெய்வமா மனசிலே வச்சு, பூஜை பண்ற பழக்கம் நீ கத்துக் கொடுத்தது தான்."

"நான் ஒண்ணும் புதுசாக் கண்டுபிடிச்சுப்பிடலியே. நம்ம நாட்டிலே எத்தனையோ பேர் எத்தனையோ காலமா அதைச் செஞ்சுண்டு வந்திருக்காளே."

"உனக்கு யார் அதைச் சொல்லிக் கொடுத்தா?"

"எத்தனையோ பேர் இதைப் பழகிண்டு வந்திருக்கா—இந்த முறையை. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இந்த மாதிரி பாவனையில் இருந்ததாகப் புஸ்தகங்கள்ளே எழுதியிருக்கே."

"நானும் படிச்சிருக்கேன். எனக்குத் தெரியலியே அது?" என்றுன் பாபு.

"நானும் புஸ்தகம் பாத்துத் தெரிஞ்சுக்கலே—அதாவது புஸ்தகத்தைப் பாத்துப் பழக்கத்துக்குக் கொண்டு வரலெ."

"அப்படின்ன?"

"எனக்கு இதை ஒரு புல்லுக்கட்டுக்காரி சொல்லிக் கொடுத்தா."

"என்னது!"

"ஆமாம்பா. நான் ஒருத்தர்கிட்டியும் அதைச் சொல்லலே. இந்தமாதிரி யாரும் என்னைக் கேக்கலே. நீதான் கேட்டே. ஆன நீ நம்புமாட்டே."

"என்ன ராஜம் இது? எதுக்காக எதுக்கெடுத்தாலும் இப்படி ஒரு பீடிகை போட்டுக்கறே?"

"நம்பமாட்டேன்னு சந்தேகம். சொன்னேன். பீடிகையென்ன?"

"நான் நம்பறேன். சொல்லு."

"ரண்டு வருஷம் ஆச்சு, அது நடந்து."

"எது நடந்து?"

"இண்டர்மீடியட் முதல் வருஷம் படிக்கிறபோது எனக்கு டைபாயிட் வந்து, ஒரு வருஷம் விட்டுட்டேன்னு சொன்னேனேல்லியோ."

"ஆமாம்."

"அப்ப நடந்தது."

"எது?"

"அஞ்சு தடவை திருப்பித் திருப்பி வந்தது ஜுரம்னு சொன்னேனேல்லியோ."

"ஆமாம்."

"அப்பறம் எழுந்திண்டேன்."

"ம்."

"உடம்பு காஞ்ச புல்லா ஆயிடுத்து. அதுக்காக ஏகப்பட்ட போஷாக்கு கொடுத்தா அம்மா. காட்லிவர் ஆயில், முட்டை, பழம்—அப்பா சம்பாதிக்கிறதிலே பாதியை எனக்கே செலவழிச்சிண்டிருந்தா அம்மா."

"சரி."

"உடம்பு கிடுகிடுன்னு தேறித்து. டைபாயிட் வந்து பிழைச்சாலே உடம்பு புடம் போட்டாப்போல புனர் ஜன்மம் எடுத்தாப்போல, புதுஉடம்பு வாங்கிண்டு வந்தாப்போல ஆயிடும். டானிக், சாப்பாடு எல்லாம் சேர்ந்துண்டா கேட்பானேன்? வயசு அப்ப உன் வயசுதான் எனக்கு."

"விஷயத்தைச் சொல்ல மாட்டேங்கறியே."

"அவசரப்படாதியேன். எனக்குச் சொல்றதுக்கு என்னமோ போல்ருக்கு. அதுக்குத்தான் சுத்திச் சுத்தி, அப்ப இருந்த மாதிரி மனசிலே ஆயிண்டு வரேன். பொறுத்திண்டு கேளேன். . . . உடம்பு நன்னத் தேறிப்பிடுத்து. போஷாக்கை நிறுத்தியிருக்கலாம் அம்மா. ஆன, அம்மாவுக்குப் பாசம் கேட்குமா? . . . உடம்பு தலைகால் புரியாம பறந்துது. சகவாசமும் அப்படி நல்ல சகவாசம் இல்லெ. ராகவாச்சாரி ராகவச்சாரின்னு ஒரு சிநேகிதன். சின்னக் கிளாஸ்லேருந்து கூடப் படிச்சான். நானும் அவனும் இணைபிரிய மாட்டோம். அவன் மைனர். பணக்காரப் பய. படிச்சாகணுங்கறதில்லே. வீட்டிலேர்ந்து ஏகப்பட்ட பணம். படிக்கிற பசங்களுக்குக் கை நிறையப் பணத்தைக் கொடுத்து, லட்சியத்தையும், நல்ல சகவாசத்தையும் கொடுக்காட்டா என்ன ஆகும்? ராகவாச்சாரி கோயிலுக்குப் போறேன், கோயிலுக்குப் போறேன்னு கைகாட்டி மாத்தெருவிலே சுத்த ஆரம்பிச்சான். முதல்லெ அவன் இப்படியெல்லாம் பண்றன்னு எனக்குத் தெரியாது. ஆறுவது பாரம் படிக்கச்சே செலக்ஷன் பாட்சை முடிஞ்சுது. படிச்ச களைப்பு தீர ஒரே நாள்ளே ரெண்டு சினிமாப் பார்த்தேன். முதல் ஷோவுக்கு என்னேட வந்திருந்தான் ராகவாச்சாரி. முடிஞ்சவுடனே அப்படியே வீட்டுக்குப் போகணும்னு போயிட்டான். நான் சாயங்காலமே சாப்பிட்டாச்சு. ஒரு ஹோட்டல்லே பாலை வாங்கிக் குடிச்சிப்பிட்டு, வேறே கொட்டகையிலே ரெண்டாவது ஷோ பார்க்கப் போனேன். பாத்துட்டுத் திரும்பிப் போறபோது திடீர்னு ஒரு வீட்டிலேர்ந்து முட்டாக்கைப் போட்டுண்டு வேகமாக ஒரு ஆள் இறங்கிப் போனன். ஆளாவது? நடையெல்லாம் ராகவாச்சாரி மாதிரி இருந்தது. விறுவிறுன்னு நடந்து நானும் பின்னடியே போனேன். ஆள் கிட்டக்கப் போயிட்டேன். ராகவாச்சாரின்னு கூப்பிட்டேன். திரும்பி, அட ராஜமான்னுன். எங்கடா அர்த்தராத்திரியிலே போயிட்டு வரேன்னன். வீட்டுக்குப் போய்த் தூங்கப் போறேன்னியே, எங்க தூங்கினேன்னு நான் கேட்டதுக்கு, சினிமாக்குப் போயிட்டு வரேன்னுன். சினிமாக்குப் போறதுக்குத் தலையிலே எதுக்கு முட்டாக்குன்னு நான் கேட்டதும், உளறிப்பிட்டான். ஏய் ராஜம், நீ பாத்துட்டியான்னுன். தெரியாம செஞ்

கூப்பிட்டேன்னான். ஒருத்தர்ட்டியும் சொல்லாதேடா, இனிமே இப்படிச்செய்ய மாட்டேன்னான். என்னை ஏமாத்திப்பிட்டுத்தானே போனேன்னு நான் சொன்னதும், அவனுக்குச் சந்தோஷம் தாங்கலெ. என்னடா ராஜம், நான் உன்னை ஏமாத்துவேனா, நீ இதுக்கெல்லாம் சம்மதிப்பியோன்னு பயமாயிருந்துதுன்னான். இது என்னடா பிரமாதம்னு மறு நாளைக்கே அழச்சிண்டு போயிட்டான். ராத்திரி ரெண்டாவது ஷோ போயிட்டு வர போதுதான். இந்தத் தெருவுதான். உனக்குத்தான் தெரியுமே. வாசல்லாம் இருட்டா இருக்கும். இருட்டிலே காசு கிணுகிணுன்னு சப்தம் கேக்கும். ரகசியமா இருட்டுகூப்பிடும், வாவான்னு. போயிட்டேன். ஒரு பெரிய கரும்பூதம். கால்லெ பெரிய கொலுசு. பெரிய தலை. பெரிய உடம்பு. வா தம்பின்னாள். ஏன் பயப்படறேன்னாள். சட்டைப் பையைத் தட்டினாள். இருக்கிறதை எடுத்துண்டாள். எனக்கு வெடவெடன்னு நடுங்கித்து. வேத்து ஊத்தித்து. வாசல் பக்கம் திரும்பித் திரும்பிப் பார்த்தேன். வாசல் கதவு சாத்தித்தானிருந்தது. சும்மா வா பயப்படாதே! ஏன் இப்படி பயந்து சாவுறே? புதுசு போல்ருக்கு, பள்ளிக்கூடத்துப் புள்ளையான்னு தடவிக் கொடுத்தாள். அம்மாடி, இம்மாம்நடுக்கம் நடுங்கிறியே—அந்தப் புள்ளை யோட வந்தா, இம்மாம் பயம்னாள். அதைத் தெரியுமா உனக்குன்னேன். யாருஅதையா தெரியாது? அது சரி,இப்படியே எத்தனி நாளி நிக்கிறது, நேரமாச்சேன்னு அலுத்துக்க ஆரமிச்சா அவ. நான் போறேன்னு வாசக் கதவைத் திடீர்னு திறந்திண்டு, வெளியே படபடன்னு ஓடினேன். நல்லா பயந்து சாவுதுறீ இந்தப் புள்ளேன்னுண்டே வந்தாள் அவள். புதுசு பாவம்னாள் இன்னொருத்தி. வீட்டுக்கு வந்து படுத்தேன். யாருக்காவது தெரிஞ்சா, அதுவும் இன்னார் பையன்னு தெரிஞ்சா, எப்படியிருக்கும்? ஆனா, தைரியமில்லாம வந்துட்டோமேன்னு வருத்தமாயிருந்துது. தைரியமும் வரலெ. அப்பறம் அஞ்சாறு மாசம் வரையில் அந்தத் தெருப் பக்கமே போகலே. மத்தியானம் வாசல்லெ நின்னுண்டு, என்னைக் கண்டு அடையாளம் கண்டு பிடிச்சிண்டு சிரிச்சான்னா, என்ன செய்யறதுன்னு பயம். ராகவாச்சாரியும் நான் பயந்திண்டேன்னு தெரிஞ்சுண்டு, எனக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். எனக்கு தைரியம் வரலே. கடைசியிலே என்னைவிடவும் விட்டுட்டான். எனக்குத் தைரியம்தான் வரலே. ஆனா, வேற ஒண்ணும் குறையலெ. ரெண்டு மாசத்துக்கெல்லாம் என் சித்தப்பா செத்துப்போயிட்டார்னு தந்தி வந்துது. அப்பாவும், அம்மாவும் என்னை மாத்திரம் வச்சுட்டு, திருச்சினாப்பள்ளிக்குப் போனா. எனக்குப் படிப்பு இருக்கே. வீட்டிலெ தனியா இருக்கறபோதெல்லாம் எனக்குப் படிக்கவே ஓடலெ. அவா பூட்டி சாவியைக் கொடுத்ததிலேர்ந்தே ஒரே எண்ணம்தான். தனியா இருக்கறச்சே இந்த மாதிரி இஷ்டப்பட்டபடி இருக்கணும்னுதான் துடிச்சுது. மூணு நாள் ஆச்சு. முதல் நாள், ரண்டாவது நாள், மூன்றாம் நாள் எல்லாம் வீணாகப் நாலாம் நாள் சாயங்காலம் இருட்டற சமயத்துக்கு மழை புடிச்சிண்டுது. சின்ன மழைதான். ஏதோ போற மேகம். நாலு மணி நேரம் அடிச்சுது. மழை தபதபன்னு விழ ஆரமிக்கிறபோதே, வாசல்லெ வந்து ஒத்தி புல்லுக்கட்டுக்காரி, புல்லை அப்படியே திண்ணையிலே போட்டுப்பிட்டு, படியேறினா. பங்குனி மாசத்திலே நல்ல மழை வந்திச்சுன்னு என்னைப் பார்த்தாள். நான் சிரித்தேன். ரண்டு, மூணு தடவை என் சிரிப்பைப் பாத்தப்புறம்தான் அவளுக்குப் புரிஞ்சுது. உள்ளே போய் பீரோவைப் பாத்து ரண்டு ரூபாயை எடுத்துண்டு வந்தேன். கூப்பிட்டேன். உள்ளே அவ நழுவி வந்ததும், கதவைச் சாத்தினேன். சாமி, மழைக்கின்னு ஒதுங்கினா, இப்படிச் செய்யலாமான்னு சிரிச்சா அவ. எனக்குச் சொரேர்ன்னுது. அவ சும்மா பயமுறுத்தித்தான் பாத்திருக்கா. எனக்குத் தோணின எண்ணம் ஒண்ணே ஒண்ணுதான். உள்ளே வேற யாராவது இருக்காளா இல்லியான்னு அவ ஏன் தயங்கலென்னு எனக்குப் புரியல்லே. பொம்மனாட்டிகளே இப்படியா, இல்லெ அவ ஒருத்திதான் இப்படித் தயங்கிலியான்னு எனக்குப் புரியலெ. கதவைத் தாப்பாப் போடலீங்களா சாமின்னு கேட்டா அவ. நான் இப்படி குழம்பிண்டிருக்கிறபோது சின்ன வயசுதான். இருபது இருபத்திரண்டு இருக்கும். நான் போட்டிடட்டுமான்னா. வாண்டாம்னேன். பின்னே இப்படியேவா? யாராவது திறந்திட்டு வந்திட்டாங்கன்னா. . ஹூம் நான்மாட்டேன். எனக்குப் பயமாயிருக்குன்னா அவ. தாப்பாப் போட வாண்டாம்னேன். உள்ளே வான்னேன். வாண்டாம் சாமி நான் போறேன். பயம்மாயிருக்கு எனக்குன்னு கதவை மெதுவாகத் திறந்திண்டு திண்ணைக்குப் போயிட்டா. எனக்கும் அப்பாடா, பிழச்சோம்னு இருந்தது. அப்படியே கதவைச் சாத்தித் தாப்பாப் போட்டுப்பிட்டு, பூஜை அலமாரி கிட்ட போய் நின்னேன். அம்மா நித்யம் மாலை போட்டு பூஜை பண்ற படத்துக்கிட்ட போய் பைத்தியம் புடிச்சாப்போல நின்னேன். நான் இனிமே பொம்மனாட்டிகளை உம்மாதிரியே நினைச்சுப்பேன்னு சொன்னேன். அப்பறம் மழை நின்னு ரொம்ப நாழிவரைக்கும் வெளியிலே வரலெ. அந்தப் படத்துக்கு முன்னாலேயே நின்னுண்டிருந்தேன். கதவைத் திறந்து வெளியிலே வரபோது அவ இல்லே. புல்லுக்கட்டையும் காணும். . . அவ்வளவுதான்."

ராஜம் நிறுத்திவிட்டான். அரை நிமிஷமாயிற்று. அவன் மேலே என்ன சொல்லப் போகிறான் என்று பாபு வீணாகக் காத்துக்கொண்டிருந்தானே தவிர, மேலே ஒன்றும் வரவில்லை.

"என்ன ராஜம், நிறுத்திப்பிட்டே?"

"நின்னு போச்சு, நிறுத்திப்பிட்டேன்."

"என்னமோ அவதான் இந்த தத்துவத்தைச் சொல்லிக் கொடுத்தான்னியே."

"ஆமாம். இல்லையா?"

"அவ என்ன சொல்லிக்கொடுத்தான்னு

"அவ நேரே சொல்லணுமா? மழைக்காக ஒதுங்கினா, இப்படிச் செய்யலாமான்னு சிரிச்சாளே. அந்தச் சிரிப்பு அவ சிரிச்சாப்போல இல்லெ எனக்கு. யாரோ உடம்பு இல்லாத ஒண்ணு சிரிச்சாப்பல இருந்தது. வெறுமெ வெறுமெ அந்தச் சிரிப்பு கேட்டுண்டே இருக்கும் எனக்கு. ஏதோ கவசம்மாதிரி ஆயிட்டுது எனக்கு அந்தச் சிரிப்பு. பொம்மனாட்டி பின்னாலே ஓடறவாளெப் பாக்கறபோதெல்லாம் அந்தச் சிரிப்பு கேக்கறது. பெண் ஆட்டின் பின்னாலே கனைச்சுக்கிண்டே ஓடற ஆட்டைப் பாத்துச் சிரிக்கிறாப்போல இருக்கு."

சற்று நின்றுவிட்டு, மேலும் சொன்னான் ராஜம்:

"வீட்டிலே என்னைத் தனியா வச்சுச் சாவியைக் கொடுத்துட்டுப் போனாளே அப்பாவும், அம்மாவும். அவா நினைவும்தான் வந்தது எனக்கு. நான் அவா நம்பிக்கையையும் காப்பாத்திப்பிட்டேன்."

உள்ளங் கையில் இடது கை விரலால் தேய்த்து, உரிந்த தோலை உதிர்த்துக் கொண்டே பேசினான் ராஜம்.

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை.

"ராஜம், நானாக இந்த உண்மையை அனுபவித்துத் தெரிந்து கொள்ளவில்லை. இருந்தாலும் நீதான், உன் வார்த்தைகளின் நினைவுதான், என்னை ஜாக்கிரதையாகக் காப்பாத்திண்டு வரது."

"நான் தைரியசாலி இல்லெ...என் கோழைத்தனம்தான் என்னை இந்த மாதிரி வழியிலே தள்ளிவிட்டுடுத்து. எது தள்ளினாலும் பாதை நல்ல பாதை" என்றான் ராஜம்.

"எதுக்காக இவ்வளவு தூரம் சொன்னேன்னா. . ." என்று நிறுத்திவிட்டான் அவன்.

"எதுக்காக?"

"எதுக்காகவா? . . . நான் சொல்றது சரியோ என்னமோ, உனக்கு இதெல்லாம் வாண்டாம்னு நெனச்சேன். ஆனா, நீதான் நான் நெனச்சது தவறுன்னு சொல்லிப்பிட்டியே."

"தவறுதான். . ஏன்னா, உன் சிநேகம் கிடைச்சப்புறம், இந்த மாதிரி ஞாபகங்கள் எனக்கு வரதில்லை. . . உனக்கு ஏன் அப்பிடித் தோணித்து?"


நீங்கள் சமைத்திடும் உணவிலுள்ள பூரண போஷாக்கும் உங்கள் குடும்பத்தினர்களுக்குக் கிடைக்கிறதா? தக்க பாக முறைகளினால் எவ்வாறு உணவிலுள்ள சத்துக்களைக் காப்பாற்றிக் கொள்வது என்பதை விளக்கும் இலவசத் துண்டுப் பிரசுரத்துக்கு எழுதுங்கள்:

டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்,
தபால் பெட்டி 358, பம்பாய் 1.

HVM. 260-722 TM

“ஏதோ தோணுத்து. முட்டாள்தன
மான எண்ணங்களுக்குக் காரணமா
வேணும்?”

“நான் உங்கிட்ட வாதும், பேசறதும் குறைஞ்சு போயிட்டா, எப்படி ஆவே ளோன்னு பயமாத்தானிருக்கு. அதுக் காகத்தான் வரதை விடமாட்டேன், குறைச்சுக்க மாட்டேன்னு சொன்னேன்” என்றான் பாபு.

“என்னமோ—எனக்குக் கேக்க பெருமையாகத்தானிருக்கு. ரங்கண்ணு சாின்னு சொன்னது உன் அதிர்ஷ்டம். என்னோடெ சும்மாப் பொழுதைப் போக்கிண்டு, அதுக்குக் குந்தகம் பண்ணிக்க வாண்டாமேன்னு சொன்னேன். அவ்வளவுதான்.”

“உனக்கேன் அந்தக் கவலை?”

இவ்வளவு பேச்சுக்குப் பிறகும், என்னமோ கடைசி தடவையாகப் பேசுவது போல் இன்னொரு இரண்டு மணி நேரம் பேசிவிட்டுத்தான் இருவரும் பிரிந்தார்கள். பிரியும்போது, ஊர், ஓய்ந்துவிட்டது. கடலங்குடித் தெரு வீடுகள் எல்லாம் உறங்கிவிட்டன. உச்சிப்பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்திலும் இன்னும் சற்றுக் கிழக்கில் சினிமாக் கொட்டகைக்குப் பக்கத்திலும் வெற்றிலைப் பாக்குக் கடைகளும், பால் கடைகளும் திறந்திருந்தன. நீலப் பால் நிலவின் முன், இந்தக் கடை விளக்குகள் தூங்கி வழிந்துகொண்டிருந்தன.

ராஜத்தின் அனுபவத்தை நினைக்கிற போது ஆச்சாியமாகத்தான் இருக்கிறது. ராஜமா இப்படியிருந்தான்? ஒரு சின்ன வீட்டில் சிமினி விளக்கு மினுக்குகிற வீட்டில், கரும்பூதம் மாதிரி ஒரு பெண்பிள்ளை முதுகைத் தடவித் தேற்ற, ராஜமா நின்றான்?

பாபுவுக்குச் சிரிப்பாக வந்தது. ராஜம் ஒளிக்காமல் சொல்லிவிட்டான் ஒன்று விடாமல். ...

மடத்துத் தெருவைத் தாண்டி ஒவ்வொன்றாக நினைத்துக் கொண்டே, காவேரி வெள்ளத்தைப் பார்த்துக் கொண்டே நடந்தான் பாபு. இது என்ன? வீட்டு வாசலில் விளக்குத் தொிந்தது... ஆமாம் நம் வீட்டில்தான்... ஒரு நாளும் இல்லாத திருநாளாய் என்ன? கைலாசத்திற்கு இந்த சமயம் சாதாரணமாக இரண்டாம் ஜாமத் தூக்கம், ஆனால், அவரே விழித்துக்கொண்டு வாசல் ஒட்டுத் திண்ணையில் அரிக்கேன் விளக்கை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். இன்னும் யாரோ எதிரே உட்கார்ந்திருந்தார். பாபுவுக்கு என்னவென்று புரியவில்லை.

“இதோ வந்துட்டாரே” என்றார் கைலாசம்.

“பாபு, அரை மணியாகக் காத்திண்டிருக்கார். துக்காம்பாளையத் தெருவாம். உனக்கு யாரோ தொிஞ்சவா இருக்காளாமே. சமாசாரம் சொல்லியனுப்பிச்சிருக்கார். நல்ல சமாசாரம் இல்லெ. நான் சொல்லுவானேன்? நீங்களே சொல்லுங்கோய்யா” என்றார். பாபுவுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

(தொடரும்.)

கற்பனையைவிட அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள் மிக அதிசயமானவை. திருவனந்தபுரம் கோயிலில் நடந்த இந்த அற்புதத்தைக் கண்ணால் பார்க்கும்வரை, வாழ்க்கை இவ்வளவு விசித்திரமானதாய் இருக்குமென்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. யானையின் எத்தனையோ குணங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; ஆனால், மற்றொரு சின்னஞ்சிறு பிராணியிடம் இதற்கு உள்ள கருணையைப்பற்றி ஏதாவது இதுவரை தொியுமா?

திருவிழாக்களுக்குக் காப்புக் கட்டி, முகூர்த்தக் கால் நாட்டுவது ஒவ்வொரு பிரதான கோயிலிலும் வழக்கம். திருவாங்கூரில் முகூர்த்தக் காலை யானைதான் எடுத்து நடுவது சம்பிரதாயம்.

அன்று சுப முகூர்த்தம். கோயிலில் ஒரு பிரும்மாண்டமான கொடி மரம், மஞ்சள், குங்குமம், மாவிலைத் தோரணங்களுடன் கிடந்தது. வேத மந்திரங்கள் முழங்க, வெண் சங்கம் ஆர்க்க, புனித நீர் தெளித்தாயிற்று. வெள்ளைக் கொம்பன், சந்திரன் கம்பீர நடை போட்டு வந்து, தான் புரியும் பணி புனிதமானது என்று அறிந்து கொண்டதுபோல், முன்னங் கால்களை மடக்கி, அந்த முகூர்த்தக் காலை வெகு லாகவமாகத் தூக்கித் தன் தந்தங்களுக்கிடையே சமாளித்து நிறுத்திற்று. எதிரில், அந்தக் காலை நடுவதற்காக ஒரு ஆள் ஆழமுள்ள குழி தோண்டப்பட்டிருந்தது. முகூர்த்தக் காலைத் தூக்கிக் கொண்டு குழியை நோக்கி நடந்த சந்திரனை, சுற்றி நின்ற அத்தனை கண்களும் இமைக்காமல் ஆவலுடன் நோக்கின. குழியின் அருகில் வந்துவிட்ட சந்திரன், திடீரென்று ஸ்தம்பித்து நின்றது. ஒரு கணம் தாமதித்துப் பின்வாங்கி, கொடிமரத்தையும் தொப்பென்று கீழே போட்டது.

என்ன நடக்குமோ என்று கூட்டம் திகிலுற்று நிற்கையில், மாவுத்தன் பிரம்பால் ‘பளிச் பளிச்’சென்று யானையை வாங்கினான். சந்திரன் அசையவேயில்லை. இத்தனை பேருக்கு மத்தியில் தன் ஆணைக்கு மாறாக நடந்த இந்த யானையை ‘ஒரு கை பார்த்துவிடுவ’தென்ற தீர்மானத்துடன் மாவுத்தன் கீழே இறங்கினான். மிரட்டல்களும், உருட்டல்களும் சந்திரனிடம் பலிக்கவில்லை. முகூர்த்தக் கால் வெறுமெனக் கிடந்தது. கூட்டம் கதிகலங்கிற்று; ‘தெய்வக் குற்றம்’ என்று முணுமுணுத்தது.

மாவுத்தன் உபாயத்தை மாற்றினான். சரஸப் பேச்சு: ‘நல்ல பயலோ இல்லியோ! எடுத்து நட்டுவிடு. ஏராளமா கரும்பு தரேன்...’ யானை முகத்தைத் திருப்பிக் கொண்டதுதான் பலன்!

மீண்டும் மாவுத்தன் அதட்டினான், ‘சீ வெக்கங் கெட்டவனே எடு!’ என்று.

யானை, குழிப் பக்கம் நடந்தது. வெகு ஜாக்கிரதையாக மண்டியிட்டு, துதிக்கையைக் குழிக்குள் நீட்டி, வெளியே எடுத்தது. தரையில் அதை வைத்தவுடன், ஏதோ ஒன்று குடுகுடென்று ஓடி மறைந்தது. பாவம்! ஒரு சின்னப் பூனை! குழிக்குள் பயத்தால் குன்றிப் போய்ப் படுத்திருந்திருக்கிறது!

யானையின் இந்தக் காருண்யம் கூட்டத்தைப் பரவசத்தில் ஆழ்த்தி, அலமறவைத்துவிட்டது.

அதற்குப்பின், எதற்கும் காத்திராமல் சந்திரன், தனது கடமையை ஒழுங்காகக் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் செய்து முடித்தது. உயிர்ப்பிச்சை பெற்ற பூனை, இந்தக் காட்சியை எங்காவது இருந்து பார்த்துக்கொண்டுதான் இருந்திருக்கும். அன்று சந்திரனுக்குக் கிடைத்த அளவு கரும்பும், கனிகளும் என்றுமே கிடைத்ததில்லை!

# எங்கள் வைத்தியரைக் கேளுங்கள்

82. கே. எஸ். பி. அ. திருவானைக்கா.

ஏழெட்டு மாதங்களாக, கழுத்திற்குக் கீழ், மார்பு, அதற்கு நேர் பின்புறம், முதுகு ஆகிய இடங்களில் அழுக்குத் தேமல். அரிப்புமிருக்கிறது. என்ன செய்யலாம்? இது ஒட்டுவாரொட்டியா?

அரிப்பு இருப்பதாலும், அரித்துச் சொறிந்தால், பொடி பொடியாக உதிர்வதாலும், தேமல் பரவிக்கொண்டே போவதாலும் ஓரளவாவது ஒட்டுவாரொட்டிதான் என்று விளங்குகிறதல்லவா?

நால்பாமரைக் கஷாயத்தில், தேங்காய்ப் பாலும், ஏலாதிகணம், நால்பாமரை ஆகியவற்றின் கல்கமும் நல்லெண்ணெயும் கூட்டிக் காய்ச்சிய எண்ணெயை மேலுக்குத் தடவி, தினந்தோறும் ஊறிக் குளிக்க வேண்டும். எண்ணெயைப் போக்கப் பயத்தம் மாவை உபயோகிக்கவும். மற்றுள்ள நேரங்களில் மிகவும் இலேசாகச் சிறிது ஷி எண்ணெயையே தடவி வைத்திருப்பது அரிக்காமலிருக்க உதவும்.

திக்தகம் அல்லது மஹாதிக்தகத்தை உள்ளுக்குக் காலை, மாலை 1 டீஸ்பூன் சாப்பிட்டு வரவும்.

வாரத்தில் இரண்டு நாட்களாவது இரவில் படுக்கும் முன் மாணிபத்ரகுடம் என்னும் மருந்தில் 1 தோலா சாப்பிட்டுப் படுக்கவும்.

ஒரு மாதத்தில் கணிசமான குணந் தெரியும்.

83. மு. த. வி. சீர்காழி.

குழந்தைக்கு வலிப்பு வருகிறது. அப்போது மூச்சு விடவும் திணறுகிறது. பயந்ததுபோல் முழிக்கிறது. உடம்பு, கைகாலெல்லாம் நீலமாகிவிடுகிறது.

ஜலதோஷம், ஜுரம் இவை இருந்தால், இது இன்னும் கடுமையாக வருகிறது. கால் மணி அல்லது அரை மணிக்கொரு தரம் வருகிறது. இவ்வாறு ஒரு நாள் முழுவதும். என்ன செய்யலாம்?

சாதாரண காலங்களில் மலபந்தமிருக்கிறதா? ஓயாத இருமல், ஜலதோஷம் ஏதாவது உண்டா? இந்த வலிப்பு வருவதற்கும் அமாவாசை, பௌர்ணமி இவைகட்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா? சாதாரண தினங்களில் குழந்தை எல்லாக் குழந்தைகளைப்போல, ஓடி, ஆடி சுறுசுறுப்பாக இருக்கிறதா அல்லது ஓரளவு சுணக்கத்துடன்தானிருக்கிறதா? என்பதுபோன்ற விவரங்கள் தெரிந்தால் நலம். ஆயினும்,

தாத்ரீ தைலத்தில் ½ ஔன்ஸ்வரையில் கொடுத்து 10-15 தினங்களுக்கொரு தரம் பேதியாகச் செய்யவும்; எண்ணெயை வெந்நீரில் கலந்து குடிப்பிக்க வேணும். பிறகு அரைமணிக்கொரு தரமாக இரண்டு, மூன்று தரம் ஒவ்வொரு பாலடையளவாவது வெந்நீரைக் குடிக்கச் சொல்ல வேணும். இரண்டு, மூன்று தரம் பேதியாகும். ஒன்றிரண்டு முறை வாந்தியானால் நல்லது. ஆகுமா என்பது வேறு. மற்றுள்ள தினங்களில்

பஞ்சகவ்யகிருதமும், பிராஹ்மீகிருதமும்—காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாக தம்பிடியளவு எடுத்து மானஸமித்ரம் என்னும் சூர்ணத்தில் ஒரு சிட்டிக்கைப் பிரமாணத்துடன் குழைத்துக் கொடுத்து வரவும்.

இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பின் குணகுணத்தைத் தெரிவிக்கவும்.

84. எஸ். ரா. சென்னை.

85. எஸ். ஜ. திருச்சி.

87. ஸ்ரீமதி ஸ. ந. கீழவையார்.

89. ஸ்ரீமதி அ. ராயவேலூர்.

96. ஜி. மு. நாகப்பட்டினம்.

98. எஸ். கே. ப. கடலூர்.

## குச்சாமாமா

99. கே. எஸ். பி. ஐ. திருவானைக்கா. ஆகியோர் குறிப்பிட்ட மருந்துகள் கிடைக்குமிடத்தை அறிய விரும்பியவர்.

86. ஜி. வெ. மரக்காணம்.

91 எஸ். எஸ். ஆர். திருமலாபுரம்.

95. ஆர். சொ. மு. சீர்காழி ஆகியோர் கூபன் அனுப்பாதவர்.

88. ஸ்ரீமதி பி. வெ. சென்னை.

90. நா. நா. ரா. குகை. இவர்களை நேரில் பார்த்தால்தான் என்ன செய்யலாமெனச் சொல்ல முடியும்.

92. ஆர். க. ஹைதராபாத்.

(1) இளம் வயதிலேயே நரை வரக் காரணமென்ன?

(2) உதடு எப்பொழுதும் விண்டு போகிறது. இதைத் தடுக்க வழி?

(3) கூந்தல் உதிர்வதைத் தடுக்க வேண்டும். என்ன செய்யலாம்?

(4) கண் இமையின் மயிர் உதிர்ந்து விடுகிறது. இதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்? மறுபடி முளைக்குமா?

(5) 18 வயதான நான் 5 அடி 1 அங்குலம் உயரமிருக்கிறேன். இன்னும் 2 அங்குலம் உயர என்ன செய்ய வேண்டும்?

(1) பித்தத்தின் கோளாறு; பிரகிருதி; பாரம்பர்யம் என்ற பல காரணங்கள்.

(2) பார்த்தால்தான் நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆயினும் திக்தகம் அல்லது மஹாதிக்தகம் என்ற மருந்துகளில் ஒன்றைச் சிலநாள் சாப்பிட்டு வருவது நல்லது.

(3) பலதரமும் சொல்லிக் கீரையாய்ப் போன விஷயம். நீலீபிருங்காதி தைலத்தைத் தினசரி தலைக்குத் தடவி, முடி சீவி வருவதால் முடி உதிருவது நிற்கும். உதிர்ந்தவையும் வளரும்.

(4) 'அக்ஷிதர்ப்பணம்' என்னும் சிகிச்சை இதற்குச் செய்யத் தகுந்ததாகும். இது ஒரு வைத்தியனின் நேரிட்ட மேற்பார்வையில்தான் செய்யக் கூடியது.

(5) இன்னும் உயரம் வளரக்கூடிய வயதிலிருப்பவரானதால், பொறுத்திருப்பது நலம்.

93. எஸ். எஸ். எடப்பட்டி.

சிறுநீரில் பால் போன்ற ஒரு கலப்பு. நீர் காய்ந்தால் வெண்ணிறக் கறை நின்று விடுகிறது. இப்பொழுதெல்லாம் சிறிது எரிச்சலுமிருக்கிறது. என்ன செய்யலாம்?

மூத்திரத்தை உள்ளூர் டாக்டரைக் கொண்டு பரிசோதித்து, அதில் இருப்பது (அல்புமின்) மாவு சத்துதானா என்று பரிசோதிக்கச் செய்து, விவரத்தைத் தெரியப்படுத்தவும்.

இதனிடையில், ஸ்ரீகண்டாதி சூர்ணத்தைப் பாலிலிட்டு, பாலின் அரைப் பாகம் ஜலமும் கூட்டி, ஜலாம்சம் சுண்டும்வரையில் சிறு தீயால் காய்ச்சி, தேவைக்குத் தக்கபடி சீனிகற்கண்டின் பொடியுங் கூட்டிப் பக்குவமான சூடுள்ளபோது சாப்பிடவும். இவ்வாறு தினம் 2 வேளை.

மூத்திர பரிசோதனை விவரம் தெரிவித்தால் ஒருக்கால் இதே மருந்தோடு கூடச் சாப்பிட வேண்டிய வேறு மருந்து ஏதேனுமிருக்குமாயின், அறிவிக்க முடியும். அவ்வாறில்லாத பட்சம், இம்மருந்தை மட்டும் ஒரு மாதம் சாப்பிட்டு பிறகு குணகுணங்களுக்கு எழுதவும்.

94. ஸ்ரீமதி ஆர். சீ. தஞ்சை.

குழந்தைக்குக் கரப்பான். என்ன செய்யலாம்?

வைத்திய விளக் கூப்பன்
அடுத்த வாரம் வெளிவரும்.

"ரமண விலாசனி வடிகா"

மிகச்சிறந்த நிவாரணி. தளர்ச்சியடைந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, ஜீவசக்தியையும் பலத்தையும் அதிகரிக்கிறது. வாழ்க்கையின் பூரண இன்பங்களை ரஸிக்க நிரந்தர யௌவனத்தை அளிக்கிறது.

டப்பி ரூ. 1—4—0.

மதன் மஞ்சரி பார்மஸி

ராம்வாடி, கல்பாதேவி ரோட், பம்பாய்-2

ஏஜண்டுகள்:— சென்னை: மேத்தா டிரேடிங் கார்ப்பொரேஷன், 52, பந்தர் தெரு; சேலம்: மாடர்ன் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்; பெங்களூர்: சிடி மெடிகல் ஸ்டோர்ஸ் சிக்பேட்

மற்றஇடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை

கேள்வி 46-ல் அளிக்கப்பட்ட பதிலைக் கவனிக்கவும்.

ஒரு முறை நேரில் பார்த்து, சில நாளாவது மேற்பார்வையில் மருந்து கொடுத்துப் பிறகு மேலும் தொடர்ந்து செய்யவேண்டிய சிகிச்சைகளைச் செய்வது நல்லது.

97. எல். நாக்பூர்.

ஏற்கெனவே ஆலோசனையைப் பெற்றவர். தற்போது குணகுணங்களைத் தெரிவித்து, மேலும் செய்ய வேண்டியதற்கு ஆலோசனை கேட்கிறார்.

விஷயம் பிரசுரிக்கத் தக்கதல்ல.

100. ஸ்ரீமதி வி. ல, மன்னார்குடி.

விஷயத்தைப் பிரசுரிக்க முடியாது. ஸ்திரீகளுக்கே பிரத்யேகமான சில குறைபாட்டைச் சார்ந்தது.

101 ஏ. ஜே. ஆர். சென்னை.

பொதுவாக நரம்புத் தளர்ச்சி. அதனால் பல்வேறு கோளாறுகள்.

நரம்புத் தளர்ச்சிக்குக் காரணமென்னவென்று தெரிந்து, சிகிச்சை செய்வதுதான் முறை.

நல்ல வேளையாகச் சென்னையிலிருப்பவரானதால் ஒரு முறை சந்திக்கவும்.

102 கே. ல. சிங்கநல்லூர்.

தலை வழுக்கை விழுகிறது. இதற்குத்தான் தற்போது உபயோகித்து வரும் மருந்தையும் எழுதி, மேற்கொண்டு யோசனை கேட்கிறார்.


# நீரிழிவுக்கு நிவாரணம்

சிறுநீரில் சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும். இப்பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான்

அதிகதாகம், பசி, அடிக்கடி சிறுநீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதிகளின் முக்கிய அறிகுறிகள், வியாதி முற்ற ராஜப் பிளவை, கட்டிகள், சாளேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும்.

பல வருட ஆராய்ச்சிக்குப்பின் வீனஸ் சார்ம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதை உபயோகிப்பதால் பலர் மரணத்தினின்றும் தப்பியுள்ளனர். சில தினங்களுக்குள் குணம் அடைந்து வருவதை உணர்வீர்கள். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 6-12-0, பாக்கிங் தபால் செலவு இனாம்.

**வீனஸ் ரீஸர்ச்லாபரட்டரி**
(S M W.)
**Post Box No. 587, CALCUTTA.**


ஏற்கெனவே வேர் செத்த முடிகள் உதிருவதை நீலிபிருங்காதி அல்லது கபரி உடனே நிறுத்தாதுதான். தொடர்ந்து உபயோகிக்கப் பலனுண்டாகும். உதிர்வது நிற்கும். உதிர்ந்தவிடங்களில் முரட்டு முடிகள் புதியவை முளைக்கவும் செய்யும்.

இத்தைலத்தைத் தடவி முடி சீவ மட்டும் உபயோகிக்கவும். வேறு தைலங்களுடன் கலந்து உபயோகிக்க வேண்டாம். ஈரத் தலையிலோ எண்ணெயுடன் ஜலத்தையுங் கூட்டிக் குழைத்துத் தலைக்குத் தடவி முடி சீவிக்கொள்ளக் கூடாது.

103. கே. கி. ஜி. டி. சென்னை.

4 வயது, 1 வயது இரண்டு குழந்தைகள். இருவருக்கும் ஜீரணக் கோளாறு. விவரம் ஒருபுறமிருக்க, ஆகாராதிகளில் நண்பர் செய்யும் பிழையை வாசகர்களின் நலனுக்காகப் பிரசுரிக்க வேண்டி இருக்கிறது.

“4 வயதுப் பிள்ளை, ஜீரணமாகாமல் ஒரு நாளைக்கு 4 முறையாவது” வயிற்றால் போகிறது. “சில நாளைக்குச் சாதாரணமாகவும் போகிறது.” (கெட்டியாகப் போனாலும், பேதியாகப் போனாலும், 4 தரத்திற்குக் குறைவில்லை.) “உடம்பு இளைத்திருக்கிறது. இரண்டு வேளை சாதம். இரண்டு வேளை காப்பிதான் சாப்பிடுகிறான். மத்தியானம் 3 மணிக்கு தோசையோ இட்டிலியோ வேண்டி இருந்தால் சாப்பிடுவான். ஜீரணமாகும்படியும், பேதியாகாமல் உடம்பு புஷ்டியாகவும் மருந்து எழுதியனுப்பவும்.”

ஜெரிக்கச் சாமர்த்தியமில்லாத குழந்தைக்கு இப்படி ஆகாரம் கொடுக்கலாமா? வீட்டில் யாரும் பெரியவர்கள் இல்லை போலிருக்கிறது. அதிலும் தோசை, இட்லி போன்ற மாப்பண்டங்களைக் கொடுப்பது அறவே கூடாது. காப்பி சாப்பிட்டால் சும்மா இருப்பவருக்கும் வயிற்றால் போகுமே! இந்தக் கிரஹணிக் குழந்தைக்கு எப்படி ஒத்துக்கொள்ளும்? ஜீரண கோசத்தில் கோளாறு உள்ள போது ஆகாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டாமா?

(1) மாப்பண்டங்களையும் காப்பியையும் நிறுத்திவிட வேண்டியது முதல் காரியம்.

(2) ஹிங்க்வாஷ்டக சூர்ணத்தில் ஒரு சிட்டிகையைக் காலை, மாலை தேனில் குழைத்து நக்கிடச் சொல்லவும்.

(3) கோரைக் கிழங்கு என்னும் கடைச் சரக்கை வாங்கி, நன்றாக சுத்தப் படுத்திக் கழுவிக்கொண்டு இடித்து—ஒரு பலம் மருந்தில் 2 டம்ளர் ஜலம் விட்டு ஒரு டம்ளராகக் காய்ச்சிய கஷாயம் செய்துகொள்ளவும்.

வீட்டில் காய்ச்சித் தோய்த்த தயிரின் மேல் நிற்கும் ஆடையை எடுத்துவிட்டு, அதனடியிலுள்ள தயிருடன் மேற் சொன்ன கஷாயத்தைக் கூட்டி நன்றாய்க் கடைந்து மோராக்கிக் கொள்ளவும். இதற்கு முஸ்தாதக்ரம் என்று பெயர்.

இந்த மோருஞ் சோறும் ஆகாரமாகக் கொடுத்து வரவும். எத்தனை தரம் வேணுமானாலும் எவ்வளவு வேணுமானாலும் இந்த மோரைத் தனியாகக் குடிக்கவும் உபயோகிக்கலாம்.

வெள்ளாட்டின் பால் கிடைக்குமானால், அதைக் காய்ச்சிக் கொடுப்பது நல்லது.

இனி ஒரு வயதுப் பெண் குழந்தையின் விஷயம். “இதே கோளாறாய் இருக்கிறது. வெள்ளையாய் புளித்த நாற்றமாய் பேதி ஒரு நாளைக்கு 3–4 தரம் போகிறது. குழந்தை புஷ்டியும் வளர்ச்சியும் இல்லாமலிருக்கிறது” “....ஆகார விவரம்....”

ஒரு வயது குழந்தை. தினம் 3–4 தரம் வெள்ளையாய் ஜெரிக்காமல் பேதியாகிறது. இந்தக் குழந்தைக்குக் கொடுக்கும் ஆகாரம் என்ன தெரியுமா?

(1) “காலை 7 மணிக்குச் சரிபாகம் ஜலம் விட்டுப் பசும் பால்.”

(அம்மா! பேதியாகும் குழந்தைக்குப் பால் கொடுக்கவே கூடாது. அப்படிக் கொடுப்பதாயின், வெள்ளாட்டின் பால் தான் கொடுக்கலாம். இது நல்லதுங்கூட.)

(2) “10 மணிக்கு விளாம்பழம் அளவு ரசம் சாதம்.”

(நல்ல பருப்பு ரசமாகக் கொடுக்கிறீர்களா என்று கேட்கத் தோன்றுகிறது. அம்மா! வேண்டாம். பையனுக்குச் சொன்னதுபோல் தயாரித்த மோர் கூட்டிச் சாதம் கொடுங்கள். வேணுமானால் சிறிது மஞ்சள் பொடி, ஓமம், கருவேப்பிலை இவை இட்டுக் காய்ச்சிய மோரைக் கூட்டிச் சாதம் கொடுங்கள். பால் வேண்டாம். ரஸம் சாதம் வேண்டாம்.)

(3) “2½ மணிக்கு ஜவ்வரிசி வறுத்துப் பொடி செய்த மாவுக் கஞ்சி—”

(மாப்பண்டமே கூடாதேம்மா! இதற்கு பதில் நெல் பொரியைத் துணியில் கிழியாகக் கட்டி ஜலத்திலிட்டுக் காய்ச்சிட, பொறியின் சத்து கொதிக்கும் ஜலத்தில் இறங்கிவிடும். பிறகு கிழித் துணியைப் பிழிந்து எறிந்துவிட்டு, இந்தக் கஞ்சியில் சீனிக் கற்கண்டு கூட்டிக் கொடுக்கலாம். ஆட்டின் பால் கூட்டிக் கொடுக்கலாம் அல்லது முன் சொன்னதேபோல் தயாரித்த மோர் கூட்டியும் கொடுக்கலாம்.)

(4) “6 மணிக்குப் பசும் பால்.”

(இது தேவையே இல்லை.)

(5) “9½ மணிக்குப் பசும் பால். பிறகு காலையில்தான்.”

(பசுவின் பாலைப்பற்றி ஏற்கெனவே சொன்ன பதிலையேதான் மறுபடியும் சொல்ல வேண்டி இருக்கிறது.)

மொத்தத்தில் இச்சிறு சிசுவிற்கு, இவ்வளவு ஜீரணக் கேடுள்ள சிசுவிற்குக் கொடுக்கும் ஆகாரம் மிகவும் அதிகம். அத்யதிகம். “டூ மச்!” என்று சொன்னால் போதாது “த்ரீ மச்” என்று சொல்ல வேணும்.

மருந்து ஆகாராதிகள் முதற் குழந்தைக்குச் சொன்னதுபோல்தான். அளவு சிறிது குறைக்கலாம். எப்படியானாலும் இவரில் உபத்திரவம் ஒன்றுமில்லையே என்பதைத் தக்க வைத்தியரிடம் காண்பித்து, ஆவன செய்வது அவசியம்.




கையிலே கட்டுப் புத்தகங்களை ஏந்தி, வீட்டுள்ளே நுழைந்த லதா, சுமையை மேஜைமேல் இறக்கிவிட்டு, அங்கேயே பிரம்பு சோபாவில் சாய்ந்தாள். "அப்பாடீ" என்று கைவிரல்களைச் சொடுக்கிக் கொண்டாள்.

காலையில் சென்று, மாலையில் வீடு மீண்ட அருமைப் பேத்தியைப் பார்த்துத் திருப்தியடையவேண்டி, மங்களம்மாள் சமையலறையின் கதவண்டை வந்தாள். சோபாவின் மேல்விளிம்பில் கழுத்தைச் சாய்த்தவாறு அண்ணாந்து நோக்கியபடி களையாறிக்கொண்டிருந்த லதா, பாட்டியைக் கவனிக்கவில்லை. குழாயடிக்குப் போனாள் மங்களம்மாள். மெல்ல கணவரிடம், "பேத்தி வந்தாச்சு; பாட்டிக் கிழவி மாதிரி களைப்பாறுகிறாள்" என்றாள்.

"நான் சொன்னபடி செய்" என்று உற்சாகமாய்ச்சொல்லிவிட்டு, சாம்பமூர்த்தி ஹாலுக்குள் வந்தார். லதாவின் முன்புறக் கழுத்து, அப்பொழுதுதான் உடைக்கப்பட்ட தேங்காயின் மூடிபோல, வெளேர் என்று சோபாவின் விளிம்பில் பளிச்சிட்டது. இன்னமும் அண்ணாந்தபடி இருந்தாள். எத்தனை களைப்போ!

"பேஷ், தாலியைக் கட்டிக்கொள்ளக் கழுத்தைத் தயார்செய்து வைக்கிறாயே!" என்று அவர் குரல் கொடுத்ததும் தடுக்கிட்ட லதா, நிமிர்ந்து அமர்ந்து, "என்ன சொன்னே தாத்தா?" என்று முழக்கினாள்.

"இல்லை, நான் சொன்னது சரியில்லை; தாலியைக் கட்டிக்கொள்ள இப்படிப் பின்புறம் சாயமாட்டார்கள். நன்றாகக் குனிந்துகொண்டால்தான் முடிச்சுப் போடுவான்..."

"போடுவான் போடுவான்...!" என்று முறைத்தாள் லதா.

"ஓஹோ! பார்த்தயா, தப்புத்தான் இதுவும்! முடிச்சுப் போடுகிறது ஆம்படையானின் கூடப்பிறந்த. . ."

"போ தாத்தா...வேறே வேலையில்லை உனக்கு! நீ சொல்கிற ஒரு பேச்சும் சரியில்லை" என்று லதா சிணுங்கிவிட்டு எழுந்தாள்.

"எனக்கு இனிமேல் வேலை ஒன்று தானே பாக்கி! என்னவோ கிழவன் தானேம்மா, வாய் குளறுகிறதாக்கும். . . கிடக்கட்டும். பாட்டி அரிசிமா இடித்து கிடித்து சேவை செய்திருக்கிறாள், சாப்பிடு; அப்போ தெரியும் பாட்டி தாத்தா அருமை!" என்று கூறிவிட்டு, வாசலுக்குப் போய்விட்டார் கிழவர்.

"சேவையா?" என்று 'பிங்பாங்க்' பந்துபோலத் துள்ளியபடி ஓடினாள் லதா. "பேத்திக்கு சேவை தா பாட்டீ!" என்றுரைத்தவண்ணம் மணையைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

"சேவைன்னு யார் சொன்னது? உனக்குப் பிடிக்காத அவல் கேசரின்னு!" என்றாள் பாட்டி.

"போ பாட்டி" என்று கோபமுடன் எழுந்த லதா, "தாத்தாக்குத் தித்திப்புப் பிடிக்கும்னு தினந்தினம் கேசரியும் வெல்லத்தோசையும் பண்ணு!" என்று முணுமுணுத்தாள்.

"கோவிச்சுக்காதேடி! இதோ சேவை தான், வா; தாத்தாக்கு எள்ளுப்பூரணம் போட்ட தித்திப்பு சேவை, உனக்கு இது" என்று மங்களம்மாள் பேத்தியை மறுபடி உட்கார்த்தினாள்.

சிற்றுண்டியைச் சேவித்துக்கொண்டிருந்த லதாவை, மங்களம்மாள் சற்று உற்றுப் பார்த்தாள். "நல்ல விசித்திரமான பொண்ணு! தித்திப்புப் பிடிக்காதோ ஒருத்திக்கு!" என்று அங்கலாய்த்துவிட்டு, அலமாரியின் தட்டிலிருந்து ஒரு தபால் உறையை எடுத்தாள்.

"போட்டோ வந்திருக்கு பாரு" என்று உறையை லதாவின் பக்கத்தில் வைத்தாள்.

தன் அக்காளிடம் போயிருக்கும் பெற்றோர், அங்கிருக்கும் புதுப் பேத்தியின் போட்டோவை அனுப்பியிருப்பார்களாக்கும் என்று நினைத்தாள் லதா. இடது கையால் அவசரமாக உருவி எடுத்தாள்.

சேவையை வாயருகு எடுத்துப்போன வலது கரம், ஒரே ஒருவினாடி உதட்டருகு நின்றுவிட்டது. மறுகணம் தட்டிலேயே போட்டது சேவையை. ஏனென்றால், ஒரு கட்டழகன் காட்சி அளித்தான் படத்தில்.

"யார், என்ன?" என்று லதா தடுமாறுமல், பாட்டி சொல்லிவிட்டாள் விஷயத்தை. "அன்றைக்கு ஒரு கடிதம் வந்தது பாரு! அந்தப் பையனின் போட்டோவாம், நன்றாயிருக்கிறான்" என்றாள் அமைதியாக.

"ஓஹோ!" என்று போட்டோவைக் கீழே போட்டுவிட்டாள் லதா. சேவையில் கவனத்தைத் திருப்ப முயன்றாள்.

"தாத்தா இப்போ உன்னை அழைச்சிண்டு போகிறாராம் போட்டோ பிடிக்க" என்றாள் பாட்டி.

"எப்படி அழைச்சிண்டு போவாளோ பார்க்கிறேன்!"

"ஏன், போகமாட்டியா?"

"முடியாது"

"ஏன் முடியாது?"

"சொல்ல முடியாது"

"இதென்னடியம்மா, அன்றைக்குக் கடிதம், ஜாதகம் வந்து போட்டோவைக் கேட்டிருந்தபோதும் எரிஞ்சு விழுந்தே! ஜாதகம் பொருந்தியிருக்கு என்ற பிறகும் அனுப்ப வேண்டாமா? அவர்களே முதலில் அனுப்பியிருக்கும்போது, நாம மட்டும்..." என்று பாட்டி இழுத்தாள்.

"அனுப்பணும்னு சாஸ்திரமா என்ன? முடியாது என்றால் முடியாது. பார்க்கலாமே யார் வீம்புக்குத்தான் ஜயமோ!" என்று வெறுப்புடன் மொழிந்துவிட்டு, லதா சிற்றுண்டியைத் தின்றுகொண்டிருந்தாள்.

"பேசவே பயமாயிருக்கே எனக்கு!" என்றாள் பாட்டி, லதாவைப் பேச்சுக்கு இழுப்பதற்கு.

"பேசவேண்டாமே!" என்றாள் பேத்தி.

அப்போதைக்குத்தான் ரோஷம் பாட்டிக்கு. இரவுச் சாப்பாடு போட்ட பொழுது மீண்டும் ஒரு முயற்சி. "தாத்தாக்கும் எனக்கும் பயத்தங் கஞ்சிதான். உனக்குப் பிடித்த கொத்சு பண்ணி இருக்கிறேன்" என்று சொல்லி, உணவு படைத்தாள். "பயத்தங்கஞ்சி அரை டம்ளர் குடியேன்; தித்திப்பு அதிகமில்லை, உடம்புக்கு நல்லது. பழகிக்கணுமே தித்திப்பு சாப்பிட! ஆம்படையான் தித்திப்பாக, தித்திப்புப் பிடித்தவனாய் வருவானே!" என்று ஆதுரமும், அபிமானமுமாக மயக்கப் பார்த்தாள் லதாவை.

"பாட்டி, உன் போட்டோ 'டிாிக்' எல்லாம் தெரிகிறது எனக்கு!" என்று பாட்டியை அடக்கிவிட்டு, வெங்காய கொத்சுவையும் ஒரு வாங்கு வாங்கிவிட்டு, லதா எழுந்து போனாள்.

⁂ ⁂ ⁂

தாத்தா பாட்டிக்கு பேத்தியின் பிடிவாதம் வியப்பும், கோபமும் உண்டாக்கின. இப்படியும் ஒரு முசுட்டுப் பெண் உண்டா, இதுவும் ஒரு 'பாஷாணு' என்று பாட்டிக்கு தாபம். லதாவின் போட்டோக்கள் வீட்டில் சொற்பத்திலும் சொற்பம். அவை, பள்ளித் தோழியரோடு கூட்டமாக எடுத்துக்கொண்டவை; அதுவும் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு. சாம்புவுக்கே போட்டோ எடுப்பது என்றால் பிடிக்காது. அப்படிப்பட்டவரே இப்பொழுது தேவையையொட்டி போட்டோ எடுக்க விரும்புகிறார். லதாவுக்கேற்ற வரன் ஒன்று கிடைக்கிறதென்று தெரிந்தும், நழுவ விடலாமா? முதலில் புகைப்படத்தைப் பார்த்து உகந்துவிட்டால், நேரில் வரலாம்; தற்சமயம் செலவும் நேரமும் குறையும் என்று பார்த்தால், லதா முரண் செய்கிறாள். என்ன நடவடிக்கை எடுப்பது என்று முதியவருக்கு விளங்கவில்லை. பெரியோர்களின் பேச்சை மதிக்காத தற்கால இளவட்டங்களைப் பற்றி ஒரு வளை வளைத்துப் பேசித் தீர்த்துக் கோபம் தணிந்தார் தாத்தா.

பேத்தி சளைத்தாளா? "நாங்களாவது இன்னும் உங்கள் மாதிரி பெரியவர்களாக வில்லை. நீங்களெல்லாம் எங்க மாதிரி இருந்ததில்லையோ? சின்னவர்களின் மனசைக் கண்டு கொள்ளப்பெரியவர்களுக்குத் தெரியவேண்டும்" என்று முணுமுணுத்தாள்.

ஏதாவது காதல் கீதல் விவகாரம் வந்து சேருமோ என்று பாட்டிக்கும் பாட்டனுருக்கும் திகில் பிடித்துக் கொண்டது. அந்த பயத்தைப் பரஸ்பரம் சொல்லிக்கொள்ளவும் சங்கடப்பட்டார்கள்!

மெல்ல, சாம்பமூர்த்தி, "ஸ்டுடியோக்குப் போகவேண்டாம்; போட்டோக்காரரை வீட்டுக்கு அழைத்து வருகிறேன்" என்று சொல்லிப் பார்த்தார்.

"ஏன் தாத்தா, போட்டோ எடுத்தால் ஆயுசு குறைந்துவிடும் என்பார்களே! என் ஆயுசைக் குறைக்க என்ன இப்படி அவசரம்?" என்று லதா துடுக்காக வினவியதும், கடுக்காயாகப் போய்விட்டது அவர் முகம்.

"நீ தீர்க்காயுசாய், தீர்க்க சுமங்கலியாய், நன்னா இருக்கணும் என்பது தானம்மா என் பிரார்த்தனை. வேறு வஞ்சனை எதுவுமில்லை" என்று முகம் சிறுத்துப் பேசிய தாத்தாவை, லதா ஒரு தினுசாகப் பார்த்துவிட்டு, வாயை மூடிக் கொண்டாள்.

சாம்பமூர்த்தி தம் பிள்ளைக்கு லதாவின் வீம்பைக்குறித்து, கடிதம் எழுதிப் போட்டார். ஆனால், அன்று மாலையிலேயே அவசரப்பட்டுவிட்டோமே என்று வருந்தினார். ஏனென்றால், லதா மனம் மாறி வந்திருந்தாள்!

"பாவம்! பாட்டி என்னைத் தாஜா பண்ண ரொம்ப சிரமப்படுகிறாள்; முறுகலாய் தோசை வார்த்துப் போட்டாள். பாட்டிக்கு பிரைஸாக என் போட்டோ ஒன்று தருகிறேன்... ஆனால், ஒரு நிபந்தனை!" என்று ஆள்காட்டி விரலை ஆட்டினாள்!

"அனுப்பக்கூடாது என்று சொல்லுவே! அப்போ பணத்தைச் செலவழித்து, போட்டோவைத்தான் எடுப்பானேன், தேஜஸ் குறைவானேன்!" என்றார் தாத்தா.

"ஓஹோ! தேஜஸாய் மாறிவிட்டதோ ஆயுஸ்! இருக்கட்டும்; நான் கண்டிஷன் போட வந்தது என்ன தெரியுமா? நான்

சொல்கிற ஸ்டூடியோவுக்குத்தான் போகணும். செலவு ரெட்டிப்பும் ஆகும், முட்டிப்பும் ஆகும்; அதற்குத் தடை சொல்லக் கூடாது! ஆமாம்! அப்புறம் போட்டோவை எங்கே வேணுலும் அனுப்பிப் பறிகொடுத்துக்கோ, நான் தடை சொல்லவில்லை. என் போட்டோ பிரதி மூன்று எனக்குத் தந்துவிடவேண்டும்—இவ்வளவுதான்."

பாட்டிக்குத் திருப்தி. "இதுக்கென்ன வந்தது? அப்படியே ஆகட்டும்டி லதா; நீ போய் அந்த நீலம்—அடையாறு பார்டர் புடவையை எடுத்து உடுத்து. கெட்டிச் சரிகைக்கரை பளிச்சுன்னு விழட்டும். . . ஏன்னா, கிளம்புங்கோ" என்று அவசரப்பட்டாள்.

கிழவர் நகரவில்லை. "எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்! ஆயுசைக் குறைக்கிறோம், தேஜஸைக் குறைக்கிறோம் என்று மனசு நொடிக்கொண்டே, போட்டோ எடுக்க மனசு சம்மதப் படல்லே!" என்று சொல்லிவிட்டார்!

"பின்னே என்னதான் வழி?"—இது பாட்டி.

லதா பதிலளித்தாள்: "என்ன தொல்லைகள்! சே! ஒருதரம் போட்டோவைப் பார்க்கணும், இன்னொரு தடவை அல்லாவுத்தீன் மாதிரி கண்ணாடியில் பார்க்கணும், இன்னொரு தடவை நேரிலேயே பார்க்கவேணும் . . . என்ன கூத்து இப்படியெல்லாம்? ஒரே தடவை நேரில் பார்த்துவிட்டுப் போகட்டும்!" என்று உறுமினாள் லதா.

தாத்தா பதிலே சொல்லவில்லை.

ஃ ஃ ஃ

பெண் பார்க்கும் படலத்திற்குப் பதவிசாய்த் தயாரானாள் லதா. வாய்ப் பேச்சில் மட்டும் வீரம் தளரவில்லை. "நேரில் பார்த்தால்தானே தெரியும் பவிஷு ஒன்றரைக் கண்ணைக்கூட அழகாய்த் திருத்திவிடுவார்கள், போட்டோவில். என்னவோ போட்டோவைக் கண்டதும் இவர்களுக்குத் தலை கால் புரியவில்லை!" என்று சொன்னாள்.

"நான் மெனக்கெட லலிதா என்ற என் பெயரை 'லதா'வாக்கிக்கொண்டேன்; பொருத்தமாய் அமையணும் என்று மாற்றிக்கொண்டேன்! வரப்போகிற ஆசாமிகூட பெயருக்குப் பொருத்தமாய் பலமான சாப்பாட்டுராமன்போலிருக்கு!" என்று கேலி செய்தாள்! பையன் பலராமன் இந்த மாதிரி விமரிசனங்களைச் செவியுற்றிருந்தால், "வாயாடி" என்று முடிவு கட்டிவிட்டு, வராமலே இருந்திருப்பான்!

என்ன செய்யலாம்? வேளை வந்தது; அவனும் வந்து சேர்ந்தான். புன்முறுவல் பூத்த முகத்தினளாய் விளங்கிய லதாவைப் பார்த்துவிட்டான். 'ஒன்றரைக் கண் அல்லவே?' என்று நினைப்பவள் போல, அவன் கண்களைக் கூர்ந்து நோக்கிய அந்த நீள் விழியாளின் பார்வையில் கட்டுண்டான்!

அப்புறம் என்ன? கலியாணந்தான் நடந்தது. மஞ்சள் சரடு ஏறிற்று லதாவின் சங்குக் கழுத்திலே.

கழுத்தில் மாலையும் மணக்கோலமுமாய் நிறைய போட்டோக்கள் பிடித்தார்கள். கல்யாணச் சந்தடி ஓய்ந்ததும்

ஸ்டூடியோவுக்கு அழைத்துச் செல்ல விரும்பினார்கள்.

"நான் சொல்கிற ஸ்டூடியோவுக்குத்தான் போகணும்" என்றாள் லதா, தந்தையிடம்.

"இன்னும் என்ன நிபந்தனை?" என்று ஆச்சரியம் தாத்தாவுக்கு. ஒப்புக்கொண்டார்கள், விளங்காமலே.

திருமணத்திற்கு வந்தவர்கள், வாராதவர்கள் என்ற இருதரப்பட்ட நண்பர்களும் உறவினர்களும், உரிமையுடன், "எங்களுக்கு ஒரு பிரதி வேண்டும்" என்றார்கள்.

"பத்திரிகையில் வெளியாகும், அதைக் கிழித்து எடுத்துக்கொள்ளலாமே!" என்று சொல்ல முடிகிறதா?

திருமணத்திற்கு வந்து போயிருந்தவர்கள் அந்தப் போட்டோவைப் பார்த்துவிட்டு, "லதா நேரில் பார்க்க நல்ல அழகு; சிவந்த நிறம்; இதில் தெரிகிறதா? பலராமன் போட்டோவில் அதிகம் சோபிக்கிறான்" என்றனர். "ஜோடி பொருத்தம்தான்" என்றனர், மற்ற பேர்.

லதா போட்டோவைப் பார்த்தபடிக் கடிதம் எழுதினாள் கணவனுக்கு: "நான் போட்டோவுக்குத் துளிக்கூட லாயக்கு இல்லை. போட்டோவிலும் சரி, நேரிலும் சரி, நீங்கள் அழகன்....இத்தனைக்கும், ரொம்ப நல்ல 'ஏங்கிள்' பார்த்து, வெகு நேர்த்தியாய் எடுக்கிற ஸ்டூடியோவுக்குத் தான் போகணும் என்றேனே . . ." இதை லதா, தாத்தா பாட்டியிடம் இன்னமும் சொல்லவில்லை. . . .

மித்திரன் வாரப்பதிப்பில் தொடர்ச்சியாக வெளிவந்து அனைவராலும் வரவேற்கப்பெற்ற "உலகம் பிறந்த கதை" என்ற கட்டுரைகள் சீக்கிரத்தில் புத்தக ரூபமாக வெளிவருகின்றன. இவ்வுயர்ந்த விஷயம் பற்றி தமிழில் புத்தகம் வருவது இதுதான் முதல் தடவை. பெரியவர்கள் தவிர்த்து, குழந்தைகளும் ரஸிக்கக்கூடிய தெள்ளிய நடையில் ஸ்ரீ சக்திதாஸன் சுப்பிரமணியன் இப்புத்தகத்தை எழுதியுள்ளார். பிரதிகள் சீக்கிரம் சுதேசமித்திரன் தலைமை ஆபீஸிலும் மற்றும் மித்திரன் ஸ்டால்கள், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

**விலை ரூபாய் ஒன்று**

## தலைநகர் பால்.....

சௌத் இந்தியா கிளப்' உறுப்பினர்கள் சென்ற வாரம் 'வஸந்த சேனை' என்ற நாடகத்தைச் சேர்ந்தாற்போல மூன்று நாட்களுக்குச் சிறப்புற நடத்தி வாகை சூடினர். மன்னர் சூத்ரகர் தீட்டிய மாபெரும் நாடக ஓவியத்தை தில்லி அன்பர்கள் கண்டு மகிழும் வாய்ப்பை அளித்தார்கள். அமெச்சூர் நடிகர்கள், தில்லியில் இத்தகைய நாடகமொன்றைத் துணிவுடன் நடிக்க முற்பட்டு, அதில் பெரும் வெற்றியும் அடைவது சாத்தியம் என்பதை நிரூபித்தார்கள். பழமையான இந்தக் கதைக் காலத்திய சூழ்நிலையை மேடையில் தோற்றுவித்தனர்; அதுவும் பண்டைக் காலத்திய உடை வகைகள், லதாக் கிரஹங்கள், வீதிகள், வீடுகள், காட்சிகள் அனைத்தையுமே சாத்தியமாக்கி, தத்ரூபமாக்கிக் காட்டினார்கள். இதில் தனிச் சிறப்புக்குரிய அம்சம் என்னவென்றால், ஸீன்கள், சாமான்கள், ஜோடனைகள் அனைத்தையுமே வரைந்து தயார் செய்தவர்கள் கிளப் உறுப்பினர்களே. இந்த வகையில் மூன்று வார காலமாக இராப் பகலாக உழைத்த ஓவியர்களான என். ஆர். ராஜகோபாலன், ஜனார்த்தனன், ஈஸ்வரன் ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

'மிருச்சகடிகம்' என்ற மூல நூலிலிருந்து கதையை எடுத்து நாடகமாக்கி, ஜீவனுள்ள அருமையான வசனத்தை எழுதி வெற்றி கண்ட பெருமை, தில்லியில் பிரபல நடிகரான ஸ்ரீ என். ஸ்ரீனிவாசனைச் சாரும். சிக்கல் அதிகமின்றி, அழகுற அமையப்பெற்ற இந்த நாடகத்தில், நல்ல விறுவிறுப்பு இருந்தது. பொதுவாக நடிகர்களும் திறம்பட நடித்தார்கள் என்றே சொல்ல வேண்டும்.

தில்லியின் சிறந்த நடிகர்கள் பலரும் நடித்த இந்த நாடகத்தில், வில்லனாக—அதாவது சகாரகனாக—வரும் 'பாசு' முதலிடத்திற்குரியவராகிறார். தமது பாகத்திற்குரிய உணர்ச்சிகளை அழகுற வெளிக்கொணர்ந்தார். ஒரே வார காலத்தில் 'வசந்த சேனை'யாகத் தன்னைத் தயார் செய்துகொண்ட உமா கிருஷ்ணமூர்த்தி, இயன்ற அளவு நன்றாக நடித்தார்; ஆனால், அவரது கணவர் கிருஷ்ணமூர்த்திக்கு 'சாருதத்தன்' என்ற பிரதான பாத்திரம் சற்றும் பொருத்தமில்லை. மைத்ரேயன் பாகம் ஏந்தி நடித்த ஜகந்நாதன், விட்டனாக வரும் மாப்பிள்ளை கிருஷ்ணன், மதுரனாக வரும் சந்தானம், வசந்தசேனையின் தாயாராக வரும் சுந்தா, நீதிபதியாக வரும் ராஜகோபாலன், ஆரியகனாக வரும் நாகராஜன் ஆகியோர் சிறப்பாக நடித்தார்கள். இந்த நாடகத்தை அழகுறத் தயாரித்தமைக்காக, ஆர். கே. ராவையும், 'கிளப்' காரியதரிசி ராஜியையும் பாராட்ட வேண்டும்.

* * * *

சென்ற செவ்வாய்க்கிழமையன்று தில்லி நாட்டியக் கலாலயத்தின் ஆதரவில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியொன்றில், பால் மணம் மாறாத சிறுமிகள் ஆர்வத்துடன் ஆடிப்பாடி மகிழ்வித்தார்கள். ஆடிப்பாடிக் குறி சொல்லும் பச்சைமலைக் குறத்தியாக வந்த ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தி, சபையில் சொக்குப்பொடி போட்டு, எல்லோரையும் மயக்கியே விட்டாள் என்றால் மிகையாகாது. கலாலய மாணவி குமாரி ஊர்மிளா, பதங்களின் கருத்தை நன்குணர்ந்து, அதற்குரிய பாவத்துடன், அழகுற அபிநயம் பிடித்து ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றாள். தவிர நாட்டியக் கலாலயத் தலைவி ஸ்ரீமதி கிரிஜா பக்கிரிசாமியும் நடனமாடினார். மேலும், ஜயம், சோபனா முதலிய சிறுமிகளும் அபாரமாக ஆடி, தாம் பயிலும் கலைப்பள்ளிக்குச் சிறப்பைத் தேடித் தந்தனர் என்று சொல்லலாம்.

மக்கள் சபையின் சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்காரையும், 'தமிழ் மறைக் காவலர்' எனச் சமீபத்தில் பட்டம் பெற்றுள்ள ஸ்ரீ முனிஸ்வாமிக் குறளாரையும் கௌரவிப்பதற்காக நாட்டியக் கலாலயத்தினர் ஏற்பாடு [illegible]திருந்த இந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கு, தகவல், ஒலிபரப்பு மந்திரி டாக்டர் கேஸ்கர் தலைமை தாங்கினார். ரயில்வே மந்திரி ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரியும், பார்லிமெண்ட் உறுப்பினர்களும், மற்றும் ஸ்தலப் பிரமுகர்களும் இதில் பெரும் அளவில் கலந்துகொண்டனர். பசும்பொன் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரும் கூட்டத்தில் கலந்துகொண்டு, நாட்டியக் கலையின் தத்துவத்தைத் தமக்கே உரிய இனிய நடையில், அழகாக எடுத்துரைத்து, தில்லித் தமிழரின் கலைப் பணியைப் பாராட்டி வாழ்த்துக் கூறினார்.

## பம்பாய் நிகழ்ச்சிகள்

பம்பாய் நகருக்கே முதல் தடவையாக, உட்கார்ந்த இடத்திலிருந்தே பலவேறுபட்ட இந்தியப் புராதனக் குடிகளின் நாட்டியத்தையும், சமூக நடனங்களையும் காணும் சந்தர்ப்பத்தை 'இந்தியன் நேஷனல் தியேடர்ஸ்' நிர்வாகிகள் நமக்கு அளித்துள்ளனர். இவ்வித நடனங்களை ஒன்றுகூட்டிப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் வாய்ப்பது அரிதே. இந்த நடனங்களை 'பம்பாய் விழா' என்ற அகில இந்திய புராதனக் குடிகளின் நாட்டிய விழாவில் நாம் காணலாம், இது பம்பாயில் இம்மாதம் 19-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை நடைபெறவிருக்கிறது.

அந்த விழாவில் பங்கெடுத்துக்கொள்ள ராஞ்சியிலிருந்து ஓரான் நடன கோஷ்டியினரும், பஸ்தாரிலிருந்து மேரியாஸ் என்ற நடனக் குழுவினரும், தஞ்சையிலிருந்து பொய்க்கால் குதிரை நாட்டியக்காரர்களும், கும்பகோணம் பொம்மலாட்டக்காரர்களும், ஹைதராபாத் லம்பாடி நாட்டியக்காரர்களும், தவிர, ஹஸாரிபாக், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், சௌராஷ்டிரம் முதலிய இடங்களிலி


சேலம் செவ்வாய்ப்பேட்டை

**ஸ்ரீ வெங்கடேஸ்வர பாங்கு லிட்.**

(ஸ்தாபிதம்: 1931)

உங்கள் ஆதரவும் மதிப்பும் பெற்றது.

அனுபவமுள்ள டைரக்டர்களாலும் தேர்ச்சியும் உற்சாகமும் உள்ள ஆபீஸ்-பேரர்களாலும் கிளார்க்குகளாலும் நடத்தப்படுகிறது.

**31—12—55ல் உள்ளபடி**

| | | | |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | ... | ரூ | 2,00,000 |
| வெளியிட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது | ... | ரூ. | 1,20,000 |
| கேட்டு செலுத்தப்பட்டது | ... | ரூ. | 52,500 |
| ரிசர்வ் பண்டுகள் | ... | ரூ. | 76,500 |
| டிபாசிட்டுகள் | ... | ரூ. | 11,93,000 |
| நிகர லாபம் 1955-ல் | ... | ரூ. | 37,300 |

இதில் ரூ. 14,000 ரிசர்வ் பண்டுக்கு ஒதுக்கப்படும்

| | | | |
|---|---|---|---|
| நடைமுதல் மூலதனம் | ... | ரூ. | 14,00,000 |
| லோன்ஸ் & அட்வான்ஸ்கள் | ... | ரூ. | 7,67,000 |
| ரொக்க இருப்பும் கரண்ட் அக்கவுண்டிலும் | ... | ரூ. | 74,500 |
| கவர்ண்மெண்ட் பாண்டுகள் வாங்கியிருப்பது | ... | ரூ. | 3,36,000 |
| இதர பாங்குகளில் பிக்ஸட் டிபாசிட் | ... | ரூ. | 1,85,000 |

மேற்படி மூன்று அயிட்டங்கள் சேர்ந்து ரூ 5,95,000 ஆகிறது. இது மொத்த டிபாசிட்டில் பாதியாகும். லிக்விட் ரிசோர்ஸ் என்பது இதுதான். லிக்விட் ரிசோர்ஸும் ரிசர்வ் பண்டும்தான் ஒரு சிறந்த பேங்கின் இரு கண்களாகும். இது உங்கள் டிபாசிட்டைக் காப்பாற்றும் பொறுப்பையும் பந்தோபஸ்தையும் எடுத்துக்காட்டுகிறது.

எல்லாவித பாங்க் அலுவல்களைக் கவனிக்கப்படும்.

கவர்மெண்ட் பாண்டுகளை வாங்கப்படும்.

பிக்ஸட் டிபாசிட்டுக்கு வட்டி 4½%—சேவிங்ஸுக்கு வட்டி 2½%.

K. S நாகேந்திரய்யா, செக்ரிடேரி.

குந்து நடனக் குழுவினர்களும் வர விருக்கின்றனர் என்று தெரிகிறது.

பம்பாய் வாசிகள் இந்த நல்ல தருணத்தை நழுவ விடமாட்டார்கள் என்றே எதிர்பார்க்கிறோம்.

ஃ ஃ ஃ

பம்பாய் அருகில் உள்ள டோம்பிவில்லி தென் இந்தியர் சங்கத்தின் மாதர் பகுதியினர் தியாக பிரம்மோத்ஸவத்தை, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கச்சேரி வீதம் வைத்து, சென்ற மாதம் இறுதியில் மூன்று நாட்கள் சிறப்பாகக் கொண்டாடினர்.

முதல் நாள் விழாவில் மாதுங்கா வாசியான ஸ்ரீமதி செல்லம்மாளும், இரண்டாவது நாள் ஸ்ரீ நாராயணஸ்வாமியும் சங்கீதக் கச்சேரிகள் நிகழ்த்தினர். கடைசி தினத்தன்று ஸ்ரீ நரசிம்மாச்சாரியார் 'உத்தம ஸ்திரீகள்' என்ற பொருளில் அரியதொரு உபந்யாசம் செய்தார்.

டோம்பிவில்லி கல்யாணுக்கு அருகாமையில் உள்ள ஒரு சிறிய ஊர். சென்னை ராஜ்ய வாசிகள் மிகுந்த ஊர். ஸ்ரீ கே. எஸ். சீமா, ஸ்ரீ கே. எஸ். நாராயணஸ்வாமி ஆகியோருடைய பெரு முயற்சியால் 1947-ல் துவக்கப்பட்டு, சிறந்த பணியாற்றி வரும் இங்குள்ள தமிழ்ச் சங்கம், கலை, கலாசார விழாக்களையெல்லாம் நடத்திவருகிறது. இச்சங்கத்தின் பணி, மேலும் மேலும் பெருகும் என்றே எதிர்பார்க்கிறார்கள், இங்குள்ள தமிழன்பர்கள்.

★

திருமண தினம்

இந்தியாவில் கல்யாணப் பழக்க வழக்கங்கள் தொன்று தொட்டு இன்றுவரை, மாறுதல் ஏதும் அடையாமல் வந்துள்ளன. நேர்த்தியான புத்தாடைகளும், நன் மலர்களும், இன்னிசையுமாக அன்றுபோல் இன்றும் குலவும் திருமணமானது நம்மைத் துடிக்கும் ஆவலுடன் எதிர்பார்க்க வைக்கும் நிகழ்ச்சியாகவும், வருங்காலத்தில் நினைந்து இன்புறக்கூடிய வைபவமாகவும் விளங்குகிறது.

இன்ப மயமான இத்தகைய மரபினிலே இன்றியமையாத அம்சமாகத் திகழ்வது திருமண விருந்து. இதையறிந்து, பூரண சிரத்தையுடன் தத்தம் விருந்தினர்களை உபசரிக்க விரும்பும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள், வளங் கொழிக்கும் வசீகர வகையருக்களாக விதவிதமான தின் பண்டங்கள் தயாரிப்பதற்காக இக்காலத்தில் டால்டா பிராண்ட் வனஸ்பதியை நாடுகின்றனர். தரத்திலும், தூய்மையிலும் அது நம்பிக்கைக்குப் பாத்திரமானது என்பது அவர்களுக்குத் தெரியும். மேலும் டால்டா, வாங்குவதற்கு சிக்கனமாக இருப்பது வெளிப்படை.

எங்கெங்குமே டால்டா, விருந்திலும், கோலாகலத்திலும் வரவேற்கத் தக்க பங்குகொண்டு திருமண வைபவத்தையே சோபிக்கச் செய்கிறது.

**டால்டா பிராண்ட் வனஸ்பதி**

HVM. 265-X52 TM

# வருகிறது

## எம்.ஏ.வி.பிக்சர்ஸ்

# சம்பூர்ண ராமாயணம்




சிவாஜி கணேசன் • N.T.ராமராவ் • T.K.பகவதி
V.நாகையா • நரசிம்மபாரதி • V.K.ராமசாமி
E.R.சகாதேவன் • ஏழுமலை • கருணாநிதி
பத்மினி • G.வரலக்ஷ்மி • M.N.ராஜம்
சந்தானலக்ஷ்மி • சுப்புலக்ஷ்மி • முத்துலக்ஷ்மி
லக்ஷ்மிபிரபா • ராஜகாந்தம் • E.V.சரோஜா......

டைரக்ஷன் — K.சோமு • கதை, வசனம் — A.P.நாகராஜன்
பாடல்கள் — மருதகாசி • சங்கீதம் — K.V.மஹாதேவன்
ஸ்டுடியோ: கோவை ஸெண்ட்ரல்

BHARAT STUDIO

விநியோகஸ்தர்கள்:—வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு & சித்தூருக்கு: ராஜா பிலிம்ஸ், சென்னை-2; மதுரை, ராமநாதபுரம் & திருநெல்வேலிக்கு: எவரெஸ்ட் பிக்சர்ஸ், மதுரை; சேலத்திற்கு: எம். ஏ. வி. பிக்சர்ஸ், சேலம்; பெங்களூர், மைசூர் & குடகிற்கு: தல்லம் பிக்சர்ஸ் சர்க்யூட், பெங்களூர்; மலபாருக்கு: சிதா பிக்சர்ஸ், கோட்டயம், எப். எம். எஸ்: ஷா பிரதர்ஸ், சிங்கப்பூர்.

இதர விவரங்களுக்கு: எம். ஏ. வி. பிக்சர்ஸ், கோயமுத்தூர், (S. I.)

# கலாமண்டபம்

## சினிமாச் செய்திகள்

சமீபத்தில் ஒரு பிரபல ஆந்திர-தமிழ் நடிகையிடம் பேசிக்கொண்டிருக்க நேர்ந்தது. அவர் கூறியதை அப்படியே கேளுங்கள்: "நான் என்ன ஸார் செய்யட்டும்! நான் 'வேண்டாம், வேண்டாம்' என்றாலும், என்னைத் தங்கள் படத்தில் நடித்தே ஆக வேண்டுமென்று தொந்தரவு செய்கிறார்கள். பிரதி தினமும் பதினாறு மணி நேரத்திற்குமேல் வேலை செய்கிறேன். அப்படியும் முடியவில்லை. தற்போது பதினாறு படங்கள்—இவைகளில் பத்துப் படங்கள் தமிழ், தெலுங்கு இரு பாஷைப் படங்கள். நான் என்ன செய்யமுடியும்? நான் பணத்திற்கு ஆசைப்பட்டு நடிப்பதாக நீங்கள் நினைக்கக்கூடும். அதை நான் பூராவும் மறுக்கவில்லை. இந்த உலகத்தில் பணம் இல்லையென்றால், பிறகு வாழ்வு ஏது? ஆனாலும், அப்படிப் பணத்திற்காகவே நான் நடிப்பதாக நீங்களும் நினைத்துவிடாதீர்கள். இப்பொழுது நான் நடிக்கும் தமிழ்ப் படங்கள் பலவற்றில்,இரண்டு மூன்றுதான் என் மனதுக்குப் பிடித்துள்ளன. மற்றவை யாவும் ஏதோ பெயரளவில் படங்கள்தான். சிறந்த கதா பாத்திரங்களில் நடித்துப் பேரும் புகழும் அடைய வேண்டும். அதனால் எனக்கும் கௌரவமுண்டு, படக் கலைக்கும் கௌரவமுண்டு என்பதைப் பரிபூரணமாக நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், தமிழ்ப் படாதிபதிகள் வற்புறுத்தித் தங்கள் படங்களில் நடித்துத்தான் ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் போது, நான் என்ன செய்ய முடியும்? நான் மறுத்தால், எனக்கு மண்டைகனம் உண்டாகிவிட்டது என்பார்கள். அவர்களிடம் உங்கள் கதை நன்றாக இல்லை என்று கூற முடியுமா?

"அப்படியும் இரண்டொருவரிடம், ஏன் இந்தக் கதையைத் தேர்ந்தெடுத்தீர்கள்? நல்ல கதை கிடைக்கவில்லையா என்று கேட்டேன். "நன்றாகச் சொன்னீர்கள்! இந்தக் கதை ஹிந்தியில் வெள்ளி விழா கொண்டாடியிருக்கிறது" என்றார் ஒருவர். மற்றொருவர், "நல்ல கதை எதற்கு? உங்களைப்போன்ற நட்சத்திரங்களின் நடிப்பால்தானே கதைக்கு மதிப்பு ஏற்படுகிறது!" என்றார்.

"மற்றொரு தமிழ்ப் படாதிபதி தன்னுடைய படத்தில் என்னை நடிக்க அழைத்தார். அவரிடம் நான் மிகத் தாழ்மையுடன், எனக்கு நிறையப் படங்கள் இருக்கின்றன, வேறு யாரையாவது போட்டுக்கொள்ளுங்கள் என்றேன். அவர், "முடியாது, நீங்கள்தான் நடித்தாக வேண்டும்" என்று பிடிவாதம் செய்தார். 'எனக்கு உடனடியாக நடிக்க நேரமில்லையே' என்றேன். இது நடந்தது பிப்ரவரி மாதத்தில். அவர், "நீங்கள் ஏப்ரல், மே மாதத்தில் 'செட்டு'க்கு வாருங்கள் போதும்" என்றார். ஏப்ரலில் இரண்டு நாள், மே மாதத்தில் இரண்டு நாள் நடித்தால் போதுமா? என்னுடன் நடிக்கும் சக நடிக நடிகையரின் கதி என்ன ஆவது? நட்சத்திரங்களாகிய எங்களுக்கு வாழ்க்கை சௌகரியமாக இருக்கிறது. ஆனால், உப நடிகர்கள், நடிகையர்கள் கதி என்ன? அவர்கள் ஒவ்வொரு படத்திலும் இரண்டு வருஷங்கள் நடித்துக்கொண்டிருக்க முடியுமா?

"இவ்வாறு பலவந்தப்படுத்தி நடிக்க வைப்பதில் பிரயோசனமில்லை. மனத்திற்குப் பிடிக்காததைப் பல கதைகளில் நான் நடிக்கிறேன். அவை எடுக்கப்படும் முறையும், அவற்றிலுள்ள வசனங்களும் எனக்குச் சற்றும் திருப்தி தரவில்லை. ஏதோ அவர்களுடைய முக தாட்சண்யத்திற்காக ஒப்புக்கொண்டு நடிக்கிறேன். இப்படங்கள் வெளிவந்தால், அவை எப்படியிருக்கும்?" என்றார்.

மற்றொரு தெலுங்கு-தமிழ் நடிகையும் இதே கதையைத்தான் கூறினார். அத்துடன், தற்போது வெளிவரும் படங்களை எண்ணித் தாம் தலைகுனிவதாகவும் கூறினார். அவர் எப்பொழுதுமே வடநாட்டுப் படங்களையும், நடிக நடிகையரையும்விட, நம் நாட்டுப் படங்களும், நடிக, நடிகையரும் உயர்ந்தவர்கள் என்று கூறுகிறவர். இப்பொழுது வெளிவரும் படங்களைப்பற்றிப் பெரிதும் துக்கப்பட்டார். ஆயினும், அவரும் தன்னால் நடிக்க முடியாதென்று நிராகரிக்க இயலவில்லை என்று கூறிவிட்டார்.

கஸ்தூரி பிலிம்ஸ் 'சதார'த்தில் இப்படி ராஜ உடையில் ராஜ முழி முழிக்கிறார் சாரங்கபாணி

"அநேகமாக நான் நடிக்கும் தமிழ்ப் படங்களின் கதையைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. திடீரென்று நாளைக்கு 'ஷூட்டிங்' என்று சொல்வார்கள். சில சமயம் வசனங்களைக் கொண்டுவந்து தருவார்கள். சில சமயம், 'உங்களுக்கு அதிக வசனம் இல்லை! உங்கள் காதலனாக நடிக்கப் போகிறவர் பேசுவார். அதை நீங்கள் கேட்டுக்கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் இந்த ஒரே பதிலை மட்டும் அளித்தால் போதும். அந்த இரண்டு வார்த்தைகளையும் நீங்கள் ஸ்டுடியோவில் வந்து பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்லுகிறார்கள்.

'கதையில், இந்த சம்பாஷணை எந்த இடத்தில் வரும் என்பது எனக்குத் தெரியாது. டைரக்டர், தன் உதவி டைரக்டரிடம் அந்தக் கட்டத்தைச் சற்று விளக்கும்படி கூறுவார். அவர் விளக்கியதைப் புரிந்துகொண்டு, டைரக்டர் கூறுகிறபடி யந்திரம்போல் நடித்துவிட்டு வரவேண்டும். சில சமயங்களில் கதை நமக்குத் தெரிந்ததாக இருந்தால், டைரக்டருக்குச் சிரமமின்றியே நடிக்க முடியும். என்ன காரணத்தினாலோ, எங்களிடம் அவர்கள் கதையைக் கூறுவதேயில்லை. திடீரென்று ஒரு நாள், 'இன்று நீங்கள் அழவேண்டிய கட்டம்' என்பார்கள். எதற்காக, யாருக்காக? ஒன்றுமே புரியாது! சரி, தமிழ்ப் படவுலகின் தலைவிதி இப்படி இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு அழவேண்டியதுதான். எதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை.

'வெளிவரும் படங்கள் ஒன்றாவது நன்றாக இல்லை. ஆனால், எங்களுக்கு மேன்மேலும் ஒப்பந்தங்கள் கிடைத்துக்கொண்டுதான் வருகின்றன. புதிய முகங்கள், திறமையுள்ளவர்கள் ஆகியோருக்குச் சந்தர்ப்பமளிக்கும் எண்ணமே ஒருவருக்கும் இல்லை. பட உலகில் நாங்களே சாச்வதமாக இருக்க முடியுமா? ஏதோ நட்சத்திரங்கள் உள்ள படத்தை ஜனங்கள் பார்க்கிறார்கள் என்பதற்காக, கதையோ, கற்பனைத் திறனோ இல்லாமல் படமெடுத்தால், அதன் விளைவு இப்

தொழில் போகும் கதி இவ்வருஷ முடிவுக்குள்ளேயே அதைத் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குக் கொண்டு வந்து விடும்.

"தென்னாட்டில் திறமை மிக்க நடிகையர் நடிகர்கள் இருக்கிறார்கள். ஆனாலும், திரும்பத் திரும்ப எங்களில் ஒரு எட்டுப் பேரை மட்டும் போட்டி போட்டுக் கொண்டு ஒப்பந்தம் செய்கின்றனர். இதிலிருந்து ஒரு விஷயம் நிச்சயம்: நாங்களும் ஒரு டைரக்டரின் மூலமாகத்தான் நட்சத்திரங்களானோம் என்பதை இவர்கள் மறந்துவிட்டார்கள். படங்கள்தான் நட்சத்திரங்களை உண்டாக்குகின்றன என்பதையும் மறந்துவிட்டார்கள். தங்கள் திறமையின் மூலமோ, சிறந்த கதைகளின் மூலமோ வெற்றியடைய முயற்சி செய்யாமல், நட்சத்திர மோகத்தைக் காசாக்கிக்கொள்ளவே இவர்கள் முயற்சி செய்கிறார்கள். இந்த நிலைமை மிகவும் வருந்தத்தக்கது!" என்றார் அவர்.—இவ்விரு நடிகைகளும் யார் என்பதை நேயர்களே எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். முக்கால்வாசித் தெலுங்குப் படங்கள் பெருவெற்றி பெறுகையில் தமிழ்ப் படங்களில் முக்கால்வாசி தோல்வியுறுவதேன் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

நியூடோன் ஸ்டுடியோவில் ஒரு பக்கம் 'சக்கரவர்த்தித் திருமகளாக'வும், மற்றொரு பக்கம் 'பூலோக ரம்பை'யாகவும் நடித்துவருகிறார் அஞ்சலி. காலையில் பூலோக ரம்பையிலும் பிற்பகல் சக்கரவர்த்தித் திருமகளிலும் நடிக்கிறார். சேர்ந்தாற்போல் இந்த வேலையை நான்கு தினங்கள் செய்துவிட்டு, பிறகு தன்னுடைய சொந்தப்படத்திற்காக இரண்டு தினங்கள் நடிப்பார்.

யின் சபதத்"தில் இரண்டு தினங்கள் நடித்தேன்; ஊருக்குப் போகுமுன் இன்னும் இரண்டு மூன்று தினங்கள் நடிப்பேன்" என்றார் அஞ்சலி. 'எந்த ஊருக்கு?' என்று கேட்டதும், "விரைவில் பம்பாய்க்குப் போகிறேன். நாராயணன் கம்பெனியாரின் ஹிந்திப்படம் 'தேவதா'விற்கான வர்ணக்காட்சிகள் அங்கே எடுக்கப்படவிருக்கின்றன. நாகலோகஸீன் பூராவையும் வர்ணத்தில் எடுக்கப் போகிறார்களாம். அந்தக்காட்சியில் என்னுடன் வைஜயந்தியும் நடிக்கிறார். அங்கே ஒரு வாரம் தங்கி இதை முடித்துவிட்டு வரப்போகிறேன்" என்றார் அவர்.

'வேறு எந்தப்படத்தில் நடிக்கிறீர்கள்?' என்று தொடர்ந்து வினவிய போது "நிறைய படங்களில் நடிக்கிறேன். அடுத்தபடியாக சியாமளாவின் 'சிலம்புக்குகை'க்காக நடிக்கவேண்டும். 'ரம்பையின் காதலி'ல் இரண்டு காட்சிகள் நடித்துள்ளேன்" என்றார். "நீங்கள் சிறந்த வங்காளிக் கதையொன்றைப் படமெடுக்கப்போவதாக முன்பு கூறினீர்களே, அதை எப்பொழுது எடுக்கப் போகிறீர்கள்?' என்று கேட்டதும், 'தற்போது கிராமியக்கதைகளுக்குத்தான் 'மார்க்கெட்' இருக்கிறது. ஆகவே இப்போது ஒரு ராஜா ராணி கதையைச் சொந்தத்தில் தயாரித்துவருகிறேன். என்னுடன் நாகேஸ்வர ராவ், ராஜசுலோசனா, ரேலங்கி ஆகியோர் நடிக்கின்றனர். வேதாந்தம் ராகவய்யா டைரக்ட் செய்கிறார்" என்று பதிலளித்தார் அஞ்சலி தேவி.

டி. ஆர். மகாலிங்கம் தயாரித்துவரும் படத்தில் இப்பொழுது ஜெமினி நட்சத்திரமான வனஜா நடித்துவருகிறார். சமீபத்தில் அவர் நடித்த தமிழ்ப்படங்கள் ஒன்றும் வெளிவரவில்லை அல்லவா? ரசிகர்கள் தன்னை மறந்துபோகாமலிருக்க ஏதாவது ஒருபடத்தில் தலையைக் காட்டவேண்டாமா?— இதற்காகத்தான் 'தெருப்பாடக'னில் நடிக்கிறார் அவர். இப்படத்தை ஏ. டி. கிருஷ்ணசாமி டைரக்ட் செய்கிறார். படப்பிடிப்பு வேலைகள் வேகமாக நடைபெற்றுவருகின்றன.

சிவாஜி கணேசனும் சாவித்திரியும் முதன்முறையாக ஒருமிக்க பிரதான பாகங்களேற்று நடிக்கும் படம் 'அமர தீபம்' தான். 'பெண்ணின் பெருமை'க்குப் பிறகு இந்த ஜோடியை, அதுவும் காதல் ஜோடியாக 'அமர தீப'த்தில் பார்க்கப்போகிறீர்கள். இது ஜூன் மாதம் திரைக்கு வந்துவிடும்.

அம்மாதம் வெளிவரவிருக்கும் படங்களில் நாராயணமூர்த்தியின் டைரக்ஷனில் தயாராகும் 'பத்தினித் தெய்வ'மும் ஒன்று. இதில் ஜெமினி கணேசன், சாவித்திரி இருவரும் நடிக்கின்றனர்.

விஜயா ப்ரொடெக்ஷன்ஸார் தற்போது மூன்று படங்களை எடுக்கத் திட்டமிட்டுள்ளனர். ஒன்று 'சசிரேகா பரிணயம்'. மற்றொன்று ஒரு சமூகப்படம். மூன்றாவது படம் என்னவென்பது விரைவில் தெரியும்.

கல்பனா பிக்சர்ஸ் ஸ்ரீ சந்துரு, திடீரென்று 'ரம்பையின் காதலில்' ஒரு மாறுதலைச் செய்துவிட்டார். யத்பவிஷ்யனாக நடித்துக்கொண்டிருந்த சந்திரபாபுவுக்குப் பதில் இப்போது தங்கவேலு அப்பாத்திரத்தை ஏற்று நடிக்கிறார். காரணம், சந்திரபாபு குறிப்பிட்ட நேரத்தில் படப்பிடிப்புக்கு வராததுதானாம்.

நந்தி பிக்சர்ஸ் தயாரித்துவரும் 'சௌபாக்யவதி' படப்பிடிப்பு வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. சென்றவாரம் முத்துலட்சுமி நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டன. இதன் தயாரிப்பாளரான ஸ்ரீ நாகண்ணா இதைச் சிறந்தமுறையில் கொண்டுவரவேண்டுமென்று முயற்சி செய்துவருகிறார். 'குடும்பம்' என்ற குடும்பப் படத்தைத் தயாரித்தவர் இவரே. அப்படத்தை டைரக்ட் செய்த ஜம்பனாவே இதையும் டைரக்ட் செய்கிறார். இப்படத்தில் பக்திரஸமான காட்சிகள் சில மனதை உருக்கும்வண்ணம் அமைந்துள்ளனவாம்.

தற்போது சுமார் எட்டு படங்கள் தெலுங்கிலிருந்தும் இரண்டு படங்கள் கன்னடத்திலிருந்தும் தமிழில் 'டப்' செய்யப்பட்டு வருகின்றன.

மதுரையில் நடைபெறப்போகும் சித்திரைப் பொருட்காட்சியில் இவ்வருஷமும் நாடகங்களும் நடனங்களும் இடம் பெறுகின்றன. ஆனால் இவ்வருஷத்தில் என்ன விசேஷமென்றால் ஒவ்வொருநாள் நிகழ்ச்சிக்கும் ஒரு பிரபல நட்சத்திரம் தலைமைதாங்கி பரிசு வழங்குவாராம். சாவித்திரி, கிரிஜா, ஜமுனா, பண்டரிபாய், பானுமதி, ராஜசுலோசனா, முத்துலக்ஷ்மி, அஞ்சலி, ஜானகி, சிவாஜி–ஜெமினி கணேசர்கள் ஆகியோர் ஒப்புக்கொண்டுள்ளனர். மற்றும் பல நட்சத்திரங்களும் மதுரைக்குச் செல்வார்கள்.



கழுத்தில் மாலையும், கையில் கத்தியுமாக 'மதுரைவீரன்' எம். ஜி. ராமச்சந்திரனை மிரள வைத்து தானும் மிரள்கிறார் பத்மினி.

# மைசூர் வாசுதேவாச்சார் கீர்த்தனைகள்

ராகம : பேஹாக்] [தாளம் : ஆதி

ஆ. ஸகமபநீஸ்
அ. ஸநிதபம. பகமகரிஸ

## பல்லவி

பாவயேஹம் ரகுவராம் ஸ்ரீகராம்.
4
ஸேவகார்த்தி ஹரண சதுரம் கருணாகரம்

## அநுபல்லவி

ஜீவநேதாரம் ஜானகீ மனோஹராம்
3
ராவணாத்யஸுரஹராம் ரதிபதி ஸுந்தராம்
3

## சரணம்

வாஸராதிபதிகுல ஸஞ்ஜாதம்
4
பாஸமான மணிஹார சோபிதம்
4
பூஸுரௌகார்ச்சிதம் வாஸவாதி ஸன்னுதம்
4 4
வாஸுதேவம் ஹரிம் வாதாத்மஜாவன ரதம் (35)

பல்லவி:—நான் த்யானம் செய்கிறேன். ரகுவரனை, வேண்டிய ஐச்வர்யங்களைக் கொடுப்பவனை, தன்னை ஸேவிப்பவர்களின் கஷ்டங்களைப் போக்குவதில் ஸமர்த்தனை, கருணைக்கு இருப்பிடமானவனை.—(நான் த்யானிக்கிறேன்.)

அநுபல்லவி:—ஸர்வ ஜீவன்களுக்கும் நாயகனை, (பிராணிகளை மேல் நிலைக்குக் கொண்டு வருபவனை) ஜனகராஜ புத்திரியின் மனதைக் கவர்ந்தவனை, உலகங்களுக்கு சத்ருக்களான ராவணன் முதலானவர்களை அழித்தவனை, மன்மதனைப்போல் அழகுள்ளவனை—(நான் த்யானிக்கிறேன்.)

சரணம்:—ஸூரிய வம்சத்தில் பிறந்தவனை, பிரகாசிக்கிற நவரத்தின ஹாரங்களால் விளங்குபவனை, பிராம்மண ஸமூகங்களாலே பூஜிக்கப்பட்டவனை, தேவேந்திரன் முதலியவர்களால் துதிக்கப் பெற்றவனை; ஸர்வாந்தர்யாமியாயிருப்பவனை, பாபங்களையழிப்பவனை, வாயு புத்திரனான ஹனுமானை ரக்ஷிப்பதில் ஆசை கொண்டவனை—(நான் த்யானிக்கிறேன்.)

ராகம் : பேஹாக். தாளம் : ஆதி.

| ! | o | o |
|---|---|---|

## பல்லவி

| | | |
|---|---|---|
| , , , மாகபா ; நிஸ்நிதநீ ரிஸா | நிதபா மதபம கம | கரீ கா கமபத மகரீ |
| . . . பாவயே ஹம். . ர கு. | வீ. . . ரம் . . . . | . . . . ஸ்ரீ . . கரம் |
| ஸரிஸநிஸா ஸாஸ ஸநிரிஸ நிதநீ தபபா , நிஸ மா | கா கமபா மபநீ தப | நி நி த நிஸ்ரி நித பதபம |
| . . . . . . . ஸேவகா . . . . . . ர்த்தி. . . ஹ. . ர. | ண. ச. . து. . ரம் | கரு ணு . . . . . க ரம். . |
| கம கரிஸநி | | |
| . . . . . . | | |

## அநுபல்லவி

| | | |
|---|---|---|
| , , , பா ப ஸ்ா , , ஸ்ா, க் ரிஸ் ஸ்ா | , , , நீ நி நீ | , நி த நிஸ்ா நித பமதா |
| . . . ஜீ வ நே . . தா . . . ரம் . . | . . . ஜான கீ. | . ம ஞே . . . ஹ ரம் . . |
| பம பா பகபஸ்ா , , ஸ்ா நிஸ்க்ரிம்க் ரிஸ்ஸ்ா | , . ஸ்ரிநீ நி நீ | , நி தநிஸ்ா நித பமதா |
| . . . . ஜீ. வநே . . . தா . . . . . . ரம் . . . | ஜா , , ன கீ | . ம ஞே . . . ஹ ரம் . . |
| பம பா ஸ்நிஸ் க் ரி ம்க் ப்ம் க் ம் க் ரிஸ்ஸ்ா | . . . ஸ் நி த பா | ம ப மபஸ்நி த , , மதபப |
| . . . . ரா. வ ணு. . . . . . த்யரிஹ ரம் . . . | . . . ர தி ப தி. | ஸ . . . . . ந்த ரம் . . |
| மககரிஸநி | | |
| . . . . . . . | | |

## சரணம்

| | | |
|---|---|---|
| , , , பாபபா , , நித ஸ்நி தபபா | , ம மகா ரிஸஸா , நி | ஸ கரிம கா , , |
| . . . வா.ஸ ரா . . தி. . ப . தி . . | . குல ஸஞ் . . . . | ஜா . . தம் . . |
| , , , ஸா ஸ நிஸநிதநீ தபபா, ஸ ஸா | நி ஸமா கா பா. | பமபா நிதநீ தபபா , , |
| . . . பாஸ மா . . . ன. . . மணி. | ஹா . . . ர. சோ. | . . . . பி . . தம் , . . |

பூஸுரௌளசார்ச்சிதம் வாஸவாதிஸன்னுதம் |
வாஸுதேவம் ஹரிம் வாதாத்மஜாவனரதம் ||

சென்னை வெலிங்டன் டாக்கீஸில் ஓடும் 'ஏக் ஹி ராஸ்தா'வில் இவ்விதம் அடிபட்டதால் மீனகுமாரியால் அணைக்கப்பெறும் அசோக்குமார்...



'டீக்'காக உடுத்திக்கொண்டும்கூட 'தலாஷி'ல் தாஜா செய்ய முடியாது போகிறது அமீதாவை.

ஓர் அழகு ராணியின் மேனியோடு நீங்களும் விளங்கலாம்!
நாளொரு மேனியாக
வனப்பெய்துங்கள் . . .
ஆம், சோபிக்கும் எழில் மேனி பெற விரும்பும் உங்கள் கனவும் நனவாக முடியும்! குளித்திடும் ஒவ்வொரு தடவையும் ரெக்ஸோனு உபயோகியுங்கள் — அதன் கேடில் சத்து நிறைந்த நுரையை எப்போதும் உங்கள் சருமத்தின் மீது மிருதுவாகத் தேய்த்து நீராடுங்கள். நாளொரு மேனியாக உங்கள் சருமம் மேலும் மேலும் மென்மை மிகுந்த புது வனப்பெய்தும்.
1955 ரெக்ஸோனு அழகுப்போட்டியில் வெற்றிபெற்ற அழகியான "மிஸ். ரெக்ஸோனு"
Rexona
BLENDED WITH CADYL
பெரிய சைஸிலும் கிடைக்கும்.
. . . இயற்கையான வழி ரெக்ஸோனு
உபயோகித்தல்
கேடில்* கலந்த சோப் இது ஒன்றே.
RP. 139-X52 TM

1. 500 காலன்கள் டாங்க் ட்ரெயிலர்
2. டிராக்டர் ட்ரெயிலர்
3. ஸாக் டிரக்
4. தண்ணீர் கைவண்டி
5. (Pan Type) வீல் பாரோ

மேலே குறிப்பிடப்பட்டவை எங்களுடைய சிறந்த இலேசான என்ஜினீரிங் தயாரிப்புகளில் சில. எங்கள் தயாரிப்புகளில் ஒவ்வொன்றும் முதல் தரமான சேவை யுடையதாயும் வாங்குபவர்களிடையே முதலிடத்தை விசேஷமாகப் பெற்றும் விளங்குகிறது.

Simplow's

ஸிம்ஸன் & கோ லிட்.
மதராஸ்-2

கிளைகள்: பெங்களூர். • திருச்சி, • உதகை • ஹைதராபாத்

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras, Editor: C. R. Srinivasan, B. A.